அடவிகம் aṭavikam, *n.* prob. அடு-. Ashes; சாம்பல். (பரி. அக.)

அடவிமார் aṭavimār, *n.* < அடைவு. A class of weavers; நெய்வோருள் ஒருவகையார். (M. E. R. 310 of 1916-B.)

அடவு aṭavu, *n.* [K. *aṭavu*, M. *aṭavu.*] Pledge, pawn; அடகு. (W. G.)

அடவுசெய்வார் aṭavu-ceyvār, *n.* < அடைவு +. See அடவிமார். (M. E. R. 313 of 1916-B.)

அடவோலை aṭa-v-ōlai, *n.* < அடை +. See அடகோலை. *Loc.*

அடனி aṭaṉi, *n.* < *aṭani.* Extremity of the bow; வில்லின் நுனி. (சிந்தா. நி. 84.)

அடாசு-தல் aṭācu-, *5 v. tr.* cf. அடைசு-. (W.) 1. To recede, give place to; விலகுதல். 2. To stuff; திணித்தல்.

அடாத்தியம் aṭāttiyam, *n.* prob. *haṭhāt.* Impropriety, injustice; அக்கிரமம். (W.)

அடாநிந்தை aṭā-nintai, *n.* < அடு- + ஆ neg. +. 1. Unfounded reproach; ஆதாரமற்ற பழிச்சொல். (W.) 2. Unbearable slander; பொறுக்கமுடியாத பழிச்சொல். *Loc.*

அடாநெறி aṭā-neṟi, *n.* < id. + id. +. Evil ways; தகாதவழி. அடாநெறி யறைதல் செல்லா வருமறை (கம்பரா. எதிர்கோள். 1).

அடார்வெளி aṭār-veḷi, *n.* perh. *aṭa*+. Open, bare field; தரிசு நிலம். (R.)

அடாலத்து aṭālattu, *n.* < U. *adālat.* Court of justice; நியாயஸ்தலம். (P. N.)

அடாவரி aṭā-vari, n. <அடு- + ஆ neg. +. Unjust tax; அநியாய வரி. (R.)

அடாவழி aṭā-vaḻi, n. <id. + id. +. (R.) 1. Rough way; கடுவழி. 2. See அடாநெறி.

அடி[1] aṭi, n. <id. 1. Supreme Being; கடவுள். ஆரே யறிவா ரடியின் பெருமை (திருமந். 2126). 2. Lineage, descent; சந்தானம். (J.) 3. Sediment; மண்டி. (அக. நி.)

அடி[2] aṭi, n. <செருப்படி. A herb; செருப் படை. (பச். மூ.)

அடிக்கட்டை aṭi-k-kaṭṭai, n. <அடி +. See அடிமரம். (M. Navi. 81.)

அடிக்கலம் aṭi-k-kalam, n. <id. +. Anklet; சிலம்பு. அடிக்கல மாற்ற (சீவக. 2041).

அடிக்குழம்பு aṭi-k-kuḻampu, n. <id. +. That which settles at the bottom; sediment; அடிவண்டல்.

அடிகல் aṭi-kal, n. <அடி- +. Dressed cut-stone; செதுக்கித் திருத்திய கல்.

அடிகாயம் aṭi-kāyam, n. <id. +. Contused wound caused by a blow; அடியால் உண்டாம் இரணம். அடிகாயம் (மதி. களஞ். ii, 119).

அடிகாரன் aṭi-kāraṉ, n. <அடி +. *Colloq.* 1. Butcher; உணவுக்காகக் கால்நடைகளைக் கொல் பவன். 2. Fencer; சிலம்பம் வீசுவோன்.

அடிச்சட்டம் aṭi-c-caṭṭam, n. <id. +. Bottom piece, as of a door; கதவு பலகணி முதலியவற்றின் அடியில் இடும் மரம். *Loc.*

அடிச்சரக்கு aṭi-c-carakku, n. <id. +. (R.) 1. Inferior articles of merchandise; மட்ட மான சரக்கு. 2. Refuse; குப்பை.

அடிச்சூத்திரன் aṭi-c-cūttiraṉ, n. <id. +. A person of inferior caste; தாழ்ந்த வகுப்பினன். (W. G.)

அடிச்சேரி aṭi-c-cēri, n. prob. id. +. 1. Village near a town; suburb; நகரையடுத்த ஊர். *Cm.* 2. Part of a village in which the hereditary proprietors reside; ஊரிற் காணியாளர் வசிக்கும் பாகம். (W. G.)

அடிசிற்பள்ளி aṭiciṟ-paḷḷi, n. <அடிசில் +. Kitchen; மடைப்பள்ளி. ஐவே றமைந்த வடிசிற் பள்ளியும் (பெருங். இலாவாண. 7, 133).

அடிஞானம் aṭi-ñāṉam, n. <அடி +. (Śaiva.) Spiritual wisdom; பதிஞானம். அடிஞான மான்மாவிற் றோன்றும் (சி. சி. 8, 28).

அடித்தலம் aṭi-t-talam, n. <id. +. Sandals of a great person; திருவடிநிலை. அடித் தலம் . . . சூடினன் (கம்பரா. கிளைகண். 136).

அடித்தழும்பு aṭi-t-taḻumpu, n. <id. +. See அடிதாறு. (W.)

அடித்தளம் aṭi-t-taḷam, n. <id. +. (W.) 1. Ground-floor; கட்டடத்தின் அடிநிலைப்பரப்பு. 2. Foundation of a well; கிணற்றின் அடிப்பார். 3. Rear of an army; படையின் பின்னணி.

அடித்துண்டு aṭittuṇṭu, n. cf. அடுத்தூண். Subsistence allowance; சீவனும்சம். (மருத்.)

அடித்துமுதலானது aṭittu-mutal-āṉatu, n. <அடி- + முதல் + ஆ-. Quantity of grain threshed and heaped at the threshing-floor; கதிரையடித்துக் களத்திற் குவித்த தானியம். *Colloq.*

அடித்துவிடு-தல் aṭittu-viṭu-, v. tr. <id. +. To accomplish by force; பலவந்தமாக முடித்தல். (R.)

அடித்தொடை aṭi-t-toṭai, n. <அடி +. 1. Upper part of the thigh; தொடையின் மேற் பாகம். 2. The back part of the thigh; தொடை யின் பின்புறம்.

அடிதடி aṭitaṭi, n. <அடிதடி. Quarrel that ends in blows; அடிதடிச் சண்டை. (மதி. களஞ். ii, 173.)

அடிதண்டா aṭi-taṇṭā, n. <அடி +. Bar laid across a door; கதவிற் குறுக்காக இடுஞ் சட்டத் தாழ்ப்பாள். *Loc.*

அடிதலை aṭi-talai, n. <id. +. Order, regularity; ஒழுங்கு. (W.)

அடிதாளம் aṭi-tāḷam, n. <அடி- +. Beating time with the hand; கைகளாற் போடுந் தாளம். அடிதாளம் போடாவிட்டால் பாட்டொவ்வாது என்பார்கள் (மதி. களஞ். ii, 72).

அடிதாறு aṭi-tāṟu, n. <அடி +. Foot-print; அடிச்சுவடு. நிழலு மடிதாறு மானோம் (திவ். இயற். பெரியதிருவந். 31).

அடிநா aṭi-nā, n. <id. +. Root or lower part of the tongue; நாவின் அடிப்பகுதி. (W.)

அடிநாய் aṭi-nāy, n. <id. +. A term of humility meaning 'Slave-dog'; பெரியோர்முன் தன்னைத் தாழ்த்திக்கூறுஞ் சொல். அடிநாயுரை (தேவா. 742, 11).

அடிநாயேன் aṭināyēṉ, n. <அடிநாய். A term of humility referring to oneself as 'Your humble slave-dog'; 'நாய்போலத் தாழ்ந்த அடிமை யாகிய நான்' என்ற பொருளில் வரும் ஒரு வணக்க

மொழி. உத்தம வடிநாயே ஞேதுவதுளது (கம்பரா. கஙகை. 63).

அடிநிலை aṭi-nilai, n. < அடி +. Foundation; அஸ்திவாரம். ஆகமத்தா லடிநிலை பாரித்து (பெரியபு. பூச. 6).

அடிநிலைச்சுற்று aṭi-nilai-c-cuṟṟu, n. < id. + நிலை +. Stirrup; குதிரை யங்கவடி. அடிநிலைச் சுற்றேறு டியாபபுப் பிணியுறீஇ (பெருங. இலாவாணா. 18, 22).

அடிப்பட்டடைநெல் aṭi-p-paṭṭaṭai-nel, n. < id. + பட்டடை +. Grains of paddy caught in the straw on which paddy is heaped; களத்துப்பட்டடையில் வைக்கோலோடு கலந்துகிடக்கும் நெல். (R. T.)

அடிப்படி aṭi-p-paṭi, n. < id. +. Bottom piece of the frame of a door; கதவுநிலையின் அடிமரப்படி. *Loc.*

அடிப்படுத்து-தல் aṭi-p-paṭuttu-, v. tr. Caus. of அடிப்படு-. To establish firmly; நிலைபெறச் செய்தல். தன்னெறிமுறைமை அடிப்படுத்து வருதற்குப் பிரிவன் (கலித். 26, துறை).

அடிப்படை aṭi-p-paṭai, n. < அடி +. Main division of an army; சேனையில் தலைமையாக வுள்ள பகுதி. (W.)

அடிப்பற்று aṭi-p-paṟṟu, n. < id. +. 1. Food, curry, etc., charred in cooking; தீந்துபோன சோறு முதலியன. *Loc.* 2. Rock-salt; பாறையுப்பு. (யாழ். அக.)

அடிப்பிடி-த்தல் aṭi-p-piṭi-, v. intr. < id. +. To be charred, as rice, vegetables, etc., in cooking; சோறு கறி முதலியன தீந்துபோதல். (யாழ். அக.)

அடிப்புக்கண்டுமுதல் aṭippu-k-kaṇṭu-mutal, n. < அடிப்பு +. Gross out-turn of paddy; மொத்த நெல்விளைவு. (R. T.)

அடிப்புல் aṭi-p-pul, n. < அடி +. Grain stored by ants under the ground; தரையின் அடியில் எறும்புகள் சேர்த்துவைக்குந் தானியம். *Tp.*

அடிப்பெருங்கடவுள் aṭi-p-peruṅ-kaṭavuḷ, n. < id. +. The Supreme Being; எல்லாவற்றுக்கும் மூலமான கடவுள். அடிப்பெருங கடவு ளூழியீறுதொறும் (தக்கயாகப். 656).

அடிபறி-தல் aṭi-paṟi-, v. intr. < id. +. To be uprooted; வேரோடு பெயர்தல். ஊசிவேர் அடிபறிய (தக்கயாகப். 144, உரை).

அடிபிடி-த்தல் aṭi-piṭi-, v. < id. +. intr. 1. To get a clue, as to a crime; துப்பறிதல். (W.) 2. To trace one's footstep; ஒருவனுடைய அடிச்சுவடுபற்றிப் போதல்.—tr. 1. See அடைகட்டு-, 1. அண்டகடாகம் வெடித்து அடிபிடிக்க வேண்டும்படி (திவ். அமலனாதி, 2, வ்யா. பக். 33). 2. To pursue; தொடருதல்.

அடிபிழை-த்தல் aṭi-piḻai-, v. intr. < id. +. To act unlawfully, illegally; நெறிதவறி நடத்தல். வேந்தன் அடிபிழைத்தாரை யொறுக்குந் தண்டத்து (மணி. 19, 42).

அடிபுதையரணம் aṭi-putai-y-araṇam, n. < id. + புதை- +. A kind of sandals covering the feet; செருப்புவகை. அடிபுதையரண மெய்தி (பெரும்பாண். 69).

அடிபுனைதோல் aṭi-puṉai-tōl, n. < id. + புனை- +. Sandal; செருப்பு. அடிபுனைதோலி னரண் சேர்ந்து (பெருந்தொ. 437).

அடிமடக்கு aṭi-maṭakku, n. < id. +. (Rhet.) Repetition of a line in a stanza with or without a variation in sense; பொருள் வேறுபட்டேனும் வேறுபடாமலேனும் செய்யுளின் அடி மீண்டுமீண்டு வருவதாகிய சொல்லணிவகை. கொச்சகமெலா மடிமடக்கு (பெருந்தொ. 1793).

அடிமடையன் aṭi-maṭaiyaṉ, n. < id. +. Utter idiot; முழுமுட்டாள். *Colloq.*

அடிமண்டி aṭi-maṇṭi, n. < id. +. Dregs; deposit; அடியிற் றங்கும் மண்டி முதலியன. தாம்தந்த மயர்வறு மதிநலமெல்லாம் அடிமண்டியோடே கலந்திற்று என்னுமிகோள் (ஈடு, 1, 4, 3, வ்யா. பக். 183).

அடிமயக்கு aṭi-mayakku, n. < id. +. (Pros.) A verse so constructed that transposing of its lines does not destroy its sense; பொருளில் திரிபின்றி அடிகளை முன் பின்னாக மாற்றும்படி யமைந்த பாடல். (W.)

அடிமரம் aṭi-maram, n. < id. +. Lower mast; பாய்மரத்தின் அடிப்பாகம். (M. Navi. 81.)

அடிமுகனை aṭi-mukaṉai, n. < id. +. Beginning; ஆரம்பம். (W.)

அடிமுட்டாள் aṭi-muṭṭāḷ, n. < id. +. See அடிமடையன். *Colloq.*

அடிமுடி aṭi-muṭi, n. < id. +. See அடிதலை. (யாழ். அக.)

அடிமுண்டம் aṭi-muṇṭam, n. < id. +. 1. Stump of a tree; வெட்டியமரத்தின் அடிப்பாகம். 2. Worthless person; பயனற்றவ-ன்-ள். *Loc.* 3. See அடிமடையன். *Loc.*

அடிமைக்காசு aṭimai-k-kācu, n. < அடிமை +. A fee collected from temple servants; கோயில்வேலைக்காரரிடமிருந்து பெறும் வரிவகை. (I. M. P. Sm. 38.)

அடிமைச்சீட்டு aṭimai-c-cīṭṭu, *n.* <id. +. Slave-bond; அடிமைப்பத்திரம். *Colloq.*

அடிமைப்பள்ளன் aṭimai-p-paḷḷaṉ, *n.* <id.+. Serf or labourer of the Paḷḷa caste; பள்ளரில் அடிமைப்பணி செய்பவன். (P. T. L.)

அடியந்திரம் aṭiyantiram, *n.* [M. *aṭiyantara.*] Speciality, anything special; விசேஷமானது. *Nāñ.*

அடியர் aṭiyar, *n.* <அடி-மை. Slaves; அடிமைகள். *அடியரு மாயரும் நொடிவனர் வியப்ப* (பெருங். உஞ்சைக். 34, 179).

அடியல் aṭiyal, *n.* perh. அடு-. (யாழ். அக.) 1. Pouring; சொரிகை. 2. Continuity; தொடர்கை.

அடியறு-த்தல் aṭi-y-aṟu-, *v. tr.* <அடி +. To eradicate; மூலத்தோடு நீக்குதல். *அஹங்கார மமகாரங்களையும் . . . அடியறுத்து* (ரஹஸ்ய. 320).

அடியறை aṭi-y-aṟai, *n.* <id.+. That which has no basis or support; அடியற்றது. *Loc.*

அடியாட்டி aṭi-y-āṭṭi, *n.* <அடி-மை +. Fem. of அடியான். See அடியாள். *கூனிசொன்னது கேட்கவேண்டாத தொழிகிறது அடியாட்டி யாகை யாலே* (திவ். திருநெடுந். 12, வ்யா.).

அடியாள் aṭi-y-āḷ, *n.* <id.+. Woman servant; குற்றேவற் பெண். (I. M. P. Sm. 38.)

அடியிலேயுறை-தல் aṭiyilē-y-uṟai-, *v. intr.* <அடி +. To reverence, worship; வழிபடுதல். (கலித். 140, உரை.)

அடியுடுப்புமுண்டு aṭi-y-uṭuppu-muṇṭu, *n.* <id.+உடு-+. Cloth worn round the waist; இடுப்பு வேஷ்டி. *Nāñ.*

அடியுரம் aṭi-y-uram, *n.* <id.+. Foundation; அஸ்திவாரம். (யாழ். அக.)

அடியெழுத்து aṭi-y-eḻuttu, *n.* <id +. (Gram.) The primary letters comprising the twelve vowels and the eighteen consonants; பன்னீருயிரும் பதினெட்டு மெய்யுமாகிய முதலெழுத்து. (பேரகத். 8, உரை.)

அடியொட்டி aṭi-y-oṭṭi, *n.* <id.+. A kind of shrub; பூடுவகை. (குருகூடாப். 45.)

அடியொற்று-தல் aṭi-y-oṟṟu-, *v. intr.* <id.+. To start; to step out; புறப்படுதல். *பரமபதத்தினின்றும் அடியொற்றினன், திருமலையளவும் பயணமுண்டாயிருந்தது* (திவ். அமலனாதி. 3, வ்யா. பக். 47).

அடியோட்டி aṭi-y-ōṭṭi, *n.* <id.+. cf. அடியொட்டி. Caltrops, a spiked instrument to pierce the feet of men and cattle; முட்போன்று கூராணியமைந்து பிராணிகளின் காலைக் கிழிக்க வல்லதான கருவிவகை. (W.)

அடிவரலாறு aṭi-varalāṟu, *n.* <id.+. Lineage; ancestry; வமிசாவளி. (W.)

அடிவரை aṭi-varai, *n.* <id.+. Foot of a mountain; தாழ்வரை. *அடிவரையிலே சிங்கம் பாய்ந்தாற்போல* (கலித். 86, உரை).

அடிவரையறை aṭi-varaiyaṟai, *n.* <id. +. Index of initial syllables of the stanzas in a poem; பாட்டின் முதற்குறிப்பு வரிசை. (மீனுட். சரித். 1, பக். 10.)

அடிவினை[1] aṭi-viṉai, *n.* <அடி-+. Washing of clothes; ஆடையொலிக்கை. *அடிவினைக்கமர்ந்தோர் நெடிபடவிசிக்கிய* (பெருங். இலாவாண. 4, 183).

அடிவினை[2] aṭi-viṉai, *n.* <அடி +. 1. Stratagem; சூழ்வினை. *அவனுக்கு அடிவினை வைக்கிறான்.* *Colloq.* 2. Perversity; மாறட்டம். 3. Extreme malice; கறுவு. (R.)

அடிவைக்கும்ஆலாத்து aṭi-vaikkum-ālāttu, *n.* <id.+வை-+. Foot rope; ஆட்கள் நின்று வேலை செய்யும்படி பாய்மரம் முதலியவற்றின் கீழ்ப்பாரத்திலிருக்குங் கயிறு. (M. Navi. 86.)

அடிஸ்தானம் aṭi-stāṉam, *n.* <id.+. Basis, foundation; ஆதாரம். *Nāñ.*

அடுக்கம் aṭukkam, *n.* <அடுக்கு. 1. Ledge of rock, stratum of stone; பாறை. *மால்வரை யடுக்கத்து* (கலித். 44). 2. Bed; படுக்கை. *நறுவீ யடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்* (அகநா. 2).

அடுக்களைக்குருக்கள் aṭukkaḷai-k-kuruk-kaḷ, *n.* prob. அடுக்களை +. Spiritual guru of the women of the Nāṭṭu-k-kōṭṭai Cheṭṭi caste; நாட்டுக்கோட்டைச்செட்டிப் பெண்டிர்க்கு உரிய குரு. *Nāṭ. Cheṭṭi.*

அடுக்களைகாணுதல் aṭukkaḷai-kāṇutal, *n.* <id.+. The *cīmantam* ceremony, when the girl's mother visits her in her house; சீமந்தச் சடங்கு. *Nāñ.*

அடுக்களைப்புறம் aṭukkaḷai-p-puṟam, *n.* <id.+. Endowment for the kitchen expenses of a temple; கோயில் மடைப்பள்ளிச் செலவுக்காக விடப்படும் மானியம். (M. E. R. 574 of 1926.)

அடுக்குப்பார்ச்சோற்றி aṭukku-p-pār-coṟṟi, *n.* <அடுக்கு +. A variety of *Ruellia secunda;* பாற்சோற்றிவகை. (W.)

அடுக்குவிருசு aṭukku-virucu, *n.* <id.+. A kind of rocket; பாணவகை. (T. C. M. II, 2, 598.)

அடுகிடைபடுகிடை aṭukiṭai-paṭukiṭai, *n.* Redupl. of. படுகிடை. 1. Lying down at a person's house determined not to leave the place till the thing asked for is obtained; நினைத்தது பெறுமளவும் ஒருவன் வீட்டின்முன் படுத்துக் கிடக்கை. (W.) 2. Being completely bedridden, as in illness; நோய்வாய்ப்படுகை. *அடுகிடைபடுகிடையாகக் கிடக்கிறான்.*

அடுகுவளம் aṭu-kuvaḷam, *n.* prob. அடு- +. Food; போசனம். *அடுகுவளம் தடைப்படும் போலே காணும* (ஈடு, 10, 4, 3).

அடுத்தி aṭutti, *n.* perh. அடர்-. cf. அடத்தி. Usury; அக்கிரம வட்டி. (W. G.)

அடுத்துக்கழுத்தறு-த்தல் aṭuttu-k-kaḻuttaṟu-, *v. tr.* <அடு-+. 1. To kill by treachery; சதிசெய்து கொல்லுதல். (W.) 2. To do harm insidiously; நட்பினன்போற் பழகிக் கேடுசெய்தல். *Loc.*

அடுநறா aṭu-naṟā, *n.* <id.+. Distilled toddy; காய்ச்சிய சாராயம். *அடுநறா மகிழ்தட்ப* (பரிபா. 21).

அடுப்பம் aṭuppam, *n.* <id. 1. Heaviness, weight; கனம். *மேக அடுப்பமும் பார் அடுப்பமும் ஒத்தன பேய்க்கணங்கட்கு* (தக்கயாகப். 361, உரை). 2. Close intimacy or relationship; நெருங்கிய உறவு. *Tinn.*

அடுப்பூதி aṭuppūti, *n.* <அடுப்பு + ஊது-. 1. Cook; சமையற்கா-ரன்-ரி. 2. Fool; மூடன். (மதி. களஞ். ii, 5.)

அடுமா aṭumā, *n.* Nut; கொட்டை. (பரி. அக.)

அடுவம் aṭuvam, *n.* Wight's Indian nettle; மலைப்புன்கு. (L.)

அடை[1]-தல் aṭai-, *4 v. intr.* To be closed, choked up or filled up; தூர்தல். *Colloq.*

அடை[2]-த்தல் aṭai-, *11 v.* perh. அடு-. *intr.* To allot; வகுத்தல்.—*tr.* To be appropriate to; தகுதியாதல். *அக்காலத்துக்கு அடைத்த காற்றுக்கள்* (ஈடு, 10, 3, ப்ர. பக். 71).

அடை[3] aṭai, *n.* <செருப்படை. A herb. See அடி². (பச். மூ.)

அடைக்க aṭaikka, *adv.* <அடை-. Entirely; முழுவதும். *வீடடைக்க நோயாயிருக்கிறது.*

அடைக்கப்பட்டார் aṭaikkappaṭṭār, *n.* A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அடைக்கப்புடைக்க aṭaikka-p-puṭaikka, *adv.* <அடை- + புடை-. Hurriedly, quickly; விரைவாக. *Loc.*

அடைக்கலஞ்செய்-தல் aṭaikkalañ-cey-, *v. tr.* <அடைக்கலம்+. To bury, inter, entomb; பிரேதவடக்கஞ் செய்தல். (மதி. களஞ். ii, 145.)

அடைக்கலமாதா aṭaikkala-mātā, *n.* <id.+. The Lady of Refuge; அடைக்கல மளிக்கும் தேவமாதா. *R. C.*

அடைக்கலஸ்தலம் aṭaikkala-stalam, *n.* <id.+. Asylum; புகலிடம். (R.)

அடைகட்டு-தல் aṭai-kaṭṭu-, *v. tr.* <அடை+. 1. To construct a bank or bund; நீர்ப்பெருக்கைத் தடுக்க வரம்புண்டாக்குதல். *அண்டகடாகம் வெடித்து அடைகட்ட வேண்டும்படியிறே அபேக்ஷிதம்பெற்று வளர்ந்தபடி* (திவ். அமலனாதி. 2, வ்யா. பக். 34). 2. To place a bar of wood or stone in front of a wheel of a carriage to prevent its motion; வண்டி நகராதபடி சக்கரத்தின் முன் தடை வைத்தல். *Loc.* 3. To insert a wedge-like piece of wood to raise the wheel of a car or cart; தேர் வண்டிகளின் சக்கரத்தைத் தூக்க அடியில் முட்டுக்கொடுத்தல். *Loc.*

அடைகடல் aṭai-kaṭal, *n.* <id.+. Sea-coast; கடற்கரை. (தொல். சொல். 419, உரை.)

அடைகரை aṭai-karai, *n.* <id.+. Shore; கரைப்பக்கம். (குறுந். 175.)

அடைகுடி aṭai-kuṭi, *n.* <id.+. Cultivating tenant; பயிரிடுங் குடி. (S. I. I. ii, 250.)

அடைகுத்து-தல் aṭai-kuttu-, *v. tr.* <id.+. To mortgage; அடைமானம் வைத்தல். *குடியொருகுடிபெறும்விலைக்கு அடைகுத்துக என்று* (S. I. I. v, 305).

அடைகொள்(ளு)-தல் aṭai-koḷ-, *v. tr.* <id.+. To take on mortgage, as land; ஒற்றியாகப் பெறுதல். *இலக்ஷுமண நம்பி அடைகொண்ட நிலமும்* (S. I. I. iv, 81).

அடைசாரல் aṭai-cāral, *n.* <அடை-+. Heavy monsoon; பருவகாலத்து அடைமழை. *ஆனி முற்சாரல், ஆடி அடைசாரல்.*

அடைசு-தல் aṭaicu-, *5 v. intr.* To be full; நிறைவாதல். *அடைசிச் சாப்பிடுதல்.*

அடைசுபலகை aṭaicu-palakai, *n.* <அடைசு-+. Plank placed above the lintel of a door-frame; கதவுநிலைகளின் மேல் வைக்குந் தூரிப்பலகை. (W.)

அடைசொல் aṭai-col, *n.* < அடை-+. (Gram.) Termination, ending of a word; விகுதி. (தக்கயாகப். 463.)

அடைத்து aṭaittu, *adv.* < id. Entirely, wholly; முழுவதும். வீடடைத்து நோய்.

அடைதூண் aṭai-tūṇ, *n.* < அடை+. The pillar to which the churning rod is tied; தயிர்கடை தறி. மத்துமந்திரம் வாசுகிகடைகயி றடைதூண் மெத்து சந்திரன் (கம்பரா. அகலிகை. 21).

அடைநேர்-தல் aṭai-nēr-, *v. tr.* < id. +. To agree to give one's daughter in marriage; மகட்கொடைக்கு உடம்படுதல். தலைவர்க்கே நம்மை அடைநேர்ந்திலராயினும் (குறிஞ்சிப். 23, உரை).

அடைப்படி aṭai-p-paṭi, *n.* < id.+. Pledge; அடைமானம். (S. I. I. iii, 307.)

அடைப்பம் aṭaippam, *n.* < id. Servant serving betel; அடைப்பக்காரன். (I. M. P. N.A. 195.)

அடைப்பிரதமன் aṭai-p-piratamaṉ, *n.* < id.+. A variety of *piratamaṉ;* பாயசவகை. *Loc.*

அடைப்பு¹ aṭaippu, *n.* See அடைப்பம். (M. E. R. 205 of 1919.)

அடைப்பு² aṭaippu, *n.* < அடை-. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 146.)

அடைப்புமுதலிகள் aṭaippu-mutalikaḷ, *n.* < id.+. Executive officers of an assembly; சபையின் காரியநிர்வாகிகள். (M. E. R. 191 of 1925.)

அடைப்பைகட்டு-தல் aṭaippai-kaṭṭu-, *v. intr.* < அடைப்பை+. To serve betel-roll for chewing; வெற்றிலை மடித்துக்கொடுத்தல். பிரதாபருத்திரனிடத்திற்போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா (பெருந்தொ. 1203).

அடைப்பையான் aṭaippaiyāṉ, *n.* < id. Attendant serving betel-roll; வெற்றிலை மடித்துக் கொடுக்கும் வேலையாள். அடைப்பையான் சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் (பெருந்தொ. 863).

அடைபடு-தல் aṭai-paṭu-, *v. intr.* < அடை-+. 1. To be shut or enclosed; அடைக்கப்படுதல். *Colloq.* 2. To be completed; முடிதல். *Loc.*

அடைபுடை aṭai-puṭai, *n.* < அடை+. 1. Surroundings; அக்கம்பக்கம். *Loc.* 2. Day and night; இராப்பகல். அடைபுடை தழுவி அண்டநின் றதிரும் (திவ். பெரியதி. 4, 10, 3).

அடைபொருள் aṭai-poruḷ, *n.* < அடை-+. Earnings; சம்பாத்தியப் பொருள். அடைபொருள் கருதுவிராயின் (இறை. 28, உரை, பக். 133).

அடைமுதற்பற்று aṭai-mutaṟ-paṟṟu, *n.* < அடை+முதல்+. Land leased out to tenants; குடிகட்குப் பற்றடைக்கப்பட்ட நிலம். (M. E. R. 209 of 1925.)

அடையன் aṭaiyaṉ, *n.* Chebulic myrobalan; கடுக்காய். (T. C. M. ii, 2, 429.)

அடையாண்கிளவி aṭaiyāṇ-kiḷavi, *n.* < அடையாளம்+. Word used for recognition, pass-word; அடையாளச்சொல். அறியக்கூறிய வடையாண்கிளவியும் (பெருங். உஞ்சைக். 56, 184).

அடையாள் aṭai-y-āḷ, *n.* < அடை-+ஆள். Servant; வேலையாள். (S. I. I. vii, 72.)

அடையாளக்காரர் aṭaiyāḷa-k-kārar, *n.* < அடையாளம்+. Persons who carry the insignia of royalty or royal paraphernalia; ராஜ விருதுகளைப் பிடித்துச் செல்வோர். (ரஹஸ்ய. 587.)

அடையுண்(ணு)-தல் aṭai-y-uṇ-, *v. intr.* < அடை-+. To be shut up or enclosed; அடைபடுதல். புலிக்குட்டி கூட்டிடத்தே அடையுண்டிருந்து (பட்டினப். 221).

அடையெழுது-தல் aṭai-y-eḻutu-, *v. tr.* < அடை+. To enter in an account; கணக்கில் தாக்கல் செய்தல். (S. I. I. iv, 150.)

அடைவளைந்தார் aṭai-vaḷaintār, *n.* prob. id.+. A title of Kallars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 144.)

அடைவுசரக்கு aṭaivu-carakku, *n.* < அடைவு+. A kind of camphor; கர்ப்பூர வகை. (சிலப். 14, 109, உரை.)

அண்டகபாடம் aṇṭa-kapāṭam, *n.* < *aṇḍa*+. See அண்டபித்தி. (தக்கயாகப். 622, உரை.)

அண்டகம் aṇṭakam, *n.* < *aṇḍa.* Testicle; பீசம். (சிந்தா. நி. 101.)

அண்டகூடம் aṇṭa-kūṭam, *n.* < id.+. Globe of the universe; அண்டகோளகை. அண்டகூடமுஞ் சாம்பராயொழியும் (கம்பரா. அகலிகை. 14).

அண்டசம் aṇṭacam, *n.* < *aṇḍa-ja.* 1. Bird; பறவை. (அக. நி.) 2. Chameleon; ஓந்தி. 3. Snake and other reptiles; பாம்பு முதலியன. 4. Fish and other aquatics; சலசர முதலியன. 5. Conch; சங்கு. (உரி. நி.) 6. Tortoise; ஆமை. (அக. நி.)

அண்டசை aṇṭacai, *n.* < *aṇḍa-jā.* Musk; கஸ்தூரி. (பரி. அக.)

அண்டநாடு aṇṭa-nāṭu, *n.* < அண்டம்+. A sub-division of the Pāṇḍya country; பாண்டி நாட்டின் ஒரு பகுதி. (I. M. P. ii, 62.)

அண்டப்பொகுட்டு aṇṭa-p-pokuṭṭu, *n.* <id.+. See அண்டகடாகம். *பூதலப்பரப்பி னண்டப் பொகுட்டினுட் புறத்துள்* (கம்பரா. பிணிவீட். 113).

அண்டபஸ்மம் aṇṭa-pasmam, *n.* <*aṇḍa* +. Calcination of medicinal drugs with eggs; கோழிமுட்டைக்கருவைக் கொண்டு செய்யும் மருந்து.

அண்டபித்தி aṇṭa-pitti, *n.* <id.+. The vault of the heavens, as the shell of the universe imagined to be in the form of an egg; அண்டகோளத்தின் மேலோடு. *ஒரு திருவடிகளே அண்டபித்திக்கு மவ்வருகேபோய்* (திவ். திருநெடுந். 5, வ்யா.).

அண்டபேரண்டபட்சி aṇṭapēraṇṭa-paṭci, *n.* <கண்டபேரண்டம்+. A monster bird; கண்டபேரண்டம் என்னும் பெரும்பறவை. *Loc.*

அண்டம் aṇṭam, *n.* <*aṇḍa.* 1. Sac of the civet cat; புழுகுசட்டம். (சம். அக. Ms.) 2. Brain; மூளை. (வை. மூ.) 3. Skull; தலையோடு. (யாழ். அக.)

அண்டரசம் aṇṭa-racam, *n.* <id.+. Mercury; பாதரசம். (வை. மூ.)

அண்டரண்டபட்சி aṇṭaraṇṭa-paṭci, *n.* <கண்டபேரண்டம்+. 1. See அண்டபேரண்ட பட்சி. *Loc.* 2. Eagle; கழுகு. *Pond.*

அண்டவாணன் aṇṭa-vāṇaṉ, *n.* <அண்டம்+. God; தேவன். *அண்டவாணனடி யுள்குதலால்* (தேவா. 1114, 11).

அண்டிரன் aṇṭiraṉ, *n.* <*aṇḍira.* Man; மனுஷன். (சிந்தா. நி. 114.)

அண்டீரன் aṇṭīraṉ, *n.* <*aṇḍīra.* (நாநார்த்த.) 1. Man; மனிதன். 2. Hero, warrior; வீரன்.

அண்ணம் aṇṇam, *n.* <அண். Lower jaw; கீழ்வாய்ப்புறம். (யாழ். அக.)

அண்ணமார் aṇṇamār, *n.* A minor village deity; ஒரு கிராமதேவதை. *Madr.*

அண்ணல் aṇṇal, *n.* <அண்-. 1. Master, lord; தலைவன். *அண்ணலா ரறத்த கூலிகொண்டு* (பெரியபு. அரிவாட். 11). 2. Father; தந்தை. (அரு. நி.) 3. Preceptor, spiritual guide; குரு. 4. The Buddha; புத்தன். (பொதி. நி.) 5. Śiva; சிவன். *அண்ணலாரு மதுவுணர்ந்து* (பெரியபு. திருநாவுக். 296). 6. Arhat; அருகன். (நாநார்த்த.) 7. Elder brother; அண்ணன். (நாநார்த்த.)

அண்ணவோதை aṇṇa-v-ōtai, *n.* <அண்ணம்+. Clicking sound produced by pressing the tongue against the roof of the mouth; நாவாற்கொட்டும் ஒலி. (W.)

அண்ணாக்கயிறு aṇṇā-k-kayiṟu, *n.* <அரைநாண்+. Waistcord; அரைஞாண். *Colloq.*

அண்ணாநாடு aṇṇā-nāṭu, *n.* <அண்ணா+. The region about Tiru-v-aṇṇāmalai; திருவண்ணாமலைப் பிரதேசம். *அண்ணாநாட்டு எல்லையில் திருந்திசையாற்றை யடைத்து* (S. I. I. viii, 44).

அண்ணாவி aṇṇāvi, *n.* <அண்+ஆள்-. (யாழ். அக.) 1. Elder brother; தமையன். 2. Poet; புலவன்.

அண்ணிசு aṇṇicu, *n.* <அண்ணு-. Proximity, nearness; அண்மை. (யாழ். அக.)

அண்ணியன் aṇṇiyaṉ, *n.* <அண்-மை. Close kinsman; நெருங்கிய உறவினன். *தமப்பன் பகையாக அவனிலும் இவன் அண்ணிய னென்றுவர நின்ற ப்ரஹ்லாதன்* (ஈடு, 10, 3, ப்ர. பக். 70).

அண்ணு-தல் aṇṇu-, 5 *v. tr.* To resemble; ஒத்தல். *புகலும் வாளரிக் கண்ணியர்* (கம்பரா. வரைக்காட். 58).

அண்ணுண்டார் aṇṇuṇṭār, *n.* A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர் சரித். 145.)

அண்ணூத்திப்பிரியர் aṇṇūttippiriyar, *n.* perh. ஐந்நூற்றுப்பேரர். A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அண்ணை aṇṇai, *n.* cf. மண்ணை. Devil, ghost, goblin; பேய். (பொதி. நி.)

அண்பினார் aṇpiṉār, *n.* <அண்-. Those who have taken refuge; அண்டினவர். *அண்பினார் பிரியார்* (தேவா. 224, 6).

அணங்கம் aṇaṅkam, *n.* prob. அணங்கு. Grammar; இலக்கணம். (சிந்தா. நி. 103.)

அணங்காட்டு aṇaṅkāṭṭu, *n.* <id.+. Dance under possession by Skanda; வெறியாட்டு. (W.)

அணங்கு-தல் aṇaṅku-, 5 *v. intr.* To sound, make noise; ஒலித்தல். *புகையணங்க* (பு. வெ. 10, பொது. 8).

அணங்குடையாட்டி aṇaṅkuṭai-y-āṭṭi, *n.* <அணங்கு+. A woman divinely inspired and having oracular powers; தெய்வாவேசங் கொண்டு ஆடுபவள். (பெரியபு. கண்ணப்ப. 67.)

அணங்குறைவாள் aṇaṅkuṟaivāḷ, *n.* <id.+. See அணங்குடையாட்டி. (பெரியபு. கண்ணப்ப. 153.)

அணவல் aṇaval, *n.* < அணவு-. Tooth; பல். (சம். அக. Ms.)

அணவா-தல் [அணவருதல்] aṇa-vā-, *v. intr.* < அணவு + வா-. 1. To come near; சமீபமாதல். 2. To be raised; மேலெடுக்கப்படுதல். *நீர்வழிக் கணவரு நெடுங்கைய வாகி* (பெருங். உஞ்சைக். 54, 42).

அணாப்பு aṇāppu, *n.* < அணாப்பு-. Deceit, fraud; ஏமாற்றுகை. *Loc.*

அணி[1] aṇi, *n.* < அணி. 1. Disguise; வேஷம். *அணியி னரங்கின்மே லாடுநர்போல* (ஏலாதி, 24). 2. Pile, heap; திரள். *அணியணியாகிய தாரர்* (பரிபா. 6). 3. Tier; அடுக்கு. *அணிநிலை மாடம்* (பெருங். உஞ்சைக். 33, 105). 4. Cant for 35; முப்பத்தைந்தைக் குறிக்குங் குழூஉக்குறி. (சோதிட. அக.)

அணி[2] aṇi, *n.* < அண்-. Limit, boundary; எல்லை. (யாழ். அக.)

அணி[3] aṇi, *n.* cf. அணிநுணா. Dyeing mulberry; நுணா. (பரி. அக.)

அணி[4]**-தல்** aṇi-, 4 *v. tr.* To spread; பரத்தல். *சுணங்கணி யாகம்* (கலித். 4).

அணிகயிறு aṇi-kayiṟu, *n.* < அணி- +. Rein; குதிரையின் வாய்க்கயிறு. *அணிகயிறு தெரிபு வருவார்* (பரிபா. 9).

அணிகலம் aṇi-kalam, *n.* < அணி +. 1. Jewel casket; நகைப்பெட்டி. *Pond.* 2. Smith's instrument; கம்மாளர் கருவி. (யாழ். அக.)

அணிச்சை aṇiccai, *n.* cf. அனிச்சை. Ringworm root; நாகமல்லி. (பச். மூ.)

அணிஞ்சில் aṇiñcil, *n.* cf. அழிஞ்சில். Sage-leaved alangium; அழிஞ்சில். (W.)

அணிந்தம் aṇintam, *n.* < அளிந்தம். Pial at the entrance of a *gōpura;* கோபுரவாயிலின் முகப்பிலுள்ள மேடை. (W.)

அணிந்தற்றுப்போ-தல் aṇintaṟṟu-p-pō-, *v. intr.* < அணி- + அறு- +. To become destitute; வறுமைப்படுதல். (R.)

அணிநிலைமாடம் aṇi-nilai-māṭam, *n.* < அணி + நிலை +. Storeyed house; அடுக்கான மேனிலைகளுள்ள வீடு. *அத்தம்பெயரிய வணிநிலை மாடத்து* (பெருங். உஞ்சைக். 33, 105).

அணிமுகம் aṇi-mukam, *n.* < id. +. Decorated portal; அலங்காரமான வாயில்முகப்பு. *வாயின்மாடத் தாய்நல வணிமுகத்து* (பெருங். மகத. 3, 31).

அணிமை aṇimai, *n.* < அணு. Minuteness; நுட்பம். (சிந்தா. நி. 105.)

அணியப்பாய்மரப்பருமல் aṇiya-p-pāymara-p-parumal, *n.* < அணியம் + பாய்மரம் +. See அணியப்பாய்மரப்பாய். *Pond.*

அணியப்பாய்மரப்பாய் aṇiya-p-pāy-mara-p-pāy, *n.* < id. + id. +. Canvas on the prow of a vessel; அணியத்திலுள்ள பாய்மரத்திற் கட்டும் பாய். *Pond.*

அணியிடுவான்வரி aṇi-y-iṭuvāṉ-vari, *n.* < அணி + இடு- +. An ancient tax; பழைய வரி வகை. (S. I. I. iv, 122.)

அணியிழை aṇi-y-iḻai, *n.* < id. +. Woman, as adorned with jewels; பெண். *அணியிழை தந்நோய்க்குத் தானே மருந்து* (குறள், 1102).

அணிவிளக்கு-தல் aṇi-viḷakku-, *v. tr.* < id. +. To adorn; அலங்கரித்தல். *தில்லைநகர் மணிவீதி யணிவிளக்கும் . . . அனபாயன்* (பெரியபு. புகழ்ச். 8).

அணு aṇu, *n.* < *aṇu.* Mantra; மந்திரம். (பொதி. நி.)

அணுக்கச்சேவகம் aṇukka-c-cēvakam, *n.* < அணுக்கம் +. Service as personal attendant; அரசர் முதலியோரிடம் அணுகிப் புரியுந் தொண்டு. *அணுக்கச்சேவகத்திலுள்ளோர்* (பெரியபு. ஏயர். 332).

அணுக்கநம்பி aṇukka-nampi, *n.* < id. +. Saint Sundarar; சுந்தரமூர்த்திநாயனார். (செந். xxv, 342.)

அணுக்கம் aṇukkam, *n.* (அக. நி.) 1. cf. அணுகம். Sandalwood; சந்தனம். 2. Snake; பாம்பு.

அணுக்கவிளக்கு aṇukka-viḷakku, *n.* < அணுக்கம் +. Light burning near the chief deity of a temple; கோயில்மூர்த்திக்குப் பக்கத் தெரியுந் திருவிளக்குவகை. *இரவை ஸந்திக்கு அணுக்கவிளக்காக எரியவைத்த விளக்கு ஒன்றுக்கு* (S. I. I. viii, 34).

அணுகம் aṇukam, *n.* cf. அணுக்கம். Red sanders; செஞ்சந்தனம். (பச். மூ.)

அணுகன் aṇukaṉ, *n.* < *aṇuka.* (நாநார்த்த.) 1. Skilled person, expert; நிபுணன். 2. Mean, ill-bred person; அற்பன்.

அணுதரிசினி aṇu-taricini, *n.* < அணு +. Microscope; நுண்பொருளைப் பெரிதாகச் செய்யுங் கருவி. *Mod.*

அணுபரிணாமவாதம் aṇu-pariṇāma-vātam, *n.* < *aṇu* +. Atomism; அணுவிலிருந்து எல்லா உலகமும் உண்டாயிருப்பதாகக் கூறுஞ் சித்தாந்தம். *Mod.*

அணுபை aṇupai, n. <aṇu-bhā. Lightning; மின்னல். (சிந்தா. நி. 105.)

அணுமை aṇumai, n. <aṇu-mā. (Log.) Inference, as a mode of proof; அனுமானப்பிரமாணம். புனைவுசே ரணுமை (நீலகேசி, தருமவுரைச். 110).

அணை aṇai, n. <அணை-. (பொதி. நி.) 1. Small wooden seat; மணை. 2. Pillow; தலையணை.

அணைக்கட்டி aṇai-k-kaṭṭi, n. <அணை+. Furrow-slice; உழுசாலிற் பெயருங் கட்டி. Loc.

அணைக்கட்டிபோடு-தல் aṇai-k-kaṭṭi-pōṭu-, v. intr. <அணைக்கட்டி+. To break the clods thrown in the furrow and level; படைச்சாலில் பேர்ந்த கட்டிகளை யுடைத்து நிரவுதல். Loc.

அணைக்கல் aṇai-k-kal, n. <அணை+. Upright stones in a dam; அணையிலுள்ள குத்துக்கல். (R. T.)

அணைகோலு-தல் aṇai-kōlu-, v. intr. <id.+. To form an embankment; நீர்ப் பெருக்கைத் தடுக்க அடைப்புப்போடுதல். வெள்ளம் வருவதற்குமுன்ன ரணைகோலி வையார் (நன்னெறி, 30).

அணைப்பு aṇaippu, n. See அணுப்பு. Loc.

அணைவு aṇaivu, n. <அணை-. Embracing; தழுவுகை. அணைவுதந் தாளுதற்கே (மஸ்தான். பாடல், 124).

அனோக்கம் aṉōkkam, n. perh. அண் + நோக்கம். Tree; மரப்பொது. (W.)

அத்தக[1] attaka, adv. <அ+தகு-. In that manner; அத்தன்மையதாக. அத்தக நிறீஇ (பெருங். இலாவாண. 6, 50).

அத்தக[2] attaka, adv. prob. அம்+. Beautifully; அழகுபொருந்த. அத்தக வரிவைய ரளத்தல் காண்மின் (பரிபா. 12).

அத்தகண்டம் atta-kaṇṭam, n. <hasta+. (Yōga.) See அத்தகண்டாதனம். (தத்துவப். 108.)

அத்தகண்டாதனம் atta-kaṇṭātaṉam, n. <அத்தகண்டம்+. (Yōga.) A yōgic posture in which one leg is held in upright position by one hand, while the other leg is stretched on the ground, the whole body resting on the other hand; ஒருகாலை மேல் நீட்டி அவ்வாறு நீட்டிய காலை ஒரு கையைக்கொண்டு கட்டி மற்றைக்கையை நிலத்தில் ஊன்றியும் மற்றொரு காலை நிலத்தில் நீட்டியுமிருக்கும் ஆசனவகை. (தத்துவப். 108, உரை.)

அத்தகம் attakam, n. perh. hastaka. Accountant; கணக்கன். அத்தகங் கூட்டமிடு மங் கணத்தில் (நெல்விடு. 318).

அத்தகானி atta-kāṉi, n. <artha-hāni. Loss of wealth; பொருட்கேடு. (தஞ். சரசு. i, 307.)

அத்தத்தாவெனல் attattā-v-eṉal, n. <அத்தன்+அத்தன்+. Expr. of child calling its father; குழந்தை தந்தையைக் கூப்பிடுதற் குறிப்பு. அடுத்தடுத் தத்தத்தாவென்பான் (கலித். 81).

அத்ததாளி attatāḷi, n. False-fern tree; காட்டுப்பூவரசு. (L.)

அத்தம்[1] attam, n. <hasta. (நாநார்த்த.) 1. Tuft of hair; மயிர்க்கற்றை. 2. Half of a yard; முழம். 3. Proboscis of an elephant; யானையின் துதிக்கை.

அத்தம்[2] attam, n. <அற்றம். 1. End, termination; முடிவு. Tinn. 2. Destruction; கேடு. (நாநார்த்த.)

அத்தம்[3] attam, n. Kentipāṣāṇam, an arsenic; கெந்திபாஷாணம். (வை. மூ.)

அத்தம்பியார் attampiyār, n. Sister's husband; அத்திம்பேர். Loc.

அத்தமானம் attamāṉam, n. <asta-mana. The western mountain behind which the sun is supposed to set; சூரியன் மறையும் மேற்குமலை. கதிரோன் சேருன்று முதயத்தோ டத்தமானம (கம்பரா. இரணி. 151).

அத்தமேற்கால் atta-mēṟ-kāl, n. <அத்தம் +மேல்+. (Yōga.) See அத்தமேற்காலாதனம். அத்தமேற்கா லேகபாத மேகவத்தம் (தத்துவப். 108).

அத்தமேற்காலாதனம் attamēṟkāl-ātaṉam, n. <அத்தமேற்கால்+. (Yōga.) A yōgic posture in which a person lying on his back holds his folded legs upright with his hands; கீழே கிடந்தவண்ணம் இரண்டுகாலும் சம்மணமாக மடித்து அவ்வாறு மடித்த காலிரண்டுந் தலைக்கு மேலாக உயர்த்திக் கையாற்பிடித்துக் கொண்டு கிடக்கையாகிய ஆசனவகை. (தத்துவப். 108, உரை.)

அத்தரசிதம் attaracitam, n. Yellow orpiment; அரிதாரம். Pond.

அத்தவத்திரதம் attavattiratam, n. A kind of drug; மருந்துச்சரக்குவகை. துத்தமாஞ்சி யத்தவத்திரதம் (பெருங். மகத. 17, 147).

அத்தவாளம் attavāḷam, n. Pleasantness, recreation; உல்லாசம். (R.)

அத்தனை attaṉai, n. cf. அத்துணை. That much; அவ்வளவு என்ற பொருளில் வழங்குஞ்

சொல். நீருரைத்த தொன்றை நான் செய்யுமத்தனை (பெரியபு. இயற். 9).

அத்தாங்கம் attāṅkam, *n.* <*hasta*+*aṅga*+. (Yōga.) See அத்தாங்காதனம். கேசாங்கமு மத்தாங்கம் (தத்துவப். 107).

அத்தாங்காதனம் attāṅkātaṉam, *n.* <id.+id.+. (Yōga.) A yōgic posture in which a person stands on folded hands, keeping the body aloft; கையிரண்டும் மடித்து நிலத்தி லூன்றி உடல் மேற்படநிற்கும் ஆசனவகை. (தத்துவப். 107, உரை.)

அத்தாணி attāṇi, *n.* <Pkt. *attāṇi* <*ā-sthāna*. (சம். அக. Ms.) 1. Nearness; சமீபம். 2. Intimacy; அந்தரங்கம்.

அத்தாந்தரம்[1] attāntaram, *n.* prob. *ardha*+*antara*. Helpless condition; கதியற்ற நிலை. அவனை அத்தாந்தரத்தில் விட்டுவிட்டான்.

அத்தாந்தரம்[2] attāntaram, *n.* <*hasta*+. Cashier; போக்கு வரவு செலவு செய்யுங் கணக்கன். அம்பலஞ்செ யத்தாந்தரம் என்றும் (நெல்விடு. 317).

அத்தாபத்தி attāpatti, *n.* prob. *atyāpat*. See அத்தியாவஸ்தை. *Tinn.*

அத்தாபம் attāpam, *n.* See அத்தாபத்தி. *Loc.*

அத்தாயப்படு-தல் attāya-p-paṭu-, *v. intr.* <அத்தாயம்+. To suffer; to be distressed; கஷ்டப்படுதல். அவன் மிக அத்தாயப்படுகிறான். *Loc.*

அத்தாயம் attāyam, *n.* perh. *ati*+*āyāsa*. *Loc.* 1. Fatigue, weariness; இளைப்பு. 2. Distress; துன்பம்.

அத்தாவரி attāvari, *n.* The drug known as *veṭpālai-y-arici*; வெட்பாலையரிசி. (பரி. அக.)

அத்தாள் attāḷ, *n.* cf. ஆத்தாள். Mother; தாய். (R.)

அத்தாளி attāḷi, *n.* cf. அத்தத்தாளி. False fern tree; காட்டுப்பூவரசு.

அத்தான் attāṉ, *n.* <முடக்கற்றான். Balloon vine; முடக்கொற்றன். (பரி. அக.)

அத்தானம் attāṉam, *n.* <*ā-sthāna*. Gateway under a turret or tower, as of a pagoda; கோபுரவாயில். (R.)

அத்தி[1] atti, *n.* Bird; பறவை. (பொதி. நி.)

அத்தி[2] atti, *n.* <*abdhi*. Natural spring or pond; பொய்கை. (நாநார்த்த.)

அத்தி[3] atti, *n.* cf. *arthi*. Avidity; ஆசை. அத்தியா லடியார்க்கொன் றளிக்கிலே (தேவா. 391, 2).

அத்தி[4] atti, *n.* <*asti*. (Jaina.) Ontological categories which are five in number; அத்தி காயம். அத்தியைத் தானுள்ள வாறறைந்தாய் (திருநூற். 29).

அத்திகோசம் atti-kōcam, *n.* <*hastin*+. A Vaiśya caste, whose store of wealth is so large as to need an elephant to carry it; யானை எடுத்தற்கரிய பொருள் படைத்த வணிகர்வகையார். ஐம்பெருங்குழுவு மத்திகோசமும் (பெருங். வத்தவ. 9, 5, அரும்.).

அத்திநகர் atti-nakar, *n.* <id.+. Hastināpuram near modern Delhi; அஸ்தினாபுரம். அத்திநக ரெய்தினா னங்கு (பாரதவெண். 147).

அத்திபஞ்சரம் atti-pañcaram, *n.* <*asthi-pañjara*. Skeleton; எலும்புக்கூடு. (சிந்தா. நி. 147.)

அத்திபுரசாதனி attipuracātaṉi, *n.* Indigo; அவுரி. (பச். மூ.)

அத்திம்பியார் attimpiyār, *n.* cf. அத்திம் பேர். *Loc.* 1. Elder sister's husband; தமக்கை கணவன். 2. Father's sister's husband; அத்தை கணவன்.

அத்திமானம் attimāṉam, *n.* cf. *hastaka*. Castor plant; ஆமணக்கு. (சித். அக.)

அத்தியந்தம் attiyantam, *adv.* <*atyanta*. To the last end; entirely; அறவே. பாவங்களை அத்தியந்தம் போக்கடிக்கிறவர்களாயும் (வேதாந்தசா. 13).

அத்தியயனவிருத்தி attiyayaṉa-virutti, *n.* <*adhyayana*+. Tax-free land endowed for the service of reciting the Vēdas in temples; கோயிலில் வேதமோதற்கு விடப்பட்ட மானியம். (M. E. R. 493-4 of 1926.)

அத்தியயனாங்கம் attiyayaṉāṅkam, *n.* <id.+*aṅga*. See அத்தியயனவிருத்தி. (M. E. R. 197 of 1924.)

அத்தியாகினம் attiyākiṉam, *n.* cf. அத்தகம். Black cumin; கருஞ்சீரகம். (பரி. அக.)

அத்தியாத்துமசாத்திரம் attiyāttuma-cāttiram, *n.* <*adhyātma*+. The spiritual science, of three kinds, *cāṅkiyam*, *pātañcalam*, *vētāntam*; சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் என மூவகைப்பட்ட ஆத்துமவிசார சாத்திரம். (விவேகசிந். 15.)

அத்தியாத்துமமதம் attiyāttuma-matam, *n.* <id.+. The doctrine of the soul, of four kinds, *pāskarīyam*, *māyāvātam*, *catta-p-pirama-vātam*, *kirīṭā-p-pirama-vātam*; பாஸ்கரீயம் மாயாவாதம் சத்தப்பிரமவாதம் கிரீடாப்பிரம

வாதம் என நால்வகைப்பட்டு ஆத்துமாவின் சொருபத்தை விளக்கும் மதம். (விவேகசிந். 16.)

அத்தியாத்துமிகம் attiyāttumikam, *n.* See அத்தியான்மிகம்.

அத்தியாயனம் attiyāyaṉam, *n.* <*adhyayana.* Reciting the Vēdas; வேதமோதுகை. (சிந்தா. நி. 121.)

அத்தியாவஸ்தை attiyāvastai, *n.* <*atyāvasthā.* Critical condition, as of a disease-stricken person; நெருக்கடியான நிலை. *Colloq.*

அத்தியாளி atti-yāḷi, *n.* <*hastin*+. A fabulous animal; யானையாளி. (பெரும்பாண். 257-9, அடிக்குறிப்பு.)

அத்தியான்மிகம் attiyāṉmikam, *n.* <*ādhyātmika.* 1. Pertaining to the soul; ஆன்மாவுக்குரியது. (W.) 2. (Śaiva.) A section of Śaivāgamas; சைவாகமங்களுள் ஒரு பகுதி. வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் . . . என நூல்களை ஐவகைப்படுத்து (சி. போ. பா. சிறப். 17). 3. (Phil.) Physical and mental afflictions caused to one's self by others; ஆன்மா பிறரால் அடையுந் துக்கம். (சி. சி. 2, 39, சிவாக்.)

அத்திரம்[1] attiram, *n.* <*astra.* Bow; வில். (நாநார்த்த.)

அத்திரம்[2] attiram, *n.* 1. Indian bdellium; குங்கிலியம். (சித். அக.) 2. Japanese wax-tree; கடுக்காய்ப்பூ. (வை. மூ.) 3. Ginger; இஞ்சி. (பச். மூ.)

அத்திரா attirā, *n.* cf. அத்திரு. Pipal; அரசு. (சித். அக.)

அத்திரி attiri, *n.* <*adri.* (பொதி. நி.) 1. Sun; சூரியன். 2. Sky, firmament; விண்.

அத்திரிசாரம் attiri-cāram, *n.* prob. *adrisūra.* Iron; இரும்பு. (வை. மூ.)

அத்திரியர் attiriyar, *n.* A title of Kaḷḷars; கள்ளர்பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அத்திர் attīr, *n.* Rootless nelumbo; குழித்தாமரை. (பரி. அக.)

அத்துகமணி attukamaṇi, *n.* cf. அத்துகமாணி. Pipal; அரசு. (பச். மூ.)

அத்துசம் attucam, *n.* Tree turmeric; மரமஞ்சள். (பச். மூ.)

அத்துலாகியம் attulākiyam, *n.* cf. அத்துலாக்கி. See அத்துவர்க்காயம். (T. C. M. ii, 2, 429.)

அத்துவநியாசம் attuva-niyācam, *n.* <அத்துவா+. Purification of *attuvā;* அத்துவசுத்தி.

அத்துவர்க்கயம் attuvarkkayam, *n.* See அத்துவர்க்காயம். (சித். அக.)

அத்துவர்க்காயம் attuvarkkāyam, *n.* cf. அத்துவாக்காயம். Black cumin; கருஞ்சீரகம். (பச். மூ.)

அத்துவா attuvā, *n.* prob. *a-dvaita.* Union of two things; இரண்டு ஒன்றயிருப்பது. (சிந்தா. நி. 146.)

அத்தை attai, *n.* <Pkt. *attā.* Guru's wife; குருபத்தினி. (நாநார்த்த.)

அத்தைநாறி attainā̱ri, *n.* Prussic acid tree; காட்டுச்சேராங்கு. (L.)

அத்தொய்தம் attoytam, *n.* <*a-dvaita.* Advaita, non-dualism: அத்துவிதம். (வேதாந்தசா. 84.)

அத்தொய்தன் attoytaṉ, *n.* <*a-dvaita.* One who is matchless, without a second; ஒப்பற்றவன். அத்தொய்தனு யிருக்கிற வுனக்குப் பயமென்ன? (வேதாந்தசா. 85.)

அத்வக்காத்து atvakkāttu, *n.* <E. Advocate; வக்கீல். (J.)

அதங்கதம் ataṅkatam, *n.* cf. அதிங்கம். Food of elephant; யானைத்தீவனம். (அக. நி.)

அதப்பு atappu, *n.* <அதை-. Pride; கர்வம். *Loc.*

அதபு atapu, *n.* <Arab. *adab. Muham.* 1. Obedience; வணக்கம். 2. Manners; மரியாதை. அதபு கெட்டவன்.

அதமசரீரம் atama-carīram, *n.* Kalpaka tree; கற்பகவிருட்சம். (சிந்தா. நி. 124.)

அதமதசம் atamatacam, *n.* Borax; வெங்காரம். (வை. மூ.)

அதமர்ணன் atamarṇaṉ, *n.* <*adhamarṇa.* One who takes loans; debtor; கடன் வாங்குவோன். (சுக்கிரநீதி, 97.)

அதமவிம்சதி atama-vimcati, *n.* <*adhama-viṃśati.* The last twenty years from *pilavaṅka* to *atcaya,* in the Jupiter cycle; அறுபது வருஷங்களுள் பிலவங்க முதல் அட்சய வரையுள்ள 20 ஆண்டுகள். (பெரியவரு.)

அதர்[1] atar, *n.* cf. அசறு. Dandruff; தலைப்பொடுகு. குழலான மாலைப்பார்த்தா லதர் மிடைந்து ளுறிடும் (நூற்றெட்டுத். திருப்புகழ். 56).

அதர்² atar, *n.* 1. Gravel; சிறுகல். (பொதி. நி.) 2. Sediment in medicine; மருந்துக்கசடு. (சித். அக.)

அதர்வை atarvai, *n.* <அதர். 1. Way, path; வழி. (பெருங். உஞ்சைக். 53, 145, அடிக் குறிப்பு.) 2. A climber; கொடிவகை. அதர்வைக் கொடிபுரை கயிற்றொடு கொளுத்தினர் (பெருங். உஞ்சைக். 55, 53).

அதரஞ்செய்-தல் ataraññ-cey-, *v. intr.* prob. அந்தரம்+. To make obstruction; தடை செய்தல். புரையிடத்திற் சென்று அதரஞ்செய்யு மவர்களும் (T. A. S. iii, 194).

அதரம்¹ ataram, *n.* <*adhara.* Place or space below; கீழ். (நாநார்த்த.)

அதரம்² ataram, *n.* prob. *haridrā.* Turmeric; மஞ்சள். (பரி. அக.)

அதரவன் ataravaṉ, *n.* Malabar glory-lily; வெண்தோன்றி. (வை. மூ.)

அதலி atali, *n.* Corr. of அதிலி. *Tinn.*

அதவம்¹ atavam, *n.* <அதவு. 1. Country fig; அத்தி. வெண்கோட் டதவத் தெழுகுளிறு மிதித்த வொருபழம் (குறுந். 24). 2. Sacrificial ladle; நெய்த்துடுப்பு. அதவமாய் நறுநெயுண்டு (கம்பரா. விராதன். 45).

அதவம்² atavam, *adv.* <*atha.* Then, afterwards; பின்பு. (சிந்தா. நி. 140.)

அதவல்குதவல் atavalkutaval, *n.* Loose motions; தீவனஞ்சேரியாது கழிந்த மலம். சாணி அதவல்குதவலாகப் போடும் (பெரியமாட். 104).

அதவிடம் atavitam, *n.* <*ati-viṣa.* Atis; அதிவிடை. (W.)

அதன்மி ataṉmi, *n.* <*a-dharma.* Fallen woman; ஒழுக்கங்கெட்டவள். அதன்மி யாரென வாங்கவன் வினவ (பெருங். உஞ்சைக். 35, 69).

அதா¹ atā, *n.* <அதவு. Country fig; அத்தி. (பரி. அக.)

அதா² atā, *adv.* cf. அந்தா. There; அங்கே. *Tinn.*

அதாதிரு atātiru, *n.* <*a-dātṛ.* Miser; உலோபி. (சிந்தா. நி. 137.)

அதி-த்தல் ati-, 11 *v. intr.* <*ati.* To excel; சிறத்தல். அதிக்கின்ற ஐவருள் (திருமந். 610).

அதிக்கண்டம் ati-k-kaṇṭam, *n.* prob. *ati-khaṇḍa.* (Pros.) Metrical foot; செய்யுட்சீர். அதிக்கண்ட மென்றும் . . . சீரை . . . பகர்வர் (யாப். வி. பக். 97).

அதிக்கிராந்தம் atikkirāntam, *n.* <*ati-krānta.* That which transcends; கடந்தது. (சி. சி. 7, ஞானப்.)

அதிகதை atikatai, *n.* <*ati-kathā.* Meaningless talk, senseless expression; வெற்றுரை. (W.)

அதிகம் atikam, *n.* <*adhika.* (Log.) A fault in argumentation; தோல்வித்தானத் தொன்று.

அதிகமரிச்சம் atikamariccam, *n.* cf. அதிமறிச்சம். Seeds of climbing-staff plant; வாலுளுவை யரிசி. (சு. வை. ர. 558.)

அதிகமான் atikamāṉ, *n.* A title of Kallars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அதிகரணத்தண்டம் atikaraṇa-t-taṇṭam, *n.* <*adhi-karaṇa*+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. ii, 353.)

அதிகரி-த்தல் atikari-, 11 *v. intr.* <*adhi-kṛ.* To be employed or engaged in; காரியத்தில் முனைதல். ஐவர்க்கும் பரதந்த்ரனாய்க் கொண்டு தூதக்ருத்யத்திலே அதிகரித்து (திவ். பெரியாழ். 1, 8, 3, வ்யா. பக். 161).

அதிகல் atikal, *n.* cf. அதிரல். Wild jasmine; காட்டுமல்லிகை. (W.)

அதிகவாரம் atika-vāram, *n.* <அதிகம்+. An extra share in the division of the crop assigned to Brahmins or other privileged persons; பிராமணர் முதலிய சிறப்புரிமையாளர்க்கு மாதுலிற் பிரித்துக்கொடுக்கும் அதிகப்பங்கு. (W. G.)

அதிகாசம் ati-kācam, *n.* <*ati*+*hāsa.* Loud laughter; பெருநகை. (சிந்தா. நி. 120.)

அதிகாந்தம் ati-kāntam, *n.* <*ati-kānta.* 1. A precious stone; இரத்தினவகை. (W.) 2. Red sky at sunset; செவ்வானம். (சிந்தா. நி. 137.)

அதிகாரக்கணக்கு atikāra-k-kaṇakku, *n.* <அதிகாரம்+. Accounts relating to state revenue; அரசாங்கக் கணக்கு. (J. N.)

அதிகாரச்சாலை atikāra-c-cālai, *n.* <id. +. Office, court; கச்சேரி. (R.)

அதிகாரசூத்திரம் atikāra-cūttiram, *n.* <id.+. A sūtra defining the scope of the other sūtras in a section of a treatise; தான் ஒன்றனையும் விதிக்காது பல சூத்திரங்கட்கு முன் படிக்கப்பட்டு அவற்றுக்குப் பொருள்கொள்ளும்போது தானும் அவற்றுடன் சேர்ந்து பொருள்கொள்ளப்படுஞ் சூத்திரம்.

அதிகாரடாகை atikāra-ṭākai, *n.* <id. + U. *ṭigā*. Pride of power; அதிகாரத்தால் உண்டாகுங் கர்வம். *அதிகாரடாகையின்மே லார்த்து* (*சரவண. பணவிடு.* 109).

அதிகாரதத்துவம் atikāra-tattuvam, *n.* <id. +. (Šaiva.) The function of God in which the principle of energy dominates that of wisdom; கிரியை மிகுந்து ஞானம் குறைந்த ஈச்சுர தத்துவம். (*சி. சி.* 1, 65, *ஞானப்.*)

அதிகாரப்புறனடை atikāra-p-puṟa-ṉaṭai, *n.* <id. +. (Gram.) General permissive rule at the end of a chapter; அதிகாரவிறுதியிற் கூறும் புறனடைச்சூத்திரம். (*தொல். சொல்.* 45, *சேனா. பக்.* 54.)

அதிகாரப்பேறு atikāra-p-pēṟu, *n.* <id. +. A tax; வரிவகை. (S. I. I. iv, 125.)

அதிகாரப்பொன் atikāra-p-poṉ, *n.* <id. +. A kind of tax in gold; பொன்னுருவமாக வாங்கும் வரிவகை. (S. I. I. iv, 195.)

அதிகாரம்[1] atikāram, *n.* <*adhikāra*. Administrative sub-division of a taluk; தாலுக்காவின் உட்பகுதி. *Nāñ.*

அதிகாரம்[2] atikāram, *n.* perh. *அதிரசம்*. A kind of sweet cake; பணியாரவகை. *Nāñ.*

அதிகாரமேலெழுத்து atikāra-mēl-eḻuttu, *n.* <*அதிகாரம்* +. Revisional order; கீழுத்தியோகஸ்தர் செய்த கட்டளையை மாற்றியெழுதும் உத்தரவு. *திருச்சிவிந்திரத்து மஹாஸபையோம் அதிகாரமேலெழுத்து* (T. A. S. iii, 71).

அதிகாரவர்த்தனை atikāra-varttaṉai, *n.* A collection of taxes; வரித்தொகுதி. (M. E. R. 428 of 1913.)

அதிகாரன் atikāraṉ, *n.* <*adhikārin*. Superintendent, head, director; officer; அதிகாரி. *வரிகளைச் சுமத்தி அநியாயஞ்செய்த பூர்விக அதிகாரர்கள் சதிகாராகளே* (*பெண்மதிமாலை, பக்.* 136).

அதிகாரி[1] atikāri, *n.* <id. 1. (Šaiva.) Mahēšvara aspect of Šiva in which the Energy of action predominates; மகேசுவரன். (*சி. சி.* 1, 65, *மறைஞா.*) 2. Officer in charge of an *atikāram;* அதிகாரத்திற்குரிய தலைமை உத்தியோகஸ்தன். *Nāñ.*

அதிகாரி[2] ati-kāri, *n.* <*அதி* + *காரம்*. cf. *அதிகநாரி*. Ceylon leadwort; கொடுவேலி. (*பச். மூ.*)

அதிகோரம் atikōram, *n.* Emblic myrobalan; நெல்லி. (T. C. M. ii, 2, 429.)

அதிங்கு atiṅku, *n.* cf. *அதிங்கம்*. Liquorice-plant; அதிமதுரம். *அரக்குமதிங்கும்* (*பெருங். இலாவாண.* 18, 46).

அதிசந்தானம் ati-cantāṉam, *n.* <*ati-sandhāna*. Falsehood; பொய். (*சிந்தா. நி.* 122.)

அதிசயவுவமை aticaya-v-uvamai, *n.* <*atišaya* +. (Rhet.) A simile which states that there is no difference between *uvamāṉam* and *uvamēyam* except in their *loci;* மிகையுவமை. (*வீரசோ. அலங்.* 14, *உரை.*)

அதிசரம் aticaram, *n.* <*ati-cara*. Sigh; நெட்டுயிர்ப்பு. (W.)

அதிசூக்குமதேகம் ati-cūkkuma-tēkam, *n.* <*ati* + *sūkṣma* +. (Šaiva.) Subtle body, containing the *pūtam, taṉmāttirai, ñāṉēntiri-yam, kaṉmēntiriyam, antakkaraṇam, kuṇam, mūla-p-pakuti* and *kalāti;* பூதம் தன்மாத்திரை ஞானேந்திரியம் கன்மேந்திரியம் அந்தக்கரணம் குணம் மூலப்பகுதி கலாதி என்பவற்றில் ஒவ்வொன்று கொண்ட நுண்ணுடல். (*சி. போ. பா.* 2, 3, *பக்.* 194.)

அதிசூக்குமம் ati-cūkkumam, *n.* <*ati-sūkṣma*. Anything very subtle; மிக நுண்ணியது. (*சி. போ. பா.* 2, 3, *பக்.* 194.)

அதிசூக்குமை aticūkkumai, *n.* <*ati-sūkṣmā*. (Šaiva.) A form of Šiva-Šakti; சிவசத்திபேதங்களு ளொன்று. (*சதாசிவ.* 21, *உரை.*)

அதிசோபனை ati-cōpaṉai, *n.* <*ati-šōbhanā*. Pārvatī; பார்வதி. (*கூர்மபு. திருக்கலியாண.* 22.)

அதிட்டகன்மம் atiṭṭa-kaṉmam, *n.* <*a-dṛṣṭa* +. The invisible karma which causes enjoyment and suffering; நன்மை தீமைகளை அனுபவிக்கச் செய்யுங் கருமம். (*சிவப்பிர.* 19, *உரை, பக்.* 213.)

அதிதனு atitaṉu, *n.* Gold; பொன். (W.)

அதிதானம் ati-tāṉam, *n.* <*ati* +. Bounty, gift; ஈகை. (*சிந்தா. நி.* 143.)

அதிதி atiti, *n.* <*aditi*. (*நாநார்த்த.*) 1. Earth; பூமி. 2. Pārvatī; பார்வதி.

அதிநீசம் ati-nīcam, *n.* <*ati-nīca*. 1. (Erot.) The sexual union of a man of the hare class with a woman of the elephant class, one of *aivakai-p-puṇarcci*, q.v.; ஐவகைப் புணர்ச்சியுள் யானைச்சாதிப் பெண்ணுடன் முயற்சாதியாண் கூடுங் கூட்டம். *விழைவுற அதிநீச மென்ன* (*கொக்கோ.* 3, 7). 2. (Astron.) Highly debilitated position of a planet in the house of its

depression; கிரகம் நீசவீட்டில் மிகத்தாழ்வான பாகையிலிருக்கை. (சோதிட. சிந்.)

அதிநுண்கணிதம் ati-nuṇ-kaṇitam, *n.* <அதி + நுண்மை +. Differential calculus; கணிதவகை. *Pond.*

அதிநோய் atinōy, *n.* cf. அதிகோலம். Sage-leaved alangium; அழிஞ்சில். (பரி. அக.)

அதிப்பிரசங்கம் ati-p-piracaṅkam, *n.* <அதி +. Digression, introducing extraneous matter; மற்றொன்று விரிக்கை. (தருக்கசங். பக். 249.)

அதிபம் atipam, *n.* Margosa; வேம்பு. (சித். அக.)

அதிபலம் ati-palam, *n.* True croton oil plant; நேர்வாளம். (பச். மூ.)

அதிபிள்ளை ati-piḷḷai, *n.* prob. ஆதி +. Senior wife; மூத்த மனைவி. *Cm.*

அதிமல்லி atimalli, *n.* cf. அதிமலம். A species of crataeva; மாவிலங்கம். (மலை. அக.)

அதிமார்க்கநூல் atimārkka-nūl, *n.* <அதிமார்க்கம் +. (Saiva). See அதிமார்க்கிகசாத்திரம். (சித். பிர. பக். 14.)

அதிமார்க்கம் ati-mārkkam, *n.* <*ati* + *mārga*. 1. (Śaiva.) Religious sects not intimately related to Śaivasiddhānta; அகப்புறச் சமயம். (சித். பிர. 14.) 2. A section of Śaivāgamas; சைவாகமப் பிரிவினுள் ஒன்று. (சி. போ. பா. 17.)

அதிமார்க்கிகசாத்திரம் ati-mārkika-cāttiram, *n.* <id. + *mārgika* +. (Saiva.) The religious treatises which deal with *pācupatam*, *kāpālikam* and *māviratam;* பாசுபதம் காபாலிகம் மாவிரதமென்னும் மார்க்கங்களைக் கூறுஞ் சாத்திரங்கள். (விவேகசிந். 17.)

அதிமித்திரன் ati-mittiraṉ, *n.* <id. +. Husband; கணவன். (சிந்தா. நி. 132.)

அதிமிருத்தியாதிமாத்திரை ati-mirut-tiyāti-māttirai, *n.* perh. id. + *mṛtya* + *ādi* +. Medicinal pill made of bezoar; கோரோசனை மாத்திரை. (W.)

அதிமுணி atimuṇi, *n.* perh. அதிகம் + உண்-. Dues payable by the owners of fields to the owners of wells for drawing water from the wells for irrigating their fields; பிறருடைய கிணற்றிலிருந்து நீர் இறைத்துச் சாகுபடி செய்வதற்காகக் கிணறுடையவனுக்குக் கொடுக்கும் வாரம். (R. T.)

அதிமுத்தகம் ati-muttakam, *n.* <*ati-muktaka.* (நாநார்த்த.) 1. Common delight of the woods; குருக்கத்தி. 2. East Indian kino; திமிசு.

அதிமேஷ் atimēṣ, *n.* <U. *azmāish.* Estimate of standing crop, made by a subordinate revenue officer; அரசிறைக் கீழுத்தி யோகஸ்தனிட்ட புள்ளிமதிப்பு. *Loc.*

அதியுக்தம் atiyuktam, *n.* <*atyukta.* Exaggeration; மிகைபடக் கூறுகை.

அதியுச்சம் ati-y-uccam, *n.* <*atyucca.* 1. (Erot.) The sexual union of a man of the horse class with a woman of the deer class, one of *aivakai-p-puṇarcci,* q.v.; ஐவகைப் புணர்ச்சியுள் மான்சாதிப்பெண்ணுடன் குதிரைச்சாதி ஆண் கூடுங் கூட்டம். (கொக்கோ. 3, 7.) 2. (Astron.) Highly exalted position of a planet in the house of its exaltation; கிரகம் உச்சவீட்டில் மிக உச்சமான பாகையிலிருக்கை. (சோதிட. சிந்.)

அதிர் atir, *n.* cf. U. *hadd.* [M. *atir.*] 1. Limit, boundary; எல்லை. *Loc.* 2. Propriety; மரியாதை. அதிர்கடந்து பேசுகிறான். *Tinn.*

அதிர்காணி atir-kāṇi, *n.* prob. id. +. Proprietary right in village lands; காணியாட்சி மிராசு. தனக்கு அதிர்காணியாக (S. I. I. iv, 156).

அதிர்த்தி[1] atirtti, *n.* <அதிர்-. Loud noise or report; அதிர்ச்சி. அதுதான் இவன் கன்றுமறித் தோடுகிற வதிர்த்தியாலும் (திவ். பெரியாழ். 3, 2, 3, வ்யா. பக். 539).

அதிர்த்தி[2] atirtti, *n.* <அதிர். See அதிர், 1.

அதிர்ப்பு atirppu, *n.* <அதிர்- Fear; அச்சம். (நாநார்த்த.)

அதிர்ஷ்டஜன்மபோக்கியம் atirṣṭa-janma-pōkkiyam, *n.* <*adṛṣṭa* + *janma* +. Enjoyment of the fruits of karma, either in heaven, hell or in succeeding birth; சுவர்க்கத்திலேயாதல் நரகத்திலேயாதல் மறுசன்மத்திலேயாதல் பலிக்கும் கர்மானுபவம். (சி. சி. 4, 40, சிவாக்.)

அதிரடி atir-aṭi, *n.* <அதிர்- +. 1. Violent agitation; பெருங் கலக்கம். அச்சந் தீஇ மதிரடியுஞ் சொற்பனமும் (பஞ்ச. திருமுக. 720). 2. Bluff; மிரட்டு. *Tinn.*

அதிரதம் ati-ratam, *n.* <*ati-ratha.* A class of chariots, one of four *iratam,* q.v.; தேர்வகை நான்கனு ளொன்று. (ஸ்ரீபத்ம. தென்றல் விடு. 67, குறிப்பு.)

அதிரர் atirar, *n.* prob. *a-sura.* Asuras; அசுரர். அதிரர் தேவ ரியக்கர் (தேவா. 380, 8).

அதிராத்திரியாஜி atirāttiri-yāji, *n.* <*ati-rātra+yājin.* A title of learned Brahmins; வேதம்வல்ல பிராமணர் பட்டப்பெயர். (S. I. I. v, 161.)

அதிரிச்சியம் atiricciyam, *n.* <*adṛśya.* Art of making visible objects invisible; பண்டங்களைப் பிறர் காணாமல் மறைக்கும் வித்தை. *புசரிலா வதிரிச்சிய மஞ்சனம்* (*திருவிளை. எல்லாம்.* 17).

அதிருஷ்டபரதந்திரத்துவம் atiruṣṭa-paratantira-t-tuvam, *n.* <*a-dṛṣṭa*+. Being subject to the results of *puṇṇiyam* and *pāpam;* புண்ணியபாப வசத்தனாகை. (*விவேகசிந்.* 3.)

அதிருஷ்டபோக்கியம் atiruṣṭa-pōkki-yam, *n.* <id.+. Effects of unseen actions, experienced in after-life; மறுமையில் சொர்க்க நரகங்களில் நுகரும் அனுபவம். (*சி. சி.* 2, 39, *ஞானப்.*)

அதிருஷ்டயத்தினம் atiruṣṭa-yattiṉam, *n.* <id.+. Fruitful attempt; பயந்தரும் முயற்சி. *தேவர் செய்தருளின அதிர்ஷ்டயத்னமாய் இப்படிப் பலித்தது* (S. I. I. vi, 189).

அதிருஷ்டானுகூலம் atiruṣṭāṉukūlam, *n.* <id.+. Luck; நற்காலப் பயன். *இவனுடைய அதிருஷ்டானுகூலம் எப்படியோ?* (*தமிழறி.* 24).

அதிலி atili, *n.* Corr. of அலரி. *காக்கணம் வேர் அதிலிவேர் பாலைவேர் இம்மூன்றும் அரைத்துப் பாதலேபனம் செய்யவும், விஷந்தீண்டாது* (T. C. M. ii, 2, 481).

அதிலோகம் atilōkam, *n.* Sublimate of mercury; இரசகர்ப்பூரம். (*வை. மூ.*)

அதிவசம் ativacam, *n.* <*ativiṣā.* (*பரி. அக.*) 1. Atis; அதிவிடை. 2. Sweet flag; வசம்பு.

அதிவிருத்தம் ati-viruttam, *n.* <*ati-vṛtta.* Transgression; வரம்புமீறுகை. (*நாநார்த்த.*)

அதினம் atiṉam, *n.* cf. *அதனம்.* [T. *adanamu.*] Excess; மிகுதி. *Loc.*

அதிஷ்டானம் atiṣṭāṉam, *n.* <*adhi-ṣṭhāna.* 1. City; நகர். (*நாநார்த்த.*) 2. Seat; இருக்கை. (M. E. R. 343 of 1927-8.) 3. Chariot-wheel; தேர்க்கால். (*நாநார்த்த.*) 4. The base of a temple *vimāṉam;* கோயில்விமானத்தின் கீழுள்ள பகுதி. (M. E. R. 146 of 1928-9.) 5. Fame; பிரபாவம். (*நாநார்த்த.*) 6. Roaring, shouting; ஆரவாரிக்கை. (*நாநார்த்த.*)

அதீதியம் atītiyam, *n.* perh. *atīndriya.* Absence of desire or attachment; ஆசையின்மை. (*சிந்தா. நி.* 143.)

அதீனம் atīṉam, *n.* <*adhīna.* (W.) 1. Right of possession; உரிமை. 2. Dependence; சார்பு.

அதுகுபடி atukupaṭi, *n.* Supplying water to a cultivator at a low rate of assessment on condition of his bringing a piece of unoccupied land into cultivation; சாதுபடிக்கு யோக்கியமாக ஒரு நிலத்தைத் திருத்தும்பொருட்டுக் குறைந்த தீர்வைக்குக் கொடுக்கப்படும் பாசனநீர். (R. T.)

அதுலிதம் atulitam, *n.* <*a-tulita.* State of being at rest; அசைவின்மை. (*சிந்தா. நி.* 120.)

அதை-த்தல் atai-, *11 v. intr.* To wander about; அலைதல். *உணாநாடி யதைத்தொழிந்தேன்* (*திருமந்.* 1691).

அதைப்பு ataippu, *n.* <*அதை-.* Pride; கர்வம். *Loc.*

அதோ atō, *adv.* <*அது.* There, over there; அங்கே. *Loc.*

அதோலம்பம் atōlampam, *n.* <*adhas +lamba.* Perpendicularity; செங்குத்தான நிலை. (W.)

அந்தக்கரணசாட்சி antakkaraṇa-cāṭci, *n.* <*அந்தக்கரணம்*+. Conscience; மனச்சாட்சி. (W.)

அந்தக்கேணி anta-k-kēṇi, *n.* <*அந்தம்*+. Hidden well; covered well; மறைகிணறு. *அந்தக் கேணியு மெந்திரக் கிணறும்* (*பெருங். உஞ்சைக்.* 33, 3).

அந்தகசயன் antaka-cayaṉ, *n.* <*antaka-jaya.* Śiva; சிவபெருமான். (W.)

அந்தகசன்னிபாதம் antaka-caṉṉi-pā-tam, *n.* <*அந்தகம்*+. One of 13 kinds of *caṉṉi,* q.v.; சன்னிபாதவகை. (*சீவரட்.*)

அந்தகாசுரஹரணர் antakācura-hara-ṇar, *n.* <*andhakāsura+haraṇa.* (Śaiva.) A manifestation of Śiva; சிவபேதம் இருபத்தைந்தனுளொன்று. (*காஞ்சிப்பு. சிவபுண்.* 24, *தலைக்குறிப்பு.*)

அந்தகூபம் anta-kūpam, *n.* <*அந்தம்*+. See அந்தக்கேணி. (P. N.)

அந்தகோளம் antakōḷam, *n.* cf. *அந்த கோலம்.* Emblic myrobolan; நெல்லி. (*வை. மூ.*)

அந்தசந்தம் anta-cantam, *n.* Redupl. of *அந்தம்.* Beauty; அழகு. *Loc.*

அரைச்சம்பளம் arai-c-campaḷam, *n.* <id. +. Pension; சம்பளத்தில் பாதியாகப் பெறும் உபகாரவேதனம். *Colloq.*

அரைச்சவரம் arai-c-cavaram, *n.* <id. +. 1. Shaving the head; தலைச்சவரம். 2. Shaving the face; முகச்சவரம். *Loc.*

அரைசுகட்டு araicu-kaṭṭu, *n.* prob. அரைசு + கட்டு-. A village perquisite; கிராம சுதந்தர வகை. (Insc. Pudu.)

அரைத்தூக்கி arai-t-tūkki, *n.* <அரை +. Pillory; தூக்குமர வகை. (W. G.)

அரைநீர் arai-nīr, *n.* cf. அருநீர். Water for irrigation drawn from a public reservoir during a certain period of the year; குறித்தகாலங் களிற் பாசனமாகப் பாய்ச்சும் நீர். (C. G.)

அரைப்புக்கட்டி araippu-k-kaṭṭi, *n.* <அரைப்பு +. Mahua oil-cake; இலுப்பைப் பிண்ணாக்கு. (சங். அக.)

அரைப்பூட்டு arai-p-pūṭṭu, *n.* <அரை +. Groin; தொடைச்சந்து. *Pond.*

அரைபாணா arai-pāṇā, *n.* A kind of fencing rod; சிலம்பக்கழிவகை. (மதி. களஞ். i, 66.)

அரைமதியிரும்பு arai-mati-y-irumpu, *n.* <அரை + மதி +. A crescent-shaped goad for elephant; அர்த்தசந்திரனைப்போன்ற ஒருவகை அங்குசம். அரைமதியிரும்பொடு (பெருங். உஞ்சைக். 32, 96).

அரைமலை arai-malai, *n.* <id. +. Side of a hill; மலையின் சார்பு. (புறநா. 2, உரை.)

அரையர்கோவை araiyar-kōvai, *n.* <அரையன் +. A *kōvai* on the chief Tayāparan̲ of Tañcai, not now extant; தஞ்சைத் தயாபரன் என்ற தலைவன்மேற் பாடப்பட்ட கோவைப் பிரபந்தம். (களவியற். 90.)

அரையலிடுகை araiyal-iṭukai, *n.* <அரை- +. (W.) 1. Rubbing or wearing away a place by sitting or standing; உட்கார்ந்தாவது நின்றாவது ஓரிடத்தைத் தேய்த்துக்கொண்டிருக்கை. 2. Eating too much without doing any work; வேலைசெய்யாமல் அதிகமாய் உண்கை.

அரையற்றநாள் arai-y-aṟṟa-nāḷ, *n.* <அரை + அறு- +. The 5th, 14th and 23rd *nakṣatras;* மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் என்ற நட்சத்திரங்கள். (சோதிட. அக.)

அரையன் araiyan̲, *n.* <அரசன். An ancient title; ஓர் பழைய பட்டம். அரையன் அரங்கன் பிச்சன் (S. I. I. iii, 438).

அரையன்சம்பா araiyan̲-campā, *n.* perh. id. +. A kind of paddy; நெல்வகை. (A.)

அரையாப்பு arai-y-āppu, *n.* <அரை +. Groin; தொடைச்சந்து. *Pond.*

அரையாறுபடு-தல் arai-y-āṟu-paṭu-, *v. intr.* <id. + ஆறு +. To decrease, lessen; to be reduced; குறைதல். பிரிவாலே அரையாறுபட்டுச் சிவந்திருக்கும் (ஈடு, 1, 4, 2, பக். 176).

அரைவளைந்தான் arai-vaḷaintān̲, *n.* <id. +. Cloth worn round the loins without *kaccam;* தட்டுச்சுற்றுடை. *Tinn.*

அரைவளைவாசனம் arai-vaḷaivācan̲am, *n.* <id. + வளைவு +. (Yōga.) A kind of semi-circular yōgic posture; யோகாசன வகை.

அரைவாய்க்கொண்டுதின்னல் arai-vāy-k-koṇṭu-tin̲n̲al, *n.* <id. + வாய் +. Eating slowly, as diseased-stricken animals; நோயினால் மாடு முதலியன மெதுவாக இரையெடுக்கை. (பெரிய மாட். 156.)

அரைவீற்று arai-vīṟṟu, *n.* <id. +. Semi-circle; வட்டத்திற் பாதி.

அரைவெறி arai-veṟi, *n.* <id. +. Partial intoxication; கட்குடியால் உண்டாகுஞ் சிறுமயக்கம். (W.)

அரைவேஷ்டி arai-vēṣṭi, *n.* <id. +. Cloth worn as an outer garment, covering from waist to ankles; இடுப்பிற் கட்டும் ஆடை. *Colloq.*

அல் al, *n.* perh. எல். (அக. நி.) 1. Sun; சூரியன். 2. Sunshine; வெயில்.

அல்கா alkā, *n.* Padding underneath the collar of a horse; குதிரைச் சேணத்தில் கழுத்து வளையத்துக்குக் கீழிடும் மெத்தை. *Loc.*

அல்கு[1]-தல் alku-, *5 v. tr.* To preserve; சேமித்துவைத்தல். சிலைகெழு குறவர்க் கல்குமிசை யாகும் (புறநா. 236).

அல்கு[2] alku, *n.* <அல்கு-. Stay, sojourn; தங்குகை. (பொதி. நி.)

அல்குப்பை alkuppai, *n.* Ceylon verbisina; பொற்றலைக்கையாந்தகரை. (வை. மூ.)

அல்சா alcā, *n.* Rudder; சுக்கான். *Loc.*

அல்டப்பா alṭappā, *n.* Useless thing; பயனற்றது. *Madr.*

அல்தி alti, *n.* <U. *alti.* A term in the game of marbles used by a player for removing the obstacles in his front, before playing; கோலியாட்டத்தில் கோலியாடுபவன் தன்னுடைய கோலிக்கு முன்னே அடிக்கத்தடையாக உள்ள செத்தை குப்பைகளை நீக்குவதற்காகச் சொல்லும் வார்த்தை. *Madr.*

அல்நார் alnār, *n.* <கல்நார். Asbestos; கல்நார். (R.)

அல்பமிறை alpa-m-iṟai, *n.* prob. *alpa*+ இறை. A tax in grain; தானியக்கடமைகளி லொன்று. (S. I. I. v, 196.)

அல்மதம் almatam, *n.* cf. கல்மதம். Rock alum; கன்மதம். *Pond.*

அல்லணை allaṇai, *n.* cf. கல்லணை. Dam of stone; கல்லால் அமைத்த அணைக்கட்டு. (R. T.)

அல்லறம் al-l-aṟam, *n.* <அல்+. Sinful act, sin; பாவம். அல்லறஞ் செய்வோ ரருநர கடைதலும் (மணி. 16, 89).

அல்லாப்பாண்டியடி-த்தல் allāppāṇṭi-y-aṭi-. *v. intr.* prob. அல்லாப்பண்டிகை+. To perform a somersault; தட்டிக்கரணம் போடுதல். *Tp.*

அல்லி alli, *n.* perh. அலி. Hermaphrodite; அலி. (பொதி. நி.)

அல்லியம் alliyam, *n.* <*halya.* Plough; கலப்பை. (சிந்தா. நி. 299.)

அல்லியுணவு alli-y-uṇavu, *n.* <அல்லி+. Food prepared from water-lily seeds; அல்லி யரிசியாலான உணவு. கூந்தல்கொய்து . . . அல்லி யுணவின் மனைவியோ டினியே, புல்லென் றனையால் (புறநா. 250).

அல்லை allai, *n.* <அல்லி. Water-lily; அல்லி. (பச். மூ.)

அல-த்தல் ala-, 12 *v. tr.* To desire; ஆசைப் படுதல். (சிவப்பிர. 3.)

அலக்கரிவாள் alakkarivāḷ, *n.* <அலக்கு +. Crotchet-shaped blade attached to a pole; துறட்டுக்கோலின் நுனியில் சேர்த்துள்ள அறுக்குங் கருவி. *Tj.*

அலக்கு[1]-தல் alakku-, 5 *v. tr.* [M. *alakku.*] To wash, as clothes; துணிமுதலியன வெளுத்தல். *Nāñ.*

அலக்கு[2] alakku, *n.* <அலகு. 1. Bone; எலும்பு. விலாவலக்குக வலக்குக வடிக்கடி சிரித்தன (கலிங். 216). 2. Branch; கிளை. (சங். அக.)

அலக்கு[3] alakku, *n.* cf. அலங்கம். Fort; கோட்டை. (சம். அக. Ms.)

அலகமான் alakamāṉ, *n.* cf. அலமான். Long pepper; திப்பலி. (பச். மூ.)

அலகரி alakari, *n.* perh. *lahari.* Large wave, surf; பெரிய அலை. (W.)

அலகழுங்கு alakaḻuṅku, *n.* Long pepper; திப்பலி. (சங். அக.)

அலகிரி alakiri, *n.* 1. See அலகரி. (W.) 2. Immodest fellow; வெட்கங்கெட்டவன். *Tp.*

அலகிருக்கைவெண்பா alakirukkai-veṇpā, *n.* perh. அலகு+. (Pros.) A kind of verse in *veṇpā* metre; மிறைக்கவிவகை. (யாப். வி. 510.)

அலகு[1] alaku, *n.* 1. (Mus.) A unit of measurement in musical scale; சுருதியளவு. (Mus. Ind.) 2. Flaw; குற்றம். (தக்கயாகப். 41.)

அலகு[2] alaku, *n.* prob. அருகு. Harialli grass; அறுகு. (பச். மூ.)

அலகுவிரல் alaku-viral, *n.* <அலகு+. Spathe of the male palmyra; பனங்கதிர். *Tinn.*

அலகை[1] alakai, *n.* <அளகை. The city Aḷakā; அளகாபுரி. (சம். அக. Ms.)

அலகை[2] alakai, *n.* <அலகு. Standard; அளவு. அலகை சான்ற வுலக புராணமும் (பெருங். உஞ்சைக். 32, 2).

அலங்கம் alaṅkam, *n.* <அரங்கம். Small island in the midst of a river; ஆற்றிடைக்குறை.

அலங்கல் alaṅkal, *n.*<அலங்கு-. 1. Light; ஒளி. (ஈடு, 10, 1, 2.) 2. Fragrant basil; துளசி. (பச். மூ.)

அலங்கலம் alaṅkalam, *n.* <id. Movement; அசைகை. (சிந்தா. நி. 290.)

அலங்கழித்தொழில் alaṅkaḻi-t-toḻil, *n.* <அலக்கழி-+. Acts of wickedness or oppression; அலவலைத்தொழில். அறவிய மனத்தினை யாகி யலங்கழித்தொழி லொழிந்தடங்கி (நீலகேசி, 74).

அலங்கன் alaṅkaṉ, *n.* <அலங்கம். Rampart, bulwark; கொத்தளம்.

அலங்காரம் alaṅkāram, *n.* Saltpetre; வெடிகாரம். (சங். அக.)

அலங்காரமண்டபம் alaṅkāra-maṇṭapam, *n.* <*alaṅkāra*+. Saloon; வரவேற்புக் கூடம். (கட்டட. நாமா.)

அலங்காரமாடம் alaṅkāra-māṭam, *n.* <id.+. Tabernacle; ஆராதனைப்பண்டங்களை வைப்பதற்கு ஏற்பட்ட மாடம். (கட்டட. நாமா.)

அலங்கிதன் alaṅkitaṉ, *n.* prob. *alaṃkṛta.* Yellow orpiment; அரிதாரம். (வை. மூ.)

அலங்கோலை alaṅ-kōlai, *n.* <அலங் கோலம். Disorder; slovenliness; அலங்கோலம். *Pond.*

அலசகம் alacakam, *n.* cf. *alasa.* Common anise; சோம்பு. (பரி. அக.)

அலசந்தி alacanti, *n.* Chowli bean; பெரும் பயறு. (நாமதீப.)

அலசம் alacam, *n.* <*alasa*. A foot-disease, ulcer between the toes; கால்விரல்களுக்கு இடையே யுண்டாகுஞ் சேற்றுப்புண். (நாநார்த்த.)

அலசு alacu, *n.* < அலசு-. Sorrow, grief; துக்கம். (சம். அக. Ms.)

அலத்தகம் alattakam, *n.* <*alaktaka*. A variety of cotton; செம்பருத்தி. (பச். மூ.)

அலத்தம் alattam, *n.* cf. *alakta*. Sun-flower; சூரியகாந்தி. (மஞ்சிக. நி.)

அலத்தை alattai, *n.* cf. அலத்தகம். Cotton colored with lac-dye; செம்பஞ்சு. (அக. நி.)

அலந்தலி alantali, *n.* cf. அலந்தல். False peacock's foot tree; செங்கத்தாரி. (பச். மூ.)

அலப்படையோன் alappaṭaiyōṉ, *n.* <அலப்படை. Balarāma, the elder brother of Kṛṣṇa, as having the plough for his weapon; பலராமன்.

அலப்பறை alappaṟai, *n.* <அலப்பு-. 1. Blabber; அலப்புணி. 2. Beggar; பிச்சைக்காரன். *Tinn.*

அலப்பாட்டு-தல் alappāṭṭu-, *v. intr.* <அலப்பு+. To become confused; மனங்கலங்குதல். பேதைகளுணைப்பணவே சொல்லிப் பெரிதலப் பாட்டினை நீ (நீலகேசி, 448).

அலப்பு-தல் alappu-, 5 *v. tr.* Caus. of அலம்பு-. To cause agitation; அலைத்தல். அமர்க் கண் மகளி ரலப்பிய வந்நோய் (கலித். 75).

அலப்புணி alappuṇi, *n.* <அலப்பு-+. Gossip; வீண்பேச்சுப் பேசுபவ-ன்-ள். *Loc.*

அலம்[1] alam, *n.* <*halā*. Water; தண்ணீர். (சம். அக. Ms.)

அலம்[2] alam, *n.* <*ala*. Sting of scorpion; தேளின் கொடுக்கு. (நாநார்த்த.)

அலம்பு-தல் alampu-, 5 *v. tr.* To mix; கலத்தல். (தக்கயாகப். 93, உரை.)

அலம்புரி-தல் alam-puri-, *v. tr.* <*alam* +. To give to satisfaction or satiety; திருப்தியாதும்வரை கொடுத்தல். அலம்புரிந்த நெடுந்தடக்கை யாலே யிரப்பதோ (திவ். திருச்சந். 25, வ்யா.).

அலமலத்து-தல் alamalattu-, 5 *v. tr.* Caus. of அலமலு-. To confuse, confound; கலக்கமுறச் செய்தல். ஆளைப்பகட்டி யலமலத்தி (பஞ்ச. திருமுக. 1366).

அலமான் alamāṉ, *n.* cf. அலகமான். Long pepper; திப்பலி. (சங். அக.)

அலர்க்குறி alar-k-kuṟi, *n.* <அலர்+. (Akap.) Theme describing the disappointed hero leaving a flower as a sign of his having waited in vain for the heroine at the place of assignation; குறியிடை வந்த தலைவன் தலைவியைக் காணாதநிலையில், தான்வந்ததை அவளறிய விரும்பிப் பூவொன்றை அடையாளமாக வைத்துச் சென்றது குறிக்கும் அகத்துறை. (தனிப்பா. ii, 413, உரை.)

அலர்ச்சி alarcci, *n.* < அலர்-. Blossoming, blooming; மலர்கை. (W.)

அலர்ப்பகம் alarppakam, *n.* cf. அலாபதம். Cuscus grass; இலாமிச்சை. (பச். மூ.)

அலரி alari, *n.* <அலர்-. 1. Willow; ஆற்றுப்பாலை. (வைத். அக.) 2. Fire; தீ. குறு மேனிய வலரி தோகையை மாறெக்கொணர்ந்தனன் (கம்பரா. மீட்சிப். 96).

அலரிக்கூடை alari-k-kūṭai, *n.* <அலரி+. Coffin; சவப்பெட்டி. *Pond.*

அலரிச்செவி alariccevi, *n.* A plant; செடிவகை. (பச். மூ.)

அலரித்தட்டி alari-t-taṭṭi, *n.* Wicker basket for catching fish; மீன் பிடிப்பதற்குரிய கூடைவகை. *Pond.*

அலரிப்பந்தம் alari-p-pantam, *n.* <அலரி +. Withe; கட்டுநார். *Pond.*

அலவலைமை alavalaimai, *n.* <அலவலை. Rash action; ஆராயாது செய்கை. அலவலைமை தவிர்த்த அழகன் (திவ். பெரியதி. 4, 3, 5).

அலவறை alavaṟai, *n.* perh. அலவு-. Voracity, avidity; உண்பதில் ஆத்திரம். *Nāñ.*

அலவன் alavaṉ, *n.* <அல். Moonshine; நிலவு. (அக. நி.)

அலவாரி ala-vāri, *n.* perh. அலவு+ஆர்-. Covetous man; பேராசையுடையவன். *Pond.*

அலறி alaṟi, *n.* *Nākaṇam*, an aromatic substance; நாகணம் என்னும் நறும்பண்டம். (வை. மூ.)

அலறுசன்னி alaṟu-canni, *n.* <அலறு-+. Raving delirium; சன்னிவகை. (கடம்ப. பு. இலீலா. 127.)

அலன்றல் alaṉṟal, *n.* perh. அழல்-. Death; சாவு. (R.)

அலாக்கு alākku, *n.* Wrong, injury; கேடுதி. (R.)

அலாதசக்கரம் alāta-cakkaram, *n.* <*a-lā-la*+. Apparent circle in the air caused by whirling a fire-brand; கொள்ளியைச் சுழற்றுதலிற் றேன்றும் வட்டவடிவு. *Loc.*

அலாதம் alātam, *n.* <*alāta.* Charcoal; மரஞ்சுட்ட கரி. (*நாநார்த்த.*)

அலாயிதா alāyitā, *n.* An ancient cess levied at the rate of one fanam for every 100 kalams of the settled gross produce; வரையறை செய்த மொத்தவருமானத்தில் 100 கல நெல்லுக்கு ஒருபணம்வீதஞ் செலுத்தும் வரி. (R. T.)

அலாரி alāri, *n.* cf. *அலாரிதா.* Oleander; அலரி. (*சங். அக.*)

அலிகம் alikam, *n.* <*alika.* Forehead; நெற்றி. (*சிந்தா. நி.* 299.)

அலிப்பான் alippān, *n.* Saltpetre; வெடியுப்பு. (*பச். மூ.*)

அலிமரம் ali-maram, *n.* <*அலி*+. Tree with juicy, fibrous and thorny stem; பாலும் நாரும் முள்ளும் உள்ள மரம். (*பச். மூ.*)

அலியாநிலை aliyā-nilai, *n.* perh. *அலை-*+ ஆ neg.+. Unalterable state; சலியாத நிலை. *அலியா நிலைநிற்கு மைய னையாறன்* (*தேவா.* 294, 20).

அலுப்தசத்தி alupta-catti, *n.* <*alupta* +. (Šaiva.) Being possessed of infinite mercy; பேரருளுடைமை.

அலூகம் alūkam, *n.* cf. *அலுவீகம்.* Bael; வில்வம். (*பச். மூ.*)

அலூரமாமுகம் alūramāmukam, *n.* Grass; புல். (*பச். மூ.*)

அலேபகன் alēpakan, *n.* <*a-lēpaka.* (Phil.) One who believes that sin does not attach itself to a soul; பாவம் ஆன்மாவைப்பற்றுதென்னுங் கொள்கையினன். (*சங்கற்பசூரியோ. பக்.* 8.)

அலை alai, *n.* <*அலை-.* Hostile criticism; கண்டனம். *அலைபலவே யுரைத்தாளென் றருகிருந் தோர் கருதுதலும்* (*நீலகேசி.* 204).

அலைகாற்று alai-kārru, *n.* <id.+. Fierce wind, tempest; பெருங்காற்று. (R.)

அலைகொள்(ளு)-தல் alai-koḷ-, *v. intr.* <id.+. To be agitated, harassed; வருத்தமுறுதல். *காமன்கணைகொண் டலைகொள்ளவோ* (*திருக்கோ.* 90).

அலைதிகுலைதி alaiti-kulaiti, *n.* <*அலை-*+ குலை-. cf. *அலதிகுலதி.* Disturbed and confused condition; குலைவு. *மயிர்முடி அலைதிகுலைதியாய்ப் பேணுதே போகப் பொக்கையாயிருப்பாளொருத்தியோடே* (*திவ். பெருமாள்.* 6, 3, *வ்யா. பக்.* 87).

அலையல் alaiyal, *n.* cf. *அலசல்.* Laziness; சோம்பல். (*நாநார்த்த.*)

அலைவன் alaivan, *n.* <*அலவன்.* Small climbing nettle; பூனைக்காஞ்சொறி. (*பச். மூ.*)

அலோகம் alōkam, *n.* <*a-lōka.* (*தக்கயாகப். அரும்.*) 1. World where the sun's rays do not fall; சூரியகிரணம்படாத உலகம். 2. That which is not constituted of the five elements; பஞ்சபூதசம்பந்த மில்லாதது.

அலோகி alōki, *n.* cf. *அலோசி.* Purslane; பசளை. (*சங். அக.*)

அவ்யாஜகருணை avyāja-karuṇai, *n.* <*a-vyāja* + *karuṇā.* Grace which does not require any pretext or cause; காரணமே வேண்டாத கிருபை. (*தென். இந். க்ஷேத்.* 252.)

அவ்வச்சிலேடிகவியாபகம் avvac-cilēṭika-viyāpakam, *n.* <*aupaślēṣika* + *vyāpaka.* (Phil.) Permeation due to close or immediate contact; நன்குபொருந்தியுள்ளதாலுண்டாம் வியாபகம். (*சிவப்பிர. சிந்தனையுரை.*)

அவ்வமை avvamai, *n.* Rock salt or sodium chloride used in medicine; இந்துப்பு. (*சங். அக.*)

அவ்வல் avval, *adj.* <Arab. *awwal.* First, principal; முதன்மையான. (P. T. L.)

அவ்விதை avvitai, *n.* True croton-oil plant; நேர்வாளம். (*சங். அக.*)

அவ்வியக்தி avviyakti, *n.* <*a-vyakti.* A comet; ஒரு தூமகேது. (*தக்கயாகப்.* 457, *உரை.*)

அவ்வியத்தம் avviyattam, *n.* <*a-vyakta.* 1. Soul; ஆன்மா. (*நாநார்த்த.*) 2. Great Cosmic Space; பரமாகாசம். (*தக்கயாகப்.* 408, *உரை.*)

அவ்வியத்தலக்கணை avviyatta-lakkaṇai, *n.* <*avyakta-lakṣaṇā.* Pārvatī; பார்வதி. (*கூர்மபு. திருக்கலி.* 23.)

அவ்வியத்தலிங்கம் avviyatta-liṅkam, *n.* <*a-vyakta*+. (Šaiva.) Formless aspect of God; அருவத்திருமேனி. (*சி. சி.* 12, 4, *மறைஞா.*)

அவ்வியத்தன் avviyattan, *n.* <*a-vyakta.* One who is devoid of intelligence; அறிவில்லாதவன். (*நாநார்த்த.*)

அவ்விரதம் avviratam, *n.* <*a-vrata.* Breach of vow; விரதபங்கம். அனைய வவ்விரதத் தோடமிசலம் (நீலகேசி, 242).

அவ்வெதிரேகம் avvetirēkam, *n.* <*a-vyatirēka.* (Phil.) A fallacious example where the non-existence of both the major and the middle terms is stated but not the pervasion of one by the other; தன்னுறுப்புக்களுள் ஒன்றன வெதிரேகவாக்கிய மின்றிக் கூறும் அனுமான வகை. (மணி. 29, 450.)

அவ்வையன் avvaiyaṉ, *n.* cf. அபயன். Tender berry of chebulic myrobalan; கடுக் காய்ப் பிஞ்சு. (சங். அக.)

அவக்கத்தலா avakkattalā, *n.* cf. அவகத வாய். A small plant with slender green branches; கீழாநெல்லி. (சங். அக.)

அவக்கரம்[1] avakkaram, *n.* <*avaskara.* (நாநார்த்த.) 1. Private parts of a male or female; குய்யம். 2. Excrement, dung; விட்டை. 3. Human excrement; மக்களின் மலம்.

அவக்கரம்[2] avakkaram. *n.* Elephant's liver; யானையின் குடர். (நாநார்த்த.)

அவக்கரம்[3] avakkaram, *n.* <*apaskara.* A part of a chariot; தேரினங்கம். (நாநார்த்த.)

அவக்களி ava-k-kaḷi, *n.* prob. அவம் + prob. கழி-. Useless person; உபயோகமற்றவ-ன்-ள். *Loc.*

அவக்கிரகம் avakkirakam, *n.* <*ava-graha.* (நாநார்த்த.) 1. Obstacle; தடை. 2. Drought, failure of rain; மழைத்தடை. 3. Elephant's forehead; யானைநெற்றி.

அவக்கிரசம் avakkiracam, *n.* <*ava+grāsa.* Vinegar; காடி. (W.)

அவக்கிராகம் avakkirākam, *n.* <*ava-grāha.* Cursing; சபிக்கை. (சிந்தா. நி. 324.)

அவகடம் avakaṭam, *n.* <*ava-kaṭa.* 1. Evil act; தீச்செயல். அற்பமாங்குணத்திஞலே அவகடஞ்செய்வர் (நீதிசாரம், 19). 2. Misfortune; துரதிர்ஷ்டம். *Nāñ.*

அவகதி avakati, *n.* <*ava-gati.* Knowledge; அறிவு. (சிந்தா. நி. 314.)

அவகஹனத்துவம் avakahaṉattuvam, *n.* <*ava-gāhana-tva.* The power of inter-penetration; மனத்தினுட் புகுந்தன்மை. (மேருமந். 93, உரை.)

அவகாசம் avakācam, *n.* <*avakāśa* Proprietary right, claim, title; பாத்தியதை. சன்ம அவகாசம், பாட்ட அவகாசம். *Nāñ.*

அவகாசி avakāci, *n.* <அவகாசம். Heir; வாரிசு. *Nāñ.*

அவகாயம் avakāyam, *n.* <*ava-kāśa.* Space; ஆகாயம். அவகாயத்துத் தேரை யடித்தெருட் டாய் (நீலகேசி, 504).

அவகாரம் avakāram, *n.* <*ava-hāra.* (நாநார்த்த.) 1. Crocodile; முதலை. 2. Temporary cessation, as of war; போர் முதலியவற்றின் விச்சி ராமம். 3. Game of dice; சூது. 4. Theft; களவு. 5. Taking by force; அபகரிக்கை. 6. Invitation; அழைப்பு. 7. Substance, article; திரவியம்.

அவகாரன் avakāraṉ, *n.* <*ava-hāra.* (நாநார்த்த.) 1. Thief; திருடன். 2. Gambler; சூதாடுபவன்.

அவகீதம்[1] avakītam, *n.* <*ava-gīta.* (நாநார்த்த.) 1. That which is despised by many; பலர் பழித்தது. 2. Calumny; reproach; அப வாதம்.

அவகீதம்[2] avakītam, *n.* <*apa-gīta.* Satiric verse; வசைப்பாட்டு. (நாநார்த்த.)

அவகிரணம் ava-kiraṇam, *n.* <*ava-kīrṇa.* Scattering; சிதறுகை. மாசவகிரணந்தனையு மேவினர் (வேதாரணிய. மேன்மை. 85).

அவகுஞ்சனம் avakuñcaṉam, *n.* <*ava-kuñcana.* Bend, curve; வளைவு. (சிந்தா. நி. 323.)

அவச்சாடை ava-c-cāṭai, *n.* <அவம்+. Bad or inauspicious; கேடுணர்த்துங்குறி. *Loc.*

அவச்சாயை ava-c-cāyai, *n.* <*apa-c-chāyā.* (W.) 1. Shadowless being, as a deity. See அபச்சாயை. 2. A sign of death; ஓர் மரணக் குறி. 3. Deduction of a person's shadow according to the time of the year in calculating time; நிழலையளந்து நாழிகைகணிப்பதில் மாதத் திற்கு ஏற்பட்ட தள்ளுபடி நிழலளவு.

அவச்சேத்தியம் ava-c-cēttiyam, *n.* <*ava-c-chēdya.* (Log.) That which can be split up; பிரிக்கக்கூடியது. (விசாரசந். 321.)

அவசத்தம் ava-cattam, *n.* <*apa-śabda.* Incorrect word; பிழைபட்ட சொல். சிவன்முத்த ரென்னும் அவசத்த மாபாதகமென் (முத்திநிச். 17).

அவசரச்சம்பா avacara-c-campā, *n.* <அவசரம்+. A kind of paddy; பெருநெல்வகை. *Tinn.*

அவசரத்துக்குப்போ-தல் avacarattuk-ku-p-pō-, *v. intr.* <id.+போ-. To answer calls of nature; மலசலங்கழித்தல். *Pond.*

அவசரப்பாடல் avacara-p-pāṭal, *n.* <id.+. Important stanzas worthy of being committed to memory; அவசிய

மாக நினைவில் வைக்கவேண்டும் பாடல்கள். (மீனு. சரித். i, 10.)

அவசரம் avacaram, *n.* <*ava-sara.* 1. Year; ஆண்டு. (நாநார்த்த.) 2. A government office; அரசாங்க உத்தியோகங்களு ளொன்று. (M. E. R. 104 of 1911.)

அவசரவர்த்தனை avacara-varttaṉai, *n.* <அவசரம்+. A tax; வரிவகை. (M. E. R. 427 of 1925.)

அவசன் avacaṉ, *n.* <*a-vaśa.* One who has lost self-control; தன்வச மிழந்தவன். மயல் பூண் டவசராய் (காஞ்சிபு. தலவிசேட. 8).

அவசானம் avacāṉam, *n.* <*ava-sāna.* (நாநார்த்த.) 1. Death; மரணம். 2. Limit; எல்லை.

அவசிதம் avacitam, *n.* <*ava-sita.* (நாநார்த்த.) 1. That which is determined; நிச்சயிப்பது. 2. That which is concluded; முடிப்பது. 3. That which is known; அறிவது.

அவசிந்தம் avacintam, *n.* perh. *a-cintya.* That which cannot be thought of; சிந்திக்க முடியாதது. (திருமந். 709.)

அவசிஷ்டம் avaciṣṭam, *n.* <*ava-śiṣṭa.* Crumbs, leavings; மிச்சில். *Loc.*

அவட்டம் avaṭṭam, *n.* cf. அவத்தம். A species of cleome; நாய்வேளை. (சங். அக.)

அவடம் avaṭam, *n.* <*avaṭa.* (நாநார்த்த.) 1. Pit; குழி. 2. Well; கிணறு. 3. Chasm; பிலம்.

அவடம்பதி avaṭampati, *n.* Sweet flag; வசம்பு. (சங். அக.)

அவடு avaṭu, *n.* <*avaṭu.* (நாநார்த்த.) 1. Well; கிணறு. 2. Pit; குழி. 3. Nape; பிடரி.

அவணன் avaṇaṉ, *n.* prob. *pravaṇa.* (W.) 1. Strong man; திண்ணியன். 2. Man of influence; செல்வாக்குடையவன்.

அவணி avaṇi, *n.* Benefit; நன்மை. (R.)

அவணியம் avaṇiyam, *n.* perh. ஆவணம். Bazaar; கடை. *Pond.*

அவத்தன் avattaṉ, *n.* <அவத்தம். One who is useless; பயனற்றவன். மருட்கொண்டழியு மவத்தன் (திருப்பு. 304).

அவத்திதன் avattitaṉ, *n.* <*ava-sthita.* (Śaiva.) Soul which experiences the various conditions to which it is liable; அனுபவித்தற் குரிய அவஸ்தைகளை அனுபவிக்கும் ஆன்மா. (சி. போ. பா. 4, 3, பக். 273.)

10

அவத்திரியம் avattiriyam, *n.* Danger; ஆபத்து. (சிந்தா. நி. 324.)

அவத்தை avattai, *n.* <*ava-sthā.* (நாநார்த்த.) 1. States of the embodied soul, five according to Śaivites and three according to others; ஆன்மாவுக்குண்டாகுஞ் சாக்கிர முதலிய நிலை. 2. Stages of human life; பாலிய முதலிய மாறுபடு பருவங்கள்.

அவதஞ்சம் avatañcam, *n.* <*ava-taṃsa.* Garland for the head; சூட்டுமாலை. (நாநார்த்த.)

அவதரணம் avataraṇam, *n.* <*avataraṇa.* Descent; incarnation; அவதாரம்.

அவதாதம் avatātam, *n.* <*ava-dāta.* (நாநார்த்த.) 1. Purity; பரிசுத்தம். 2. Golden colour; பொன்மை. 3. Beauty; அழகு.

அவதாரம்[1] avatāram, *n.* <*ava-tāra.* Sacred ghat; தீர்த்தத்துறை. (நாநார்த்த.)

அவதாரம்[2] avatāram, *n.* <*apa-rādha.* Fine; அபராதம். *Tinn.*

அவதாளம் ava-tāḷam, *n.* <*apa+tāla.* (Mus.) Error in *tāḷam;* தாளப்பிசகு. தாளவியல்பு பொலிவுபெற அவதாள நீங்க (சிலப். 3, 135-6, உரை).

அவதானம்[1] avatāṉam, *n.* <*ava-dāna.* (நாநார்த்த.) 1. Section, division; பிரிவு. 2. Simultaneous attention to various subjects; ஒரேசமயத்திற் பலபொருள்களைக் கவனிக்கை. 3. Transgression; வரம்பு மீறுகை.

அவதானம்[2] avatāṉam, *n.* <*ava-dhāna.* Agreement; மனவொருமைப்பாடு. (நாநார்த்த.)

அவதானம்[3] avatāṉam, *n.* <*ava-sāna.* Termination, end; முடிவு. உச்சிச்சந்தி அவதானத்தில் (S. I. I. v, 136).

அவதி avati, *n.* <*avadhi.* 1. Bit, section; பரிச்சேதம். (நாநார்த்த.) 2. Time; காலம். (நாநார்த்த.) 3. Pit; குழி. (நாநார்த்த.) 4. Leave; விடுமுறை. *Nāñ.* 5. Adjournment; வாயிதா. *Nāñ.*

அவதூதம் avatūtam, *n.* <*ava-dhūta.* 1. Complete renunciation; முழுத்துறவு. (சிந்தா. நி. 321.) 2. Nakedness; nudity; அம்மணம். *Brah.*

அவந்தி[1] avanti, *n.* <*a-vandhyā.* (நாநார்த்த.) 1. Woman who has borne children; பிள்ளைபெற்றவள். 2. Fruit-bearing tree; காய்க்கும் மரம். 3. Cow that has calved; ஈற்றுப்பசு.

அவந்தி² avanti, *n.* Indian caper; கோவை. (பச். மூ.)

அவநியாயம ava-niyāyam, *n.* <*ava-nyāya.* Injustice; அநியாயம். (W.)

அவநீதன் ava-nītaṉ, *n.* <*ava-nīta.* Unjust man; நீதியற்றவன். சூதனென்று மவநீதனென் றும் (பிரதாபவிலா. 43).

அவப்பிரஞ்சனம் avappirañcaṉam, *n.* <*apa-bhraṁśa.* A variety of Prākṛt; ஒருவகைப் பிராகிருதமொழி. (பேரகத். 141.)

அவம் avam, *n.* <*hava.* (நாநார்த்த.) 1. Sacrifice; வேள்வி. 2. Invitation; அழைப்பு. 3. Command; ஆணை.

அவமாகம் avamākam, *n.* <*avama*+*ahas.* Day on which either three *titis,* three *nakṣatras* or three *yōkams* occur; மூன்று திதி யாவது மூன்று நட்சத்திரமாவது மூன்று யோகமாவது கலந்திருக்கும் நாள். (பெரியவரு. 55.)

அவயம் avayam, *n.* perh. *abhaya.* Noise; இரைச்சல். அவயம் போடாதே. *Tinn.*

அவயவம் avayavam, *n.* cf. அவயம். Cuscus grass; இலாமிச்சை. (பச். மூ.)

அவயவர்க்கம் avaya-varkkam, *n.* <*a-bhaya*+. Right hand of an idol, raised in token of dispelling fear; அபயாத்தம். (Insc.)

அவரஞ்சக்காரம் avarañcakkāram, *n.* A kind of salt; வெடிகாரம். (வை. மூ.)

அவரம் avaram, *n.* <*apara.* (நாநார்த்த.) 1. That which is behind or subsequent; பிந்தியது. 2. The lower part of the hind legs of the elephant; யானையின் பின்னங்காற்புறம்.

அவராத்திரி ava-rāttiri, *n.* <அவம்+. Night spent uselessly; வீணான இரவு. (பத்ம. தென்றல்விடு. 47.)

அவரூபம் ava-rūpam, *n.*<id.+. Deformity; உருவக்கேடு.

அவரைப்பிராயம் avarai-p-pirāyam, *n.* prob. *apara*+. Childhood; பாலியம். (திவ். நாய்ச். 1, 4.)

அவரோகம் avarōkam, *n.* <*ava-rōha.* (நாநார்த்த.) 1. Aerial root; விழுது. 2. Climber; மரத்திற் படர்கொடி.

அவரோகி avarōki, *n.* <*ava-rōhin.* Banyan tree; ஆலமரம். (பரி. அக.)

அவரோதம் avarōtam, *n.* <*ava-rōdha.* (நாநார்த்த.) 1. Obstruction; screening; மறைவு. 2. Palace; அரண்மனை.

அவலம்¹ avalam, *n.* <*a-phala.* 1. Fruitlessness, uselessness; பயனின்மை. செய்ததெல் லாம் அவலமாயிற்று. *Tj.* 2. Damage; கேடு. தாங்கிய வருந்துய ரவலந் தூக்கின் (கலித். 48).

அவலம்² a-valam, *n.* <அ+வலம். Left side; இடப்பால். (நாநார்த்த.)

அவலம்பசிலேஷ்மம் avalampa-cilēṣmam, *n.*<*ava-lamba*+*slēṣma.* A disease due to excessive phlegm; சிலேட்டுமவியாதிவகை. (ஜீவரட்.)

அவலம்பனம் avalampaṉam, *n.* <*ava-lambana.* Dependence; சார்கை.

அவலமுதுப்புறம் aval-amutu-p-puṟam, *n.* <அவல்+அமுது+. Endowment for the offering of fried rice to the deity; அவல் நிவேதனத்துக்காகக் கோயிற்கு விட்ட இறையிலி நிலம். (S. I. I. iv, 147.)

அவலன் avalaṉ, *n.* <*a-phala.* Useless fellow; பயனற்றவன். பிறவியினுவரி தனிலுறுமவ லனை (திருப்பு. 122).

அவலேசம் avalēcam, *n.* <*lava*+*lēśa.* (W.) 1. That which is small, unimportant; அற்பம். 2. Disgrace; அவமானம்.

அவலேபம் avalēpam, *n.* <*ava-lēpa.* (நாநார்த்த.) 1. Arrogance; அகங்காரம். 2. Calumny; பழிப்பு. 3. Smearing; பூச்சு.

அவலோகி-த்தல் avalōki-, 11 *v. tr.* <*ava-lōka.* To see, perceive; நோக்குதல். அதனாலே ஸர்வத்திரேயும் அவலோகித்தனன் (ஸ்ரீ புராணம, Ms.).

அவவாதம் avavātam, *n.* <*apa-vāda.* (நாநார்த்த.) 1. Calumny; அபவாதம். 2. Command; ஆணை. 3. Confidence; நம்பிக்கை.

அவற்கம் avaṟkam, *n.* <அவாகு. Gruel; கஞ்சி. (W.)

அவனதி avaṉati, *n.* <*ava-nati.* (Astron.) Moon's paralax in latitude; அக்ஷாம்சத்தினுலுண் டாம் சந்திர சலனம். (W.)

அவனிகை avaṉikai, *n.* <*yavanikā.* Screen; இடுதிரை. (சிந்தா. நி. 316.)

அவனிமருந்து avaṉi-maruntu, *n.* perh. அவுரி+. Decoction of indigo plant; அவுரிக் கஷாயம். (பச். மூ.)

அவஸ்தைப்பூசுதல் avastai-p-pūcutal, *n.* <அவஸ்தை+. Extreme unction; இறக்குந் தறுவாயிலுள்ளவனே தரு மந்திரநீராட்டுகை. *R. C.*

அவா avā, *n.* <*avāk.* Descent, inclination; இறங்குகை. (நாநார்த்த.)

அவாக்கு avākku, *n.* <*avāk.* (நாநார்த்த.) 1. Dumb man; ஊமை. 2. Person with his face looking downwards; கவிழ்ந்த முகத்தோன்.

அவாகு avāku, *n.* <*yavāgū.* Gruel; கஞ்சி. (பிங்.)

அவாகேசவுப்பி avākēcavuppi, *n.* cf. அவகேசி. Large species of white dead-nettle; பெருந்தும்பை. (பச். மூ.)

அவாச்சியன் avācciyaṉ, *n.* <*avācya.* One who is not worth mentioning; குறிப்பிடத் தகாதவன். அருக்கசந்திர னென்னுமவாச்சியன் (நீல கேசி, 227).

அவாசீனம் avācīṉam, *n.* <*avācīna.* Southern direction; தெற்குத்திசை. (W.)

அவாசு avācu, *n.* perh. *avāk.* Destruction; கேடு. (R.)

அவாந்தரை avāntarai, *n.* <*avāntara.* See அவாந்திரை. அவன்மிக்க அவாந்தரையாக விருக் கிறான். *Tj.*

அவாந்திரை avāntirai, *n.* <id. Void, vacuum, emptiness; வெறுமை. (சிந்தா. நி. 317.)

அவாப்தஸமஸ்தகாமன் avāpta-samasta-kāmaṉ, *n.* <*avāpta-samasta-kāma.* God, as having achieved all His desires; எல்லா ஆசைகளும் நிரம்பப்பெற்றவனுகிய கடவுள். (ஈடு, மஹாப்ர.)

அவாரி avāri, *n.* perh. *a-vārya.* Urine; சிறுநீர். (சங். அக.)

அவால் avāl, *n.* <Arab. *ahwāl.* Charge, care, custody; பாதுகாப்பு. (P. T. L.)

அவால்தார் avāltār, *n.* <U. *havil-dār.* Indian sergeant; அவுல்தார். *Pond.*

அவாலா avālā, *n.* Food; உணவு. *Loc.*

அவாலுதார் avālutār, *n.* <U. *havil-dār.* See அவால்தார். *Pond.*

அவி[1] avi, *n.* <*avi.* (நாநார்த்த.) 1. Sheep or goat; ஆடு. 2. Ray; கிரணம். 3. Sun; சூரியன். 4. Woman in her periods; பூப்பினள். 5. Blanket made of rat's hair; எலிமயிர்க் கம்பளம். 6. Mountain; மலை. 7. Enclosure; மதில். 8. Wind; காற்று.

அவி[2] avi, *n.* prob. *abdi.* Cloud; மேகம். (நாநார்த்த.)

அவிக்கனம்[1] a-vikkaṉam, *n.* <*a-vighna.* Freedom from impediment; தடையின்மை. (நாநார்த்த.)

அவிக்கனம்[2] avikkaṉam, *n.* <*avigna.* Large Bengal currant; பெருங்களா. (நாநார்த்த.)

அவிகம் avikam, *n.* <*avika.* Diamond; வைரம். (சங். அக.)

அவிகாயம் avikāyam, *n.* A kind of delirium; சன்னிவகை. (தஞ். சரசு. iii, 194.)

அவிகாரதை a-vikāratai, *n.* <*a-vikāra-tā.* Unchangeableness; மாறுபாடின்மை. அவிகாரதை யுருவாய் (பகவற். 2, 21).

அவிச்சன் aviccaṉ, *n.* Father; தந்தை. *Nāñ.*

அவிச்சின்முகூர்த்தம் aviccin-mukūrttam, *n.* <*abhi-jit*+. Middle part of the day; மத்தியான்ன காலம். (சோதிட. சிந். 50.)

அவிசு avicu, *n.* <*havis.* 1. Offering made to the gods in sacrificial fire; வேள்வித் தீயில் தேவர்க்குக் கொடுக்கும் உணவு. (தக்கயாகப். 46, உரை.) 2. Ghee; நெய். (நாநார்த்த.) 3. Cooked rice, prepared without straining the conjee; கஞ்சிவடியாது சமைத்த சோறு. *Loc.*

அவிசுப்பம் avicuppam, *n.* A species of jujube; தொடரி. (வை. மூ.)

அவிட்டம் aviṭṭam, *n.* Root of sedge; கோரைக்கிழங்கு. (பச். மூ.)

அவிடு aviṭu, *n.* cf. *apaṭu.* Word spoken in jest; பரிகாச வார்த்தை. சொல்லுமவிடு சுருதியாம் (ஞானவா. 40).

அவித்தியம் avittiyam, *n.* Quicksilver; பாதரசம். (சங். அக.)

அவித்துருமம் avitturumam, *n.* South Indian mahua; இருப்பை. (பச். மூ.)

அவித்தை a-vittai, *n.* <*a-vidyā.* 1. One of *pañca-k-kilēcam;* பஞ்சக்கிலேசங்களு ளொன்று. (விசாரசந். பக். 335.) 2. Delusion of mind; மோசம். (நாநார்த்த.)

அவிதூசம் avi-tūcam, *n.* <*avi-dūsa.* Milk of goat or sheep; ஆட்டுப்பால். (சங். அக.)

அவிந்ததவசம் avinta-tavacam, *n.* <அவி-+. Damaged provisions; அழுகிய உணவுப்பண்டம். (R.)

அவிந்துவி avintuvi, *n.* Cuscus grass; இருவேரி. (பச். மூ.)

அவிநாசவாதி avināca-vāti, *n.* <*a-vi-nāśa-vādin.* (Phil.) One who holds that matter is indestructible; பொருள் அழியாத தென்னுங் கொள்கையுடையோன். *அவ னவிநாச வாதி யாதலிற் சாத்தியவிநாச மட்பிரசித்தமாகும்* (மணி. 29, 171-2).

அவிப்பிணம் avippiṇam, *n.* Salt prepared by distilling the solution of saline earth; உவர்மண்ணை யெடுத்துக் காய்ச்சும் உப்பு. (சங். அக.)

அவிபயம் a-viyayam, *n.* <*a-vyaya.* That which is imperishable; அழியாதது. *அவியயமா மிதை முயல்வாற்கொல வலரார்* (பகவற். 2, 21).

அவியரிசி avi-y-arici, *n.* <அவி- +. A kind of rice; புட்டரிசி. (சித். அக.)

அவியல்மணம் aviyal-maṇam, *n.* <id. +. Offensive smell of putrid vegetable matter; காய்கறி முதலானவை அழுகுவதாலுண்டாம் துர்நாற்றம். (W.)

அவியற்கறி aviyaṟ-kaṟi, *n.* <அவியல் +. A relish prepared with several kinds of vegetables, mixed hotch potch; பல மரக்கறிகளை ஒரு சேரச் சமைத்த கறி. *Colloq.*

அவிர்-தல் avir-, 4 *v. intr.* To be torn; to be rent asunder; பீறுதல். (பொதி. நி.)

அவிரோதம் a-virōtam, *n.* <*a-virōdha.* Amicability; சிநேகம். (S. I. I. vii, 69.)

அவின் aviṉ, *n.* <U. *afīm.* Opium; அபின். (நாமதீப.)

அவினந்தமாலை aviṉanta-mālai, *n.* A treatise on mathematics, not now extant; கணித நூல்வகை. (யாப். வி. 528.)

அவினாபாவசத்தி aviṉāpāva-catti, *n.* <*a-vinā-bhāva* +. (Śaiva.) Śakti which is inseparable from Śiva; சிவத்தினின்று பிரியாத சக்தி. (சி. சி. 1, 74, உரை.)

அவினாபாவி a-viṉā-pāvi, *n.* <*a-vinā-bhāvin.* That which is inseparable; பிரிக்க முடியாதது. *கேவலஞானமும் அதனோடு அவினாபாவி யாகிய கேவலதரிசன கேவலவீரிய கேவலசுகமு முடையானவனே சுவாமியாக* (நீலகேசி, கடவுள். 1, உரை).

அவிஞ்ஞாதார்த்தம் avijñātārttam, *n.* <*avijñāta* + *artha.* (Log.) A defect in argumentation; தோல்வித்தானங்களு ளொன்று. (செந். iii, 13.)

அவிஷ்டு aviṣṭu, *n.* cf. *apaṣṭha. Loc.* 1. One who utters words of ill-omen; துர்க்குறியான சொற்களைச் சொல்லுபவன். 2. One who is morally depraved; கெட்டநடத்தையுள்ளவன்.

அவீசி[1] avīci, *n.* A kind of comet; தூமகேது வகை. (தக்கயாகப். 457, உரை.)

அவீசி[2] avīci, *n.* <*a-vīci.* That which is unruffled, waveless; திரையில்லாதது. (நாநார்த்த.)

அவீரை avīrai, *n.* <*avīrā.* Sonless widow; பிள்ளையில்லாத விதவை. *Loc.*

அவுசுக்காரன் avucu-k-kāraṉ, *n.* <அவிசு +. One very fond of dress; ஆடையிற் பிரியம் உடையவன். (W.)

அவுசுப்பம் avucuppam, *n.* See அவிசுப்பம். (சங். அக.)

அவுசூசிகம் avucūcikam, *n.* See அவிசுப்பம். (சித். அக.)

அவுரி avuri, *n.* [M. *avali.*] A kind of fish; மீன்வகை. *Tinn.*

அவுரிச்சால் avuri-c-cāl, *n.* prob. அவுரி +. Big vessel with wide mouth; வாயகன்ற பெரிய சால். *Loc.*

அவுரிப்பச்சை avuri-p-paccai, *n.* perh. அவிர்- +. Refined camphor; பச்சைக்கருப்பூரம். (வை. மூ.)

அவுஷதகந்தசுரம் avuṣata-kanta-curam, *n.* <*auṣadha* + *gandha* +. Fever caused by medicinal poison; பாஷாணமருந்தாலுண்டாகுஞ் சுரம். (ஜீவரட்.)

அவுஸ்திரேலியா avustirēliyā, *n.* <E. *Australia.* The continent of Australia; ஆஸ்திரேலியாகண்டம் (M. Navig. 47.)

அவெளி aveḷi, *n.* A species of wood-apple; நிலவிளா. (பரி. அக.)

அவைநான்கு avai-nāṉku, *n.* <அவை +. Assembly, of four kinds, viz., *nal-l-avai, tī-y-avai, kuṟai-y-avai, niṟai-y-avai;* நல்லவை தீயவை குறையவை நிறையவை என்ற நால்வகைக் கூட்டம். (யாப். வி. ஒழிபி. 96, உரை, பக். 514.)

அவையம் avaiyam, *n.* cf. அவயம். Cuscus grass; இலாமிச்சை. (வை. மூ.)

அவையல்[1] avaiyal, *n.* <அவை. Collection, gathering; திரள். (அக. நி.)

அவையல்[2] avaiyal, *n.* <அவை-. Parched rice; அவல். (W.)

அவைராக்கியம் a-vairākkiyam, *n.* <*a-vairāgya.* Absence of obstinacy, a characteristic of the intellect, one of eight *putti-kuṇam*, q.v.; புத்திகுணம் எட்டனுள் ஒன்றன பிடிவாதமின்மை. (சி. போ. பா. 2, 2, பக். 164.)

அழகங்காட்டு-தல் alakaṅ-kāṭṭu-, *v. intr.* <அழகு+காட்டு-. To mimic; அழகுகாட்டுதல். *Tinn.*

அழகச்சு alakaccu, *n.* <id.+அச்சு. A coin; நாணயவகை. (T. A. S. iii, 50.)

அழகப்பன்காளை alakappaṉ-kāḷai, *n.* <id.+அப்பன்+. Sacred bull, adorned with cowries and trained by a class of wandering mendicants; பெருமாள்மாடு. *Tinn.*

அழகம் alakam, *n.* <*alaka.* Woman's tresses; பெண்டிர் கூந்தல். *அழகத் திருநுதலா ளாய்ந்து* (பு. வெ. 12, வென்றிப். 16).

அழகன் alakaṉ, *n.* <அழகு. Viṣṇu; திருமால். (*தக்கயாகப்.* 239, *உரை.*)

அழகாத்திரிவெட்டு alakāttiri-veṭṭu, *n.* <id.+அத்திரி+. An ancient coin; பழைய நாணயவகை. (*பணவிடு.* 132.)

அழகாரம் alakāram, *n.* <id. (W.) 1. Brilliancy of expression; அழகான பேச்சு. 2. Empty compliment; வீண்புகழ்ச்சிப் பேச்சு.

அழகு alaku, *n.* [M. *alaku.*] Good nature; சற்குணம். (*அரு. நி.*)

அழகுசெண்டேறு-தல் alaku-ceṇṭēṟu-, *v. intr.* <அழகு+. To exhibit one's beauty; அழகைக்காட்டுதல். (*ஈடு,* 1, 4, 6.)

அழகெருது alakerutu, *n.* <id.+. An ancient tax; வரிவகை. (T. A. S. iii, 32.)

அழகெருதுக்காட்சிக்காசு alakerutu-k-kāṭci-k-kācu, *n.* <அழகெருது+காட்சி+. See அழகெருது. (M. E. R. 619 of 1916.)

அழல்விரணம் alal-viraṇam, *n.* <அழல்+. Ulcer caused by fire; நெருப்புச்சுட்டதால் உண்டாம் புண். *Loc.*

அழலாணி alal-āṇi, *n.* prob. id.+*hāni.* Fading, withering; வாட்டம். *கூஞ்ஜைலமாய் அழலாணியையுடைய தாமரைப்பூவில் வ்யாவிருத்த மாய்* (*திவ். அமலனாதி. தனியன், வ்யா.* 6).

அழலிடமேந்தி alal-iṭam-ēnti, *n.* <id.+இடம்+. God Śiva, as holding a ball of fire in His left hand; சிவபிரான். (*கந்த. சு.* 1.)

அழற்காமாலை alaṟ-kāmālai, *n.* <id.+. A kind of jaundice; காமாலைநோய்வகை. (*தஞ். சரசு.* iii. 122.)

அழற்பால் alaṟ-pāl, *n.* <id.+. Madar; எருக்கு. (*பச். மூ.*)

அழற்பித்தம் alaṟ-pittam, *n.* <id.+. A kind of bilious disease; பித்தநோய்வகை. (W.)

அழற்பிரவை alaṟ-piravai, *n.* <id.+*prabhā.* A hell; நரகவகை. (W.)

அழற்றி alaṟṟi, *n.* <அழல்-. (*சம். அக.* Ms.) 1. Burning; எரிவு. 2. Anger; கோபம். 3. Envy; அழுக்காறு.

அழி[1] ali, *n.* <*ali.* Beetle; வண்டு. *அழிமல்கு பூம்புனலும்* (*தேவா.* 78, 3).

அழி[2]-த்தல் ali-, *11 v. intr.* To find a solution of; to resolve; விடைகாணுதல். *சதை அழித்தல்.*

அழி[3]-த்தல் ali-, *11 v. tr. & intr.* To despise; நிந்தித்தல். *அழித்துச் சொன்னவாறு* (*தக்கயாகப்.* 494, *உரை*).

அழி[4] ali, *n.* <அழி-. 1. Excessiveness; மிகுதி. *அற்றா ரழிபசி தீர்த்தல்* (*குறள்,* 226). 2. Pain; வருத்தம். *அழிதக மாஅந்தளிர் கொண்ட போழ்தினான்* (*கலித்.* 143).

அழி[5] ali, *n.* <அழி-. Place where the lagoon joins the sea; கழிமுகம். *Nāñ.*

அழிகரப்பான் ali-karappāṉ, *n.* prob. id.+. Ringworm; படர்தாமரை நோய். *Pond.*

அழிகரு ali-karu, *n.* <id.+. Aborted foetus; கருவழிவு. (W.)

அழிகன்று ali-kaṉṟu, *n.* <id.+. Aborted foetus, in animals; விலங்குகளின் வயிற்றினின்று சிதைந்துவிழுங் கரு. *Pond.*

அழிகால் ali-kāl, *n.* <id.+கால். Betel-leaf garden where the vines are unproductive from age and have to be destroyed; முதிர்ச்சியால் அழிக்கவேண்டியதான வெற்றிலைத்தோட்டம். (P.T.L.)

அழிகொடிக்கால் ali-koṭikkāl, *n.* <id.+. See அழிகால். *Colloq.*

அழித்துச்சொல்(லு)-தல் alittu-c-col-, *v. intr.* <அழி-+. To refer contemptuously; இழித்துக் கூறுதல். (*தக்கயாகப்.* 494, *உரை.*)

அழித்துரை alitturai, *n.* <id.+உரை. Word of contempt; இழித்துரை. (*தக்கயாகப்.* 508, *உரை.*)

அழிநோய் aḻi-nōy, n. <அழி-. Leprosy; குட்டம். Loc.

அழிப்பன் aḻippaṉ, n. <அழி-. One who is sorrow stricken; துன்புறுபவன். அழிப் பனும் வாழமாட்டேன் (தேவா. 702, 2).

அழிப்பாங்கதை aḻippāṅ-katai, n. perh. id.+கதை. Conundrum, riddle, puzzle; விடு கதை. Tinn.

அழிம்பு aḻimpu, n. prob. அழி-. 1. Patent falsehood; வெளிப்படையான பொய். Loc. 2. Calumny, scandal; அவதூறு. 3. Unrighteous claim or plea; அநீதமான வழக்கு.

அழிமதி aḻi-mati, n. <id.+. Waste; அழிமானம். Loc.

அழிமேய்ச்சல் aḻi-mēyccal, n. <id. +. Ruinous grazing of crops by cattle; பயிர் முழுதும் அழியக் கால்நடைகளைத் தின்னும்படி விடுகை. Tj.

அழியாதபத்தினி aḻiyāta-pattiṉi, n. <id.+ஆ neg.+. Draupadī; திரௌபதி. ஐவர்க் குந்தேவி யழியாதபத்தினி. (W.)

அழியாவிளக்கு aḻiyā-viḷakku, n. <id. +id.+. Perpetual lamp; நந்தாவிளக்கு. (ராஜஸ்ய. 1335.)

அழுக்குத்தேமல் aḻukku-t-tēmal, n. <அழுக்கு+. Spots in the body, formed by dirt; உடலில் அழுக்கினால் தோன்றும் புள்ளிகள். Loc.

அழுக்குமூட்டை aḻukku-mūṭṭai, n. <id. +. One who sticks to time-worn practices, used in contempt; பழைய வழக்கவொழுக்கங் களைப் பின்பற்றுபவன். Loc.

அழுகற்சரக்கு aḻukaṟ-carakku, n. <அழு கல்+. Tax on perishable goods; அழுகக்கூடிய சரக்குகளுக்கு விதிக்கும் வரி. (S. I. I. ii, 114.)

அழுகிச்சேதம் aḻuki-c-cētam, n. <அழுகு- +. Remission of land tax granted for loss of crop due to inundation; வெள்ளத்தாலுண்டாம் பயிர்ச்சேதத்திற்குச் செய்யும் வரிவஜா. Nāñ.

அழுகுகால் aḻuku-kāl, n. <id.+. Paddy crop rotten from over-irrigation or floods; நீர்ப்பெருக்கால் அழுகிய நெற்பயிர். (P. T. L.)

அழுகுபுண்குட்டம் aḻuku-puṇ-kuṭṭam, n. <id.+புண்+. Leprosy with running sores; குட்டநோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 145.)

அழுகுமூலம் aḻuku-mūlam, n. <id.+. A kind of piles; மூலநோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 106.)

அழுங்கு[1]-தல் aḻuṅku-, 5 v. intr. To weep; அழுதல். (நாநார்த்த. 968.)

அழுங்கு[2] aḻuṅku, n. cf. அணங்கு. Aloe; கற்றாழை. (பச். மூ.)

அழுந்து-தல் aḻuntu-, 5 v. intr. To suffer; வருந்துதல். (நாநார்த்த.)

அழுப்புகம் aḻuppukam, n. Svarga; தேவலோகம். (சிந்தா. நி. 332.)

அழுவம் aḻuvam, n. (பொதி. நி.) 1. Drum; முரசு. 2. Trembling, quaking with fear; நடுக்கம்.

அழுவிளிப்பூசல் aḻu-viḷi-p-pūcal, n. <அழு-+விளி+. Loud lamentation; அழுகைப் பேரொலி. (மணி. 6, 73.)

அழுவை aḻuvai, n. cf. வழுவை. Elephant; யானை. (அக. நி.)

அழைப்புச்சுருள் aḻaippu-c-curuḷ, n. <அழைப்பு+. Money presented along with betels to the bride or bridegroom or other near relations, on the occasion of inviting them to the marriage; விவாகத்துக்கு அழைக்கும்போது மணமக்களுக்கும் உறவினர்க்கும் தாம்பூலத்துடன் கொடுக்கும் பணமுடிப்பு. Nāñ.

அழைப்புத்தூரம் aḻaippu-t-tūram, n. <அழை-+. Calling distance, 1000 yards; கூப் பீடளவான 1000 கஜதூரம். Loc.

அள்ளு aḷḷu, n. Ribs; விலாவெலும்பு. Tj.

அள்ளுச்சீடை aḷḷu-c-cīṭai, n. <அள்ளு- +. A small kind of cīṭai cake; சிறுசீடைவகை. Loc.

அள்ளெடு-த்தல் aḷ-ḷ-eṭu-, v. tr. <id.+. To take handfuls; கையால் வாருதல். சந்தைக் கடையில் அள்ளெடுக்கிறதற்குப் போனார்களோ என்ன மோ (தாசில்தார். நா. பக். 11).

அள்ளெடுக்கிறவன் aḷḷeṭukkiṟavaṉ, n. <அள்ளெடு-. Measurer of paddy who is paid by a handful from each unit measured; ஒவ் வோர் அளவிலும் ஒவ்வொரு பிடி பெற்றுக்கொண்டு நெல் அளப்பவன். (W. G.)

அள்ளை aḷḷai, n. <அள்ளு. Side of the body; விலாப்புறம். Madr.

அள்ளைப்புறம் aḷḷai-p-puṟam, n. <அள்ளை +. A section of the house; வீட்டின் ஒரு பகுதி. Cm.

அள-த்தல் aḷa-, 12 v. intr. To tell venial lies; பொய்யுரை கூறுதல்.

அளக்காய் aḷakkāy, *n.* cf. அழகர். White madar. See வெள்ளெருக்கு. (சங். அக.)

அளகபேதம் aḷakapētam, *n.* cf. அழகவேதம். Atis; அதிவிடயம். (சங். அக.)

அளகம்[1] aḷakam, *n.* < *alaka.* Curls of hair on the forehead; நுதலைச்சார்ந்த முன்னுச்சிமயிர். (தக்கயாகப். பக். 266.) அலமரு திருமுகத் தளகத் தப்பிய (பெருங். உஞ்சைக். 33, 119).

அளகம்[2] aḷakam, *n.* 1. See அளக்காய். (சங். அக.) 2. cf. *halā.* Rain-water; மழைநீர். (பச். மூ.)

அளகளப்பு aḷakaḷappu, *n.* See அளவளப்பு. (W.)

அளகாபுரி aḷakāpuri, *n.* < *Alakā-purī.* Tanjore; தஞ்சாவூர். (சிவக். பிரபந். கோடீச்சுரக். 54, கீழ்க்குறிப்பு.)

அளகை aḷakai, *n.* < *Alakā.* Tanjore; தஞ்சை. (சிவக். பிரபந். கோடீச்சுரக். 54.)

அளத்தியம் aḷattiyam, *n.* 1. Soap; சவக்காரம். 2. A prepared arsenic; நீலபாஷாணம். (சங். அக.)

அளத்துநிலம் aḷattu-nilam, *n.* < அளம் +. See அளர்நிலம். (R. T.)

அளத்துப்பூசை aḷattu-p-pūcai, *n.* cf. அளத்துப்பசளை. Seaside Indian saltwort; மருக்கொழுந்துச்சக்களத்தி. (மலை.)

அளப்பறி-தல் aḷappaṟi-, *v. tr.* < அளப்பு +. To fathom, gauge, as the mind of a person; ஒருவனுடைய எண்ணத்தை யாராய்ந்தறிதல். *Colloq.*

அளப்பு aḷappu, *n.* < அள-. Counsel; ஆலோசனை. (பஞ்ச. திருமுக. 1530.)

அளம்[1] aḷam, *n.* perh. அள். Sharpness; கூர்மை. (பொதி. நி.)

அளம்[2] aḷam, *n.* prob. அள-. Sea; கடல். (பொதி. நி.)

அளமம் aḷamam, *n.* Gold; பொன். (சங். அக.)

அளர்[1] aḷar, *n.* < அலர். 1. cf. *halā* Water; நீர். 2. cf. *haladī.* Turmeric; மஞ்சள். (வை. மூ.)

அளர்[2] aḷar, *n.* < அளம். cf. களர். Saltishness; brackishness; உவர்.

அளர்நிலம் aḷar-nilam, *n.* < அளர் +. Saline soil; களர்நிலம். (R. T.)

அளர்ப்பூளை aḷar-p-pūḷai, *n.* < அளர் +. cf. அளத்துப்பூசை. Sea-blite; அளத்துப்பசளை. *Pond.*

அளவநிலம் aḷava-nilam, *n.* < அளம் +. See அளர்நிலம். (R. T.)

அளவப்பொட்டல் aḷava-p-poṭṭal, *n.* < id. +. See அளர்நிலம். (R. T.)

அளவர் aḷavar, *n.* < *hala.* A class of cultivators; உழுதுபயிரிடுவோர்வகையினர். வெள்ளாழர் அளவர் பள்ளிகள் பறம்பர் உட்பட உழுதா (S. I. I. vii, 385).

அளவளப்பு aḷavaḷappu, *n.* < அளவளாவு-. Sociability; அளவளாவுகை. (W.)

அளவாக்கு-தல் aḷavākku-, *v. tr.* < அளவு +. To make even; to level; to set right; to straighten; மட்டமாக்குதல். நூற்பிடித்த பத்தியை அளவாக்கவேணும் (திவ். திருக்குறுந். 10, வ்யா.).

அளவினார் aḷavinār, *n.* Croton; நேர்வாளம். (சங். அக.)

அளவு aḷavu, *n.* < அள-. A unit of time, being two-fifths of a second; மாத்திரை. (பேரகத். 116.)

அளவுகாரன் aḷavu-kāraṉ, *n.* < அளவு +. One who measures paddy and other grains; நெல்முதலியன அளப்பவன். (R. T.)

அளவுகூடை aḷavu-kūṭai, *n.* < id. +. A basket of certain capacity for measuring rice; குறித்த அளவுள்ள தானியமளக்குங் கூடை. *Loc.*

அளவுபைமாஷ் aḷavu-paimāṣ, *n.* < id. +. Survey or measurement of fields; வயல்களை அளந்து பதிவுசெய்கை. (R. T.)

அளவைவடிவம் aḷavai-vaṭivam, *n.* < id. +. Diagram; உருவத்தைக் காட்டுதற்கு வரைந்த படம். *Pond.*

அளவைவாதம் aḷavai-vātam, *n.* < id. +. The doctrine that truth must be established through logical proof; பிரமாணவாதம். (மணி. 29, 42, உரை.)

அளவைவாதி aḷavai-vāti, *n.* < id. +. One who expouses *aḷavai-vātam;* பிரமாணவாதம் செய்பவன். (மணி. 27, 3.)

அளவொழுகு aḷavoḻuku, *n.* < அளவு +. 1. See அளவுபைமாஷ். 2. Register specifying the measurements of the fields of a village; கிராம நிலபுலங்களின் அளவுகளைப் பதிவுசெய்த புஸ்தகம். (R. T.)

அளி[1] aḷi, *n.* Bark tree; மரவுரிமரம். (L.)

அளி² aḷi, *n.* <*ali*. 1. Honey; தேன். (நாநார்த்த.) 2. Ringworm shrub; வண்டுகொல்லி. (பச். மூ.)

அளிகம் aḷikam, *n.* Emblic myrobalan; நெல்லி. (பச். மூ.)

அளிம்பகம் aḷimpakam, *n.* <*alimpaka*. (நாநார்த்த.) 1. Cuckoo; குயில். 2. Frog; தவளை. 3. South Indian Mahua; இருப்பை. 4. Pollen of lotus flower; தாமரைப்பூந்தாது.

அளிலாமயம் aḷilāmayam, *n.* Rheumatism; வாதநோய். (வை. மூ.)

அளீகம் aḷīkam, *n.* <*alīka*. (நாநார்த்த.) 1. Forehead; நெற்றி. 2. Dislike; வெறுப்பு. 3. Falsehood; பொய்.

அளுங்கு aḷuṅku, *n.* cf. நளுங்கு. Pangolin; அழுங்கு. (மூ. அ.)

அளேரியம் aḷēriyam, *n.* Onion; வெங்காயம். (சித். அக.)

அளை¹-தல் aḷai-, 4 *v. tr.* To wear; சூடுதல். அனிச்சப்பூவை . . . மயிரில் அளைந்தாள் (குறள், 1118, மணக்.).—*intr.* To suffer from gripes, as in dysentery; வயிறுவலித்தல். *Loc.*

அளைச்சல் aḷaiccal, *n.* <அளை-. Dysentery; வயிற்றளைச்சல். *Loc.*

அளைவு aḷaivu, *n.* <அளை-. Becoming soft, as rice by over-cooking; சோறு முதலியன குழைகை. (அக. நி.)

அற்கம்¹ ar̲kam, *n.* White basil; வெண்டுளசி. (பச். மூ.)

அற்கம்² ar̲kam, *n.* <*argha*. (நாநார்த்த.) 1. Price; விலை. 2. Rules of worship; பூசாவிதி.

அற்களம் ar̲kaḷam, *n.* <*argala*. (நாநார்த்த.) 1. Bolt; கதவின் தாழ். 2. Large wave, billow; பேரலை.

அற்காமை ar̲kāmai, *n.* <அற்கு- + ஆ neg. Impermanence; நிலையாமை. (அக. நி.)

அற்காறொட்டகம் ar̲kār̲-oṭṭakam, *n.* <Persn. *harkārā*+. Camel carrying the mail. See அஞ்சலொட்டகம். (R.)

அற்கெந்தி ar̲kenti, *n.* (Śaiva.) The yōgic centre *artta-cantiran̲*; அர்த்தசந்திரன் என்னும் யோகஸ்தானம். சாந்தியாதீத மற்கெந்தி (தத்துவப். 139).

அற்பகதம் ar̲pakatam, *n.* cf. அற்பருத்தம். Plantain; வாழை. (பச். மூ.)

அற்பசுருதிவாக்கியம் ar̲pa-curuti-vākkiyam, *n.* <*alpa*+*śruti*+. The *karma-kāṇḍa* of the Vēdas; வேதத்துள் கன்மகாண்டம். (கட்டளைக். 100.)

அற்பத்திரம் ar̲pattiram, *n.* <*alpa-patra*. Sweet basil; துளசி. (பச். மூ.)

அற்பதுமம் ar̲patumam, *n.* See அற்பபதுமம். (பச். மூ.)

அற்பபதுமம் ar̲pa-patumam, *n.* <*alpa-padma*. Red-lotus; செந்தாமரை. (சங். அக.)

அற்பமாரி ar̲pa-māri, *n.* See அற்பமாரிடம். (வைத். அக.)

அற்பமாரிடம் ar̲pa-māriṭam, *n.* <*alpa-māriṣa*. A species of amaranth; சிறுகீரை. (சங். அக.)

அற்பாசமனம் ar̲pācaman̲am, *n.* See அற்பாசனம். (R.)

அற்பாசனம் ar̲pācan̲am, *n.* <அற்பம்+ஆசனம். Urination; மூத்திரம் பெய்கை. *Pond.*

அற்புதம்¹ ar̲putam, *n.* <*adbhuta*. Emptiness, void; சூனியம். (சி. போ. பா. 9, 2, வெண். 1.)

அற்புதம்² ar̲putam, *n.* <*arbuda*. Tumurous growth of flesh; தசைக்கணு. (நாநார்த்த.)

அற்புதவாதம் ar̲puta-vātam, *n.* prob. id.+*vāta*. A kind of convulsion; இசிவுநோய் வகை. (R.)

அற்புதவாயு ar̲puta-vāyu, *n.* prob. id.+. See அற்புதவாதம். (கடம்ப. பு. இலீலா. 139.)

அற்புதாகமம் ar̲putākamam, *n.* <அற்புதம் +. The Book of Revelation, in the New Testament; புதியஏற்பாட்டுள் ஒருபகுதி. (R.)

அற்றம்¹ ar̲r̲am, *n.* <அறு-. 1. A little, bit; சற்று. (பொதி. நி. 161.) 2. Moment of time; துடி. (பொதி. நி.) 3. Conclusion; முடிவு. (பொதி. நி.) 4. Truth; உண்மை. (பொதி. நி.) 5. Termination; அறுதி. (நாநார்த்த.)

அற்றம்² ar̲r̲am, *n.* cf. அற்பம். Dog; நாய். (பொதி. நி.)

அற்றைக்கொத்து ar̲r̲ai-k-kottu, *n.* <அன்று+. Daily wages, paid in kind; பிரதிதினமுந் தானியமாகக் கொடுக்குங் கூலி. *Loc.*

அற்றைப்படி ar̲r̲ai-p-paṭi, *n.* <id.+. Daily allowance; பிரதிதினமும் உணவுக்காக அளிக்கும் பண்டம் அல்லது பணம். கற்பரிகள் ஐயாயிரத்துக்

கும் அற்றைப்படியாம்படி கொடுத்து (பாரதவெண். 161, உரை).

அறக்கடவுள் ara-k-kaṭavuḷ, n. <அறம் +. Vidura, an uncle of the Pāṇḍavas, as the incarnation of Yama; விதுரன். நல்லறக்கடவு ளுக்கு முறையா (பாரத. வாரணு. 54).

அறக்கப்பாலை arakka-p-pālai, n. Oval-leaved China root; திருநாமப்பாலை. (சித். அக.)

அறகப்பிளப்பி araka-p-piḷappi, n. See அறக்கப்பாலை. (பச். மூ.)

அறங்காவல் araṅ-kāval, n. <அறம் +. Wardenship of temples, caityas, etc.; கோயில் சைத்தியம் முதலாயின காக்குந்தொழில். (S. I. I. iv, 492.)

அறச்சாலாபோகம் ara-c-cālā-pōkam, n. <id. + சாலை +. Endowment of land for the maintenance of choultries, etc.; அறச்சாலை களுக்குவிட்ட மானியம். (S. I. I. iii, 389.)

அறச்செல்வி ara-c-celvi, n. <id. +. Pārvatī; பார்வதி. (சிந்தா. நி. 351.)

அறச்சோலை ara-c-cōlai, n. <id. +. Grove within a temple; கோயிலினுட் சோலை. (தக்கயாகப். 65.)

அறசம் aracam, n. Brinjal; கத்தரி. (சங். அக.)

அறசோகணக்கு aracōkaṇakku, n. 1. Purple-stalked dragon; காட்டுக்கருணை. (பரி. அக.) 2. Elephant yam; கருணைக்கிழங்கு. (சங். அக.)

அறத்தளி ara-t-taḷi, n. prob. அறம் +. Zenana, harem; அந்தப்புரம். (சிந்தா. நி. 349.)

அறத்தின்மூர்த்தி arattiṉ-mūrtti, n. <id. +. 1. Pārvatī; பார்வதி. (W.) 2. The God of Justice; தருமதேவதை. (W.) 3. Viṣṇu; விஷ்ணு. அறத்தின்மூர்த்திவந் தவதரித்தான் (கம்ப ரா. அயோத். மந்திரப். 37).

அறத்துப்பால் arattu-p-pāl, n. <id. +. The first section of Kuṟaḷ which treats of *dharma*, one of *mu-p-pāl*, q.v.; திருக்குறளின் முப்பால்களுள் முதலானதும் தருமத்தைப்பற்றிக் கூறு வதுமான பகுதி.

அறத்துவச்சளம் arattu-vaccaḷam, n. <id. + *vatsalatva*. (Jaina.) Showing tender love towards the followers of Jainism and settling them firmly in their religion; ஜைந தர்மத் தைச் சார்ந்தவர்களை அதன்கண்ணே நிலைநிறுத்தி அவர்களிடத்து மிக்க அன்புசெலுத்துகை. (மேருமந். 1343.)

அறதனம் ara-taṉam, n. *Miruta-pāṣā-ṇam*, a mineral poison; மிருதபாஷாணம். (சங். அக.)

அறதேயன் ara-tēyaṉ, n. prob. அறம் + தேயம். One who manages charitable endowments; தருமங்களை நடத்துவோன். (S. I. I. iv, 31.)

அறநிலை ara-nilai, n. <id. +. Institution for managing charities; தருமங்களைப் பாதுகாத்தற் குரிய நிலையம். *Mod.*

அறநீர் ara-nīr, n. <அறல் +. Water allowed for irrigation, in large or small quantity according to the storage in the reservoir; அருநீர். (R. T.)

அறநெறிச்சந்தேகசாஸ்திரி araneri-c-cantēka-cāstiri, n. <அறநெறி +. Casuist; சாஸ்திரபரிசீலனை செய்வோன். *Chr.*

அறப்பரிகாரம் ara-p-parikāram, n. See அறப்பரிசாரம். (சிலப். 2, 85, அரும்.)

அறப்பரிசாரம் ara-p-paricāram, n. <அறம் +. Services rendered to ascetics, etc.; துறந்தோர் முதலியவர்க்குச் செய்யும் பணிவிடை. (சிலப். 2, 85.)

அறப்பாடுபடு-தல் ara-p-pāṭu-paṭu-, v. intr. <அற + பாடு +. To work hard; கஷ்டப் பட்டு வேலைகளைச்செய்தல்.

அறம் aram, n. <அறு-. 1. Happiness; சுகம். (சம். அக. Ms.) 2. That which is salutary; இதம். அறத்துறை மாக்க டிறத்திற் சாற்றி (சிலப். 14, 28).

அறம்புறமாகப்பேசு-தல் aram-puram-āka-p-pēcu-, v. intr. <அறம் + புறம் + ஆ- +. To speak disrespectfully, vulgarly; மரியாதையின்றித் தாழ்வாகப் பேசுதல். (J.)

அறமனைவார்த்தை aramaṉai-vārttai, n. <அரண்மனை +. Word used in official records or communications; சர்க்கார் நடவடிக்கைகளில் வழங்குஞ் சொல். (P. T. L.)

அறல் aral, n. <அறு-. 1. Fine sand; நுண்மணல். (பொதி. நி.) 2. Festival; விழா. (பொதி. நி.) 3. *Koṟṟāṉ*, a parasitic leafless plant; கொற்றன். (பச். மூ.)

அறவன் aravaṉ, n. <அறம். One who teaches the doctrines of religion, as of the Jains; அறத்தைக் கூறுவோன். அருக னறவ னறிவோற் கல்லது (சிலப். 10, 202).

அறவாய்ப்போ-தல் ara-v-ā-y-p-pō-, v. intr. <அறு- + ஆ- +. To be exhausted, completely spent; அறுவாய்ப்போதல். *Tinn.*

அறவை aṟavai, *n.* < அறம். Righteousness; தருமநெறி. *அறவை நெஞ்சத்தாயர்* (புறநா. 390).

அறவைப்பு aṟa-vaippu, *n.* < அறு- + வை-. Calcination; புடம்வைக்கை. (யாழ். அக.)

அறவோலை aṟa-v-ōlai, *n.* < அறம் +. Trust deed; இறும் சாசனம். (Insc.)

அறவோன் aṟavōṉ, *n.* < id. The Buddha; புத்தன். *அறவோ னாசனம்* (மணி. 12, 11).

அறளிகா aṟaḷikā, *n.* Golden colour of the teeth of horses when they are about eleven years old; சுமார் பதினொரு வயதான குதிரையி னுடைய பற்களின் பொன்னிறம். (அசுவசா. 6.)

அறனையம் aṟaṉaiyam, *n.* cf. அறணை. Purple-stalked dragon; காட்டுக்கருணை. (சங். அக.)

அறாம்பை aṟāmpai, *n.* cf. அறாமை. White dead-nettle; தும்பை. (சங். அக.)

அறாவட்டி aṟā-vaṭṭi, *n.* < அறு- + ஆ neg. +. Exorbitant interest; அதிக வட்டி. *அன்னரி யவை யெல்லாம் அறாவட்டி வாங்கி* (நெல்விடு. 368).

அறி-தல் aṟi-, 4 *v. tr.* To discover; புதிதாய்க் கண்டுபிடித்தல். *Pond.*

அறிக்கை aṟikkai, *n.* Training, teaching; பயிற்றுகை. (பொதி. நி.)

அறிகண்ணி aṟikaṇṇi, *n.* Root of madar; எருக்கங் கிழங்கு. (சங். அக.)

அறிசலம் aṟi-calam, *n.* < அறி- + சலம். Conscious guilt; நெஞ்சறிந்த குற்றம். *அனையவைவ் விரதத்தோ டறிசலம்* (நீலகேசி, 242).

அறிசா aṟicā, *n.* A kind of fish; ஒருவகை மீன். (சங். அக.)

அறிட்டம் aṟiṭṭam, *n.* (சங். அக.) 1. cf. அருட்டம். Black hellebore; கடுகுரோகிணி. 2. Pepper; மிளகு. 3. cf. அரிட்டம். Margosa; வேம்பு.

அறிமடம் aṟi-maṭam, *n.* < அறி- +. (W.) 1. Forgetfulness, inability to recall to memory; ஞாபகமின்மை. 2. Inability to reduce to practice what one has learnt; அறிந்தபடி நடக்க இயலாமை.

அறியல் aṟiyal, *n.* cf. அரில். Bamboo; மூங்கில். (சங். அக.)

அறிவறை aṟivaṟai, *n.* < அறிவு + அறு-. (W.) 1. Lack of spiritual knowledge; ஆன்ம போத மின்மை. 2. Delusion; மனத்தெளிவின்மை. 3. One destitute of spiritual knowledge; ஆன்ம போத மில்லாதவன்.

அறிவன் aṟivaṉ, *n.* < அறி-. The *nakṣatra uttiraṭṭāti;* உத்திரட்டாதி. (சாதகசிந்.)

அறு-தல் aṟu-, 6 *v. intr.* To be digested; சீரணித்தல். *அற்றது போற்றியுணின்* (குறள், 942).

அறுக்கணக்கு aṟu-k-kaṇakku, *n.* prob. அறை +. Store account; உக்கிராணக் கணக்கு. *Loc.*

அறுக்கன் aṟukkaṉ, *n.* (சம. அக. Ms.) 1. Chief; கோ. 2. cf. அணுக்கன். Confidant, intimate friend; அந்தரங்க சிநேகன்.

அறுகிலிப்பூடு aṟukili-p-pūṭu, *n.* < அறுகு + இலி +. A kind of shrub; பூடுவகை. (Insc.)

அறுகு[1] aṟuku, *n.* < அருகு. 1. A covered platform or terrace, forming a verandah or porch; pial; வெளித்திண்ணை. (W. G.) 2. Pandal in the street, in front of a house; தெருப்பந்தல். *Cm.*

அறுகு[2] aṟuku, *n.* prob. அறு-. Elephant; யானை. (பொதி. நி.)

அறுகுவெட்டுத்தரிசுகூலி aṟuku-veṭṭu-t-taricu-kūli, *n.* < அறுகு + வெட்டு- +. Right to enjoy land reclaimed from jungle growth and brought under cultivation; தரிசுநிலத்திலுள்ள காடுகளை வெட்டிச் செம்மை செய்து உழவுக்குக் கொண்டுவந்தவர்க்கு அதுபற்றி அந்நிலத்தில் ஏற்பட்ட அனுபோகவுரிமை. *Loc.*

அறுகெடு-த்தல் aṟukeṭu-, *v. intr.* < id. + எடு-. 1. To invoke blessings on a person, by scattering on his head rice with cynodon grass; அறுகிட்டு ஆசீர்வதித்தல். *மறையோ ரறு கெடுப்ப* (சேக்கிழார். பு. 88). 2. To worship; பூசித்தல். *அரசரப்பொழு தடிமிசை யறுகெடுத்திட* (கலிங். 251).

இரதம்[4] iratam, n. cf. இரத்தி. Jointed ovate-leaved fig; இத்தி. (வை. மூ.)

இரதரேணு irata-rēṇu, n. <id.+. A measure of four atoms; பரமாணு நான்கு கொண்ட நீட்டலளவை. (சிற்பசாத். 18.)

இரதன் iratan̠, n. (அக. நி.) 1. Eye; கண். 2. Parrot; கிளி.

இரதனை iratan̠ai, n. cf. rasanā. 1. Galangal; அரத்தை. 2. Tongue; நா.

இரதாங்கம் iratāṅkam, n. <rathāṅga. (நாநார்த்த.) 1. Chariot-wheel; தேர்க்கால். 2. Cakra bird; சக்கரவாகப்புள்.

இரந்திரம் irantiram, n. <randhra. Subterraneous passage; சுருங்கை. (நாநார்த்த.)

இரம்பிகம் irampikam, n. cf. இரம்பிலம். Pepper; மிளகு. (சங். அக.)

இரம்மியம் irammiyam, n. <ramya. (நாநார்த்த.) 1. That which is lovable, desirable; விரும்பத்தக்கது. 2. That which is beautiful; அழகிது.

இரவணம் iravaṇam, n. <ravaṇa. (நாநார்த்த.) 1. Braying of a donkey; கழுதை கத்துகை. 2. Beetle; வண்டு.

இரவிகாந்தாக்கினி iravi-kāntākkin̠i, n. <ravi+. A kind of fire, one of pañcākkin̠i, q.v.; பஞ்சாக்கினியு ளொன்று. (சங். அக.)

இரவிபீஜம் iravi-pījam, n. <id.+. Camphor; சூடம். (சங். அக.)

இரவிபுடபுத்தி iravi-puṭa-putti, n. <id.+. True diurnal motion of the sun in his orbit; சூரியனது உத்தமபுடம். (W.)

இரவிமத்திமபுத்தி iravi-mattima-putti, n. <id.+மத்திமம்+. The mean daily motion of the sun in his orbit; சூரியனது மத்திமபுடம். (W.)

இரவு[1] ravu, n. perh. இரங்கு-. Mercy, compassion; இரக்கம். (அக. நி.)

இரவு[2] iravu, n. Tube-in-tube wood; பன்றிவாகை. (L.)

இரவுச்சோறு iravu-c-cōr̠u, n. <இரவு+. Supply of food at night, to government menial servants; அரசாங்கக் கீழ்த்தரப் பணியாளர்க்கு இராக்காலத்திலிடும் அன்னம். (T. A. S. ii, 65.)

இரவேசு iravēcu, n. <U. rawis. Fine, tender betel; தளிர் வெற்றிலை. Madr.

இரவைக்கு iravaikku, adv. <இரவு. To-night; for the night; இராப்பொழுதுக்கு. இரவைக்குப் புழுக்குக் கறியமுது (S. I. I. vii, 267).

இரஸ்தாளிக்கரும்பு irastāḷi-k-karumpu, n. <இரசதாளி+. A species of sugarcane; செங்கரும்புவகை.

இரஸ்து[1] irastu, n. <Persn. rasad. Stores, provisions for army; சேனைக்குரிய உணவுப் பொருள். (W.)

இரஸ்து[2] irastu, n. cf. ரஸ்தாளி. A kind of plantain; வாழைவகை. (வை. மூ.)

இரக்ஷணியம் irakṣaṇiyam, n. <rakṣaṇya. Salvation; மோட்சம். பூவலயத்துக் கிரக்ஷணியம் பொலியவரு புண்ணியப் பகலே (இரக்ஷணிய. பக். 62).

இரக்ஷணை irakṣaṇai, n. <rakṣaṇā. Salvation; மோட்சம். முதுதராதலத் திரக்ஷணை சமைத்திடு முறைமை (இரக்ஷணிய. பக். 65).

இராக்கதம் irākkatam, n. <rākṣasa. 1. A lineal measure of ten tālam; பத்துத்தாலங் கொண்ட ஒரு நீட்டலளவை. (சுக்கிரநீதி, 232.) 2. (Śaiva.) A mythical world of the Rudras; உருத்திர புவனங்களுள் ஒன்று. (சி. போ. 2, 3, பக். 214.)

இராக்கதி irākkati, n. <rākṣasī. A kind of long zedoary; சன்னக்கச்சோலம். (நாநார்த்த.)

இராகவம் irākavam, n. A large fish, capable of devouring timiṅkilakilam; திமிங்கில கிலத்தை விழுங்கவல்ல பெரியமீன். (சுக்கிரநீதி, 146.)

இராகாதனம் irākātan̠am, n. <rāga+āsana. (Yōga.) A kind of yōgic posture; யோகாசனவகை. இராகாதனமாவது பிடரியி லேற்றிட்டகால் முன்தொங்கக் கையிரண்டும் முன்னேயூன்றியிருக்கை (தத்துவப். 108, உரை).

இராகினி irākin̠i, n. prob. rāgiṇī. Betel leaf; வெற்றிலை. (T. C. M. ii, 2, 429.)

இராச்சியக்கலக்கம் irācciya-k-kalakkam, n. <இராச்சியம்+. Cataclysm; anarchy; அராசகம். Pond.

இராச்சியப்புரட்டு irācciya-p-puraṭṭu, n. <id.+. See இராச்சியக்கலக்கம். Pond.

இராச்சியவலங்கோலை irācciya-v-alaṅkōlai, n. <id.+. See இராச்சியக்கலக்கம். Pond.

இராசகம்பீரன் irāca-kampīran̠, n. <rāja-gambhīra. A title of Vīrarājendra Cōḻa; வீரராசேந்திர சோழனது பட்டப்பெயர்களு ளொன்று. இராசகம்பீரனை வாழ்த்தினவே (தக்கயாகப். 774).

இராசகரம் irāca-karam, n. <rāja-kara. Government; அரசாங்கம். (S. I. I. v, 512.)

இராசகேசரி irāca-kēcari, n. <raja-kēsari. A title assumed by certain Cōla kings; சோழமன்னர்களிற் சிலர் தரித்துவந்த பட்டப்பெயர். (கலிங். 178.)

இராசசக்கரம் irāca-cakkaram, n. <rājan +. King's command; அரசாணை. (தக்கயாகப். 2, உரை.)

இராசதம் irācatam, n. <rājatva. Kingly state; அரசபதவி. ஏடே விராசதத்தினைப் பணித் தனும் (திருப்பு. 1132).

இராசதானம் irāca-tāṉam, n. <rāja-sthāna. Capital city; தலைநகர். Pond.

இராசபத்திரம் irāca-pattiram, n. <rājan +. Royal edict; அரசனுடைய உத்தரவு. (W.)

இராசபாதை irāca-pātai, n. <id.+. King's highway, public road; பொதுச்சாலை. (W.)

இராசபுத்தி irāca-putti, n. <id.+. Special wisdom, peculiar knowledge; விசேடித்த அறிவு. (W.)

இராசபோகம் irāca-pōkam, n. <id.+. Taxes levied for protecting property; அரசிக் குரிய பாதுகாவல்வரி. (T. A. S. iv, 8.)

இராசமணி irāca-maṇi, n. <id.+. A kind of paddy; நெல்வகை. (A.)

இராசரிகப்புரட்சி irācarika-p-puraṭci, n. <இராசரிகம்+. Anarchy; அராசகம். Colloq.

இராசருகம் irācarukam, n. 1. Eagle wood; அகில். 2. White dead nettle; வெள்ளைத் தும்பை. (T. C. M. ii, 2, 429.)

இராசவத்தனம் irācavattaṉam, n. <rāja-vartana. A kind of precious stone; வைடூரியவகை. (யாழ். அக.)

இராசவாசல்முதலியார் irāca-vācal-mutaliyār, n. <இராசவாசல்+. A title conferred by Ceylon Government; இலங்கையரசாங் கத்தாரளிக்கும் பட்டப்பெயர்களுள் ஒன்று. ஸ்ரீ சிற் கைலாச பிள்ளை இராசவாசல்முதலியார் அவர்களுக் கும் (மாலுமி. முகவுரை, 2).

இராசவாழை irāca-vāḻai, n. <rājan+. A kind of plantain that yields 1000 fruits to a bunch; குலையொன்றுக்கு 1000 காய்கள் காய்க்கும் வாழைவகை.

இராசவிசுவாசம் irāca-vicuvācam, n. <id.+. Loyalty; அரசபக்தி. Mod.

இராசவிபாடன் irāca-vipāṭaṉ, n. <id. +. A title of the Vijayanagara kings; விஜய நகரத்தரசர் பட்டங்களுள் ஒன்று. (S. I. I. iv, 96.)

இராசன் irācaṉ, n. <rājan. (நாநார்த்த.) 1. Indra; இந்திரன். 2. Yakṣa; இயக்கன்.

இராசாதனம் irācātaṉam, n. <rājādana. (நாநார்த்த.) 1. Palas tree; முருக்கு. 2. A shell-fish; முரள். 3. Throne; royal seat; சிங்காதனம். 4. Kiṅkiṇi-p-pālai, a tree; கிங்கிணிப்பாலை.

இராசாவர்த்தம் irācā-varttam, n. <rāja-vartana. See இராசவத்தனம். (W.)

இராசாளி irācāḷi, n. Winged serpent; பறவைமாநாகம். (நாமதீப. 261.)

இராசிகுணாகாரம் irāci-kuṇākāram, n. (Astrol.) A mode of calculation; சோதிட கணன வகை. (சோதிட. சிந். 228.)

இராசிகை irācikai, n. <rājikā. (நாநார்த்த.) 1. Field, land; வயல். 2. Line, as in the palm; இரேகை. 3. Orderliness; order; ஒழுங்கு. 4. Ragi; கேழ்வரகு.

இராசிப்பொன் irāci-p-poṉ, n. <இராசி +. Pure gold; கலப்பற்ற பொன். ஒடுக்கின இராசிப்பொன் (S. I. I. iv, 133).

இராசிபாளயம்புள்ளிப்பணம் irāci-pāḷayam-puḷḷi-p-paṇam, n. A coin; நாணய வகை. (M. E. R. 185 of 1927.)

இராசியக்காரன் irāciya-k-kāraṉ, n. prob. இராயசம்+. Writer; இராயசக்காரன். (சீதக். 123.)

இராசியெழுத்து irāci-y-eḻuttu, n. <rāśi +. A kind of symbolic letter; குறியீட்டெழுத்து வகை. (யாப். வி. 536.)

இராசீவம் irācīvam, n. <rājīva. (நாநார்த்த.) 1. Carp; வரைக்கெண்டை. 2. A kind of deer; மான்வகை.

இராசை irācai, n. Śaṅkaranayiṉārkoil in the Tinnevelley District; திருநெல்வேலி ஜில்லாவி லுள்ள சங்கரநயினார்கோயில் என்னுந் தலம். (பெருந் தொ. 938.)

இராட்டிரம் irāṭṭiram, n. <rāṣṭra. (நாநார்த்த.) 1. Country; தேசம். 2. Towns-folk; citizens; நகரிலுள்ள சனம். 3. Portent; உற்பாதம்.

இராத்திரிவேதம் irāttirivētam, n. <rātri-vēda. Cock; சேவல். (சித். அக.)

இராதாரி irātāri, n. <ரஹதாரி. Customs permit; சுங்கத்தின் அனுமதிச் சீட்டு. Loc.

இராதினி irātiṉi, n. <hrādinī. (நாநார்த்த.) 1. A tree; சல்லகிமரம். 2. A river; ஒரு நதி. 3. Indra's thunderbolt; வச்சிராயுதம். 4. Lightning; மின்னல். 5. Thunder; இடி.

இராதை irātai, n. <rādhā. (நாநார்த்த.) 1. The 16th *nakṣatra;* விசாகம். 2. A medicinal plant; விஷ்ணுக்கிராந்தி. 3. Emblic myrobalan; நெல்லி. 4. Lightning; மின்னல். 5. Fostermother of Karṇa; கர்ணனது செவிலித்தாய்.

இராப்பண் irā-p-paṇ, n. <இரா+. Melodies to be sung at night; இராக்காலத்திற் பாடுதற்குரிய பண்கள்.

இராப்பிரமாணம் irā-p-piramāṇam, n. <id.+. (Astrol.) Duration of time between the setting and the rising of a planet; கிரகத்தின் அஸ்தமனத்திலிருந்து உதயம்வரையுள்ள பொழுதின் அளவு. (W.)

இராமக்கோழி irāma-k-kōḻi, n. prob. ராமம்+. Water fowl; நீர்க்கோழி. *Loc.*

இராமகலி irāma-kali, n. prob. *rāma*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

இராமடாணி irāmaṭāṇi, n. prob. id. A gold coin; பொன்நாணயவகை. (தக்ஷி. இந். சரித். பக். 436.)

இராமநாதன்சம்பா irāmanātaṉ-campā, n. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (விவசாய. 2.)

இராமப்பிரியம் irāma-p-piriyam, n. <*rāmā*+. Lotus; தாமரை. (வை. மூ.)

இராமபாரதி irāma-pārati, n. The author of Ātticūṭi-veṇpā, 18th cent.; பதினெட்டாம் நூற்றண்டில் ஆத்திசூடிவெண்பாப் பாடிய புலவர். (பெருந்தொ. 1775-6.)

இராமம் irāmam, n. <*rāma*. (நாநார்த்த.) 1. White deer; வெண்மான். 2. Whiteness; வெண்மை. 3. Blackness; கருமை.

இராமானம் irā-māṉam, n. <இரா+. 1. (Astron.) Duration of the night; தினந்தோறுமுள்ள இரவின் அளவு. (W.) 2. Night; இரவு. இராமானமே வந்துவிட்டான். *Tinn.*

இராமானுசன் irāmāṉucaṉ, n. <*Rāmānuja*. Lakṣmaṇa, brother of Rāma; இலக்குமணன்.

இராமேசுரம்வேர் irāmēcuram-vēr, n. <இராமேசுரம்+. Chay-root; சாயவேர். (M. M. 160.)

இராமை irāmai, n. <*rāmā*. (நாநார்த்த.) 1. Woman who is an expert in erotics; மன்மதநூல் கற்றவள். 2. A kind of brinjal; சிறுவழுதலை.

இராமையன்வெட்டு irāmaiyaṉ-veṭṭu, n. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 135.)

இராயசம் irāyacam, n. <T. *vrāyasamu.* Written order; ஆணைப்பத்திரம். நரசிங்க ராஜ உடையர் கட்டளை பண்ணி இராயசமும் கொடுக்கையில் (S. I. I. iv, 83).

இராயசவர்த்தனை irāyaca-varttaṉai, n. <இராயசம்+. A tax; வரிவகை. (S. I. I. viii, 188.)

இராயணி irāyaṇi, n. prob. இராணி. Queen; அரசி. (W.)

இராயப்பர் irāyappar, n. <இராயன்+அப்பர். St. Peter; பேதுரு என்ற கிறிஸ்தவப் பெரியார். *Chr.*

இராயன் irāyaṉ, n. An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 57.)

இராவணன்முழி irāvaṇaṉ-muḻi, n. <இராவணன்+விழி. Small lime stones resembling eye-balls, available near Rāmēśvaram; இராமேச்சுரப் பக்கத்தில் அகப்படுங் கண்விழிகள் போன்ற சிறுசோழிவகை.

இராவணன்மோவாய்ப்புல் irāvaṇaṉ-mōvāy-p-pul, n. <id.+. Water pink; இராவணன்புல். (காழிக்கல்.)

இராவுத்தராயன் irāvutta-rāyaṉ, n. <இராவுத்தன்+. Leader of horsemen; குதிரைச்சேவகரின் தலைவன். (திருவாலவா. 28, 83.)

இராஜாகரங்காணிக்கை irājā-karaṅ-kāṇikkai, n. <இராஜா+கரம்+. A tax; வரிவகை. (I. M. P. Sm. 5.)

இரிகம் irikam, n. (W.) 1. Heart; இருதயம். 2. Mind; மனம்.

இரிட்டம் iriṭṭam, n. <*riṣṭa*. (நாநார்த்த.) 1. Good; சுபம். 2. Sword; வாள். 3. Inauspiciousness; அசுபம். 4. End; destruction; விநாசம். 5. Sin; பாவம்.

இரீதி irīti, n. <*rīti*. Brass; பித்தளை. (W.)

இருக்கணை irukkaṇai, n. Crenulate leaved spindle tree, l. tr., *Euonymus Crenulatus;* சித்திரவேலைக்குதவும் மரவகை. (Nels.)

இருக்கம் irukkam, n. <*ṛkṣa*. (நாநார்த்த.) 1. *Nakṣatra;* நட்சத்திரம். 2. Bear; கரடி. 3. Zodiacal sign; இராசி.

இருக்கமாலி irukkamāli, n. <*ṛkṣamālī*. Temple of the width of 766 hands and of the same height, with 766 towers and 96 storeys; 766 முழ அகலமும் உயரமுமுள்ளதாய் 766 சிகரங்க

சோடு 96 மேனிலைக்கட்டுக்கள் கொண்ட கோயில். (சுக்கிரநீதி, 229.)

இருக்குக்குறள் irukku-k-kuraḷ, *n.* prob. *ṛk*+. A kind of short verse; சிறிய பாவகை. ஏகபாதந் தமிழிருக்குக்குறள் சாத்தி (பெரியபு. திருஞான. 276).

இருசாதி iru-cāti, *n.* <இரண்டு+. Hybrid; mixed caste; கலப்புச்சாதி. இருசாதிமாடு.

இருசீர்ப்பாணி iru-cīr-p-pāṇi, *n.* <id.+சீர்+. (Mus.) A kind of *tāḷam;* இரட்டைத் தாளம். (பொருந. 71.)

இருசுகந்தப்பூண்டு iru-cukanta-p-pūṇṭu, *n.* prob. இரு-மை+சுகந்தம்+. Southern-wood; மருக்கொழுந்து. *Pond.*

இருட்கண்டம் iruṭ-kaṇṭam, *n.* <இருள் +. A necklace; கழுத்தணிவகை. பிறங்கிருட் கண்டமும் (S. I. I. viii, 39).

இருட்கண்டர் iruṭ-kaṇṭar, *n.* <id.+. Śiva, as having a blue throat; சிவபெருமான். கூர்ந்த விருட்கண்டர் (பெரியபு. திருமுறை. 12).

இருடி iruṭi, *n.* <*ṛṣi.* The vēda; வேதம். (நாநார்த்த.)

இருடிகம் iruṭikam, *n.* See இருடீகம். பதினொ ரிருடிகமுமடைய முடியுமடி யிருடியார் (தேசிகப். 6, 19).

இருடீகம் iruṭīkam, *n.* <*hṛṣīka.* Sensory organ; இந்திரியம். இருடீகங்க ளீரைந்துஞ் சரங்களாக (தேசிகப். 2, 41).

இருண்டசெவலை iruṇṭa-cevalai, *n.* <இருள்-+. Dark brown colour of cattle; கருமை கலந்த மங்கல்நிறமான மாட்டுநிறவகை. (பெரியமாட். 13.)

இருண்மயபூமி iruṇ-maya-pūmi, *n.* <இருள்+மயம்+. The dark region round the *cakravāḷa-kiri,* where the ghosts of suicides are made to suffer; சக்கரவாளகிரியைச் சூழ்ந்து இருண்டுகிடப்பதும் தற்கொலைபுரிந்தோர் பேய்வடிவுடன் துன்புறுவதுமான பூமி. (சி. போ. பா. 2, 3.)

இருணி iruṇi, *n.* cf. இருளி. Hog; பன்றி. இருணியா யெழுந்த சோதி யிரணியாக் கனைததான் கொல்ல (வாத. பாகவத. நாரசிங்க. 5).

இருத்தி irutti, *n.* <*ṛddhi.* Interest; வட்டி. (T. A. S. viii, 15.)

இருத்து iruttu, *n.* <இருத்து-. 1. That which is firm, permanent; நிலையானபொருள். என்னெஞ்சத்து இருத்தாக விருத்தினேன் (திவ். திருவாய். 9, 4, 6). 2. Pressure; அமுக்குகை. அவனை ஓர் இருத்து இருத்தினான். *Colloq.*

இருதலைஞாங்கர் iru-talai-ñāṅkar, *n.* <இரண்டு+தலை+. Double-headed lance; இருதலையுங் கூருள்ள குமரன்வேல். (யாழ். அக.)

இருதலைப்பகரங்கள் iru-talai-p-pakaraṅ-kaḷ, *n.* <id.+id.+. Square brackets; எழுத்துக்களை உள்ளடக்கி நிற்கும் [ ] என்ற குறியீடுகள். *Mod.*

இருதலைப்பாம்பு iru-talai-p-pāmpu, *n.* <id.+id.+. 1. Semi-nocturnal sand-snake; இருதலைமணியன். *Pond.* 2. Blind snake with very short head and tail; இருதலைப்புடையன். *Loc.* 3. Earth-worm; மண்ணுளிப்பாம்பு.

இருதலைமூரி iru-talai-mūri, *n.* <id.+id.+. See இருதலைப்பாம்பு, 3. *Loc.*

இருதாரைக்கத்தி iru-tārai-k-katti, *n.* <id.+தாரை+. Double-edged sword or knife; இருபக்கமுங் கூர்மையுள்ள கத்தி. (W.)

இருந்துபோ-தல் iruntu-pō-, *v. tr.* <இரு-+போ. 1. To be stupefied; to be paralysed; செயலறுதல். அந்தத் துக்கத்தைக் கேட்டதும் அவன் இருந்துபோனான். 2. To sink; கீழே அமிழ்ந்துதல். அஸ்திவாரம் இருந்துபோயிற்று. 3. To remain unsold, as goods: விலைப்போகாது தங்குதல். இருந்துபோன சாமான்.

இருநிறமணிக்கல் iru-niṟa-maṇi-k-kal, *n.* <இரண்டு+நிறம்+மணி+. A kind of precious stone; இரத்தினவகை. *Pond.*

இருப்புக்கட்டி iruppukkaṭṭi, *n.* A tax; வரிவகை. (S. I. I. iv, 79.)

இருப்புக்கட்டை iruppu-k-kaṭṭai, *n.* <இரும்பு+. Hammer; சுத்தியல். *Pond.*

இருப்புக்கம்பை iruppu-k-kampai, *n.* <இரு-+. Driver's seat, at the front of the cart; வண்டி ஓட்டுபவனுக்குமுன் வண்டியில் அமைக்கப்பட்ட ஆசனம். *Colloq.*

இருப்புக்காய்வேளை iruppu-k-kāyvēḷai, *n.* A plant; இரும்புக்காய்வேளை. (W.)

இருப்புக்குழல் iruppu-k-kuḻal, *n.* <இரும்பு+. A kind of rocket; விருசுவகை. (T. C. M. ii, 2, 593.)

இருப்புச்சிட்டம் iruppu-c-ciṭṭam, *n.* <id.+. Oxide of iron; இருப்புக்கிட்டம். (W.)

இருப்புத்தொட்டிப்பாஷாணம் irup-pu-t-toṭṭi-p-pāṣāṇam, *n.* <id.+தொட்டி+. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை. (சங். அக.)

இருப்புநகம் iruppu-nakam, *n.* <id.+. Betel clipper; வெற்றிலைகிள்ளும் ஆயுதம். *Loc.*

இருப்புப்பாளம் iruppu-p-pāḷam, *n.* <id.+. Pig iron; இரும்புக்கட்டி. (W.)

இருபிறப்பாளன் iru-piṟappāḷaṉ, *n.* <இரண்டு+பிறப்பு+ஆள். (நாநார்த்த.) 1. The moon; சந்திரன். 2. Cukkiraṉ, as twice-born; சுக்கிரன்.

இரும்பாலை irum-pālai, *n.* <இரு-மை+. Blue-dyeing Rosebay, l. tr., *Wrightia tinctoria;* பாலைமரவகை. (L.)

இரும்பு irumpu, *n.* 1. Gold; பொன். (அக. நி.) 2. Red species of Malabar Glory-lily; செங்காந்தள். (L.)

இரும்புப்பெட்டி irumpu-p-peṭṭi, *n.* <இரும்பு+. Cash chest, iron safe; உருக்கால் அமைந்த பேழை. *Mod.*

இருமனப்பெண்டிர் iru-maṉa-p-peṇṭir, *n.* <இரண்டு+மனம்+. Prostitute; பரத்தையர். இருமனப்பெண்டிருங் கள்ளும் (குறள், 920).

இருமிமலத்தகி irumimalaittaki, *n.* <U. *rūmimastaki.* Mastic-tree; பூனைக்கண் குங்கிலியம். (சு. வை. ர. 543.)

இருமுறி iru-muṟi, *n.* prob. இரும்பு+. Silvery-leaved indigo; இருப்புமுறி என்னுஞ் செடி. *Pond.*

இருலிங்கவட்டி iruliṅkavaṭṭi, *n.* Vermilion; சாதிலிங்கம். (வை. மூ.)

இருவருந்தபுநிலை iruvar-un-tapu-nilai, *n.* <இருவர்+தபு-+. (Puṟap.) Theme describing the death of both the besieged and the besieging kings; எயிலின் அகத்தும் புறத்தும் நின்ற வேந்தரிருவரும் பொருது வீழ்ந்தமை கூறும் புறத்துறை. (தொல். பொ. 68.)

இருவிள iruviḷa, *n.* 1. Palmyra leaf; பனையோலை. (தொல். எழுத். 216, உரை.) 2. A town in Vēṇāṭu; வேணாட்டகத்து ஓர் ஊர். 3. A *cēri* in Karuvūr; கருவூரினகத்து ஒரு சேரி.

இருவீடு iruvīṭu, *n.* A tree; ஒருவகைமரம். (நாநார்த்த.)

இருள்பாலை iruḷ-pālai, *n.* perh. இருள்+. Seven-leaved poon tree, m. tr., *Alstonia scholaris;* ஏழிலைம்பாலை. (Nels.)

இருள்வாசி iruḷvāci, *n.* Tuscan jasmine; இருவாட்சி. (தமிழ்வி. முகவுரை, பக். 4.)

இருளி iruḷi, *n.* Shame; வெட்கம். (யாழ். அக.)

இரேகாம்சம் irēkāmcam, *n.* <*rēkhā*+. (Astron.) Terrestrial longitude; பூமியை வடக்குத் தெற்காக 360 சமபங்குகளாய்ப் பிரிக்கப்பட்டவற்றுள் ஒரு பாகம்.

இரேகி-த்தல் irēki-, *11 v. tr.* <*rēkhā.* To draw; to write; எழுதுதல். இரேகித்த சித்திரம். *Pond.*

இரேகுத்தி irēkutti, *n.* cf. U. *rēkhtī.* (Mus.) A specific melody-type; ஓர்ராகம். (W.)

இரேகை irēkai, *n.* <*rēkhā.* (நாநார்த்த.) 1. Unbroken series; இடையறு வொழுங்கு. 2. Deceit; wile; வஞ்சம்.

இரேசனி irēcaṉi, *n.* <*rēcanī.* (நாநார்த்த.) 1. Indian jalap; சிவதை. 2. Orange cup-calyxed brasiletto; ஞாழல். 3. Croton seed; நேர்வாளவிதை. 4. Realgar; மனோசிலை.

இரேணு irēṇu, *n.* <*reṇu.* Fever plant; பற்படகப்புல். (நாநார்த்த.)

இரேணுகை irēṇukai, *n.* <*rēṇukā.* (நாநார்த்த.) 1. Bran; தவிடு. 2. Cubeb; தக்கோலம்.

இரேபன் irēpaṉ, *n.* <*rēpa.* (நாநார்த்த.) 1. Cruel man; குரூரன். 2. Contemptible man; நிந்திக்கத்தக்கவன்.

இரேவடம் irēvaṭam, *n.* <*rēvaṭa.* (நாநார்த்த.) 1. Whirlwind; சூறைக்காற்று. 2. Conch with right spirals; வலம்புரிச்சங்கு. 3. Bamboo; மூங்கில்.

இரேவதர் irēvatar, *n.* <*Rēvata.* A Buddha; புத்தர்களுள் ஒருவர். (மணி. பக். 369.)

இரேவை irēvai, *n.* <*rēvā.* Indigo; அவுரி. (நாநார்த்த.)

இரை irai, *n.* <*irā.* (நாநார்த்த.) 1. Earth; பூமி. 2. Water; நீர். 3. Toddy; கள். 4. Speech; வாக்கு.

இரைப்பு[1] iraippu, *n.* <இரை-. Infatuation; மோகம். புதுப்பிணத் திரைப்புமிக்கு (தக்கயாகப். 129).

இரைப்பு[2] iraippu, *n.* Cockroach; கரப்பும் பூச்சி. *Loc.*

இரைப்பெட்டி irai-p-peṭṭi, *n.* <இரை+. Begging bowl; பிச்சைவாங்கும் பெட்டி. *Tinn.*

இரௌத்திரி irauttiri, *n.* <*Raudrī.* A Śakti of Śiva; ஒரு சிவசத்தி. (சைவபூ. சந். 219.)

இல்லவன் illavaṉ, *n.* <இன்-மை. Poor man; தரித்திரன். இல்லவ னொழுக்கம்போல (கலித். 148).

இல்லாக்காட்டில் illā-k-kāṭṭil, *adv.* <இல்லா-மை+. If not, otherwise; இல்லாவிட்டால். *Pond.*

இல்லாக்குற்றம் illā-k-kuṟṟam, *n.* <id. +. 1. Poverty; தரித்திரம். *Loc.* 2. Calumny; அபாண்டம். *Pond.*

இல்லாங்காட்டி illāṅ-kāṭṭi, *adv.* <id.+. See இல்லாக்காட்டில். *Loc.*

இல்லாவாட்டி illā-v-āṭṭi, *n.* <id. + ஆள்-. Destitute woman; வறியவள். *Tinn.*

இல்லுனர் illuṉar, *n.* cf. ஒல்லுநர். Friends; நண்பர். (W.)

இலக்கட்சரம் ilakkaṭcaram, *n.* prob. இலக்கு + அட்சரம். Secret code; மறைபொருட்சொல். *Pond.*

இலக்கை ilakkai, *n.* <*rakṣā*. Protection; பாதுகாவல். இலக்கை யற்றதவ் விலங்கைக்கு மிரா வணன் றனக்கும் (கம்பரா. கும்பகரு. 339).

இலகல் ilakal, *n.* (அக. நி.) 1. cf. *lēkha*. Letter, character; எழுத்து. 2. cf. *laghu*. Eagle-wood; அகில். 3. cf. *lēśa*. Lightness; நொய்ம்மை.

இலகு-தல் ilaku-, 5 *v. intr.* To increase; மிகுதல். (சங்கற்பநி. சங்கிராந்த. 96.)

இலகுநட்சத்திரம் ilaku-naṭcattiram, *n.* <*laghu*+. Small star; நுட்பமான நட்சத்திரம். (W.)

இலகோட்டா ilakōṭṭā, *n.* <Chi. *luh w at.* Loquat, m. tr., *Eriobotrya japonica;* மரவகை. (L.)

இலங்கனம் ilaṅkaṉam, *n.* <*laṅghana*. Transgression; கடக்கை. (நாநார்த்த.)

இலங்கிகன் ilaṅkikaṉ, *n.* <இலிங்கி. Ascetic; துறவி. (அக. நி.)

இலங்கு ilaṅku, *n.* Tank; குளம். (W.)

இலங்கோடு ilaṅkōṭu, *n.* <Hind. *laṅgōṭa*. Strip of cloth fitted to the loins; சல்லடம். மிக்கதா மிலங்கோடு கௌபீனமே (அலங்காரச்சிந்து. 16).

இலச்சி-த்தல் ilacci-, 11 *v. intr.* <*lajjā*. To be bashful, coy, shy; நாணுதல். திருவான தேவி இலச்சிப்ப (தக்கயாகப். 34, உரை).

இலச்சைக்கேடு ilaccai-k-kēṭu, *n.* <இலச்சை+. Shamelessness; வெட்கக்கேடு. (W.)

இலஞ்சி¹ ilañci, *n.* Mango tree; மாமரம். (அக. நி.)

இலஞ்சி² ilañci, *n.* cf. இலேஞ்சி. A towel; சவுக்கம். *Colloq.*

இலஞ்சிலி ilañcili, *n.* cf. இலாஞ்சி. Cardamom plant; ஏலம். (சித். வை.)

இலட்சுமிவண்டு ilaṭcumi-vaṇṭu, *n.* <*lakṣmī*+. Cockroach, as a harbinger of prosperity; கரப்புப்பூச்சி. *Colloq.*

இலட்டை ilaṭṭai, *n.* prob. *laḍḍu*. Round cake of rice flour and sugar; அப்பம். (அக. நி.)

இலடு ilaṭu, *n.* Horse; குதிரை. (அக. நி.)

இலபனம் ilapaṉam, *n.* <*lapana*. (Anat.) Mouth; வாய். (W.)

இலம்பம் ilampam, *n.* <*lamba*. (நாநார்த்த.) 1. Height; உயர்வு. 2. Expanse; width; விசாலம்.

இலம்பாடு ilampāṭu, *n.* <இலம்படு-. Sorrow, grief; துக்கம். (அக. நி.)

இலம்பிதசாபலம் ilampita-cāpalam, *n.* <*lambita*+. (Astron.) An equation from the table of the moon's parallax; மந்தசாபலம். (சூடா. உள். 433.)

இலம்பிதம் ilampitam, *n.* <*lambita*. (Astron.) Parallax of moon's longitude; மந்தசா. (சூடா. உள். 433.)

இலயசக்தி ilaya-cakti, *n.* <*laya*+. (Śaiva.) Śakti of Ilaya-Civaṉ; இலயசிவனின் சக்தி. (சி. சி. 2, 75, மறைஞா.)

இலயதத்துவம் ilaya-tattuvam, *n.* <id. +. (Śaiva.) State of the Supreme Being during the *makā-caṅkāram;* மகாசங்கார காலத்துத் தன் காரியங்களெல்லா மொடுங்கிக் காரணமாத்திரையாய் நிற்கும் இறைவனிலை. (சி. சி. 6, 6, ஞானப்.)

இலயமுத்தி ilaya-mutti, *n.* <id.+. Salvation through absorption into Godhead; பரம்பொருளோடு இரண்டறக் கலக்கையாகிய முத்தி. (யாழ். அக.)

இலலிதபஞ்சமி ilalita-pañcami, *n.* <*lalita*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

இலவடி-த்தல் ilavaṭi-, *v. intr.* To thresh out sheaves of corn; நெற்கதிரடித்தல். *Colloq.*

இலவம்¹ ilavam, *n.* <*lava*. 1. (Jaina.) A measure of time; ஒரு கால அளவு. தோரவமில வமே நாள் (மேருமந். 94). 2. Wool; ஆடு முதலிய வற்றின் மயிர். (நாநார்த்த.)

இலவம்² ilavam, *n.* perh. *iḍā.* Worship; பூசை. (அக. நி.)

இலளிதம் ilaḷitam, *n.* <*lalita.* (நாநார்த்த.) 1. Longing, wish; இச்சை. 2. Lucidity of expression; பொருளின் தெளிவு.

இலளிதை ilaḷitai, *n.* <*lalitā.* A kind of pearl necklace; ஒருவகை முத்தாரம். (நாநார்த்த.)

இலாக்கை ilākkai, *n.* <*lākṣā.* (நாநார்த்த.) 1. Red cotton; செம்பஞ்சு. 2. Shell-lac; அரக்கு.

இலாகன் ilākaṉ, *n.* A kind of fish; மீன் வகை. (W.)

இலாங்கலம் ilāṅkalam, *n.* <*lāṅgala.* (நாநார்த்த.) 1. A kind of flower; பூவகை. 2. Palmyra; பனை. 3. Plough; கலப்பை. 4. Curved cornice; கொடுங்கை.

இலாங்கூலம் ilāṅkūlam, *n.* <*lāṅgūla.* Membrum virile; ஆண்குறி. (நாநார்த்த.)

இலாஞ்சலி ilāñcali, *n.* cf. இலாஞ்சி. Cardamom plant; ஏலம். (பச். மூ.)

இலாடம்¹ ilāṭam, *n.* <*lāṭa.* Saree; சேலை. (நாநார்த்த.)

இலாடம்² ilāṭam, *n.* (Astron.) The day in which the sun's position is in a specified relation to the constellation *mūlam;* மூலநட்சத் திரத்திற்குஞ் சூரியனுக்கு முள்ள தூரத்தை யொட்டி நிர்ணயிக்கும் நாள். (பஞ்.)

இலாபாந்தராயம் ilāpāntarāyam, *n.* <*lābha*+*antarāya.* (Jaina.) An impediment to the attainment of one's object, caused by karma; குறித்த பேற்றை இடைநின்று விலக்குங் கருமத்தடை. (சீவக. 3081, உரை.)

இலிங்கம் iliṅkam, *n.* <*liṅga.* (Phil.) Prakṛti; பிரகிருதி. (நாநார்த்த.)

இலிங்கமுத்திரை iliṅka-muttirai, *n.* <id.+. A kind of hand-pose, in worship; பூசைசெய்யும்போது காட்டும் முத்திரைவகை. (செந். x, 426.)

இலீலை ililai, *n.* <*līlā.* Playfulness; பரிகாசம். (நாநார்த்த.)

இலீனம் ilīṉam, *n.* <*līna.* 1. Dissolution; அழிவு. 2. Involution; அடக்கம். அப்படிப்போலப் பிரகிருதியில் ஜீவர்கள் இலீனமாயிருக்கிறார்கள் (வாசு தேவமனனம், பக். 3).

இலேகனம் ilēkaṉam, *n.* <*lēkhana.* (நாநார்த்த.) 1. Bark of paper tree; பூர்ச்சமரத்தின் மேலுரி. 2. Cutting; வெட்டுகை.

இலேகை ilēkai, *n.* <*lēkhā.* 1. Letter; எழுத்து. இலேகை யக்கரப்பெயர் (பேரகத். 4). 2. Earth; பூமி. (நாநார்த்த.) 3. Cicatrice; தழும்பு. நுதிமருப் பிலேகை நண்ணிது தோன்ற (பெருங். வத்தவ. 7, 184).

இலேபம் ilēpam, *n.* <*lēpa.* (நாநார்த்த.) 1. Food; போசனம். 2. Paste; சாந்து.

இலைக்கடுக்காய் ilai-k-kaṭukkāy, *n.* <இலை +. (L.) 1. Paniculate winged myrobalan; வெண்மருது. 2. Flowering mardah; பூமருது.

இலைக்கூலம் ilai-k-kūlam, *n.* <id.+ prob. கூலி. A tax; வரிவகை. (S. I. I. iii, 411.)

இலைச்சுமடன் ilai-c-cumaṭaṉ, *n.* <id.+. (யாழ். வி. பக். 512.) 1. Seller of betel leaves; வெற்றிலை விற்போன். 2. Fool, idiot; மூடன்.

இலைச்செப்பு ilai-c-ceppu, *n.* <id.+. An utensil of worship; பூசைப்பாத்திரவகை. (S. I. I. ii, 5.)

இலைசாடு-தல் ilai-cāṭu-, *v. intr.* <id.+. To grow too luxuriantly to be productive, as plants; செடிகொடிகள் மதர்த்தல். *Tinn.*

இலைத்தட்டு ilai-t-taṭṭu, *n.* <id.+. A kind of plate used in worship; பூசைத்தட்டுவகை. (S. I. I. ii, 6.)

இலைத்தொடை ilai-t-toṭai, *n.* <id.+. Decorative hangings, as garlands; அலங்காரத் தொங்கல். சாத்தின இலைத்தொடை யாதலால் (திவ். பெரியாழ். 3, 4, 1, வியா. பக். 592).

இலையம் ilaiyam, *n.* <*laya.* A dance; கூத்தின் விகற்பம். (அக. நி.)

இலைவாழை ilai-vāḻai, *n.* <இலை+. *Loc.* 1. A kind of plantain that does not yield fruits; மலட்டுவாழைவகை. 2. A kind of plantain yielding stony fruit; கொட்டைவாழை.

இலௌகிகசாத்திரம் ilaukika-cāttiram, *n.* <*laukika*+. Treatise dealing with perceptible results, dist. fr. *vaitika-cāttiram;* கண்கூடாகப் பலனளிப்பவற்றைக் கூறுஞ் சாத்திரம். (விவேகசிந். 13.)

இவேசித்தொகையேடு ivēci-t-tokai-y-ēṭu, *n.* prob. U. *ivāz*+. A statement showing the amount of collection and balance in money or in kind; வசூலித்த பணம் தானிய முதலியவற்றின் கணக்கைக் காட்டும் விவரக்குறிப்பு. (R. T.)

இழந்தநாக்கடி-த்தல் iḻanta-nākkaṭi-, *v. intr.* prob. இழ- + நாக்கு +. cf. இளநாக்கடி-. 1. To promise or consent lightly without due consideration; முன்பின் யோசியாது உறுதியின்றி வாக்களித்தல். *Tinn.* 2. To commisserate; இரக்கப்படுதல். *Loc.*

இழவு iḻavu, n. <id. Bereavement, one of six karuvuḷ-amaippu, q. v.; கருவுளமைப்பு ஆறனுள் ஒன்றான பந்துநஷ்டம். (பிங்.)

இழவுடுப்பு iḻavuṭuppu, n. <இழவு+. Mourning dress; துக்கக்குறியான உடை. Pond.

இழித்துரை iḻitturai, n. <இழி-+. Word of contempt; improper language; இழிவாகக் கூறுஞ் சொல். இங்குச்சொன்ன உபசாரம் இழித்துரை (தக்கயாகப். 402, உரை).

இழிநீர் iḻinīr, n. <இழி-+. Outflow; வடியுநீர். கட்கடற்கு ஏறுநீர் இழிநீருளவோ என்னில் (தக்கயாகப். 122, உரை).

இழுக்கு-தல் iḻukku-, 5 v. intr. To die; சாதல். முள்ளி னெய்தெற விழுக்கிய கானவர் (மலைபடு. 301, உரை).

இழுக்குப்பொடுக்கெனல் iḻukku-p-poṭukkeṉal, n. Expr. of warning; எச்சரிக்கைக் குறிப்பு. (J.)

இழுத்துப்பேசு-தல் iḻuttu-p-pēcu-, v. tr. <இழு-+. (W.) 1. To speak slowly, in a measured manner; நிறுத்தி மெள்ளப்பேசுதல். 2. To speak evasively; நழுவவிட்டுப் பேசுதல்.

இழுது iḻutu, n. Sweetness; தித்திப்பு. (நாநார்த்த.)

இழுப்பாசாமி iḻuppācāmi, n. <இழுப்பு + ஆசாமி. Immoral person; ஒழுங்கற்ற நடத்தையுள்ளவ-ன்-ள்.

இழுப்புத்தேர் iḻuppu-t-tēr, n. <id.+. Temple car to be dragged, dist. fr. eṭuppu-t-tēr; இழுத்துச்செல்லும் இரதம். (W.)

இழுப்புப்பறிப்பு iḻuppu-p-paṟippu, n. <id.+. Colloq. 1. Immorality; ஒழுங்கீனமான நடக்கை. அவனுக்கு இழுப்புப்பறிப்புண்டு. 2. Debt; கடன்.

இழுப்புவலை iḻuppu-valai, n. <id.+. A kind of fishing net; மீன்பிடிக்கும் வலைவகை. Pond.

இழுபறி iḻu-paṟi, n. <இழு-+. See இழுவை, 1, 2. Colloq.

இழுவல்நழுவல் iḻuval-naḻuval, n. <id. +. Uncertainty; நிச்சயமின்மை. (பாவலர்சரித். 11.)

இழுவை iḻuvai, n. <id. 1. Procrastination, dilatoriness; காரியத் தாமதம். Loc. 2. Inextricable difficulty; இடைஞ்சல். நற்குடிக்குத் துன்பமடா காளும்பல விழுவை (பஞ்ச. திருமுக. 768). 3. A thorny shrub; ஓர் முட்செடி. (W.)

இழை[1] iḻai, n. <இழை-. Cloth; துகில். நுண்ணிழையணையென (கலித். 56).

இழை[2]-தல் iḻai-, 12 v. intr. To become emaciated, reduced; மெலிதல். குழந்தை நூலாய் இழைந்துவிட்டது.

இழைப்பு[1] iḻaippu, n. <இழை-. Work; செய்தொழில். உழைக்கல மகளிரு மிழைப்பிரிந் தாற்றவும் (பெருங். உஞ்சைக். 46, 334).

இழைப்பு[2] iḻaippu, n. cf. இளைப்பு. Asthma; காசநோய். Loc.

இளகல் iḷakal, n. <இளகு-. Love; அன்பு. (அக. நி.)

இளகிப்பதி-த்தல் iḷaki-p-pati-, v. tr. <id.+. To be nicely set; அழகாகப்பதித்தல். (திவ், அமலனாதி. 3, வ்யா. பக். 48.)

இளங்காலி iḷaṅ-kāli, n. <இள-மை+. Calf; மாட்டுக்கன்று. (திவ். பெரியாழ். 3, 3, 1, வ்யா. பக். 560.)

இளங்கிடை iḷaṅkiṭai, n. <id.+. Open place where the cattle of the village gather together before being driven to the pasture; ஊர்மாடுகளெல்லாம் வரும்வரை மேய்ப்போன் மாடுகளை நிறுத்திவைக்கும் வெளியிடம். Nāñ.

இளங்கூறு iḷaṅ-kūṟu, n. <id.+. Crown prince; இளவரசன். வேணாட்டு இளங்கூறு வாழுமவற்கு (T. A. S. ii, 64).

இளங்கோவேள் iḷaṅ-kō-vēḷ, n. <இளங்கோ+. Prince of Vēḷ family; வேள் குலத்து இளவரசன். (சைவசிகா. 36.)

இளஞ்சாமை iḷañ-cāmai, n. prob. இள-மை+. A kind of millet; சாமைவகை. (விவசா. 4.)

இளஞ்சூரியர் iḷañ-cūriyar, n. <id.+. The younger of the twin poets iraṭṭaiyar; இரட்டையருள் இளையவர். (தமிழ்நா. 103, தலைப்பு.)

இளநாக்கடி-த்தல் iḷanākkaṭi-, v. intr. <இளநாக்கு+. See இழுத்துநாக்கடி-.

இளநீர்த்தா-தல் iḷanīrttā-, v. intr. <இளநீர்+. To grow lean; to be worn out and become thin; தேய்ந்துமெலிதல். (நன். 431, மயிலை.)

இளநேரம் iḷa-nēram, n. <இள-மை+. Evening; மாலை. இளநேரம் வீதியிலே வந்துநில்லு (தெய்வச். விறலிவிடு. 337).

இளப்பம் iḷappam, *n.* < இளை-. Disgrace; அவமானம். அவனுக்கு இது பெரிய இளப்பம். *Colloq.*

இளம்பயிர் iḷam-payir, *n.* < இள-மை +. Seedlings that have been recently transplanted; நாறுபிடுங்கி நட்டுச் சிலநாளான பயிர். *Loc.*

இளம்பாக்கு iḷam-pākku, *n.* <id. +. A kind of areca nut; பாக்குவகை. (விறலிவிடு.)

இளம்பாலாசிரியன் iḷampāl-āciriyaṉ, *n.* <id. + *bāla* +. Teacher of children, dist. fr. *pālāciriyaṉ;* இளம்பாலர்க்குக் கற்பிக்கும் ஆசிரியன். (அகநா. 102.)

இளம்பிடி iḷam-piṭi, *n.* <id. +. Beautiful woman; அழகிய பெண். இளம்பிடி யிவளுக்கென் னினைந்திருந்தாய் (திவ். பெரியதி. 2, 7, 2). (அக. நி.)

இளம்பிராயம் iḷam-pirāyam, *n.* <id. +. Youth; இளவயது. (R.)

இளமணல் iḷa-maṇal, *n.* <id. +. Quick sand; குருத்துமணல். தேரோ டிளமண லுட்பட லோம்பு (கலித். 98).

இளமணற்பாய்-தல் iḷamaṇaṟ-pāy-, *v. intr.* < இளமணல் +. To be caught, as the feet in quick-sand; இளமணலிற் காலழுந்துதற்போல அகப்படுதல். திருச்சோலையின் போக்யதையிலே இள மணற் பாய்ந்து கால்வாங்கமாட்டாதே நிற்கும் (திவ். அமலனாதி. 6, வ்யா. பக். 77).

இளமுறை iḷa-muṟai, *n.* < இள-மை +. Heir; பின் வாரிசு. *Loc.*

இளமை iḷamai, *n.* Madness; உன்மத்தம். (நாநார்த்த.)

இளவழிபாடு iḷa-vaḻipāṭu, *n.* < இள-மை +. Child education; சிறுபிள்ளைக் கல்வி. (யாழ். அக.)

இளவுறை iḷa-v-uṟai, *n.* <id. +. Milk not fully formed into curds; நன்றாகத் தோயாத தயிர். (யாழ். அக.)

இளிச்சகண்ணி iḷicca-kaṇṇi, *n.* < இளிச்சல் +. Woman who habitually leers; காமக் குறிப்போடு பிறரை நோக்குந் தன்மை யுடையவள். இளிச்சகண்ணிக்குப் புளிச்சகண்ணி தேவலை.

இளை[1]-த்தல் iḷai-, *11 v. intr.* To get slack; நெகிழ்நிற்றல். தானே யிளைக்கிற் பார்கீழ் மேலாம் (திவ். இயற். பெரியதிருவந். 24).

இளை[2] iḷai, *n.* (அக. நி.) 1. cf. மிளை. Ditch, moat; கிடங்கு. 2. Indian black bear; கரடி.

இளை[3] iḷai, *n.* < இளை-மை. Younger brother; தம்பி. இளைபுரிந் தளித்தன்மே லிவர்ந்த காதலன் (கம்பரா. கவந்த. 27).

இளையநயினார் iḷaiya-nayiṉār, *n.* <id. +. Skanda; முருகக்கடவுள். (M. E. R. 507 of 1929-30.)

இளையமரக்கால் iḷaiya-marakkāl, *n.* <id. +. A small *marakkāl;* சிறு மரக்கால். கலத்துவாய்த் தூணி இளையமரக்காலால் வரிசையிட்ட படி (S. I. I. iv, 30).

இளையவாசவன் iḷaiya-vācavaṉ, *n.* <id. +. Upēndra; உபேந்திரன். இளையவாசவன் விசும்பினின்றும் விழ (தக்கயாகப். 651).

இளையார் iḷaiyār, *n.* <id. Husband's younger brothers; கொழுந்தர். *Loc.*

இளையோன் iḷaiyōṉ, *n.* <id. Skanda; முருகக்கடவுள். (தக்கயாகப். 5, உரை.)

இறக்கம்[1] iṟakkam, *n.* < இற-. Death; சாவு. இறக்கமுற்றானென வேக்கமெய்தினான் (கம்பரா. சடாயுகாண். 19).

இறக்கம்[2] iṟakkam, *n.* < இறங்கு-. Swallowing, as of food; உணவு முதலியன உட்செல்லுகை. சோற்றிறக்கமு மறந்தான் (குருகூர்ப்.).

இறக்கு-தல் iṟakku-, *5 v. tr.* To compel payment; பணத்தை நிர்ப்பந்தித்து வசூலித்தல். *Colloq.*

இறக்கை iṟakkai, *n.* <T. *rekka.* Wing-wall; கண்ணுற்றின் இருபுறங்களிலுமுள்ள துணைச் சுவர். (கட்டட. நாமா.)

இறகுக்கூடு iṟaku-k-kūṭu, *n.* < இறகு +. Pen rack; பேனா வைக்குங் கூடு. *Pond.*

இறங்கல்மீட்டான் iṟaṅkal-mīṭṭāṉ, *n.* <id. +. cf. இறங்கமாட்டான். A kind of paddy; ஒருவகை நெல். போரிறங்கல்மீட்டான் புழுதிபுரட்டி (நெல்விடுதூது. 189).

இறங்கு-தல் iṟaṅku-, *5 v. intr.* To leave, abandon; விட்டுநீங்குதல். அருணோக்க மிறங்காத தாமரைக்க ணெம்பெருமான் (கம்பரா. விராதன். 50). 2. To commence, begin to act; தொடங்குதல். தருமவழியில் இறங்கியுள்ளான்.

இறங்குகிணறு iṟaṅku-kiṇaṟu, *n.* < இறங்கு- +. Well with steps leading down to the water; உள்ளிறங்கிச் செல்வதற்குப் படிவரிசையுள்ள கிணறு. *Loc.*

இறங்குசட்டம் iṟaṅku-caṭṭam, *n.* <id. +. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 18.)

இறங்குசாத்து iṟaṅku-cāttu, *n.* <id. + A sect of the Cheṭṭi caste; செட்டிகளுள் ஒரு சாரார். (S. I. I. viii, 232.)

இறங்குநாகம் iraṅku-nākam, *n.* <id.+. A kind of curl-mark in cattle; மாட்டுச்சுழிவகை. (பெரியமாட். 21.)

இறவு iṟavu, *n.* <இற-. (யாழ். அக.) 1. Sloping roof; வீட்டிறப்பு. 2. Boundary; எல்லை.

இறவுள் iṟavuḷ, *n.* Hilly tract; குறிஞ்சி நிலம். (யாழ். அக.)

இறலிப்பை iṟali-p-pai, *n.* perh. இறலி+. Cocoon of the silk-worm; பட்டுப்பூச்சிக் கூடு. *Pond.*

இறாகு iṟāku, *n.* <Arab. *Irāq*. Arabia; அரபியாதேசம். இறாகுதேசத்தில் (அசுவசா. 1).

இறாட்டாணியம் iṟāṭṭāṇiyam, *n.* Distress; trouble; இடுக்கண். (யாழ். அக.)

இறு-த்தல் iṟu-, *11 v. tr.* 1. To express; சொல்லுதல். (நாநார்த்த.) 2. To stop; நிறுத்துதல். வலஞ்செயவிடா விறுத்தனவேறு (கலித். 104).

இறுக்கநெருக்கம் iṟukka-nerukkam, *n.* <இறுக்கம்+. Interval; இடைவேளை. தமது உத்யோகக் கடமைகளுக்கு அடுத்த இறுக்கநெருக்கங்களில் (மாலுமி. முக. 1).

இறுகரை iṟu-karai, *n.* <இறு-+. Eroded bank, as of a river; இடிகரை. (அக. நி.)

இறுதிநிலை iṟuti-nilai, *n.* <இறுதி+. 1. That which occurs in the end; ending; இறுதியில் நிற்பது. (கலித். 124, உரை, பக். 778.) 2. (Gram.) Termination, ending of a word; விகுதி. (நன். 134, சங்கர.)

இறுதியினற்கதி iṟutiyiṉaṟkati, *n.* <id.+. Final emancipation; நிருவாணம். இறுதியினற்கதி செல்லும் பெருவழி (மணி. 12, 59).

இறுபு iṟupu, *n.* <இறு-. Death; இறப்பு. இறுபும் புலம்பும் (பெருங். இலாவாண. 13, 12).

இறும்பு iṟumpu, *n.* 1. cf. இறும்பூது. Bee; வண்டு. (யாழ். அக.) 2. Worm; புழு. (சங்கற்பநி. 9, 15.) 3. Nature, quality; இயல்பு. (அக. நி.)

இறும்புளி iṟumpuḷi, *n.* Pulney Rowan, *Photinia notoniana*, a Kodaikanal tree; மரவகை. (Kodai.)

இறும்பூது iṟumpūtu, *n.* cf. சுரும்பு. (அக. நி.) 1. Bee; வண்டு. 2. Malabar glory lily; காந்தள்.

இறுவரையம் iṟu-varaiyam, *n.* <இறு-+ வரை. (யாழ். அக.) 1. Limit; எல்லை. 2. Present moment; தற்சமயம்.

இறை iṟai, *n.* <id. 1. Debt; கடன். (அக. நி.) 2. cf. உறை. Sheath of a sword; வாளின் உறை. வாய்ந்த விறைவிட்டால் மருவலர்கள் மார்புறையாப் பாய்ந்து (கூளப்ப. 45). 3. Crowd; கூட்டம். (தக்கயாகப். 638, உரை.)

இறைக்கட்டு iṟai-k-kaṭṭu, *n.* <இறை+. Taxation; வரி. இறைக்கட்டும் தவிர்த்து (S. I. I. vii, 414).

இறைக்காசான் iṟai-k-k-ācāṉ, *n.* <இறை+. Skanda, as the Guru of Śiva; முருகக் கடவுள். இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை (பெருந்தொ. 102).

இறைகுத்து-தல் iṟai-kuttu-, *v. tr.* prob. இறை+. To estimate; மதிப்பிடுதல். (யாழ். அக.)

இறைச்சோறு iṟai-c-cōṟu, *n.* cf. எறச்சோறு. A tax; வரிவகை. (S. I. I. viii, 87.)

இறைப்புணைப்படு-தல் iṟai-p-puṇai-p-paṭu-, *v. intr.* <id.+புணை+. To stand security for the payment of tax by a person; ஒருவன் இறுக்கவேண்டும் வரிக்குப் புணை கொடுத்தல். (S. I. I. v, 376.)

இறைப்பெட்டி iṟai-p-peṭṭi, *n.* <இறை-+. Ola basket for baling water; தண்ணீர் இறைக்க உதவும் ஓலைப்பெட்டி. *Tinn.*

இறைமகள் iṟai-makaḷ, *n.* <இறை+. Durgā; துர்க்காதேவி. இறைமக ளமுதுசெய்ய (தக்கயாகப். 751).

இறைமலை iṟai-malai, *n.* <id.+. Mt. Mēru; மேருமலை. இறைமலை வில்லி (தக்கயாகப். 170).

இறைமொழி iṟai-moḻi, *n.* <id.+. The Āgamas; இறைவனருளிய ஆகமம். இறைமொழிக் கல்லது மறுதர வோதி (சிலப். 10, 206).

இறையிறுக்குங்கோல் iṟai-y-iṟukkuṅ-kōl, *n.* <id.+இறு-+. Rod for measuring land for the purpose of fixing the tax; வரியிடுவதற்காக நிலத்தை அளக்க உபயோகிக்கும் அளவுகோல். இவ்வூரில் இறையிறுக்குங் கோலால் இந்நிலம் ஏழுமாவரை (S. I. I. v, 107).

இறைவனூல் iṟaivaṉūl, *n.* <இறைவன்+. The Āgamas; கடவுளருளிய ஆகமம். இறைவனூலையும் அவனருள்வழிப்பட்டுத் தத்தமரபின்வரும் குரவர் பலர் நூலையும் (நன். 7, சங்கர.).

இறைவைமரம் iṟaivai-maram, *n.* <இறைவை+. A boat-like wooden trough used for baling water; தண்ணீர் இறைக்க மரத்தாற் செய்த ஓடம்போன்ற கருவி. *Loc.*

இன்பசாகரமடல் inpa-cākara-maṭal, n. < இன்பம் + சாகரம் +. A treatise on erotics; ஒரு காமநூல். (தத்துவப். 155, உரை.)

இன்பி-த்தல் inpi-, 11 v. tr. < இன்பு. To cause to be happy; இன்ப மூட்டுதல். என்னையுருக்கி யின்பித்தவடி (பாடு. திருவருட்.).

இன்மணியாரம் in-maṇi-y-āram, n. < இனி-மை + மணி +. An ancient musical treatise; இறந்துபட்டதோர் இசைநூல். (யாப். வி. 540.)

இன்றி inri, adv. < இன்-மை. Without; இல்லாமல். தனக்கொரு பயனின்றியிருக்க (கலித். 96, 30, உரை).

இன்று inru, < id. part. No; இல்லை.—adv. See இன்றி. உப்பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே (நன். 172, மயிலை.).

இன்னா innā, int. cf. இந்தா. Here; இதோ. Tinn.

இன்னாவிசை innā-v-icai, n. < இன்னா +. (Pros.) One of the defects in the composition of verses; செய்யுட்குற்றம் இருபத்தேழனு ளொன்று. (யாப். வி. 525.)

இன்னிசைமாலை innicai-mālai, n. < இன்னிசை +. A treatise on akapporuḷ; அகப்பொருள் பற்றிய ஒரு நூல். (களா. கா. 24.)

இன்னியம் in-n-iyam, n. < இனி-மை +. Musical instruments; வாச்சியங்கள். (பெரும். வத்தவ. 2, 30.)

இன்னியர் inniyar, n. < இன்னியம். Bards, singers; பாணர். (அக. நி.)

இனம் inam, n. Comparison; உபமானம். இனனுணர் முழுநலம் (திவ். திருவாய். 1, 1, 2).

இனவரி ina-vari, n. < இனம் +. An ancient tax in cash; பழைய காசாயவரிவகை. (S. I. I. 1, 89.)

இனவெழுத்துப்பாட்டு ina-v-eḻuttu-p-pāṭṭu, n. < id. +. (Pros.) A kind of cittira-kavi; வல்லின முதலிய மூவினங்களுள் ஓரினத்தேழுத்துக் களேவரப் பாடுஞ் சித்திரகவிவகை. (யாப். வி. 503.)

இனன் inan, n. < id. 1. Kinsman; உறவினன். இன்னா தினனில் லூர் வாழ்தல் (குறள், 1158). 2. Equal; சமானன். (திவ். திருவாய். 1, 1, 2.) 3. Teacher; உபாத்தியாயர். (யாழ். அக.)

இனாம்நாட்கள் inām-nāṭkaḷ, n. < இனாம் +. Lay days; சரக்கேற்றற்காவது இறக்கற்காவது விடப்படும் நாட்கள். (M. Navi. 122.)

இனிப்புச்சேவு inippu-c-cēvu, n. < இனிப்பு +. A kind of confectionery; தித்திப்புச் சேர்ந்த சேவுப்பணியாரம். Tinn.

இனியபிரிவு iniya-pirivu, n. < இனி-மை + பிரிவு. Concubine's house; வைப்பாட்டி வீடு. சம்பிருதியெல்லா மினியபிரிவுக் களர்தமென்றும் (சரவண. பணவிடு. 182).

இனுக்காவலை inukkā-valai, n. A kind of net, used in fishing at sea; கடலில் வேலிபோற் கட்டி மீன் பிடிக்கவுதவும் வலை. Loc.

இஜதாசார் ijatācār, n. < U. izzat-āsār < Arab. izzat-āthār. Mark of respect; மரியாதையின் அடையாளம். (P. T. L.)

இஷ்டப்பிரசாதம் iṣṭa-p-piracātam, n. < இஷ்டம் + (R.) 1. Gift of grace; கைம்மாறு வேண்டாக் கொடை. 2. Grace of God; தேவ கிருபை. 3. Boiled rice offered to the idols; தேவப்பிரசாதம். 4. Eucharist; தேவ அப்பம்.

இஷீகாஸ்திரம் iṣīkāstiram, n. < iṣīkāstra. A kind of missile; அஸ்திரவகை. (கம்பரா. நிகும். 132, உரை.)

இஸ்கார் iskār, n. Ratlines; கப்பலில் லவுராறுத்துக் குறுக்கே ஏணிப்படிபோல இடப்பட்டிருக்குஞ் சிறு தாம்புக்கயிறுகள். (M. Navi. 85.)

இஸ்திபா istipā, n. < Arab. isti'fa. Deed of relinquishment; விடுதலைப்பத்திரம். (R. T.)

இஸ்தீங்கி istīṅki, n. Brails; கப்பற்பாயை ஏற்ற இறக்க உதவுங் கயிறுகள். (M. Navi. 86.)

இஸ்பேட் ispēṭ, n. < E. spade. Spades, in a pack of playing cards; விளையாட்டுச் சீட்டில் ஒரு சாதி. Colloq.

இஸ்பேட்ராஜா ispēṭ-rājā, n. < இஸ்பேட் +. Figure-head; அதிகாரமற்ற தலைவன். Colloq.

இஸாபா isāpā, n. < Arab. izāfah. Additional charge imposed; அதிகவரி. (R. T.)

ஈ

ஈ-தல் ī-, 4 v. aux. An auxiliary verb; ஒரு துணைவினை. தேறீயல்வேண்டும் (கலித். 98, 2).

ஈகு-தல் īku-, 5 v. intr. cf. இறுகு-. To solidify; கட்டியாதல். திரட்டுப்பாலும் ஈகினநெய்யும் கட்டித்தயிரும் (திவ். பெரியாழ். 3, 2, 6, வ்யா. பக். 545).

ஈகை īkai, n. (அக. நி.) 1. Want; இல்லாமை. 2. Wind; காற்று.

ஈங்கு īṅku, n. Sandalwood; சந்தனம். (சங். அக.)

ஈச்சை īccai, n. < ஈந்து. Date-palm; ஈந்து. Colloq.

ஈச்சோப்பி i-c-cōppi, *n.* < ஈ + சோப்பு-. Spider சிலந்தி. (யாழ். அக.)

ஈசதத்துவம் īca-tattuvam, *n.* < *īśa*+. (Śaiva.) One of five *cutta-tattuvam*, q. v.; சுத்த தத்துவம் ஐந்தனுள் ஒன்று. (சிவப். கட்.)

ஈசமநோகரி īca-maṉōkari, *n.* < id.+ *manōhari*. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

ஈசன் īcaṉ, *n.* < *īśa*. (அக. நி.) 1. Brahmā; பிரமன். 2. Father; தகப்பன்.

ஈசனாள் īcaṉāḷ, *n.* < ஈசன் + நாள். The *nakṣatra tiruvātirai*; திருவாதிரை. (W.)

ஈசுரதத்துவம் īcura-tattuvam, *n.* < *īś-vara*+. (Śaiva.) See ஈசதத்துவம். (சி. சி. 1, 65.)

ஈசுரமருந்து īcura-maruntu, *n.* < ஈசுவரன் +. cf. ஈசுரமூலி. Indian birth-wort; ஈசுரமூலி. *Pond.*

ஈசுவரக்கோவை īcuvara-k-kōvai *n.* < id. +. A kind of paddy, maturing in six months; ஆறுமாதத்திற் பயிராகும் நெல்வகை. (விவசா. 2.)

ஈசுவரிவிந்து īcuvari-vintu, *n.* < ஈசுவரி +. Sulphur; கந்தகம். (சங். அக.)

ஈசை īcai, *n.* < *īṣā*. Pole or shaft of a plough; ஏர்க்கால். (W.)

ஈட்டிப்பிடங்கு īṭṭi-p-piṭaṅku, *n.* < ஈட்டி +. Spear-head; ஈட்டியின் முனையுள்ள பாகம். (W.)

ஈட்டிராவுத்தன் īṭṭi-rāvuttaṉ, *n.* < id+. Lancer; ஈட்டிப்படைவீரன். *Pond.*

ஈடணம் īṭaṇam, *n.* < *īḍaṇa*. Fame; புகழ். (யாழ். அக.)

ஈடணை īṭaṇai, *n.* prob. *īṣaṇā*. Distress, affliction; துன்பம். என்னை வேருக்கி யிந்த வீடணை யில் விட்டதுவும் முன்னைவினைதானோ (பதசாகித்தியம்).

ஈடத்து īṭattu, *n.* < *īṣat*. A little; சிறிது. (சங். அக.)

ஈடழி-த்தல் īṭaḻi-, *v. tr.* < ஈடு+. To quell one's power; வலிகெடுத்தல். இராவணனை யீடழித்து (தேவா. 350, 8).

ஈடிகை īṭikai, *n.* < *iṣikā*. Painter's pencil; எழுதுகோல். (யாழ். அக.)

ஈடு īṭu, *n.* < இடு-. 1. Fit or proper subject; ஏற்ற பொருள். நின்சோதனைக்கு நான் ஈடா (சர்வசமய. பக். 126). 2. Turn; தடவை. இந்தத் தென்னை ஒரு ஈட்டுக்கு முப்பதுகாய் காய்க்கும்.

ஈடுகட்டு-தல் īṭu-kaṭṭu-, *v. intr.* < ஈடு+. To be durable, as a piece of cloth for wear; வஸ்திரம் முதலான பொருள்கள் பலநாள் உபயோகப் பட்டும் வன்மைகெடாது இருத்தல். *Loc.*

ஈடுசெய்-தல் īṭu-cey-, *v. tr.* < id.+. *Loc.* 1. To compensate; பிரதியுபகாரஞ்செய்தல். 2. To adjust, balance; சரிக்கட்டுதல்.

ஈடுசோடு īṭu-cōṭu, *n.* < id.+. Equal; சமானம். ஈடுசோடற்ற சிற்சத்தியாம் (மஸ்தான். 92).

ஈடை īṭai, *n.* < *īṣā*. See ஈசை. (W.)

ஈணி īṇi, *n.* cf. அகணி. Fibre of palm; பனைநார். (யாழ். அக.)

ஈது ītu, *n.* < Arab. *Īd*. 1. The festival of Id; முகம்மதியத் திருநாட்களு ளொன்று. *Muham.* 2. The festival of Bakr-īd; பக்ரீத் திருநாள். *Muham.*

ஈதுலல்ஹா ītul-alhā, *n.* < Arab. *Īd-ul-adhā*. See ஈது, 2.

ஈந்து īntu, *n.* Poison; நஞ்சு. (சங். அக.)

ஈப்பி īppi, *n.* < ஈர்ப்பி. Nit; பேன்முட்டை. (யாழ். அக.)

ஈயச்செடி īya-c-ceṭi, *n.* < ஈகை +. Tiger-stopper; இண்டு. (மூ. அ.)

ஈயசிந்தூரம் īya-cintūram, *n.* < ஈயம் + Red lead; சிந்தூரவகை.

ஈயத்தண்டு īya-t-taṇṭu, *n.* < ஈகை + Tiger-stopper; இண்டு. (மூ. அ.)

ஈயத்தின்பிள்ளை īyattiṉ-piḷḷai, *n.* < ஈயம் +. cf. ஈயக்குழலி. *Nīla-pāṣāṇam*, a prepared arsenic; நீலபாஷாணம். (யாழ். அக.)

ஈயலி īyali, *n.* cf. ஈயன்மூதாய். Cochineal, scarlet moth; தம்பலப்பூச்சி. (வை. மூ.)

ஈயாப்பத்தன் īyā-p-pattaṉ, *n.* < ஈ- + ஆ neg.+. Miser; உலோபி. (மதி. களஞ். i, 88.)

ஈயுவன் īyuvaṉ, *n.* prob. ஈழம். Rāvaṇa; இராவணன். (அக. நி.)

ஈர்[1]-த்தல் īr-, *11 v. tr.* To saw, split; அறுத்தல். ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேபகடிதமாறுற்றபோல பொருந்திப் போரவும் ப்ராப்தம் (ரஹஸ்ய. 609).

ஈர்[2] īr, *n.* prob. எயிறு. Cheek; கதுப்பு. (அக. நி.)

ஈர்க்கு īrkku, *n.* < ஈர். Feather; இறகு. மஞ்ஞை யீர்க்கு.

ஈர்பட்டு īrpaṭṭu, *n.* See ஈர்வெட்டு. (யாழ். அக.)

ஈர்மணி īrmaṇi, *n.* < ஈர் +. The hell, *irattiṉa-p-pirapai;* இரத்தினப்பிரபை என்னும் நரகம். (எலா. 67.)

ஈர்வாள் īr-vāḷ, *n.* < id. +. Sickle; அரிவாள். (அக. நி.)

ஈர்வெட்டு īr-veṭṭu, *n.* < ஈர் +. cf. ஈர்வாணி. Rope made of ribs of palmyra leaf; பனையீர்க்குக்கயிறு. (யாழ். அக.)

ஈரக்கையாலேதடவு-தல் īra-k-kaiyālē-taṭavu-, *v. tr.* < ஈரம் +. To console; to caress lovingly; அன்புகாட்டித் தேற்றுதல். நாட்டை ஈரக்கையாலேதடவி கம்ஸன்காலத்தேற்பட்ட நோவுதீர ரக்ஷித்து (திவ். இயற். திருகுறுந், 1, வ்யா.).

ஈரங்கை īraṅ-kai, *n.* prob. ஈறு +. Curved cornice or projection; corbel; கொடுங்கை. (அக. நி.)

ஈரடி[1] īr-aṭi, *n.* < இரண்டு +. Second crop; இரண்டாம் போகம். (R. T.)

ஈரடி[2] īraṭi, *n.* See ஈராடி, 1. *Loc.*

ஈரடிப்பெட்டி īraṭi-p-peṭṭi, *n.* < ஈரடி +. Box which opens on both sides; இரண்டு பக்கமுந் திறத்தற்குரிய பெட்டி. *Pond.*

ஈரணம் īraṇam, *n.* Spurge; கள்ளி. (சங். அக.)

ஈரம் īram, *n.* prob. ஈர்-. 1. Part; பகுதி. (அக. நி.) 2. Saffron powder; குங்குமம். (சங். அக.)

ஈரமானி īra-māṉi, *n.* < ஈரம் + மானம். Hygrometer; காற்றிலுள்ள ஈரத்தையளக்குங் கருவி. *Mod.*

ஈரலுலர்த்தி īral-ulartti, *n.* < ஈரல் + உலர்-. A disease of the spleen, in cattle; மாட்டுநோய் வகை. (மாட்டுவை. சி. 41.)

ஈரற்கருகு-தல் īraṟ-karuku-, *v. intr* < id +. To be very much afraid; மிகவும் பயப்படுதல். (யாழ். அக.)

ஈரற்கல் īraṟ-kal, *n.* prob. id. +. A medicinal stone; மந்தாரச்சிலை. (யாழ். அக.)

ஈரற்றீ-தல் īraṟṟī-, *v intr.* < id. +. See ஈரற்கருகு-. (யாழ். அக.)

ஈராட்டி īr-āṭṭi, *n.* See ஈராடி. (யாழ். அக.)

ஈராடி īr-āṭi, *n.* < ஈரம் +. (யாழ். அக.) 1. Wet; dampness; ஈரம். 2. Cloudiness; மழைக்குணம்.

ஈராதிகாரணப்போதகம் īr-āti-kāraṇa-p-pōtakam, *n.* prob. இரு-மை + ஆதி +. Dualism; இருபொருண்மை. *Pond.*

ஈரிலை īrilai, *n.* Sun; சூரியன். (அக. நி.)

ஈரிறை īr-iṟai, *n.* < இரண்டு +. 1. Dyarchy; ஈரரசு. 2. Double taxation; இரண்டுமுறை பெறும் வரி. நாளும் பிறந்து அவர்களும் பிறக்க வேணுமோ? ஈரிறையுண்டோ? (ஈடு, 1, 3, ப்ர.).

ஈலி īli, *n.* prob. ஈர்-. Knife; கத்தி. (J.)

ஈவிழுங்கி ī-viḻuṅki, *n.* < ஈ + விழுங்கு-. *Pond.* 1. Fly-catcher; ஈயை விழுங்கும் பறவை. 2. Fly-catching lizard; ஈத் தின்னும் பல்லி. 3. Fly-trap; ஈயுண்ணுஞ் செடி. 4. Simpleton who believes in everything; எதையும் நம்பு மூடன்.

ஈவுசோய்வு īvu-cōyvu, *n.* < ஈவு + சோர்-. Gift out of sympathy; மனம் இளகிக் கொடுக்குங் கொடை. (யாழ். அக.)

ஈழக்கருங்காசு īḻa-k-karuṅ-kācu, *n.* < ஈழம் + கரு-மை +. An old coin; பழையநாணயவகை. (M. E. R. 47 of 1925.)

ஈழம்புஞ்சை īḻam-puñcai, *n.* < id. +. A tax; வரிவகை. (S. I. I. iv, 122.)

ஈழற்கடிவரி īḻaṟkaṭi-vari, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 24.)

ஈழைக்கொல்லி īḻai-k-kolli, *n.* < ஈளை + கொல்-. Yellow orpiment; அரிதாரம். (சங். அக.)

ஈளம் īḷam, *n.* Yellow-flowered fragrant trumpet-flower tree; பாதிரி. (சங். அக.)

ஈற்றுத்தாய் īṟṟu-t-tāy, *n.* < ஈற்று +. One's own mother, dist. fr. *māṟṟu-t-tāy;* பெற்ற தாய். (திவ். பெரியாழ். 3, 9, 4.)

ஈறு īṟu, *n.* < இறு-. Result; பயன். (அக. நி.)

ஈறுகடை īṟu-kaṭai, *n.* < ஈறு +. Final end; இறுதிமுடிவு. (யாழ். அக.)

ஈன் īṉ, *n.* 1. Ainee wood; மரவகை. *Loc.* 2. Sal; ஆச்சா. (சித். அக.)

ஈனசாமந்தன் īṉa-cāmantaṉ, *n.* < *hīna* +. A class of *cāmantar;* சாமந்தர்வகையினர். (சுக்கிரநீதி, 26.)

ஈனம்[1] īṉam, *n.* < *hīna.* Inclination, slope; சரிவு. (அக. நி.)

ஈனம்[2] īṉam, *n.* Hare; முயல். (அக. நி.)

உ

உ u, n. (Astrol.) Letter representing crow, in *pañca-paṭci;* பஞ்சபட்சிகளுள் காகங் குறிக்கும் எழுத்து. (பிங்.)

உக்கம்[1] ukkam, n. <*ugra.* Severity; உக்கிரம். உக்கதவர் தித்தரவர் (மேருமங். 1097).

உக்கம்[2] ukkam, n. <*ukṣan.* (அக. நி.) 1. Cow; பசு. 2. Fowl; கோழி.

உக்கரைத்தட்டு ukkarai-t-taṭṭu, n. <உள் +கரை+. The part just above the middle of the *valantarai* of a *mirutaṅkam;* மிருதங்க வலந்தலையின் நடுப்பாகத்துக்கு மேலுள்ள பாகம். (கலைமகள், xii, 400.)

உக்கா ukkā, n. Toddy; கள். (யாழ். அக.)

உக்காக்கம் ukkākkam, n. <உக்கம்+. Waist cord; அரைஞாண். (யாழ். அக.)

உக்கிட்டு ukkiṭṭu, n. <உள்+கட்டு. A kind of necklace; உட்கட்டு. *Loc.*

உக்கிரகந்தை ukkirakantai, n. <*ugra-gandhā.* 1. Sweet flag; வசம்பு. (சித். அக.) 2. Bishop's weed; ஓமம். (நாநார்த்த.)

உக்கிரநாள் ukkira-nāḷ, n. <உக்கிரம்+. The five *nakṣatras, paraṇi, makam, pūram, pūrāṭam, pūraṭṭāti;* பரணி மகம் பூரம் பூராடம் பூரட்டாதி ஆகிய ஐந்து நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 36.)

உக்கிரமம் ukkiramam, n. <*ugra.* Blaze, glow; சுவாலை. *Pond.*

உக்கிரன் ukkiraṉ, n. <*ugra.* A manifestation of Śiva; சிவமூர்த்தங்களுள் ஒன்று. (காஞ்சிப்பு. சிவபுண். 15.)

உக்கு ukku, n. Clove; இலவங்கம். (சங். அக.)

உக்கும் ukkum, n. <U. *hukm.* Permission, order; உத்தரவு. (P. T. L.)

உக்கும்நாமா ukkum-nāmā, n. <U. *hukm-nāmā.* Written order; எழுத்து மூலமான உத்தரவு. (P. T. L.)

உக்குமத்து ukkumattu, n. <U. *hūkamat.* 1. Influence; செல்வாக்கு. *Loc.* 2. Arrogance; செருக்கு. *Tinn.* 3. Complicity; உடந்தை. *Tj.*

உக்குரோட்டு ukkurōṭṭu, n. prob. *krōṣṭu.* Jackal; நரி. (நாமதீப.)

உக்குறள் u-k-kuṟaḷ, n. <உ+. The shortened *u;* குற்றியலுகரம். உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும் (நன். 164).

உக்கூடம் ukkūm, n. See உக்கும். (P. T. L.)

உகந்துடைமை ukantuṭaimai, n. <உக- +உடை-மை. Right of a married woman to a share of her husband's property; கணவனுடைய சொத்தில் மனைவிக்குரிய பாகவுரிமை. *Nāñ.*

உகப்பார்பொன் ukappār-poṉ, n. perh. id.+. A tax; வரிவகை. (S. I. I. iii, 110.)

உகம் ukam, n. <*yuga.* Day; நாள். (அக. நி.)

உகவை ukavai, n. <உக-. 1. Favour; அநுகூலம். உள்குவார்கட்குகவைகள் பலவுஞ் செய்து (தேவா. 1146, 5). 2. See உகவைப்பொன். (S. I. I. iii, 38.)

உகவைப்பொன் ukavai-p-poṉ, n. <உகவை+. A tax in money; காசாயவகை. (S. I. I. vii, 290.)

உகளம் ukaḷam, n. <உகளி-. Delight; இஷ்டம். (அக. நி.)

உகளி ukaḷi, n. Gum; பிசின். (நாமதீப.)

உகளு-தல் ukaḷu-, 5 v. intr. To turn upside down; பிறழ்தல். பொருகய லுகளிப் பாய (சீவக.1854).

உகிர்ப்புறவன் ukir-p-puṟavaṉ, n. <உகிர் +புறம். A jewel for nails; நகத்தின்மேல் அணியும் அணிவகை. (S. I. I. ii, 16.)

உகுனை ukuṉai, n. perh. உகு-+நோய். A disease affecting paddy; நெற்பயிருக்குரிய நோய்வகை. (நீலகேசி, 366, உரை.)

உச்சட்டம் uccaṭṭam, n. prob. *ucca.* (W.) 1. Straightness; நேர்மை. 2. Mark, butt; இலக்கு.

உச்சடை uccaṭai, n. <*uccaṭā.* (நாநார்த்த.) 1. Foppishness; இடம்பாசாரம். 2. Garlic; வெள்ளுள்ளி. 3. A kind of grass; வட்டக்கோரை.

உச்சதரு ucca-taru, n. <*ucca*+. Cocoanut tree; தென்னை. (பச். மூ.)

உச்சநிலைநாள் ucca-nilai-nāḷ, n. <id.+ நிலை+. The three *nakṣatras, mirukaciram, cittirai, aviṭṭam;* மிருகசீரம் சித்திரை அவிட்டம் என்ற மூன்று நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 36.)

உச்சம் uccam, n. <*ucca.* 1. One of eight *pāṭaṟ-payaṉ,* q.v.; எண்வகைப் பாடற்பயன்களுள் ஒன்று. (சிலப். 3, 16, உரை.) 2. (Erot.) A mode

of sexual union; புணர்ச்சிவகையுள் ஒன்று. (கொக்கோ. 3, 5.)

உச்சலம் uccalam, n. <uccala. Mind; மனம். (W.)

உச்சன் uccaṉ, n. <உச்சம். (Astrol.) Planet in its exalted sign of the zodiac; இராசி சக்கரத்தில் தன் உச்சநிலையில் நிற்குங் கிரகம். (பஞ்.)

உச்சாயம் uccāyam, n. prob. ut-sāha. Energy; உற்சாகம். Pond.

உச்சாரம் uccāram, n. <ucchrāya. Height; உயர்ச்சி. (யாழ். அக.)

உச்சிசந்தி ucci-canti, n. <உச்சி+. Noon service in the temple; உச்சிக்கால பூசை. (Insc.)

உச்சிமோடு ucci-mōṭu, n. <id.+மேடு. Ridge of a roof; கூரையின் இருபக்கமுஞ் சேருகின்ற மேலிடம். Colloq.

உச்சியணி ucci-y-aṇi, n. <id.+. Pendant of a head-gear; தலைச்சீராவில் உள்ள அலங்காரத்தொங்கல். Pond.

உச்சிரேகை ucci-rēkai, n. <id.+. (Astron.) The great circle passing through a celestial body and the zenith; வானவளைவைக்குறிய பெரிய ரேகை.

உச்சினி uccini, n. The second month; இரண்டாம் மாதம். (பொதி. நி.)

உச்சுவலம் uccuvalam, n. <ujjvala. (யாழ். அக.) 1. Desire; ஆசை. 2. Gold; பொன்.

உச்சேதம் uccētam, n. <uc-chēda. Desolation; நாசம். (நீலகேசி, 657.)

உசகம் ucakam, n. Castor-plant; ஆமணக்கு. (சங். அக.)

உசரம் ucaram, adv. cf. ஓசரம். [T. kosara.] For the sake of, on account of; பொருட்டு. உனக்குசரம் வந்தேன். Loc.

உசல் ucal, n. <uṣas. Dawn; விடியல். (நாமதீப.)

உசற்காலம் ucarkālam, n. <உசல்+. Dawn; விடியற்காலம். (யாழ். அக.)

உசா ucā, n. Pointed-leaved hogweed; மூக்குத்தி. (L.)

உசாவடி ucāvaṭi, n. Subdivision; உட்பிரிவு. (I. M. P. Tj. 894.)

உசி uci, n. cf. ஊசி. Sharpness; கூர்மை. (யாழ். அக.)

உசிதம் ucitam, n. (அக. நி.) 1. Bending; வளைகை. 2. Calling; கூப்பிடுகை. 3. Water; நீர்.

உசிதன் ucitaṉ, n. <ucita. The Pāṇḍya king; பாண்டியன். (இறை. 2, 32, மேற்கோட்பாட்டு.) (அக. நி.)

உசுப்பி ucuppi, n. perh. உசுப்பு-. Faeces; மலம். Tinn.

உசுலாத்திமாடு uculātti-māṭu, n. prob. Gujarat+. A kind of big cow, giving plenty of milk, as from Gujarat; அதிகமாகப் பால் கொடுக்கும் ஒருவகைப் பெரியபசு. Tj.

உசேனி ucēṉi, n. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 104.)

உஞ்சேனைமாகாளம் uñcēṉai-mākāḷam, n. <உஞ்சேனை+Mahā-kāla. The Śiva shrine at Ujjain; உச்சயினியிலுள்ள சிவாலயம். (தேவா. 1221, 8.)

உஞற்று uñaṟṟu, n. <உஞற்று-. Usage; வழக்கு. (அக. நி.)

உட்கழுத்துச்சரடு uṭ-kaḻuttu-c-caraṭu, n. <உள்+கழுத்து+. A close-fitting golden necklace, with a pendant; கழுத்தோடு அணியப்படும் பதக்கஞ் சேர்ந்த பொற்சரடுவகை. Loc.

உட்கொள்(ளு)தல் uṭ-koḷ-, v. tr. <id. +. To collect, as taxes; வரிமுதலியன தண்டுதல். உட்கோளடங்க உட்கொண்டு (S. I. I. vi, 147).

உட்கோயில் uṭ-kōyil, n. <id.+. Inner shrine, the sanctum sanctorum; கோயிற் கர்ப்பக்கிருகம். உட்கோயில் புறக்கோயிலுட்பட (S. I. I. v, 328).

கைக்கரத்தை kai-k-karattai, *n.* <id.+ Fr. *carte.* Rikshaw; ரிக்ஷா வண்டி. (J.)

கைக்கழுத்து kai-k-kaḻuttu, *n.* <id.+. Wrist; முன்கை மணிக்கட்டு. திருக் கைக்கழுத்தின் வளையில் (S. I. I. iv, 81).

கைக்காணம் kai-k-kāṇam, *n.* <id.+. Bribe; இலஞ்சம். *Loc.*

கைக்காளவாய் kai-k-kāḷavāy, *n.* <id.+. A kind of lime kiln; சுண்ணாம்பு சுடுவதற்குக் கிணறுபோலக் கட்டப்பட்ட காளவாய். (கட்டட. நாமா. 9.)

கைக்கிளைமருட்பா kaikkiḷai-maruṭpā, *n.* <கைக்கிளை+. A kind of stanza; மருட்பாவகை. (பாப்பா. 132.)

கைக்குநீர்கொள்(ளு)-தல் kaikku-nīr-koḷ-, *v. intr.* <கை+நீர்+. To urinate, pass urine; சிறுநீர்விடுதல். (யாழ். அக.)

கைக்குள் kai-k-k-uḷ, *adv.* <id.+. Immediately; உடனே. (யாழ். அக.)

கைக்கூச்சம் kai-k-kūccam, *n.* <id.+. Miserliness; உலோபத்தனம். *Loc.*

கைக்கெளிமை kaikkeḷimai, *n.* <id.+. Lightness; இலேசு. (யாழ். அக.)

கைக்கொள்(ளு)-தல் kai-k-koḷ-, *v. tr.* <id.+கொள்-. 1. To undertake; ஏற்று நிர்வகித்தல். மதுராந்தக ப்ரஹ்மாதிராஜர் கைக்கொண்டு ரக்ஷித்தமையில் (S. I. I. vii, 308). 2. To make one's own; உரிமையாக்குதல். தெருவைக் கைக் கொண்டு நின்றார் (சீவக. 457, உரை).

கைக்கோரணிகாட்டு-தல் kai-k-kōraṇi-kāṭṭu-, *v. intr.* <id.+கோரணி+. To be at the point of death; இறக்குந்தருவாயி லிருத்தல். *Loc.*

கைக்கோல் kai-k-kōl, *n.* <id.+. Sceptre; செங்கோல். எழுமேதினிக்கும் கைக்கோல் செலுத்தும் குலோத்துங்கன் (குலோத். கோ. 391).

கைகட்டு kai-kaṭṭu, *n.* <id.+. Batch, as of workmen; கூலியாட்களின் சேர்க்கைக் கூட்டம். *Loc.*

கைகம் kaikam, *n.* *Vakkirāntipāṣāṇam*, a mineral poison; வக்கிராந்திபாஷாணம். (யாழ். அக.)

கைகவி-த்தல் kai-kavi-, *v. tr.* <கை+. 1. To check, as by gesture; கைக்குறியால் அடக்குதல். மற்று அவனைக் கைகவித்து (பாரதவெண். 34, உரை). 2. To protect; அபயமளித்தல். அஞ்சே லென்று கைகவியாய் (திவ். பெரியாழ். 5, 3, 7).

கைகாண்(ணு)-தல் kai-kāṇ-, *v. intr.* <id.+. (யாழ். அக.) 1. To be proved; அத்தாட்சிப்படுதல். 2. To be completed; நிறைவேறுதல்.

கைகுலுக்கு-தல் kai-kulukku-, *v. tr.* <id. +. To shake hands; மகிழ்ச்சிக்குறியாக ஒருவர் கையை ஒருவர் பிடித்து அசைத்தல். *Mod.*

கைகுவி-த்தல் kai-kuvi-, *v. intr.* <id.+. To clap hands and dance; கொம்மைகொட்டுதல். (யாழ். அக.)

கைகூப்பு-தல் kai-kūppu-, *v. intr.* <id. +. See கைதுவி-. (யாழ். அக.)

கைகேசி kaikēci, *n.* See கைவிசி. (சு. வை. ர. 181.)

கைகொடு-த்தல் kai-koṭu-, *v. intr.* <கை +. (யாழ். அக.) 1. See கைதூக்கு-. 2. To strike hands, as in concluding a bargain; கையடித்து உறுதிகூறுதல்.

கைகோவை kai-kōvai, *n.* <id.+. A process in goldsmith's craft; பொற்கொல்லர் தொழில் ஒன்று. (யாழ். அக.)

கைச்சங்கம் kai-c-caṅkam, *n.* prob. id.+. Snail; நாகரவண்டு. (யாழ். அக.)

கைச்சட்டை kai-c-caṭṭai, *n.* <id.+. Gloves; கைக்கவசம். (யாழ். அக.)

கைச்சம்பிரதாயம் kai-c-campiratāyam, *n.* <id.+. Dexterity of hand, skill in manual labour; கைச்சித்திரம். (யாழ். அக.)

கைச்சல் kaiccal, *n.* <கை-. Dislike; வெறுப்பு. (யாழ். அக.)

கைச்சனம் kaiccaṉam, *n.* Bristly trifoliate vine; புளிநறளை. (சித். அக.)

கைச்சி kaicci, *n.* perh. காய்ச்சி. (யாழ். அக.) 1. Coconut shell; half of a dried palmyra nut; சிரட்டை. 2. Snail; ஊமற்கச்சி.

கைச்சாய்ப்பு kai-c-cāyppu, *n.* <கை+. Back, as of a chair; anything to lean on; சாய்மானம். (யாழ். அக.)

கைச்செறி kai-c-ceṟi, *n.* <id.+. Gloves made of leather; தோலினாற் செய்த கையுறை. கார்விற்செறி நாணெறி கைச்செறி கட்டி (பெரியபு. கண்ணப்ப. 60).

கைசகர் kaicakar, *n.* Persons of the Vaṉṉiya caste; வன்னியர். (அக. நி.)

கைசிகன் kaicikaṉ, *n.* <*kaiśika*. The devotee Nampāṭuvāṉ, who sang in the *kaiśika* melody; நம்பாடுவான். (திவ். திருமாலை, 33, வ்யா. பக். 102.)

கைசியம் kaiciyam, *n.* <*kēśa*. Hair; கேசம். (யாழ். அக.)

கைசெய்-தல் kai-cey-, *v. intr.* To make a surgical operation; அறுத்து இரண சிகிச்சை செய்தல். *Nāñ.*

கைடவை kaiṭavai, *n.* <*Kaiṭabhā*. Durgā; துர்க்கை. (யாழ். அக.)

கைத்தல் kaittal, *n.* prob. கை-. A kind of vegetable curry; கறிவகை. கறியல் பொடித்தூவல் கைத்தல் (சரவண. பணவிடு. 274).

கைத்தலைப்பூண்டு kai-t-talai-p-pūṇṭu, *n.* prob. கை+தலை+. A variety of style plant; சிற்றெழுத்தாணிப்பூடு. (சித். அக.)

கைத்தவறு kai-t-tavaṟu, *n.* <id.+. Slip of the hand; கைப்பிழை. *Loc.*

கைத்தளை kai-t-taḷai, *n.* <id.+. Handcuff; கைவிலங்கு. கைத்தளை நீக்கி யென்முன் காட்டு (பட்டினத். பொது. 42).

கைத்தாமணக்கு kaittāmaṇakku, *n.* perh. கைப்பு+. Malabar nut; காட்டாமணி. (சித். அக.)

கைத்தொழும்பு kai-t-toḻumpu, *n.* <கை+. Manual service; கைத்தொண்டு. (யாழ். அக.)

கைதட்டு-தல் kai-taṭṭu-, *v. intr.* <id.+. To attain puberty; to be in menses, as signified by clapping of hands; பூப்பு எய்துதல். *Loc.*

கைதாங்கி kai-tāṅki, *n.* <id.+. Handle; கைப்பிடி. (யாழ். அக.)

கைதாழ்-தல் kai-tāḻ-, *v. intr.* <id.+. To be reduced in circumstances; செல்வநிலை குன்றுதல். *Loc.*

கைதூவாமை kai-tūvāmai, *n.* <id.+. A kind of weapon; படையின் விகற்பம். (அக. நி.)

கைதொடல் kai-toṭal, *n.* <id.+. Marriage; கல்யாணம். (யாழ். அக.)

கைந்நலம் kai-n-nalam, *n.* <id.+. See கைமலம். (யாழ். அக.)

கைந்நிலை kai-n-nilai, *n.* <id.+. Military camp; பாசறை. (தக்கயாகப். பக். 274.)

கைநன்றி kai-naṉṟi, *n.* <id.+. Gratitude; செய்ந்நன்றி. (யாழ். அக.)

கைநாட்டு kai-nāṭṭu, *n.* <id.+. Signature; கையெழுத்து. கோவலனார் கைநாட்டைக் கொற்றவனுந் தான்பார்த்து (கோவ. க. 25).

கைநிமிர்-தல் kai-nimir-, *v. intr.* <id.+. To grow up to adolescence; வயதாகி வளர்தல். கைநிமிர்ந்த பிள்ளை. *Tinn.*

கைநிமிர்த்தாதனம் kai-nimirttātaṉam, *n.* <id.+நிமிர்-+. A yogic posture; யோகாசன வகை. (தத்துவப். 108, உரை.)

கைநெகிழ்-தல் kai-nekiḻ-, *v. tr.* <id.+. To let slip; கைதவற விடுதல். மெள்ள மெள்ளக் கைநெகிழ விட்டாய் (தாயு. பராபர. 334).

கைப்பணம் kai-p-paṇam, *n.* <id.+. Capital; மூலதனம். *Pond.*

கைப்பாணி kai-p-pāṇi, *n.* <id.+*pāṇi*. See கைக்காணம். தானே வரக்கண்டுங் கைப்பாணி வாங்கியும் (தஞ். சரசு. ii, 106).

கைப்பாணிப்பு kai-p-pāṇippu, *n.* <id.+. Estimating the weight of anything by hand; ஒரு பொருளைக் கையில் எடுத்து நிறுத்திடும் மதிப்பு. *Loc.*

கைப்பால் kai-p-pāl, n. <id.+. Milk not milked in the presence of the buyer but brought by the milkman in his can; பால் வாங்குவோர் எதிரில் பசுவைக் கறவாது முன்னரே கறந்து கொண்டுவந்த பால். *Madr.*

கைப்பிச்சை kai-p-piccai, n. <id.+. Handful of grain given in charity at the threshing-floor; களத்தில் தருமமாகக் கொடுக்கும் பிச்சை. (R. T.)

கைப்பிணக்கிடு-தல் kai-p-piṇakkiṭu-, v. intr. <id.+. To hold the hands of another in one's own hands; கைகோத்தல். அவர்களோடே கைப்பிணக்கிடுகை முதலான இவன் செய்யும் விஷமங்கள் வாசாமகோசர மாகையாலே (திவ். பெரியாழ். 2, 7, 4, வ்யா. பக். 395).

கைப்புரட்டு kai-p-puraṭṭu, n. <id.+. 1. Jugglery; சாலவித்தை. (யாழ். அக.) 2. Short loan by way of accommodation; கைமாற்று. *Loc.*

கைப்புடை kai-p-puṭai, n. <id.+. Armoured glove; கைப்புட்டில். *Pond.*

கைப்பொல்லம் kai-p-pollam, n. <id.+. Small piece; சிறு துண்டு. (யாழ். அக.)

கைபிடித்துப்பார்-த்தல் kai-piṭittu-p-pār-, v. tr. <id.+பிடி-+. To feel the pulse of a patient; நாடிபார்த்தல். *Tinn.*

கைம்பெண்சாதி kai-m-peṇ-cāti, n. <கைம்மை+. Widow; கைம்பெண்டாட்டி. *Pond.*

கைம்மாட்டாங்கு kai-m-māṭṭāṅku, n. Mark; தற்குறி. ஆளுடையானும் கைமாட்டாங்கா னமைக்கும் (S. I. I. vii, 406).

கைம்மாய்ச்சி kai-m-māycci, n. <கை+ perh. மாட்டு. Handcuff; கைவிலங்கு. (யாழ். அக.)

கைமலம் kai-malam, n. <id.+மூலம். cf. கைச்சலம். Cow that milks after having lost its calf; கன்றிறந்தபின் பால்கொடுக்கும் மாடு. *Loc.*

கைமறதி kai-maṟati, n. <id.+. See கைத்தவறு. (W.)

கைமாயவித்தை kai-māya-vittai, n. <id. +மாயம்+. Jugglery; செய்யமுடியாத காரியத்தைச் செய்வதாகச் சொல்லிச் செய்யுந் தொழில். *Pond.*

கைமிகு-தல் kai-miku-, v. intr. <id.+. To become uncontrollable; அளவுகடத்தல். (W.)

கைமிடுக்கு kai-miṭukku, n. <id.+. Ability; சாமர்த்தியம். என் கைமிடுக்காலே யறிந்து சொல்லுகிறேனல்லேன் (ரஹஸ்ய. 1351).

கைமுகம் kai-mukam, n. <id.+. (Jaina.) A mode of the passage of the soul when it leaves the body; உடலைவிட்டு உயிர்போதுங் கதிகளுளொன்று. (சீவக. 948, உரை.)

கைமுறை kai-muṟai, n. <id.+. Dance; நிர்த்தனம். நின்று பண்ணுங் கைம்முறை தப்பா (சரவண. பணவிடு. 417).

கையழி-தல் kai-y-aḻi-, v. intr. <id.+. To be disabled; to be broken-hearted; செயலறுதல். கையழிந்து புலவர் வாடிய பசியராகி (புறநா. 240).

கையளிப்பு kai-y-aḷippu, n. <id.+. Handing over, as charge or possession; பிறரிடம் ஒப்பிக்கை. *Pond.*

கையற kai-y-aṟa, adv. <id.+அறு-. Utterly; முற்றும். இவன் கையற நசிக்கின்ற காலத்து (நீலகேசி, 187, உரை).

கையறம் kai-y-aṟam, n. <id.+. Great distress; பெருந்துன்பம். வாளமர்கட் கையறமாம் (பாரதவெண். 176).

கையறுகிளவி kaiyaṟu-kiḷavi, n. <கையிறு-+. (Akap.) Theme describing the obstacles to the hero visiting the heroine; தாய்துஞ்சாமை நாய்துஞ்சாமை முதலாய காப்புமிகுதி சொல்லி வரவுவிலக்குதலைக் கூறும் அகத்துறை. (களவியற். 99.)

கையாள் kai-y-āḷ, n. <கை+. Helping hand; உதவிசெய்வோன். *Colloq.*

கையாளி-த்தல் kai-y-āḷi-, v. tr. <id.+ அளி-. To hand over, as charge or possession; ஒப்படைத்தல். கிராமத்தார்வசம் கையாளிக்கையில் (T. A. S. v, 150).

கையாறு kai-y-āṟu, n. <id.+. Field channel; கண்ணிவாய்க்கால். காற்செய்யும் இதிலுக்குப்படும் கையாற்றுக்கும் எல்லையாவது (S. I. I. vi, 10).

கையிருப்பு kai-y-iruppu, n. prob. id.+. Red Indian water-lily; செங்குவளை. (சித். அக.)

கையீடு kai-y-īṭu, n. <id.+இடு-. Receipt for remittance; பணஞ்செலுத்துகை. பதினெட்டாவது இயதி கையீடு ஒன்றினுல் காசு (S. I. I. iv, 134).

கையுருவிச்சுவர் kai-y-uruvi-c-cuvar, n. <id.+உருவு+. Parapet wall; கைப்பிடிச்சுவர். (Pudu. Insc. 213.)

கையேற்பு kai-y-ēṟpu, n. <id.+. A tax; வரிவகை. (I. M. P. Cg. 524.)

கையொழுக்கம் kai-y-oḻukkam, n. <id. +. Unvarying course of conduct; perseverance; வேறுபாடின்றி ஒரே மாதிரியாக வொழுகுந் தன்மை. (W.)

கைர் kair, adj. <Arab. khair. Good; நல்ல. Muham.

கைரவாவிகம் kairavāvikam, n. Flax; புளிச்சைக்கீரை. (சித். அக.)

கைரவி kairavi, n. (சித். அக.) 1. Fenugreek; வெந்தயம். 2. Moon-flower; சந்திரகாந்தி.

கைராத்து kairāttu, n. <Arab. khairāt. Beggar, a term of abuse; ஒரு வசைமொழி. Madr.

கைராதம் kairātam, n. Chiretta; நில வேம்பு. (சித். அக.)

கைரிகம் kairikam, n. Purple stramony; பொன்னூமத்தை. (சித். அக.)

கைரியத் kairiyat, n. <Arab. kaifiyat. Welfare; சௌக்கியம். Loc.

கைரொக்கம் kai-rokkam, n. <கை +. Ready money; கையிலுள்ள முதல். Colloq.

கைவர்த்தர் kai-varttar, n. prob. id. +. Bearers of palanquins, etc.; பல்லக்கு முதலியன தூக்குவோர். (ஈடு.)

கைவரப்பு kai-varappu, n. <id. +. Temporary earthen bank; தாற்காலிகமாக இட்ட சிறுமண்ணணை. Loc.

கைவளப்பம் kai-vaḷappam, n. <id. +. Bounty; கொடை. கைவளப்பத்தை யுடைய தலைவன் (பெரும்பாண். 420, உரை).

கைவளர்-தல் kai-vaḷar-, v. intr. <id. +. To spread; பரவுதல். சேனைபொடு கைவளர்ந்து சென்றது (பு. வெ. 6, 5). கன்னிசூழ் நாட்டிற் கய லாணை கைவளர (S. I. I. v, 155).

கைவறுண்டி kaivaṟuṇṭi, n. A plant; சீன மிளகாய். (சித். அக.)

கைவாட்சம்பா kaivāṭ-campā, n. prob. கை + வாள் +. A kind of paddy; நெல்வகை. (யாழ். அக.)

கைவாரம் kai-vāram, n. <id. +. Cultivator's share of the produce for his tilling and manuring the soil; சாதுபடியில் செய்கைக்குரிய பங்கு. (யாழ். அக.)

கைவாளை kai-vāḷai, n. <id. +. A kind of saree; புடைவைவகை. (யாழ். அக.)

கைவிதை kai-vitai, n. prob. id. +. Fenugreek; வெந்தயம். (சித். அக.)

கைவிரிதவம் kai-viri-tavam, n. prob. id. + விரி- +. A kind of prickly pear; சேந்நாகதாளி. (சித். அக.)

கைவிரைச்சம்பா kai-virai-c-campā, n. prob. id. + விரை +. A species of campā paddy; கைவளச்சம்பா.

கைவிலை kai-vilai, n. <id. +. Current price; அப்போதை விலை. பிடாகைதோறும் கை விலைப்படிக்கு நாடோறும் தரவெழுதவும் (S. I. I. viii, 139).

கைவிழுது kai-viḻutu, n. <id. +. Hand lead-line, used for sounding small depths in the sea; கடலில் ஆழங்குறைவாயுள்ள இடங்களில் ஆழத்தை அறிய உதவுங் கயிறு. (M. Navi. 71.)

கைவிளி kai-viḷi, n. <id. +. Calling one's attention by clapping hands or making signs; கைதட்டியேனும் சமிஞ்ஞைசெய்தேனும் அழைக்கை. (பெரியபு. கண்ணப்ப. 72.)

கைவினைக்குடி kaivinai-k-kuṭi, n. <கை வினை +. Artisan class; கைத்தொழில்வேலை செய் யும் இனத்தார். உழவுகுடி கைவினைக்குடி காசாயக் குடியிற் கொள்ளும் (S. I. I. v, 95).

கைவீச்சன் kai-vīccaṉ, n. <கை +. A sweet cake; பணிகாரவகை. (யாழ். அக.)

கைவீச்சு kai-vīccu, n. <id. +. Blow, stroke with the hand; அடி. (யாழ். அக.)

கைவீசி kaivīci, n. A herb, Eclipta prostrata; கையாந்தகரை. (சு. வை. ர. 181.)

கைவீடு kai-vīṭu, n. <கை + விடு-. Desertion, forsaking; விட்டு நீங்குகை. (குறள், 799, உரை.)

கைவேட்டு kai-vēṭṭu, n. <id. +. Small mortars set on a pole and used in pyrotechny; இடிகொம்பு. Loc.

கொ

கொக்கரி kokkari, n. cf. கொக்கரை. A kind of musical instrument; வாத்தியவகை. கொக்கரி இடும்பிடி கொட்ட (வள்ளி. கதை. Ms.).

கொக்காமணி kokkāmaṇi, n. cf. கொக்கு மணி. A kind of bead; மணிவகை. வக்காமணி கொக்காமணி வாங்கலையோ ஆயாளோ.

கொக்கான் kokkāṉ, n. A tree; மரவகை. (யாழ். அக.)

கொக்குக்காலி kokkukkāli, *n.* cf. கொக்கு. Mango; மாமரம். (சித். அக.)

கொக்குச்சத்தகம் kokku-c-cattakam, *n.* <id.+. Hook-shaped blade attached to a pole; அலக்கரிவாள். (J.)

கொக்குச்சம்பா kokku-c-campā, *n.* A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (Nels.)

கொக்குடம் kokkuṭam, *n.* Strychnine tree; எட்டி. (சித். அக.)

கொக்குமணி kokku-maṇi, *n.* See கோக்காமணி. வக்காமணி கொக்குமணிகளையும் (மதி. களா. ii, 139).

கொக்குமேனி kokkumēṉi, *n.* Blinding tree; தில்லைமரம். (சித். அக.)

கொங்கணிப்பூண்டு koṅkaṇi-p-pūṇṭu, *n.* A kind of weed; பயிரின் களையாகிய பூடுவகை. *Loc.*

கொங்கணியான் koṅkaṇiyāṉ, *n.* A fish; மீன்வகை. (யாழ். அக.)

கொங்களம் koṅkaḷam, *n.* <கொங்கணம். Language of the Konkan country; கொங்கண பாஷை. (யாழ். அக.)

கொங்காடை koṅkāṭai, *n.* <கொங்கு+. A head-gear peculiar to the people of the *koṅku-nāṭu*; கொங்காது தலைக்கட்டு வகை. (எங்களூர், 74.)

கொங்காரமாசுக்கீரை koṅkāramācu-k-kīrai, *n.* A herb; பிண்ணாக்குக்கீரை. (சித். அக.)

கொங்கான் koṅkāṉ, *n.* <கொங்கு. Ignorant person; அறிவிலி. *Tp.*

கொங்குமுளை koṅku-muḷai, *n.* <id.+. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 132.)

கொங்குரை koṅkurai, *n.* <id.+. Gold, as obtained in Koṅku country; பொன். கொங்குரை யாற்றிலிட்டு (மதுரைக்க. 74).

கொங்குவேண்மாக்கதை koṅku-vēṇ-mā-k-katai, *n.* <id.+வேள்+மா+. The epic poem Peruṅkatai; பெருங்கதை. கொங்குவேண்மாக் கதை முதலியவற்றோடு . . . . ஒன்றாக்குவர் (இலக். கொத். பக். 14).

கொச்சங்காய் koccaṅkāy, *n.* Immature cocoanut; குரும்பைத் தேங்காய். *Nāñ.*

கொசலி kocali, *n.* See கொசவேலை. *Tp.*

கொசவேலை koca-vēlai, *n.* perh. கொசலி +. Cornice work; கட்டட எழுதகவேலை. *Loc.*

கொஞ்சக்குலம் koñca-k-kulam, *n.* <கொஞ்சம்+. Inferior caste; தாழ்ந்தகுலம். கொஞ்சக்குல மல்லவோ (வள்ளி. கதை. Ms.).

கொட்டகச்சி koṭṭakacci, *n.* cf. கொட்டங்காய்ச்சி. Cocoanut shell; சிரட்டை. (யாழ். அக.)

கொட்டகம் koṭṭakam, *n.* Toy house, built by children; சிற்றில். ஊரில் பெண்களாய்க் கொட்டகமெடுத்து விளையாடித் திரிகிறவர்களுடைய (திவ். பெரியாழ். 1, 2, 9, வ்யா. பக். 48).

கொட்டடைப்பன் koṭṭaṭaippaṉ, *n.* perh. கொட்டு+. A disease of cattle; மாட்டுநோய் வகை. (பெரியமாட். 62.)

கொட்டம் koṭṭam, *n.* House; வீடு. ஒரு கொட்டம் ஒழிச்சுக் குடுத்திருங்கோ (எங்களூர், 47).

கொட்டாகை koṭṭākai, *n.* cf. கொட்டகை. Shed; கொட்டில். (யாழ். அக.)

கொட்டாங்கச்சித்தாட்டுப்பத்திரி koṭṭāṅkacci-t-tāṭṭu-p-pattiri, *n.* <கொட்டங்கச்சி +. A kind of saree; சேலைவகை. *Loc.*

கொட்டாட்டுப்பாட்டு koṭṭāṭṭu-p-pāṭṭu, *n.* <கொட்டு+ஆட்டு+. Dancing and music; நிருத்த கீத வாத்தியங்கள். (பத்துப். பக். 107.)

கொட்டாப்பு koṭṭāppu, *n.* <கொட்டு-+. Mallet; கொட்டாப்புளி. (நாநார்த்த. 1048.)

கொட்டான் koṭṭāṉ, *n.* cf. கொட்டை. Spinning cotton; நூற்பதற்குத் தயாரித்த பஞ்சு. *Tinn.*

கொட்டியப்பூச்சி koṭṭiya-p-pūcci, *n.* A kind of worm, in crops; பயிரையழிக்கும் ஒரு வகைப்புழு. *Loc.*

கொட்டு-தல் koṭṭu-, 5 *v. tr.* To wink; கண் இமைத்தல். கொட்டாது பார்க்கிறான்.

கொட்டுச்செத்தல் koṭṭu-c-cettal, *n.* prob. கொட்டை+. Dried cocoanut; அறக்காய்ந்த தேங்காய். (யாழ். அக.)

கொட்டுத்தட்டு koṭṭu-t-taṭṭu, *n.* <கொட்டு-+. The central part of the *valantarai* of a *miruṭaṅkam*; மிருதங்கத்திலுள்ள வலந்தரையின் நடுப்பாகம். (கலைமகள், xii, 400.)

கொட்டுப்புரி koṭṭu-p-puri, *n.* prob. கூட்டு-+. A small broom-stick made of harialli grass; சிறுதுடைப்பவகை. *Tinn.*

கொட்டுவான் koṭṭuvāṉ, *n.* <கொட்டு-. Hoe with a long handle; புற்செதுக்குங் கருவி வகை. *Loc.*

கொட்டுவேலை koṭṭu-vēlai, *n.* prob. id.+. Print on cloth; துணியில் அச்சடிக்கை. (சிற்பரத். முன். பக். 9.)

கொட்டை koṭṭai, *n.* A kind of paddy; நெல்வகை. (தண். கன. பள். பக். 62.)

கொட்டைக்கூலி koṭṭai-k-kūli, *n.* prob. கொட்டை+. A tax; வரிவகை. (S. I. I. viii, 139.)

கொட்டைப்பருந்து koṭṭai-p-paruntu, *n.* perh. id.+. Black kite; பருந்துவகை. *Loc.*

கொட்டைப்பாக்குத்தலைப்பா koṭṭai-p-pākku-t-talaippā, *n.* <கொட்டைப்பாக்கு+. A kind of turban; குஞ்சுத்தலைப்பா. (யாழ். அக.)

கொட்டைமுதல் koṭṭai-mutal, *n.* <கொட்டை+. (யாழ். அக.) 1. Seed grain; விதைமுதல். 2. Capital in a business; வியாபார முதல்.

கொட்டையரைஞாண் koṭṭai-y-araiñāṉ, *n.* <id.+. A child's ornament; குழந்தையணி வகை. (பெரியபு. சிறுத். 60.)

கொடரி koṭari, *n.* cf. தொடரி. Style plant; எழுத்தாணிப்பூடு. (சித். அக.)

கொடிக்கடமை koṭi-k-kaṭamai, *n.* prob. கொடி+. A tax; வரிவகை. (S. I. I. v, 330.)

கொடிக்கத்தரி koṭi-k-kattari, *n.* <id.+. A variety of brinjal; கத்தரிவகை. (சித். அக.)

கொடிக்கருணை koṭi-k-karuṇai, *n.* <id. +. A tuberous-rooted plant; கருணைவகை. *Loc.*

கொடிச்சி koṭicci, *n.* <id. Excreta of termites, in an ant-hill; புற்றுஞ்சோறு. (யாழ். அக.)

கொடிச்சிங்கேரி koṭi-c-ciṅkēri, *n.* <id.+. Indian birthwort; கருடக்கொடி. (சித். அக.)

கொடிச்சித்தாமரை koṭicci-t-tāmarai, *n.* <id.+. Blue nelumbo; நீலத்தாமரை. (சித். அக.)

கொடிசை koṭicai, *n.* perh. கொடிறு. Cheek; கன்னம். (யாழ். அக.)

கொடித்தடக்கி koṭi-t-taṭakki, *n.* <கொடி +தடுக்கி. Small projection near the toes of a dog; நாய்க்காலின் மேல் விரல். (யாழ். அக.)

கொடித்திருப்பாடகம் koṭi-t-tiruppāṭakam, *n.* <id.+. A woman's foot-ornament; மகளிர் காலணிவகை. (W.)

கொடிதிருப்பு-தல் koṭi-tiruppu-, *v. intr.* <id.+. To give a girl in marriage to a member of a family from which a girl has been taken in marriage; பெண்கொண்ட குடும்பத்தில் பெண்கொடுத்தல். *Brāh.*

கொடிநாரத்தன் koṭi-nārattaṉ, *n.* <id. +. See கொடிநாரத்தை. (சு. வை. ர. 166.)

கொடிநாரத்தை koṭi-nārattai, *n.* <id.+. A kind of citron; நாரத்தைவகை. (சித். அக.)

கொடிப்புடைவை koṭi-p-puṭaivai, *n.* <id.+. New cloth which relatives of a widow place on a clothes-line for use during the first year of her widowhood; விதவையானவளுக்கு முதல் வருஷ உபயோகத்திற்காகச் சுற்றத்தார் கொடியில் இடும் புதுச்சீலை. *Brāh.*

கொடிப்பூகம் koṭi-p-pūkam, *n.* <id.+. Cowslip creeper; கொடிச்சம்பங்கி. (சித். அக.)

கொடிபோடு-தல் koṭi-pōṭu-, *v. intr.* <id.+. To devise ways and means of appropriating; தன்னதாக்க வழிபண்ணுதல். (யாழ். அக.)

கொடிமுல்லை koṭi-mullai, *n.* <id.+. Eared jasmine; ஊசிமுல்லை. (சித். அக.)

கொடியாளன் koṭiyāḷaṉ, *n.* cf. கொடிய வீரன். *Kōṭācori-p-pāṣāṇam*, a prepared arsenic; கோடாசொரிப்பாஷாணம். (யாழ். அக.)

கொடியிறக்கம் koṭi-y-iṟakkam, *n.* <கொடி+. Concluding, finishing; முடிவுபண்ணுகை. (யாழ். அக.)

கொடுக்கன் koṭukkaṉ, *n.* [T. *koḍuku.*] Son; மகன். வயிரமேகனூர் கொடுக்கன் சிற்றண் புலியூர் நாடன் (S. I. I. viii, 32).

கொடுக்கு-தல் koṭukku-, 5 *v. tr.* cf. கொடுகு-. To cause one to shudder; நடுக்குதல். *Tinn.*

கொடுகிலை koṭukilai, *n.* Common cherry nutmeg; நதுதலிலை. (L.)

கொடுங்கரி koṭuṅ-kari, *n.* <கொடு-மை+. False witness; பொய்ச்சாட்சி. (யாழ். அக.)

கொடுங்காறல் koṭuṅ-kāṟal, *n.* <id.+. Horse-mackerel; சுதுப்புநாங்காறல். *Loc.*

கொடுங்கொடிச்சிலை koṭuṅ-koṭi-c-cilai, *n.* <id.+. cf. கொடுங்கோபிச்சிலை. Yellow ochre; மஞ்சட்கல். (யாழ். அக.)

கொடுநாவி koṭu-nāvi, *n.* <id.+. Ceylon leadwort; கொடுவேலி. (சித். அக.)

கொடுநோய் koṭu-nōy, *n.* <id.+. A disease of cattle; மாட்டுநோய்வகை. (பெரியமாட். 117.)

கொடுப்பரளை koṭupparaḷai, *n.* A disease of the mouth; வாய்நோய்வகை. (பரராச. i, 219.)

கொடுப்பனவு koṭuppaṉavu, *n.* <கொடு-. See கொடுப்பனை. (யாழ். அக.)

கொடுப்பனை koṭuppaṉai, *n.* <id. Giving a girl in marriage; பெண் கொடுக்கை. *Loc.*

கொடுப்பினை koṭuppiṉai, *n.* <id. See கொடுப்பனை. கொள்வினை கொடுப்பினை. *Loc.*

கொடுமுறுக்கு koṭu-muṟukku, *n.* <கொடுமை+. Small fibrous risings on the smooth surface of a string; சிம்பு. (பத்துப். பக். 607, கீழ்க்குறிப்பு.)

கொடுவிழுதை koṭuviḻutai, *n.* A kind of paddy; பெருநெல்வகை. *Loc.*

கொண்டக்கரை koṇṭa-k-karai, *n.* <கொண்டம்+. Small bund; சிறுகரை. *Tp.*

கொண்டக்கிரி koṇṭakkiri, *n.* cf. கொண்டைக்கிரி. (Mus.) A melody-type; பண்வகை. (யாழ். அக.)

கொண்டபாரம் koṇṭa-pāram, *n.* <கொள்-+. Full load; நிறைபாரம். (யாழ். அக.)

கொண்டம் koṇṭam, *n.* prob. குண்டம். Dam; அணை. *Tp.*

கொண்டல்மிதித்தல் koṇṭal-mitittal, *n.* perh. கொந்தழல்+. Fire-walking; தீமிதிக்கை. (யாழ். அக.)

கொண்டிப்பணம் koṇṭi-p-paṇam, *n.* <கொண்டி+. Fine imposed for grazing cattle in prohibited areas; ஆடுமாடுகள் பட்டிமேய்தலுக்கிடும் தண்டம். (W.)

கொண்டியம் koṇṭiyam, *n.* perh. கொள்-. Falsehood, lie; பொய்ச்சொல். (நாநார்த்த.)

கொண்டுதலைக்கழிதல் koṇṭu-talai-k-kaḻital, *n.* <id.+. (Akap.) Theme describing the elopement of the hero with his lady-love; தலைவியைத் தலைவன் உடன்கொண்டுபோதலைக் கூறுந் துறை. (தொல். பொ. பக். 64.)

கொண்டை koṇṭai, *n.* Hump; திமில். *Tj.*

கொண்டைக்கடலை koṇṭai-k-kaṭalai, *n.* <கொண்டை+. Bengal gram; கடலைவகை. *Loc.*

கொண்டைக்கோல் koṇṭai-k-kōl, *n.* <id.+. Boundary post; எல்லை குறிக்குங் கோல். அளக்கும் ப்ரதேசத்துக்குக் கொண்டைக்கோல் நாட்டுகிறூர் (திவ். திருநெடுந். 5, வ்யா.).

கொண்டைகிருட்டி koṇṭai-kiruṭṭi, *n.* <id.+. Hoopoe, a crested bird; கொண்டலாத்தி. (யாழ். அக.)

கொண்டோசனை koṇṭōcaṉai, *n.* A plant; பூடுவகை. தட்டிலாக் கொண்டோசனைக் கிழங்கு (தெய்வச். விறலிவிடு. 407).

கொண்டோடி koṇṭōṭi, *n.* <கொள்-+ஓடு-. Rope fastening the pole to the beam of the picotta; ஏற்றத்தில் துலாவையும் அதன் கோடியையும் பிணிக்குங் கயிறு. (யாழ். அக.)

கொணமணப்பிள்ளை koṇamaṇa-p-piḷḷai, *n.* <குழமணம்+. A marriage ceremony in which the bride presents the bridegroom with a doll representing a child, which he returns back to her; திருமணச் சடங்கில் பிரதிமை யொன்றைப் பிள்ளையாகப் பாவித்துப் பெண் மாப்பிள்ளையிடங் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளுஞ் சடங்கு. *Loc.*

கொத்தாங்கொளுஞ்சி kottāṅ-koḷuñci, *n.* prob. கொற்றான்+. A plant; கொழிஞ்சிவகை. (பெரியமாட். 113.)

கொத்தான் kottāṉ, *n.* Snail; நத்தை. *Pond.*

கொத்துக்காரன் kottu-k-kāraṉ, *n.* <கொத்து+. 1. Mason; bricklayer; கொத்துவேலை செய்பவன். 2. Stone mason; கல்வேலை செய்பவன்.

கொத்துக்காரனுளி kottu-k-kāraṉ-uḷi, *n.* <id.+காரன்+. Gouge; உளிவகை. *Pond.*

கொத்துக்கீரை kottu-k-kīrai *n.* prob. id. +. A kind of dish; கறிவகை. *Nāñ.*

கொத்துச்சட்டி kottu-c-caṭṭi, *n.* <கொத்து+. A cluster of cups, used in serving food; பாத்திரவகை. *Colloq.*

கொத்துச்சரம் kottu-c-caram, *n.* <id. +. Strings of golden beads; பொன்மணியாலாகிய மாலை. (W.)

கொத்துப்பாசி kottu-p-pāci, *n.* <id.+. A kind of moss; பாசிவகையுளொன்று. *Loc.*

கொத்துமணி kottu-maṇi, *n.* <id.+. Cluster of bells; பலமணிகள் சேர்ந்த மணிக்கொத்து. *Loc.*

கொத்துளி kottuḷi, *n.* <கொத்து-+. A kind of chisel; உளிவகை. *Pond.*

கொதி koti, *n.* <கொதி-. Food-offering to the deity; பிரசாதம். (S. I. I. vii, 22.)

கொதியெண்ணி koti-y-eṇṇi, *n.* <கொதி- +. One who waits for meals; போசனத்துக்குக் காத்திருப்போன். (யாழ். அக.)

கொதுகுலம் kotukulam, *n.* perh. *kautūhala.* Lisping; மழலை கொஞ்சுகை. (யாழ். அக.)

கொதுகுலி-த்தல் kotukuli-, *11 v. intr.* <கொதுகுலம். To melt; குழைந்துருகுதல். (யாழ். அக.)

கொந்தளம் kontaḷam, *n.* perh. *kuntala.* An ear-ornament; காதணிவகை. *காதுக்குக் கொந்தளம் அணிந்து* (தமிழ்நா. 64).

கொந்திக்காய் kontikkāy, *n.* Throat; மிடறு. *Loc.*

கொந்து kontu, *n.* Pollen; பூந்தாது. *கொந்து சொரிவன கொன்றையே* (தக்கயாகப். 62).

கொப்பறைவெட்டு kopparai-veṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 136.)

கொப்பு koppu, *n.* cf. கப்பு. A reddish colour; ஒருவகைச் சிவப்பு. (விறலிவிடு. 713.)

கொப்புவர்ணம் koppu-varṇam, *n.* <கொப்பு+. A kind of saree; சேலைவகை. *கொப்புவர்ணமாய்த்தீர்ந்த கொப்புவர்ணம்* (விறலிவிடு. 713).

கொப்புஜம்புல் koppu-jampul, *n.* prob. id.+. A kind of ear-ornament; காதணிவகை. (தாசில்தார்நா. பக். 40.)

கொம்பறை komparai, *n.* A disease in cattle; மாட்டுநோய்வகை. (தஞ். சர. iii, 119.)

கொம்பன் kompaṉ, *n.* <கொம்பு. A kind of fish; மீன்வகை. (யாழ். அக.)

கொம்பாபிள்ளை kompā-piḷḷai, *n.* <id.+ஆ-+. One born in an aristocratic family; அதிகாரக்குடியிற் பிறந்தோன். (யாழ். அக.)

கொம்பாஸ்பெட்டி kompās-peṭṭi, *n.* <E. *compass*+. Box of drawing instruments; படமுதலியன எழுதுதற் குதவுங் கருவிகளையுடைய சிறுபெட்டி. *Mod.*

கொம்பு¹-தல் kompu-, *5 v. intr.* To try; முயலுதல். (யாழ். அக.)

கொம்பு²-தல் kompu-, *5 v. intr.* cf. செம்பு-. To get angry; கோபித்தல். *ஈசன்மேற் கொம்பி* (பஞ்ச. திருமுக. 107).

கொம்மடி kommaṭi, *n.* A kind of water-melon; கொம்மட்டிவகை. *சிற்றவரைக் கொம்மடிகள்* (தேசிகப். 18, 4).

கொய்-தல் koy-, *11 v. tr.* To take away; கவர்ந்துகொள்ளுதல். (சூடு, 1, 4, 7.)

கொய்ச்சாளை koy-c-cāḷai, *n.* <கொய்+. A kind of fish; மீன்வகை. (யாழ். அக.)

கொய்ப்பசிரிக்கீரை koy-p-paciri-k-kīrai, *n.* <கொய்-+பசளை+. Seaside Indian saltwort; நீருமரி. (L.)

கொய்மீன் koy-mīṉ, *n.* <கொய்+. A kind of fish; மீன்வகை. *கொய்மீன் செப்பலி* (குருகூர்ப். 20).

கொய்யா koyyā, *n.* prob. T. *koyya.* A weaving instrument; நெய்வார் கருவிவகை. (யாழ். அக.)

கொய்யான் koyyāṉ, *n.* cf. கோய். Earthen jar; மண்ணாலான பரணி. (யாழ். அக.)

கொய்யோ koyyō, *int.* An exclamation of victory; வெற்றிக்குறிப்புச் சொல். (யாழ். அக.)

கொர்னிசு corṉicu, *n.* <E. Cornice; எழுதகவேலை. *Mod.*

கொரக்கை korakkai, *n.* [T. *guraka.*] Snoring; குறட்டை. (நீலகேசி, 375, உரை.)

கொரிகாமரம் korikā-maram, *n.* prob. கொறுக்கா+. Manilla tamarind; கொறுக்காப்புளி. (சித். அக.)

கொருவோடு koru-v-ōṭu, *n.* perh. குறு-மை +. Flat tile; தட்டோடு. *Madr.*

கொல் kol, *n.* 1. Iron; இரும்பு. *மின் வெள்ளி பொன் கொல்லெனச் சொல்லும்* (தக்கயாகப். 550). 2. Metal; உலோகம். (நாமதீப. 318.)

கொல்லன் kollaṉ, *n.* <T. *golla.* Custodian of treasure; கஜானுக்காரன். (P. T. L.)

கொல்லிச்சி kollicci, *n.* Fem. of கொல்லன். Woman of the blacksmith caste; கொல்லச் சாதிப் பெண். (யாழ். அக.)

கொலைவாளை kolai-vāḷai, *n.* perh. குலை+வாழை. A kind of paddy; ஒருவகை நெல். *Tinn.*

கொவ்வைக்கனிமணி kovvai-k-kaṉi-maṇi, *n.* <கொவ்வை+கனி+. A kind of precious stone; கோவரங்கப்பதுமராகம். (யாழ். அக.)

கொழுக்கொடு-த்தல் koḻu-k-koṭu-, *v. intr.* <கொழு-+. 1. To be indulgent; இளக்காரங் கொடுத்தல். *நீ நியமியாமல் கொழுக்கொடுத்தன்றோ இப்படி இவன் தீம்பிலே தகணேற வேண்டிற்று* (திவ். பெரியாழ். 2, 9, 2, வ்யா. பக். 454). 2. To exalt; பெருமையுண்டாக்குதல். (திவ். பெரியாழ். 2, 9, 2, ஜீ.)

கொழுகொழுப்பு kolukoluppu, *n.* <கொழு-+. *Loc.* 1. Luxuriance; செழுமை. 2. Flabbiness; வழுற்சதை.

கொழுஞ்சி koluñci, *n.* *Nāy-vēlai*, a sticky plant; நாய்வேளை. (சித். அக.)

கொழுந்திலை koluntilai, *n.* <கொழுந்து+. Tea leaf; தேயிலை. (சித். அக.)

கொழுந்துகிள்ளி koluntu-killi, *n.* <id.+. Mischief-maker; மித்திரபேதஞ் செய்பவன். *Loc.*

கொழுந்தொட்டி kolun-totti, *n.* <கொழு-மை+. A plant; பூடுவகை. (யாழ். அக.)

கொழுப்புமடி koluppu-mati, *n.* <கொழுப்பு+. Fleshy udder of a cow, not yielding milk; பாலின்றித் தசை நிறைந்த மாட்டுமடி.

கொழுவாரம் kolu-vāram, *n.* <கொழு+. Cultivator's share of the produce; குடியானவனுக்குரிய வாரம். மேல்வாரமீக்கிக் கொழுவாரத்தால் பூசைநடக்கும்படி (S. I. I. viii, 234).

கொள்வரி kol-vari, *n.* <கொள்-+. A tax in kind; நெல்லாயவகை. (S. I. I. iv, 195.)

கொளமா kolamā, *n.* Gum lac tree; கும்பாதிரி. (L.)

கொளுகொளு-த்தல் kolukolu-, 11 *v. intr.* To be soft or loose; கொளகொளத்தல். (யாழ். அக.)

கொளுசு kolucu, *n.* Knot; குழைச்சு. (யாழ். அக.)

கொளுமுதல் kolu-mutal, *n.* <கொள்-+. cf. கொழுமீதி. Owner's share of the produce of a field after deducting the Government dues; நிலவருமானத்தில் சர்க்கார் தீர்வைபோகச் சுவான்தார் அடையும் பகுதி. (யாழ். அக.)

கொற்றி korri, *n.* Cow having a young calf; இளங்கன்றுப் பசு. (யாழ். அக.)

கொற்று korru, *n.* Wages in kind; தானியமாகப்பெறுங் கூலி. பதினுற்கல நெல்லு கொற்று பெறுவதாகவும் (S. I. I. v, 302).

கொற்றை korrai, *n.* Blot, blemish, defect; கோத்தை. ப்ரேமத்துக்குக் கொற்றையாகையாலே (திவ். பெரியாழ். 2, 4, 1, வ்யா. பக். 310, அரும்.).

கொறுகொறு-த்தல் korukoru-, 11 *v. intr.* To snore; குறட்டைவிடுதல். (யாழ். அக.)

கொறுகொறுப்பு koru-koruppu, *n.* <கொறுகொறு-. Pestering; அலட்டுகை. (யாழ். அக.)

கொறுவாய் koruvāy, *n.* <கறுவாய். cf. ஒறுவாய். Broken rim or edge; உடைந்த விளிம்பு. *Tinn.*

கொன்னி-த்தல் konni-, 5 *v. intr.* <கொன்னு-. To stammer; திக்குதல். (யாழ். அக.)

கொன்னிப்பு konnippu, *n.* A disease; நோய்வகை. (பராச. i, 236.)

கொன்னு-தல் konnu-, 5 *v. intr.* To become famous; பெருமையுறுதல். (தணிகைப்பு. நாட். 140.)

கொன்னை konnai, *n.* prob. கொன். Contempt; இகழ்ச்சி. கத்துருதாசியாகிக் கொன்னையுற் றிடுதி (வேதாரணி. சேடன். 7).

கொன்னைத்தெங்கு konnai-t-tenku, *n.* <கொன்னை+. Barren cocoanut palm; காய்க்காத தெங்கு. *Nāñ.*

கோ

கோகபந்துகம் kōkapantukam, *n.* <*koka-bandhu.* Sun-flower; சூரியகாந்தி. (சித். அக.)

கோகம் kōkam, *n.* <*kōka.* A variety of date-palm; சிற்றீந்து. (நாநார்த்த.)

கோகருணம் kōkarunam, *n.* <*go-karṇa.* (நாநார்த்த.) 1. Span from tip of ring finger to tip of thumb; மோதிரவிரற் சாண். 2. A kind of snake; பாம்புவகை. 3. A kind of antelope; மான்வகை.

கோகலிவாழை kōkalivālai, *n.* Wild jasmine; காட்டுமல்லிகை. (சித். அக.)

கோகன்னம் kō-kannam, *n.* <கோ+. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. கோகன்னங் கேசரமேற் பாதம் (தத்துவப். 108).

கோகிலப்பிரிய kōkila-p-piriya, *n.* <*kōkila-priya.* (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

கோகிலவீசம் kōkilavīcam, *n.* Manjeet; மஞ்சிட்டி. (சித். அக.)

கோகிலானந்தம் kōkilānantam, *n.* <கோகிலம்+. Mango tree; மாமரம். (மூ. அ.)

கோகுலம்[1] kō-kulam, *n.* <கோ+. Temple; கோயில். (நாநார்த்த.)

கோகுலம்[2] kōkulam, *n.* <*gō-kula.* (நாநார்த்த.) 1. Cattleshed; கொட்டில். 2. Herd of cows; பசுக்கூட்டம்.

கோகோசனம் kōkōcanam, *n.* Bezoar; கோரோசனை. (மூ. அ.)

கோங்கந்தட்டம் kōṅkan-taṭṭam, n. <கோங்கு+. A plate made like *kōṅku* flower; கோங்கம்பூ வடிவமாகச் செய்யப்பட்ட தாம்பாளம். *Loc.*

கோச்செய்-தல் kō-c-cey-, v. intr. <கோ +. To rule; அதிகாரஞ் செய்தல். *ஐவர் வந்து கோச்செய்து சமைக்க* (தேவா. 997, 6).

கோசகாரம் kōcakāram, n. (மூ. அ.) 1. Sugar-cane; கரும்பு. 2. Cocoanut tree; தென்னை.

கோசம் kōcam, n. <*kōśa.* Register of village lands; அடங்கற் கணக்கு. (P. T. L.)

கோசல kōcala, n. prob. *kōśala.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந்.)

கோசலரேகை kōcala-rēkai, n. prob. id. (Palmistry.) A line in palm of hand; கையில் ரேகைவகை. (திருவாரூ. குற. Ms.)

கோசனகம் kōcaṉakam, n. (அக. நி.) 1. A plant growing in marshy places; கையாந்தகரை. 2. *Nila-k-kaṭampu,* a plant; நிலக்கடம்பு.

கோசாகாரப்புழு kōcākāra-p-puḻu, n. <*kōśa-kāra*+. Silkworm; பட்டுப்புழு. *பற்றருக் கோசாகாரப்புழுப்போல்* (சொரூபசாரம், 98).

கோசான் kōcāṉ, n. Membrum virile; கோசம். *Colloq.*

கோசு[1] kōcu, n. cf. Port. *cors.* Windward side of a ship; கப்பலின் காற்றுப்பக்கம். *Pond.*

கோசு[2] kōcu, n. 1. cf. கோய். A kind of small perfume-box; பரணிச்செப்பு. (சரபேந்திர. குறவஞ்சி. 321.) 2. Hangings; தொங்கல். *Loc.*

கோட்டடி-த்தல் kōṭṭaṭi-, v. intr. <கோட்டு+. 1. To play a lone hand to win all the tricks in a card-game; சீட்டாட்டத்தில் எல்லாப் பிடிகளையுந் தனியே பிடிக்க முயலுதல். 2. To fail; தோற்றுப்போதல். *அவன் பரீட்சையில் கோட்டடித்துவிட்டான்.* *Loc.*

கோட்டம் kōṭṭam, n. (அக. நி.) 1. Monkey; குரங்கு. 2. Tank; குளம். 3. Sheet of water; நீர்நிலை. 4. Field; வயல்.

கோட்டு kōṭṭu, n. <கோடு. Bundle of sheaves of paddy; நெல்லரியின் தொகுதி. *Colloq.*

கோட்டுப்பிடி-த்தல் kōṭṭu-p-piṭi-, v. intr. <கோட்டு+. To thresh the sheaves of paddy; நெல்லின் அரிகளையடித்தல். *Colloq.*

கோட்டை kōṭṭai, n. Earthen bin for storing paddy; நெற்குதிர். (நாஞ்நாட்.)

கோட்டைப்பப்பளி kōṭṭai-p-pappaḷi, n. <கோட்டை+. A kind of saree; சேலைவகை. *Loc.*

கோடகசாலை kōṭakacālai, n. A small plant, *Rungia repens;* பூடுவகை. (மூ. அ.)

கோடகம் kōṭakam, n. Spurge gourd; பீர்க்கு. (நாஞ்நாட்.)

கோடங்கம் kōṭaṅkam, n. Coromandel ebony; கருங்காலி. (சித். அக.)

கோடம் kōṭam, n. <*kōṭa.* Person lame of one leg; ஒரு கால் முடம். (நாஞ்நாட்.)

கோடரம் kōṭaram, n. (அக. நி.) 1. Hair; மயிர். 2. Unguent; சாந்து.

கோடரவாலி kōṭaravāli, n. Margosa; வேம்பு. (சித். அக.)

கோடலி kōṭali, n. Potato plum of Mysore; தொடுவை. (L.)

கோடாலிக்கொண்டை kōṭāli-k-koṇṭai, n. perh. குடலை+. See கோடாலிமுடிச்சு. *Tinn.*

கோடாலிமுடிச்சு kōṭāli-muṭiccu, n. perh. id.+. A mode of knotting the hair; தலைமயிர் முடிக்கும் வகை. *Tj.*

கோடியெடு-த்தல் kōṭi-y-eṭu-, v. tr. <கோடி+. To repeat; திரும்பச் சொல்லுதல். (சடு, 10, 3, 1.)

கோடிரம் kōṭiram, n. <*kōṭira.* (நாஞ்நாட்.) 1. Mongoose; கீரி. 2. Cochineal; இந்திரகோபம்.

கோடீரம் kōṭīram, n. Indra's bow; rainbow; இந்திரன் வில். (சேந்திட. அக.)

கோடைக்கட்டி kōṭai-k-kaṭṭi, n. <கோடை+. Summer boil; உஷ்ணத்தா லுண்டாங் கொப்புளம். *Loc.*

கோடைக்காந்தள் kōṭai-k-kāntaḷ, n. <id.+. White species of Malabar glory lily; வெண்காந்தள். (சித். அக.)

கோடைக்குறுவை kōṭai-k-kuṟuvai, n. <id.+. A kind of paddy; நெல்வகை. *கோடைக் குறுவை குளவாளை செங்குறுவை* (நெல்விடு. 179).

கோடைக்கேப்பை kōṭai-k-kēppai, n. <id.+. A species of ragi; கேழ்வரகுவகை. (விவசா. 3.)

கோண்டன் kōṇṭaṉ, n. <*goṇḍa.* (நாஞ்நாட்.) 1. Low-born person; இழிபிறப்பினன். 2. One who has a large navel; பெருங் கொப்பூழன்.

கோண்டை kōṇṭai, *n.* <*ghōṇṭā.* Areca-palm; கமுகு. (யாழ். அக.)

கோணப்பார்வை kōṇa-p-pārvai, *n.* <கோணம்+. Squint eye; மாறுகண். *Loc.*

கோணல்சம்பா kōṇal-campā, *n.* perh. கோணல்+. A kind of paddy; நெல்வகை. (விவசா. 1.)

கோணல்வளைவு kōṇal-vaḷaivu, *n.* <id.+. Skew; வளைவுவகை. (கட்டட. நாமா. 16.)

கோணிக்கவாயன் kōṇikkavāyaṉ, *n.* A kind of paddy; நெல்வகை. (A.)

கோணிப்பட்டு kōṇi-p paṭṭu, *n.* perh. கோணி+. A kind of silk; பட்டுவகை. (S. I. I. viii, 233.)

கோணைப்பெருமான் kōṇai-p-perumāṉ, *n.* <கோணை+. Śiva in His *Ēkapāta* form; ஏகபாத சிவமூர்த்தம். (காஞ்சிப்பு. சிவபுண். 10.)

கோத்திரிகை kōttirikai, *n.* Bristly bryony; முசுமுசுக்கை. (சித். அக.)

கோதண்டவெள்ளம் kōtaṇṭa-veḷḷam, *n.* <கோதண்டம்+. See கோதண்டவெளி. (தக்கயாகப். 334, உரை.)

கோதண்டவெளி kōtaṇṭa-veḷi, *n.* <id.+. Śiva's third eye, in the forehead; நெற்றிக்கண். (தக்கயாகப். 334, உரை.)

கோதாரணம் kōtāraṇam, *n.* <*gō-dāraṇa.* (யாழ். அக.) 1. Plough; கலப்பை. 2. Spade, hoe; மண்வெட்டி.

கோதி kōti, *n.* <*gōdhi.* Forehead; நெற்றி. (நாநார்த்த.)

கோதுகம் kōtukam, *n.* Long zedoary; கச்சோலம். (சித். அக.)

கோதேரன் kōtēraṉ, *n.* <*godhera.* Protector, guardian; காவற்காரன். (யாழ். அக.)

கோந்துரு kōnturu, *n.* Duplicity; வஞ்சகம். (யாழ். அக.)

கோநசம் kōnacam, *n.* <*gō-nasa.* A kind of snake; பாம்புவகை. (யாழ். அக.)

கோப்பதவாரம் kō-p-pata-vāram, *n.* <கோ+பதம்+. Tax due to the king; அரசர்க்குரிய இறை. (T. A. S. ii, 82.)

கோப்பாட்டன் kō-p-pāṭṭaṉ, *n.* cf. கொட்பாட்டன். Grandfather's father; கொட்பாட்டன். (W.)

கோப்பியாதி kōppiyāti, *n.* <*gōpyādhi.* Pledge; ஈடு. (யாழ். அக.)

கோப்பிரண்டை kō-p-piraṇṭai, *n.* prob. கோ+. A kind of square-stalked vine; பிரண்டைவகை. *Tj.*

கோபத்திரம் kōpattiram, *n.* <*gōbhadra.* Fibre obtained from lotus stalk; தாமரை நூல். (மூ. அ.)

கோபதி kōpati, *n.* <*gō-pati.* Sun; சூரியன். (சோதிட. அக.)

கோபலீவர்த்தநியாயம் kō-palīvartta-niyāyam, *n.* <*gō+balīvarda*+. The illustration of the meaning of *kō* or 'cattle' being confined to 'cows' because immediately thereafter '*palīvarttam*' or 'bull' is mentioned; 'கோ' என்பது பசுவையுங் காளையையுங் குறிக்குமேனினும் அச்சொல்லுக்குப் பின் 'பலீவர்த்தம்' என்ற சொல் வருவதனால் அது பசுவையே குறிப்பதாகக்கொள்ளும் நியாயம். (திவ். பெரியாழ். 2, 1, 2, வ்யா. பக். 210.)

கோபாட்டமி kōpāṭṭami, *n.* <*gōpāṣṭamī.* *Aṣṭamī titi* in the bright half of the month Kārttikai; கார்த்திகை மாதத்துப் பூர்வபக்கத்து அட்டமி. (யாழ். அக.)

கோபாலசக்கரம் kōpālacakkaram, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 145.)

கோபிகாவசந்தம் kōpikā-vacantam, *n.* <*gōpikā*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 102.)

கோபிசாற்று-தல் kōpi-cāṟṟu-, *v. tr.* <கோபி+. To deceive; ஏமாற்றுதல். *Colloq.*

கோபிபோடு-தல் kōpi-pōṭu-, *v. tr.* <id. +. See கோபிசாற்று-. *Colloq.*

கோபுரம் kōpuram, *n.* <*gopura.* A kind of sedge; பெருங்கோரை. (நாநார்த்த.)

கோமணிக்குன்றம் kō-maṇi-k-kuṉṟam, *n.* <கோ+மணி+. Mythical hill containing bell-metal; வெண்கலமலை. (யாழ். அக.)

கோமளாஸ்தி kōmaḷāsti, *n.* <*kōmala*+*asthi.* Cartilage, tendon; முருந்து. (W.)

கோமாளி-த்தல் kōmāḷi-, 11 *v. intr.* <கோமாளி. To play the buffoon; to indulge in drollery; கோமாளித்தனஞ் செய்தல். *Pond.*

கோமுறை kō-muṟai, *n.* <கோ+. Revenue; அரசிறை. நாம் கொள்ளும் கோமுறைகளுமே (S. I. I. v, 312).

கோமூத்திரிகை kōmūttirikai, *n.* <*gō-mūtrikā.* A kind of grass; புல்வகை. (மூ. அ.)

கோயில்வாசி kōyil-vāci, *n.* <கோயில்+. Taxes due to the king; அரசாக்குரிய இறை. (S. I. I. v, 357.)

கோயிற்கலஞ்செய்-தல் kōyiṟ-kalañ-cey-, *v. intr.* <கோயில்+perh. அலம்+. To demolish a temple; கோயிலிடித்தல். மாந்தரைக் குழியுளுந்துதல் கோயிற்கலஞ் செய்தல் (நீலகேசி, 540).

கோயிற்கொத்து kōyiṟ-kottu, *n.* <id.+. Temple or palace servants; கோயில் அல்லது அரண்மனைப் பணியாட்கள். (M. E. R. 1923-4, p. 103.) கோயிற்கொத் தடிமைத்தாசி இருக்குமனை (சரவண. பணவிடு. 192).

கோயிற்படி kōyiṟ-paṭi, *n.* <id.+. Daily allowance for the expenditure of a temple; கோயிலிற்கிடைக்கும் நித்தியக்கட்டளை. (W.)

கோயிற்பிராகாரம் kōyiṟ-p-pirākāram, *n.* <id.+. Churchyard; கிறிஸ்தவர் கோயிலுள் சவம்புதைக்கு மிடம். (கட்டட. நாமா. 5.)

கோயிற்பூனை kōyiṟ-pūnai, *n.* <id.+. Dissembler in religion; hypocrite; மதவேடதாரி. (W.)

கோயிற்றூக்கு kōyiṟṟūkku, *n.* <id.+. (Mus.) A variety of time-measure; தாளவகை. (சிலப். 14, 150, உரை.)

கோர்னிசு kōrnicu, *n.* See கோர்னிசு. *Loc.*

கோரகம் kōrakam, *n.* <*kōraka*. Cubeb; தக்கோலம். (நாநார்த்த.)

கோரணி kōraṇi, *n.* 1. Confusion; கோளாறு. கோரணிப்படுத்து மக் கொடியவோரவர் (இரக்ஷணிய. பக். 81). 2. Diversion; விநோதம். *Pond.*

கோரராசனம் kōrarācaṉam, *n.* <*ghōra-rāsana*. Jackal; நரி. (யாழ். அக.)

கோராதனம் kōrātaṉam, *n.* <*ghōrasana*. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 109, உரை.)

கோரிதம் kōritam, *n.* <*kōrita*. Dust; துகள். (யாழ். அக.)

கோரைக்குச்சு kōrai-k-kuccu, *n.* <கோரை +. European bamboo reed; கோறுக்கை. *Loc.*

கோரைப்பல் kōrai-p-pal, *n.* <id.+. cf. கோரப்பல். Canine tooth; பல்வரிசையின் முன்னுள்ள கூர்மையான பல். (இங். வை. 9.)

கோல் kōl, *n.* 1. Pencil to paint the eye with collyrium; அஞ்சனக்கோல். (அக. நி.) 2. An unit of linear measure, of 24 feet; 24 அடியுள்ள நீட்டலளவை. (திவ். பெரியாழ். 3, 2, 6.)

கோல்டா kōlṭā, *n.* cf. குறடா. Whip; சிறு சவுக்கு. *Pond.*

கோல்நிறைகூலி kōl-niṟai-kūli, *n.* <கோல்+. A tax on articles measured by weight; வரிவகை. (S. I. I. iii, 266.)

கோல்வளை kōl-vaḷai, *n.* <id.+. A variety of bangles; வளைவகை. கோல்வளை, கழல் வளை, வரிவளை என்னுமாபோலே (திவ். பெரியாழ். 3, 4, 8, வ்யா. பக். 618).

கோலபுச்சம் kōlapuccam, *n.* <*kōla-puccha*. A kind of crane; நாரைவகை. (யாழ். அக.)

கோலம் kōlam, *n.* cf. தக்கோலம். Cubeb; தக்கோலம். (மூ. அ.)

கோலவல்லி kōla-valli, *n.* <கோலம்+. A creeper; கொடிவகை. (யாழ். அக.)

கோலிஞ்சி kōl-iñci, *n.* <கோல்+. A kind of ginger; மலையிஞ்சி. *Nāñ.*

கோவஞ்சி kōvañci, *n.* A kind of fish; மீன்வகை. கோவஞ்சிக்கடியன் பொதியன் (பறுளை. பள்ளு. 16).

கோவணவர் kōvaṇavar, *n.* Superintendent of a temple; கோயில் விசாரணைக்கர்த்தர். (கோயிலொ. 65.)

கோவரங்கப்பதுமராகம் kōvaraṅka-p-patuma-rākam, *n.* cf. கோவரங்கு. A kind of *patumarākam;* பதுமராகவகை. (யாழ். அக.)

கோவிக்கல் kōvikkal, *n.* <கோவில். Palace; அரண்மனை. (T. A. S. v, 205.)

கோவிக்கீரை kōvi-k-kīrai, *n.* <E. *cabbage* +. cf. கோவிசு. Cabbage; முட்டைக்கோசு. *Pond.*

கோவிடாணம் kō-viṭāṇam, *n.* <கோ+. (Śaiva.) A handpose; முத்திரைவகை. (செந். x, 424.)

கோவிதன் kōvitaṉ, *n.* <*kōvida*. Expert; நன்குணர்ந்தோன். (பகவற். 3, 17.)

கோழி kōḻi, *n.* Indian wild olive; இடலை. *Loc.*

கோழிக்குறும்பான் kōḻi-k-kuṟumpāṉ, *n.* <கோழி+. Common purslane; கொழுக்கீரை. (சித். அக.)

கோழிக்கூட்டுப்பழம் kōḻi-k-kūṭṭu-p-paḻam, *n.* A species of plantain, as from Calicut; வாழைப்பழவகை. (W.)

கோழிப்பாம்பு kōḻi-p-pāmpu, *n.* <கோழி +. Winged serpent; தக்ஷகசர்ப்பம். (மேரு மந். 479, உரை.)

கோழிவிழுங்கல் kōliviluṅkal, *n.* A coin; நாணயவகை. (பணவிடு. 138.)

கோள் kōḷ, *n.* <கொள்-. *Nakṣatra;* நட்சத்திரம். (அக. நி.)

கோளகசிரிஷம் kōḷaka-ciriṣam, *n.* <கோளகம்+. Indian absinth; மாசிபத்திரி. (சித். அக.)

கோளம்பம் kōḷampam, *n.* Eclipse; கிரகணம். (சோதிட. அக.)

கோளவியூகம் kōḷa-viyūkam, *n.* <கோளம்+. Octagonal disposition of an army; எட்டுப் பக்கத்தும் முகங்களையுடையதாக அமைக்கும் படைவகுப்பு. (சுக்கிரநீதி, 339.)

கோளை¹ kōḷai, *n.* <*gōlā.* (நாநார்த்த.) 1. Female companion; தோழி. 2. The river Godavari; கோதாவரி. 3. Realgar; மனோசிலை. 4. Water trough; நீர்ச்சால்.

கோளை² kōḷai, *n.* A kind of fish; மீன்வகை. கோளையாளல் (குருகூர்ப். 7).

கோற்கூலி kōṟ-kūli, *n.* <கோல்+. A tax; வரிவகை. (S. I. I. iv, 30.)

கோன் kōṉ, *n.* <கோ. (சோதிட. அக.) 1. Sun; சூரியன். 2. Moon; சந்திரன். 3. Jupiter; வியாழன்.

கோணிப்பூடு kōṇi-p-pūṭu, *n.* <கோணி+. Sunn hemp; சணல். (சித். அக.)

கோனை kōṉai, *n.* Sound; ஒலி. (அக. நி.)

கோஷ்டிப்பு kōṣṭippu, *n.* <கோஷ்டம். See கோஷை. கொட்டிய டம்மார கோஷ்டிப்பும் (பணவிடு. 247).

கோஷணை kōṣaṇai, *n.* <*ghōṣaṇā.* See கோஷை. (W.)

கோஷை kōṣai, *n.* <*ghōṣa.* Loud noise; பேரொலி. (W.)

கோஸ் kōs, *n.* prob. E. *course.* (M. Navi. 83.) 1. Spanker; திறவல். 2. Fore-sail or main-sail; திருங்கற்றுசேர் வடசேர் எனப்படும் பாய்கள்.

கோஸ்பறுவான் kōsparuvāṉ, *n.* prob. E. *gaff-spar.* Gaff; கப்பலிற் பாயை இழுத்துக் கட்ட உதவும் அரைப்பறுவான். (M. Navi. 82.)

கௌ

கௌசிகதாரி kaucikatāri, *n.* <*kauśika.* Indian bdellium; குங்கிலியம். (சித். அக.)

கௌசிகம் kaucikam, *n.* (யாழ். அக.) 1. Cowry; சோகி. 2. Snake; பாம்பு. 3. Jupiter; வியாழன்.

கௌசிகாயுதம் kaucikāyutam, *n.* <*kauśikāyudha.* Rainbow; வானவில். (யாழ். அக.)

கௌசிகேயம் kaucikēyam, *n.* White species of rattlewort; வெண்கிலுகிலுப்பை. (சித். அக.)

கௌஞ்சிகன் kauñcikaṉ, *n.* <*gauñjika.* Goldsmith; பொன்வினைஞன். (யாழ். அக.)

கௌணாத்மா kauṇātmā, *n.* <*gauṇa+ātman.* Son, as a secondary self; புத்திரன். (விசாரசந். 305.)

கௌணிகம் kauṇikam, *n.* <*gauṇika.* That which is subordinate or secondary; முக்கியமில்லாதது. (சத். பிர. 3.)

கௌதுகம் kautukam, *n.* <*kautuka. Tāli,* the wedding badge worn by married women; தாலி. (யாழ். அக.)

கௌதூகலம் kautūkalam, *n.* Small balsam pear; மிதிபாகல். (சித். அக.)

கௌபலக்காய் kaupalakkāy, *n.* Chilly; மிளகாய். (சித். அக.)

கௌமுதம் kaumutam, *n.* <*kaumudā.* The month of Kārttikai; கார்த்திகை மாதம். (சோதிட. அக.)

கௌரி kauri, *n.* <*gaurī.* 1. Sacred basil; துளசி. (யாழ். அக.) 2. Earth; பூமி. (யாழ். அக.) 3. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 104.)

கௌரிலலிதம் kauri-lalitam, *n.* <*gauri-lalita.* Yellow orpiment; அரிதாரம். (யாழ். அக.)

கௌரீபுத்திரர் kaurī-puttirar, *n.* <*gaurī+putra.* Balijas, a sub-sect of Telugu Vaiśyas; தெலுங்கு வைசியருள் ஒரு சாதியினர். (M. N.A. D. i, 202.)

கௌரீமனோஹரி kaurī-maṉōhari, *n.* <id.+. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

கௌலகம் kaulakam, *n.* Cubeb; வால்மிளகு. (சித். அக.)

கௌவியம் kauviyam, *n.* <*gavya.* Bezoar; கோரோசனை. (மூ. அ.)

கௌன்மிகன் kauṉmikaṉ, *n.* <*gaulmika.* Captain of a unit of 30 foot-soldiers; முப்பது காலாட்களுக்குத் தலைவன். (சுக்கிரநீதி, 73.)

ச

சக்கட்டம் cakkaṭṭam, n. Hair; மயிர். (யாழ். அக.)

சக்கந்தம் cakkantam, n. See சக்கட்டம். (யாழ். அக.)

சக்கரக்குளிகை cakkara-k-kuḷikai, n. <சக்கரம்+. A coin; நாணயவகை. (M. E. R. 1 of 1925.)

சக்கரகபிரஸங்கம் cakkaraka-pirasaṅkam, n. <cakraka+prasaṅga. (Log.) A defect in argumentation. See சக்கிரகம். (நீலகேசி, 391, உரை.)

சக்கரச்சக்கரம் cakkara-c-cakkaram, n. <சக்கரம்+. (Pros.) A variety of metrical composition; சித்திரகவிவகை. (யாப். வி. 497.)

சக்கரதானம் cakkara-tāṉam, n. <id. +. (Mus.) A difficult type of tāṉam; பாடுவதில் கஷ்டமாயுள்ள தானவகை. (கனம் கிருஷ்ணையர், 10.)

சக்கரதானர் cakkara-tāṉar, n. <id.+. (Śaiva.) A manifestation of Śiva; சிவபேதங்களு ளொன்று. (காஞ்சிப்பு. சிவபுண். 23.)

சக்கரப்பணம் cakkara-p-paṇam, n. <id. +. A coin; நாணயவகை. (M. E. R. 261 of 1929-30.)

சக்கரப்பாடியர் cakkara-p-pāṭiyar, n. <id.+. Oilmen; செக்கார். சக்கரப்பாடியர் குலமெய்த்தவமாயுள்ளார் (திருத். பு. 50).

சக்கரப்பிரதர் cakkara-p-piratar, n. <id. +prada. See சக்கரதானர். (சிவத். பிரபந். பக். 249.)

சக்கரவாகாதனம் cakkaravākātaṉam, n. <சக்கரவாகம்+. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 107, உரை.)

சக்கரவாளம் cakkaravāḷam, n. <cakra-vāla. Boundary, limit; எல்லை. (யாழ். அக.)

சக்கரவேதனை cakkara-vētaṉai, n. <cakra +. A mode of torture; ஒருவகைச் சித்திரவதை. *Pond.*

சக்கராக்கினை cakkarākkiṉai, n. <śakra+. cf. சக்கிராக்கினை. (W.) 1. Arbitrary punishment inflicted by a despot; நியாயவிரோதமான தண்டனை. 2. The decree of a monarch; அரசனுணை.

சக்கராதிபம் cakkarātipam, n. <cakra+adhipa. Paramount power; சக்கரவர்த்தி யதிகாரம். புவிச்சக்கராதிபம் உடற்சோதரர்தாங் கொண்டிருப்பவும் (பாரதி. பாஞ்சாலி. i, 74).

சக்களி-த்தல் cakkaḷi-, 4 v. intr. To be fermented; to grow stale; சளிதல். (யாழ். அக.)

சக்கியன் cakkiyaṉ, n. <sakhya. Friend; தோழன். (R.)

சக்கிரகம் cakkirakam, n. <cakraka. (Log.) Arguing in a vicious circle; வளைய வளையப் பேசுகை. *Pond.*

சக்கிராடி cakkirāṭi, n. <cakrāṭa. (யாழ். அக.) 1. Deceiver; எத்தன். 2. Snake-charmer; பாம்பாட்டி.

சக்கிராதம் cakkirātam, n. Pig; பன்றி. (மூ. அ.)

சக்கிரிதம் cakkiritam, n. prob. cakrita. A pace of horses; குதிரைகதிவகை. (சக்கிரசீதி, 72.)

சக்குப்பிடி-த்தல் cakku-p-piṭi-, v. intr. <T. saggu+. To grow mouldy; பூஞ்சாளம் பூத்தல். *Loc.*

சக்குப்பூ-த்தல் cakku-p-pū-, v. intr. <id. +. See சக்குப்பிடி-. (யாழ். அக.)

சகசம் cakacam, n. <saha-ja. (Phil.) Concomitant; கூடவுண்டானது. (சி. சி. 3, 4, சிவாக்.)

சகசிரதாரை cakacira-tārai, n. <sahasra +. 1. A garland of pearls; முத்துமாலைவகை. (தக்கயாகப். 106, உரை.) 2. A seive-like vessel used in abhiṣēka; அபிஷேகத்தில் உபயோகிக்கப் படுந் துளைகளுள்ள தட்டு. *Loc.*

சகடபாதை cakaṭa-pātai, n. <śakaṭa+. Highway; road for wheeled traffic; பெரும் பாதை. (W.)

சகதேவி caka-tēvi, n. <சகம்+. Lakṣmī; இலக்குமி. (யாழ். அக.)

சகபாடி cakapāṭi, n.<saha-pāṭhin. (Mus.) Accompanist; கூடப்பாடுவோன். (யாழ். அக.)

சகமாதா caka-mātā, n. <சகம்+. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

சகமுனியா cakamuṉiyā, n. Gum scammony; மாழுதா என்னுங் கொடி. (M. M.)

சகராதனம் cakarātaṉam, n. prob. sakara +. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 109, உரை.)

சகரூபன் caka-rūpaṉ, n. <saha+rūpa. Brother; சகோதரன். (யாழ். அக.)

சகலாத்துக்கீரை cakalāttu-k-kīrai, n. prob. சகலாத்து+. Sorrel; கீரைவகை. (W.)

சகவாசி caka-vāci, n. <saha-vāsin. Associate; நண்பன். *Pond.*

சகளதத்துவம் cakaḷa-tattuvam, *n.* <*sakala*+. (Śaiva.) The function of God in which the principle of energy predominates over that of wisdom; கிரியைமிகுந்து ஞானங் குறைந்த ஈச்சுரதத்துவம். (சி. சி. 1, 65, ஞானப்.)

சகளபஞ்சகம் cakaḷa-pañcakam, *n.* <id. +. The five categories, viz., drink, fish, flesh, pose and coition, required in Sakaḷa worship of *makāviratar;* மகாவிரதருடைய சகளவுபாசனைக் குரிய மது மச்சிய மாங்கிச முத்திரை இணைவிழைச்சு என்பன. (தக்கயாகப். 51, உரை.)

சகாசீரகம் cakācīrakam, *n.* Caraway; சீமைச்சீரகம். (இந்துபா. 96.)

சகு caku, *n.* <Malay. *sagu.* Sago; சவ் வரிசி. (மூ. அ.)

சகுலகண்டம் cakula-kaṇṭam, *n.* <*śakula* +. A kind of fish; பொன்வண்ணமீன். *Pond.*

சங்கடை caṅkaṭai, *n.* prob. *saṅghaṭṭa.* The last of the three stages of a man's life; ஆயுட்காலத்தின் மூன்று பகுதிகளுள் கடைப்பகுதி. (W.)

சங்கதூதி caṅka-tūti, *n.* <*saṅga-dūtī.* Procuress; கூட்டிக்கொடுப்பவள். (யாழ். அக.)

சங்கதை caṅkatai, *n.* <*saṅgati.* News; சங்கதி. *Loc.*

சங்கபதம் caṅka-patam, *n.* <*śaṅkha*+. A treatise on Hindu law; தருமநூல்களு ளொன்று. (W.)

சங்கமலிங்கம் caṅkama-liṅkam, *n.* <*jaṅgama*+. Person belonging to the Jaṅgama sect; சங்கமவகுப்பினன். (W.)

சங்கரப்பாடியர் caṅkarappāṭiyar, *n.* See சக்கரப்பாடியர். (S. I. I. v, 144.)

சங்கரர் caṅkarar, *n.* <*saṃhāra.* Warriors; போர்வீரர். (யாழ். அக.)

சங்கருடம் caṅkaruṭam, *n.* <*saṅkarṣa.* Opposition; எதிரிடை. (யாழ். அக.)

சங்கலனம் caṅkalaṉam, *n.* <*saṅkalana.* Collecting; தொகுக்கை. *நீர்வேலிச் சங்கரபண்டித ரவர்களாற் சங்கலனஞ் செய்யப்பட்டு . . . பதிப்பிக் கப்பட்டது (தாதுமாலை, முகப்புப்பக்கம்).*

சங்கலோஷ்டம் caṅkalōṣṭam, *n.* prob. *saṅga.* (W.) 1. Sexual connection; புணர்ச்சி. 2. Illicit intercourse; கள்ளப்புணர்ச்சி.

சங்கற்பசிராத்தம் caṅkaṟpa-cirāttam, *n.* <சங்கற்பம்+. The *śrādda* performed without sacrificial oblations; அக்கினிகாரியமின்றிச் செய்யுஞ் சிராத்தம். *Brāh.*

சங்காதம் caṅkātam, *n.* <*saṅghāta.* A thing that always goes along with another thing; concomitant; கூடவருவது. *வங்காரமு . . . மடந்தையரும் சங்காதமோ (கந்தரலங். 59).*

சங்காராதனம் caṅkārātaṉam, *n.* <*saṃhāra*+. (Śaiva.) A yogic posture; யோகாசன வகை. (தத்துவப். 108, உரை.)

சங்கிதாமந்திரம் caṅkitā-mantiram, *n.* <*saṃhitā-mantra.* (Śaiva.) A group of mantras; மந்திரவகை. (தத்துவப். 70, உரை.)

சங்கிராமம் caṅkirāmam, *n.* <*saṅkrāma.* Hill path; மலைமேல் வழி. (யாழ். அக.)

சங்கிலிகரணம் caṅkili-karaṇam, *n.* <*saṅkalīkaraṇa.* Unnatural coition; இயற் கைக்கு மாறான புணர்ச்சி. (யாழ். அக.)

சங்கீதி caṅkīti, *n.* <*saṅgīti.* Conversation; சம்பாஷணை. (யாழ். அக.)

சங்குநகம் caṅku-nakam, *n.* *Nākuṇam,* an aromatic substance; நாகுணம் என்னும் வாச னைப் பண்டம். (நாகார்த்த. 435, உரை.)

சங்குப்பட்டினி caṅku-p-paṭṭiṉi, *n.* <சங்கு+. A kind of fast; ஒருவகை நோன்பு. *Loc.*

சங்குலிகயுத்தம் caṅkulika-yuttam, *n.* <*saṅkulika*+. Hand-to-hand fight; நேர்ந்த யுத்தம். (வேதாரணி. பக். 124, குறிப்.)

சங்குவிரியன் caṅku-viriyaṉ, *n.* <சங்கு +. A variety of snake; பாம்புவகை. *Loc.*

சங்கைப்பாடு caṅkai-p-pāṭu, *n.* <சங்கை +படு-. Doubt, uncertainty; ஐயப்பாடு. *எங்கள் குடியிருப்புச் சங்கைப்பா டென்னத்தகாது (தெய்வச். விறலிவிடு. 233).*

சங்கையீனம் caṅkai-y-īṉam, *n.* <id +. Indecency, as in talk or conversation; அசப்பியம். *அவன் சங்கையீனமாகப் பேசுகிறான்.* (W.)

சச்சிதானந்தவெளி caccitāṉantaveḷi, *n.* Rock-salt; கல்லுப்பு. (மூ. அ.)

சச்சை[1] caccai, *n.* 1. cf. சேர்ச்சை. (அக. நி.) Liquid of thick consistency, as sandal paste; சேறிதழம்பு. 2. Jacket, coat; சட்டை.

சச்சை[2] caccai, *n.* cf. சர்ச்சரவு. Quarrel; சண்டை. *சச்சைவருமுன்னே நடவென்றாள் (தெய் வச். விறலிவிடு. 471).*

சசவாதம் caca-vātam, *n.* <*śaśa*+. Epilepsy; முயல்வாதம். (மூ. அ.)

சஞ்சலம் cañcalam, *n.* <*cañcala.* (யாழ். அக.) 1. Wind; காற்று. 2. Lightning; மின்னல்.

சஞ்சலனம் cañcalaṉam, *n.* <*cañcalana.* Trepidation; அச்சத்தால் உண்டாம் நடுக்கம். (யாழ். அக.)

சஞ்சலைசீவகன் cañcalai-cīvakaṉ, *n.* perh. *cañcalā*+. Topaz; புஷ்பராகம். (யாழ். அக.)

சஞ்சனம் cañcaṉam, *n.* <*jhañjhana.* Tinkling of ornaments; அணிகளாலெழு மொலி. (யாழ். அக.)

சஞ்சாயகம் cañcāyakam, *n.* Bee; வண்டு. சஞ்சாயகமங்குச் சார்ந்தால் (கச்சி. வண்டுவிடு. 396).

சஞ்சாரம் cañcāram, *n.* <*sañcāra.* (யாழ். அக.) 1. Contagious disease; தொற்று வியாதி. 2. *Nāgaratna*, a fabulous gem; நாக ரத்தினம்.

சஞ்சாரிகன் cañcārikaṉ, *n.* <*sañcārika.* Ambassador, messenger; தூதன். (யாழ். அக.)

சஞ்சாவாதம் cañcāvātam, *n.* <*jhañjhā* +*vāta.* Wind and rain, stormy weather; காற்றும் மழையும். (யாழ். அக.)

சஞ்சி cañci, *n.* [T. *sañcī.*] Bag, pouch; பை. *Loc.*

சஞ்சீவராயர் cañcīva-rāyar, *n.* <*sañjīva* +. Hanumāṉ; அநுமான். (M. E. R. 95 of 1923.)

சஞ்சீவனம் cañcīvaṉam, *n.* <*sañjīvana.* A hell; நரகவகை. (மணி. 6, 181, அரும்.)

சஞ்சை cañcai, *n.* <*jhañjhā.* (யாழ். அக.) 1. Heavy rain; பெருமழை. 2. Loud noise; பேரொலி.

சஞ்சோளி cañcōḷi, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 104.)

சட்டப்பெருமக்கள் caṭṭa-p-perumakkaḷ, *n.* <சட்டம்+. Governing body; board of management; நிர்வாக சபையார். (M. E. R. 498 of 1929-30.)

சட்டறம் caṭṭaṟam, *n.* prob. id. +அறம். Teaching the śāstras, considered as a merit; சாஸ்திரம் பயிற்றுவிக்குந் தர்மம். சாலைதொறும் பயில் சட்டறங்கள் பல்குவன (பெரியபு. கழறிற். 3).

சட்டிச்சோறு caṭṭi-c-cōṟu, *n.* <சட்டி+. Food offerings distributed as a perquisite to temple-servants; கோயில் வேலைக்காரருக்குக் கொடுக்கும் உரிமைப் பிரசாதம். (S. I. I. iv, 295.)

சட்டித்தலையன் caṭṭi-t-talaiyaṉ, *n.* <id. +. A kind of fish; மீன்வகை. திருக்கை சட்டித் தலையன் (பறாளை. பள்ளு. 16).

சட்டித்தோணி caṭṭi-t-tōṇi, *n.* <id.+. Flat-bottomed boat; தட்டையான அடிப்பக்கமுள்ள படகு. *Pond.*

சட்டுவச்சாதம் caṭṭuva-c-cātam, *n.* prob. *ṣaḍ-rasa*+. Food served by the bride to the bridegroom for the first time at the marriage; விவாகத்தில் மாப்பிள்ளைக்கு மணப் பெண் படைக்குஞ் சோறு. *Loc.*

சட்டைக்காரி caṭṭaikkāri, *n.* Fem. of சட்டைக்காரன். Anglo-Indian woman; சட்டைக் காரச்சாதிப் பெண். *Colloq.*

சட்பதாதிதி caṭpatātiti, *n.* <*ṣaṭpadātithi.* (மூ. அ.) 1. Champak tree; சண்பகம். 2. Mango tree; மாமரம்.

சட்ரசம் caṭracam, *n.* <*ṣaḍ-rasa.* The six distinctive tastes; அறுசுவை.

சட்ரசம்பரிமாறுகை caṭracam-pari-māṟukai, *n.* <சட்ரசம்+. Serving of food by the bride to the bridegroom for the first time at the marriage; பூதக்கலம். *Tinn.*

சடக்கன்வெட்டு caṭakkaṉ-veṭṭu, *n.* A coin; ஒருவகை நாணயம். (பணவிடு. 133.)

சடங்கடி caṭaṅkaṭi, *n.* Deceit; வஞ்சனை. சடங்கடிக்கு வாய்த்த சளக்கா (சரவண. பணவிடு. 36).

சடங்கம் caṭaṅkam, *n.* <*caṭaka.* House sparrow; ஊர்க்குருவி. இளங்களிறுயுஞ் சடங்கமாயும் (நீலகேசி, 206, உரை, மேற்கோள்).

சடம் caṭam, *n.* <*jaḍa.* (Jaina.) Spiritual ignorance; அஞ்ஞானம். சான்றுவேண்டுஞ் சடத் தையறிந்திலேன் (மேருமந். 257).

சடரி caṭari, *n.* perh. *caṭ.* Being broken or spoilt; சிதைவு. (யாழ். அக.)

சடலை caṭalai, *n.* perh. *jaḍa.* Useless act; வீண் செயல். இந்தச் சடலைகள் வேண்டுமோ தான் (பாடு. 71, சந்நியாசம்).

சடாவு caṭāvu, *n.* prob. Hind. *chaṭā.* Ascent, increase; ஏற்றம். (P. T. L.)

சடு caṭu, *n.* <*caṭu.* Belly; வயிறு. (யாழ். அக.)

சடை-த்தல் caṭai-, *11 v. intr.* <சடை. To grow densely and luxuriantly; அடர்ந்து கிளைத்தல். (யாழ். அக.)

சடைக்கிரந்தி caṭai-k-kiranti, n. <id.+. A kind of eruption; கரப்பான்வகை. (தஞ். சர. iii, 92.)

சடைக்கோங்கு caṭai-k-kōṅku, n. <id.+. A species of common caung; மஞ்சட்கோங்கு. (சித். அக.)

சடைச்சாமை caṭai-c-cāmai, n. <id.+. A species of poor-man's millet; சாமைவகை. (விவசா. 4.)

சடைவுதீர்-த்தல் caṭaivu-tīr-, v. intr. <சடைவு+. To stretch or twist oneself to cast off laziness; சோம்பல் முறித்தல். (எங்களூர், 155.)

சண்டப்பிரசண்டர் caṇṭa-p-piracaṇṭar, n. <caṇḍa+pracaṇḍa. Deities guarding the inner shrine of Viṣṇu temples; திருமால்கோயிலி லுள்ள துவாரபாலகர். (M. E. R. 634 of 1919.)

சண்டம் caṇṭam, n. <caṇḍa. Greatness; பெருமை. (அக. நி.)

சண்டாளப்பேறு caṇṭāḷa-p-pēṟu, n. <caṇḍāla+. A tax; வரிவகை. (S. I. I. v, 139.)

சண்டியன் caṇṭiyaṉ, n. <சண்டி. Obstinate, indolent person; பிடிவாதமுள்ள சோம்பேறி. (J.)

சண்டேசுரப்பெருவிலை caṇṭēcura-p-peruvilai, n. <caṇḍēśvara+. Sale of temple lands; கோயில் நிலத்தின் விற்பனை. (Insc.)

சண்டை caṇṭai, n. cf. செண்டை. [M. caṇḍa.] A musical instrument; வாத்தியவகை. (S. I. I. v, 308.)

சண்டைப்புழு caṇṭai-p-puḻu, n. perh. சண்டை+. A kind of worm; புழுவகை. (பரராச. ii, 216.)

சண்ணாரம் caṇṇāram, n. prob. catra-kara. Umbrella-making; குடைசெய்யுந் தொழில். (நீலகேசி, 280)

சண்முகப்பிரியை caṇmuka-p-piriyai, n. <ṣaṇmukha-priyā. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 104.)

சணகம் caṇakam, n. <śaṇaka. Hemp; சணல். (தத்துவப். 156, உரை.)

சணப்புப்புளிச்சை caṇappu-p-puḷiccai, n. <சணப்பு+. Indian brown hemp; புளிச்சை வகை.

சத்ததாரணை catta-tāraṇai, n. <சத்தம்+. One of nava-tāraṇai; நவதாரணையு ளொன்று. (திவா.)

சத்தயோனி catta-yōṉi, n. <śabda-yōni. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

சத்தவேகமணி catta-vēka-maṇi, n. <சத்தம்+. A kind of medicine; மருந்துவகை. (தஞ். சர. iii, 58.)

சத்திதீபம் catti-tīpam, n. <śakti+. A kind of temple lamp; கோயில் தீபவகை. (பரத. 4, ஒழிபி. 2, உரை.)

சத்தியலேக்கியம் cattiya-lēkkiyam, n. <satya+lēkhya. Deed of agreement between villages and province; சிற்றூர்களும் பெரிய நாடும் தம்முள் ஒற்றுமைதழீஇத் தெழுதிக்கொள்ளும் பத்திரம். (சுக்கிரநீதி, 94.)

சத்தியுப்பு catti-y-uppu, n. cf. சத்திச்சாரம். A kind of acrid salt; பூரவுப்பு. (மூ. அ.)

சத்திரசிகிற்சை cattira-cikiṟcai, n. <சத்திரம்+. See சத்திரவைத்தியம். Mod.

சத்திரவைத்தியம் cattira-vaittiyam, n. <id.+. Surgery; ஆயுதத்தை உபயோகித்துச் செய்யும் வைத்தியம். Mod.

சத்துப்பு cattuppu, n. prob. சத்து+. Common salt; கரியுப்பு. (மூ. அ.)

சத்துமத்து cattumattu, n. prob. sattva. Seed or originating principle; மூலகாரணம். (W.)

சத்ரேசன் catrēcaṉ, n. <śatru+īśa. (Astrol.) Lord of the sixth house from the ascendent; சத்துருத்தானாதிபதி. (சாதகசிந். 1098.)

சதக்கிரதம் catakkiratam, n. <śatahradā. Lightning; மின்னல். (யாழ். அக.)

சதச்சதம் cataccatam, n. <śata-chanda. See சதபத்திரம். (யாழ். அக.)

சதசஞ்சீவி cata-cañcīvi, n. <śata+. Long-lived person; நீண்ட ஆயுளையுடையோன். Pond.

சதசதெனல் catacateṉal, n. Expr. of rotting; அழுகுதற் குறிப்பு. சதசதென் றழுகுதூர்க் கந்த சாக்கடையான சமுசாரமதி லுழல்வனோ (மஸ் தான். 130).

சதபத்திரம் cata-pattiram, n. <śata-patra. Woodpecker; தச்சன்குருவி. (யாழ். அக.)

சதமானம் cata-māṉam, n. <śata+. Percentage; நூற்றுக்குரிய விதம். Mod.

சதாசிவநாள் catāciva-nāḷ, n. <sadāśiva+. The nakṣtras, urōkaṇi, astam, tiru-vōṇam, pūcam, aṉuṣam, uttiraṭṭāti, uttiram, uttirāṭam, irēvati; உரோகணி அஸ்தம் திருவோண

ணம் பூசம் அனுஷம் உத்திராட்டாதி உத்திரம் உத்தி ராடம் இரேவதி ஆகிய நட்சத்திரங்கள். (சோதிட கிரக. 38.)

சதாசிவம் catācivam, *n.* Soap; சவுக்காரம். (தஞ். சர. iii, 51.)

சதாப்புக்கீரை catāppu-k-kīrai, *n.* perh. *śatapuṣpī*+. Dill; சதகுப்பி. *Pond.*

சதாபரி catāpari, *n.* Gold; தங்கம். (மூ. அ.)

சதாபுசம் catāpucam, *n.* A kind of beetle; வண்டுவகை. (W.)

சதானிகன் catānikan, *n.* <*śatānīka*. Captain of a unit of 100 infantry men; 100 காலாட்படைக்குத் தலைவன். (சுக்கிரநீதி, 73.)

சதிபதி cati-pati, *n.* <*satī*+. 1. Śiva, as lord of Pārvatī; சிவபெருமான். (W.) 2. Husband and wife; தம்பதி. *Loc.*

சதிர் catir, *n.* <சதுர். Slight effort which produces great results; பெரும்பயன் அளிக்குஞ் சிறு முயற்சி. (ஈடு, 9, 1, 4.)

சது catu, *int.* <சத்து. An exclamation meaning silence; சத்தமிடாதிருக்கவேண்டும் என்று குறிக்குஞ் சொல். *Loc.*

சதுகம் catukam, *n.* <*jatuka*. Asafoetida; பெருங்காயம். (யாழ். அக.)

சதுட்கம் catuṭkam, *n.* <*catuṣka*. Four; நான்கு. (யாழ். அக.)

சதுத்தரவு catuttaravu, *n.* <சத்து+. Favourable order; அநுகூலமான கட்டளை. (P. T. L. 174.)

சதுப்பன்னி catu-p-panni, *n.* <*catus*+*parṇa*. *Ārai*, an aquatic plant; ஆரை. (நாமதீப.)

சதுர்த்தந்தம் catur-t-tantam, *n.* <*catur-danta*. Indra's elephant; ஐராவதம். (யாழ். அக.)

சதுர்த்தா caturttā, *adv.* <*catur-dhā*. In four ways; நான்கு வகையாய். ஒழிப்பன் மலஞ் சதுர்த்தா சத்திநிபாதத்தால் (சி. சி. 8, 2).

சதுர்த்தி caturtti, *n.* prob. *caturthi*. cf. சமத்தி. Line of stanza, usually the fourth or last line, set for a person to complete, as a test of his poetic skill; சமசையாகக்கொடுக்கும் நான்காமடி. (யாழ். அக.)

சதுர்ப்பலன் catur-p-palan, *n.* <சதுர்+. Privilege, good fortune; நற்பயன். (W.)

சதுரக்கம்பி catura-k-kampi, *n.* <சதுரம்+. Square iron-bar; நான்கு புறமும் ஒத்த அகலமுள்ள இரும்புக்கம்பி. *Loc.*

சதுரங்கதாரணை caturaṅka-tāraṇai, *n.* <சதுரங்கம்+. (W.) 1. The art of maintaining a fourfold army by a king, one of *nava-tāraṇai*; நவதாரணையில் ஒன்றனதும் சதுரங்க சேனையை ஆக்கிக்கொள்வதுமான கலை. 2. (Phil.) The art of making the soul reach the seat of Brahman in the body by subduing the fourfold faculties of reason, reflection, will and egoism, one of *nava-tāraṇai*; மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற அந்தக்கரணங்களையடக்கி ஆத்மா பரம்பொருளையடையும்படி செய்யும் வித்தையும் நவதாரணையில் ஒன்றனதுமான கலை.

சதுரங்கப்பலகை caturaṅka-p-palakai, *n.* <id.+. See சதுரங்கமனை. *Pond.*

சதுரங்கம் caturaṅkam, *n.* <*caturaṅga*. Quadrilateral; quadrangle; நாற்கோணம். (யாழ். அக.)

சதுரங்கமனை caturaṅka-maṉai, *n.* <சதுரங்கம்+. Chess-board; சதுரங்கக் கட்டம் எழுதிய பலகை. *Pond.*

சதுரச்சக்கரம் catura-c-cakkaram, *n.* perh. சதுரம்+. (Poet.) A variety of metrical composition, fitted into fanciful figures; சித்திரக் கவிவகை. (யாப். வி. 497.)

சதுரசாலை catura-cālai, *n.* <*catura-śālā*. Quadrangular house; நாற்சார் வீடு. (யாழ். அக.)

சதுரநிவர்த்தனம் catura-nivarttaṉam, *n.* <சதுரம்+. Square measure; சதுர அளவு. (சுக்கிரநீதி, 27.)

சதுரம் caturam, *n.* <*satvara*. Quickness; விரைவு. (யாழ். அக.)

சதுரவலை catura-valai, *n.* prob. சதுரம்+. A kind of net; வலைவகை. *Pond.*

சதுரன் caturaṉ, *n.* prob. *catura*. Avaricious man; பேராசைக்காரன். (யாழ். அக.)

சதுரிகை caturikai, *n.* prob. *caturikā*. Lent; தபசுநாள். *Chr.*

சதுஷ்கஷாயம் catuṣ-kaṣāyam, *n.* <*catur*+. (Jaina.) The four evil thoughts, viz., *kurōtam, māṉam, māyai, lōpam*; குரோதம் மானம் மாயை லோப மென்ற தீய எண்ணங்கள். (மேருமந். 397, உரை.)

சதுஷ்கிகை catuṣkikai, *n.* (Arch.) A part of a building; கட்டிட உறுப்புக்களுளொன்று. (S. I. I. ii, 87.)

சதுஸ்ஸன்னை catus-saṉṉai, *n.* <*catus*+. (Jaina.) The four *caṉṉai*, viz., *āhāra-saṉṉai, strī-saṉṉai, paya-saṉṉai, parikkiraha-saṉṉai*;

ஆஹாரஸன்ஞா ஸ்திரீஸன்ஞா பயஸன்ஞா பரிக்கிரஹ ஸன்ஞா யென்ற நான்கு. (மேருமந். 144, உரை.)

சதேசன் catēcaṉ, n. <*śatēśa*. Chief of a hundred villages; நூறுகிராமங்களுக்குத் தலைவன். (யாழ். அக.)

சதைகரண்டிப்பூடு cataikaranṭi-p-pūṭu, n. *Kōṭaka-cālai*, a small plant; கோடகசாலை. (மூ. அ.)

சதைநிறம் catai-niṟam, n. <சதை+. Carnation; ஒருவகைச் செந்நிறம். *Pond.*

சதைப்பு cataippu, n. <சதை-. Bruise; மேற்றோல் சதைந்ததாலுண்டாங் காயம். தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி (இரக்ஷணிய. 100).

சதையன்பாக்குவெட்டி cataiyaṉ-pākku-veṭṭi, n. <id.+. Crushing nut-cracker, dist. fr. *veṭṭu-p-pākkuveṭṭi;* பாக்கைச் சீவாது நொறுக்கும் பாக்குவெட்டி. *Nāñ.*

சதோதயம் catōtayam, *adv.* perh. சதம்+. Always; எப்போழுதும். வேண்டுவ தந்து சதோதயம் ஆதரிப்பர் (இரக்ஷணிய. 13).

சந்ததிப்பிரவேசம் cantati-p-piravēcam, *adv.* <சந்ததி+. From generation to generation; தலைமுறைதத்துவமாய். ஆசந்திரார்க்கம் சந்ததிப்பிரவேசமே இறையிலியாக (S. I. I. v, 331).

சந்தமிக்காசு cantamikkācu, n. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 115.)

சந்தனநலங்கு cantaṉa-nalaṅku, n. <சந்தனம்+. A ceremony before marriage in which *nalaṅku* is performed in the respective houses of the bride and bridegroom; கலியாணத்துக்கு முன்னால் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அவரவர்களுடைய வீடுகளில் அரைத்த சந்தனம் முதலியவற்றால் பூசி நலங்குவைக்கின்ற சடங்கு. *Madr.*

சந்தனப்புல்லை cantaṉa-p-pullai, n. <id. +. Light yellow colour, as of cattle; மங்கலான மஞ்சள் நிறம். (பெரியமாட். 13.)

சந்தனாகரு cantaṉākaru, n. <id.+*agaru*. A kind of sandalwood; சந்தனமரவகை. சந்தனாகருவின் தூபம் (பாரத. இந்திர. 41).

சந்தாக்கு cantākku, n. <Arab. *sandūk*. Coffin; சவப்பெட்டி. *Muham.*

சந்தாயநிலம் cantāya-nilam, n. prob. சமுதாயம்+. Land held in common; பொது நிலம். (P. T. L.)

சந்தாயயானம் cantāya-yāṉam, n. <*sandhāya*+. The march of a king against his enemy in front, making an ally of the enemy who attacks him from behind; ஓர் அரசன் பின்தொடரும் பகைவனைச் சந்தியினால் நண்பனாகச் செய்துகொண்டு முன்னிற்கும் பகைவனை எதிர்த்துச் செல்லுஞ் செலவு. (சுக்கிரநீதி, 336.)

சந்தானச்சாபம் cantāṉa-c-cāpam, n. <சந்தானம்+. Child kept away in hiding or safe custody in order that the line may not become extinct by a catastrophe; குடும்ப முழுவதும் நசிக்கவொட்டாமல் பிறரால் பாதுகாக்கப்படுஞ் சிறு குழந்தை. (திவ். அமலனாதி. 5, வ்யா. பக். 64-65.)

சந்தானரேகை cantāṉa-rēkai, n. <id.+. (Palmistry.) A line in palm of hand; கைரேகை வகை. (திருவாரூ. குற. Ms.)

சந்தி canti, n. <*sandhi*. 1. Favourable opportunity; தக்க சமயம். சந்திகண்டுதான் சந்தடிவிலக்க (பஞ்ச. திருமுக. 19). 2. Worship at stated hours in a temple; கோயிற் காலபூசை. வீரபாண்டியன் சந்தி (S. I. I. viii, 107).

சந்திக்குனிப்பம் canti-k-kuṉippam, n. <சந்தி+குனி-. A kind of dance by dancing girls in temples; கோயிலில் தேவரடியார் நடிக்கும் நடனம். (M. E. R. 1912, p. 127.)

சந்திதம் cantitam, n. <சந்தி-. That which is strung or combined; கோக்கப்பட்டது. (R.)

சந்திபந்தம் canti-pantam, n. <சந்தி+. Joint; பொருத்து. (ப. நி. Ms.)

சந்தியிசை canti-y-icai, n. <id.+. (Pros.) A defect in versification; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி.)

சந்திரகபாலம் cantira-kapālam, n. <சந்திரன்+. Pain in the head, recurring in the evenings; படுஞாயிறுநோய். (பதார்த. i, 24.)

சந்திரகாந்தச்சேலை cantira-kānta-c-cēlai, n. <id.+காந்தம்+. A kind of saree; சேலைவகை. (பஞ்ச. திருமுக. 1161.)

சந்திரகாந்தம் cantira-kāntam, n. <id. +. White Indian water-lily; வெள்ளாம்பல். (மூ. அ.)

சந்திரகாந்தாரி cantira-kāntāri, n. <id. +. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 103.)

சந்திரசேகரம் cantira-cēkaram, n. <*candra-śēkhara*. A temple with 586 towers and 64 storeys; 586 சிகரங்களையும் 64 மேனிலைக் கட்டுக்களையுமுடைய கோயில். (சுக்கிரநீதி, 230.)

சந்திரநாகம் cantiranākam, *n.* A drug; ஒரு மருந்துச்சரக்கு. (மூ. அ.)

சந்திரபதம் cantira-patam, *n.* <*candra-pada.* Lunar region; சந்திரமண்டலம். (திவ். திருநெடுந். 5, வ்யா.)

சந்திரபுட்கரணி cantira-puṭkaraṇi, *n.* <*candra*+. A small tank inside the Śrīraṅgam temple; ஸ்ரீரங்கத்துக்கோயிலிலுள்ள பொய்கை. தாழ்பிறப் பேழறுக்கு நன்னீருறை சந்திரபுட்கரணிபு மேவும் (குருகூர்ப். 5).

சந்திரரேகை cantira-rēkai, *n.* <id.+. (Palmistry) A line in palm of hand; கை ரேகை வகை. மருவுசீத சந்திரரேகையினுல் (திருவாரூ. குற. Ms.)

சந்திரவாளி cantira-vāḷi, *n.* <id.+. A kind of saree; சேலைவகை. *Loc.*

சந்திரிகாபைரவி cantirikā-pairavi, *n.* <*candrikā*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. இராக. 102.)

சந்திலகம் cantilakam, *n.* Rock-salt; இந்துப்பு. (மூ. அ.)

சந்திவிக்கிரகப்பேறு canti-vikkiraka-p-pēṟu, *n.* <சந்தி+விக்கிரகம்+. A tax; வரிவகை. (S. I. I. ii, 115.)

சந்தீபம் cantīpam, *n.* <*sandīpa.* (Mus.) A division of the fifth note of the gamut; இளியின் பேதம். (பரத. இராக. 44.)

சந்துவிப்புருதி cantu-vippuruti, *n.* <சந்து+. Cancer at the hip-joint; இடுப்பிலுண்டாங் கட்டிவகை. (W.)

சந்தோஷி-த்தல் cantōṣi-, 11 *v. tr.* <*santōṣa.* To praise, extol; to esteem; மெச்சுதல். சகாதேவனைச் சந்தோஷித்து மகாப்பிரியஞ் செய்து (பாரதவெண். 135, உரை).

சநுக்கிரகம் canukkirakam, *n.* prob. *saṃskṛta.* Sanskrit; வடமொழி. (போகத். 141.)

சப்தசோதனைக்குழல் capta-cōtaṉai-k-kuḻal, *n.* <*śabda*+. Stethoscope; உடல்நிலை யறியுங் கருவி. *Mod.*

சப்தபாலம் captapālam, *n.* <*sapta-phāla.* A kind of brush used in grooming horse, ox or camel; குதிரை எருது ஒட்டகம் இவற்றின் அழுக்கைப் போக்க உபயோகிக்குங் கருவி. (சுக்கிரநீதி, 325.)

சப்தரா captaṟā, *n.* Bowsprit; கப்பலின் முன்னணியத்திலிருந்து வெளியே புறப்படும் உத்திரம். (M. Navi. 81.)

சப்தராசேர்பறுவான் captaṟā-cērpaṟu-vāṉ, *n.* <சப்தரா+. Sprit-sail gaff; சப்தறவுக்கு அருகிலுள்ள சிறிய உத்திரம். (M. Navi. 82.)

சப்தராபோயிபந்து captaṟā-pōyipantu, *n.* <id.+. Bowsprit gammoning; சப்தறவின் அடிப்பக்கத்தைக்கட்டுவதற்கு உதவுங் கயிறு அல்லது சங்கிலி. (M. Navi. 85.)

சப்தராலவுரான் captaṟā-lavurāṉ, *n.* <id.+. Bowsprit shrouds; சப்தறு மரத்தின் பக்க ஆதாரம். (M. Navi. 85.)

சப்தஜாலம் capta-jālam, *n.* <*śabda*+. Series of sounds; ஒலித்திரள். சங்கீதம் அர்த்த மில்லாத சப்தஜாலந்தானே (கோபாலகிருஷ்ணபாரதி, 62).

சப்பளாத்தி cappaḷātti, *n.* (W.) 1. Corpulent person; பருத்த தேகமுடையவ-ன்-ள். 2. Unintelligent, dull person; சாமர்த்தியமில்லாத வ-ன்-ள்.

சப்பு cappu, *n.* <Arab. *sabab.* Cause; காரணம். (P. T. L.)

சப்ஜாகொட்டடி capjā-koṭṭaṭi, *n.* <Persn. *sabzā*+. A saree of dark green colour; சேலைவகை. *Loc.*

சபர் capar, *n.* <Arab. *safar.* The second month in the Arabic year; அரபி வருஷத்தில் இரண்டாம் மாதம்.

சபலி capali, *n.* <*sabali.* Evening twilight; மாலை வெளிச்சம். (யாழ். அக.)

சபுத்தி caputti, *n.* <Arab. *zabt.* (Legal.) Attachment; ஜப்தி. சபுத்தி வாரண்டுப் பியோனொடு (பஞ்ச. திருமுக. 1583).

சபையொழுக்கம் capai-y-oḻukkam, *n.* <சபை+. Etiquette; மரியாதை முறை. *Loc.*

சபைவண்மை capai-vaṇmai, *n.* <id.+. See சபைவளமை. (R.)

சபைவளமை capai-vaḷamai, *n.* <id.+. The authority of a public assembly; சபைக்குரிய அதிகாரம். (R.)

சம்சாரஜீவன் camcāra-jīvaṉ, *n.* <*saṃsāra*+. (Jaina.) Ātman that passes through *naraka-kati tiryak-kati maṉuṣya-kati* and *tēva-kati* by the bondage of karma; கருமபந்தத்தினுல் நரகதிரியக் மனுஷ்ய தேவகதிகளில் உழலும் உயிர். (மேருமந். 71, உரை.)

சம்பங்கிக்காசு campaṅki-k-kācu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 114.)

சம்பத்து campattu, *n.* <*sampat*. Gold; பொன். *மேனுளிற் சம்பத்துதிக்குந் தாணி தாரசென்ன* (பத்ம. தென்றல்விடு. 3).

சம்பந்தச்சொல் campanta-c-col, *n.* <*சம்பந்தம்*+. (Gram.) Correlative word; இனமான சொல். *Pond.*

சம்பந்தத்திரயம் campanta-t-tirayam, *n.* <id.+. The three kinds of relation, *camāṇātikaraṇya-campantam, vicēṭaṇa-vicēṭiya-pāva-campantam, laṭciya-laṭcaṇa-pāva-campantam;* சமானாதிகரண்யசம்பந்தம் விசேடண விசேடியபாவசம்பந்தம் லட்சியலட்சணபாவசம்பந்தம் என்னும் மூவகைப்பட்ட சம்பந்தம். (*வேதாந்த சாரம், பக்.* 79.)

சம்பல் campal, *n.* <*சம்பு*-. 1. Cheapness மலிவு. *Tp.* 2. Fall in price; விலை யிறக்கம். *Loc.*

சம்பளம் campaḷam, *n.* <*śambala*. School fees; பள்ளிக்கூடச் சம்பளம். *Mod.*

சம்பாகம் campākam, *n.* <*śampāka*. A kind of tree; மரவகை. (*சுக்கிரநீதி*, 228.)

சம்பிரதாபனம் campiratāpaṉam, *n.* <*sampratāpana*. A hell; நரகவகை. (*மணி*. 6, 181, *அரும்*.)

சம்பிரமி-த்தல் campirami-, *11 v. intr.* <*sambhrama*. To be glad; மகிழ்தல். (*தக்கயாகப்*. 109, *உரை*.)

சம்பிரேட்சியம் campirēṭciyam, *n.* <*samprēkṣya*. Deliberation, consideration; ஆராய்ந்தறிகை. (W.)

சம்பு-தல் campu-, *5 v. intr.* To lose zeal or enthusiasm; கூம்புதல். *மனஞ் சம்பித்திரியாமல்* (*தஞ். சர*. ii, 119).

சம்புவிரதி campu-virati, *n.* <*jambu*+. Religious debater who has taken the vow of challenging heretics to a disputation, by planting a branch of *nāval* tree; நாவல் நட்டுப் பிற மதத்தினரை வாதுக்கழைத்துத் தருக்கித்து வெல்வதாக விரதங்கொண்டவ-ன்-ள். *வென்றுள் மற்றிவள் சம்புவிரதியாய்த் திரிந்தெங்கும்* (*நீலகேசி*, 286).

சம்பூயயானம் campūya-yāṉam, *n.* <*sambhūya*+. The march of a king with his able feudatories to meet his enemy; திறன் வாய்ந்த சாமந்த அரசர் பலரோடு ஓர் அரசன் தன் பகைவன்மேற் செல்லுகை. (*சுக்கிரநீதி*, 337).

சம்மதிப்பு cammatippu, *n.* <*சம்மதி*-. Willingness, consent; சம்மதம். (W.)

சம்மந்தம் cammantam, *n.* Corr. of சம்பந்தம். (W.)

சம்மாணம் cammāṇam, *n.* <*சம்மணம்*. Squatting; சம்மணம். *சம்மாணங் கொட்டிமாப் போலே* (*தத்துவப்பிர*. 108, *உரை. பக்*. 101).

சம்மிராட்டு cammirāṭṭu, *n.* <*samrāṭ*. King whose annual revenue is above 1 crore and below 10 crores of silver coins; ஆண்டொன்றுக்கு வெண்பொற்காசுகள் ஒரு கோடிக்கு மேல் பத்துக்கோடிவரை வருவாயாகவுடைய அரசன். (*சுக்கிரநீதி*, 26.)

சம்ரம்பம் camrampam, *n.* <*samrambha*. Diligence; முயற்சி. (*அஷ்டப்பிர*. 80.)

சம்வாதிஸ்வரம் camvāti-svaram, *n.* <*saṃvādi*+. (Mus.) A note which is in consonance with the *vātisvaram;* வாதிஸ்வரத்துடன் ஒத்தொலிக்கும் ஸ்வரம். (Mus. of India, p. 26.)

சம்வித்தத்தம் camvit-tattam, *n.* <*saṃvit* +. Gift for Gods, sacrifices, Brahmans and cows; கடவுளர்க்கும் வேள்விக்கும் அந்தணர்க்கும் பசுவோம்பற்கும் கொடுக்குங் கொடை. (*சுக்கிரநீதி*, 144.)

சம்விற்பத்திரம் camviṟ-pattiram, *n.* <id. +. Treaty of friendship and co-operation between kings; அரசர்கள் தம்முட் பகைமையின்றி ஒத்துவாழ்தற்கு எழுதிக்கொள்ளும் பத்திரம். (*சுக்கிரநீதி*, 94.)

சமகரி-த்தல் camakari-, *11 v. tr.* prob. *sama-kṛ*. To survey; அளந்து கட்டுதல். *ராஜராஜதேவர் பொதுவார் சமகரிக்கிற காலத்து* (S. I. I. vi, 181).

சமஞ்சஸம் camañcasam, *n.* <*samañjasa*. Conformity, resemblance; ஒப்பு. *பொன் சமஞ்சஸங் காண்பதற்கு* (S. I. I. vi, 149).

சமஞ்சிதன் camañcitaṉ, *n.* <*samañcita*. Temple servant; கோயில் வேலைக்காரன். (S. I. I. v, 339.)

சமண்மை camaṇmai, *n.* prob. *சமழ்*-. Defect; குறை. (*யாழ். அக*.)

சமத்காரம் camatkāram, *n.* <*camatkāra*. Charm; வனப்பு. (*திவ். பெரியாழ்*. 3, 7, 8, *ஜீ*.)

சமத்து camattu, *n.* A small brush made of cocoanut husk; தேங்காய் மட்டையினுற் செய்யப்பட்ட புருசு. *Loc.*

சமதி camati, *n.* <*samatā*. Conformity; ஒப்பு. *Madr.*

சமதூரஅட்சரேகை cama-tūra-aṭca-rēkai, *n.* <*sama*+*dūra*+. Parallel of latitude; பூமியின் சமரேகைக்கு வடக்கும் தெற்கும் உள்ள சம தூர அளவுகளைக் காட்டும் இரேகைகள். (M. Navi. 57.)

சமநிலை cama-nilai, *n.* <id.+. (Nāṭya.) A pose, one of *aivakai-p-pātam*, q.v.; ஐவகைப் பாதங்களு ளொன்று. (சிலப். பக். 81.)

சமநிலைச்சக்கரவாளம் camanilai-c-cakkaravāḷam, *n.* <சமநிலை+. Rational horizon; கணிதத்தால் நிருணயித்துக்கொண்ட தொடுவானம். *Pond.*

சமநிறை cama-niṟai, *n.* <சமம்+. Equilibrium; சமன் தூக்கிய நிலை. *Pond.*

சமயநடை camaya-naṭai, *n.* <சமயம்+. Religious practice; சமயாசாரம். சமயநடை சாரா மல் (தாயு. மௌன. 4).

சமரதம் cama-ratam, *n.* <*sama-ratha.* A class of chariots, one of four *iratam;* நால்வகை இரதங்களுள் ஒன்று. (பதும. தென்றல்விடு. 67, உரை.)

சமரரேகை camara-rēkai, *n.* <*samara*+. (Palmistry) A line in palm of hand; கை இரேகைவகை. (திருவாரூ. குற. Ms.)

சமனை camaṉai, *n.* prob. *samana.* (Śaiva.) A yoga, one of *cōṭaca-kalā-pirācāta-yōkam*, q.v.; சோடசகலாபிராசாதயோகத்தினுள் ஒன்று. வெளிசமனையொளி நூறுயிரம் (தத்துவப். 141).

சமாகோராத்திரம் camākōrāttiram, *n.* <*sama*+*ahōrātra.* Equinox; சமராத்திரம். *Pond.*

சமாச்சிரயம் camācciravam, *n.* <*sam-ā-śraya.* Dependence of a weak person upon his protector; ஆற்றலில்லாத ஒருவன் தன்னைக் காப் பாற்றுபவனைச் சார்ந்தொழுகுகை. (சுக்கிரநீதி, 336.)

சமாதானநீதிவான் camātāṉa-nītivāṉ, *n.* <சமாதானம்+. Justice of the peace; ஒருவகை நீதியதிகாரி. (J.)

சமாதானம் camātāṉam, *n.* <*sam-ā-dāna.* Concentration of mind; மனவொருமைப்பாடு. (நாநார்த்த. 909.)

சமாதானி camātāṉi, *n.* <சமாதானம். Even-tempered person; அமைதியுடையவ-ன்-ள். (யாழ். அக.)

சமாதிக்கல் camātikkal, *n.* Small intestines; மணிக்குடல். (மூ. அ.)

சமாலம்பம் camālampam, *n.* <*samālambha.* Smearing; coating; பூசுகை. (சங். அக.)

சமாலி camāli, *n.* Bouquet; பூச்செண்டு. (யாழ். அக.)

சமியன் camiyaṉ, *n.* prob. *samyama.* (Jaina.) Arhat; அருகன். (W.)

சமீரம் camīram, *n.* <*samīra.* cf. சமரம். Battle, fight; போர். (W.)

சமுக்காளக்கோட்டுப்புலி camukkāḷa-k-kōṭṭu-p-puli, *n.* <சமுக்காளம்+கோடு+. A kind of tiger; புலிவகை. (யாழ். அக.)

சமுகங்கொடு-த்தல் camukaṅ-koṭu-, *v. intr.* <சமுகம்+. To attend, used respectfully; பிரசன்னமாயிருத்தல். அத்தருணம் தாங்களும் சமு கங்கொடுத்துச் சிறப்பித்துச் சொல்லுமாறு வேண்டு கின்றோம்.

சமுத்திரச்செடி camuttira-c-ceṭi, *n.* prob. சமுத்திரம்+. Elephant creeper; சமுத்திரப்பாலை. *Pond.*

சமுத்திரப்புளியன் camuttira-p-puḷiyaṉ, *n.* prob. id.+புளி. Scimitar pod; இரிக்கி. *Loc.*

சமுன்னதி camuṉṉati, *n.* <*sam-unnati.* Self-conceit, arrogance; அகந்தை. (W.)

சமூகனி camūkaṉi, *n.* <*sam-ūhanī.* Broom; துடைப்பம். (யாழ். அக.)

சமைப்பு camaippu, *n.* <சமை-. Gift to a charity; தருமக்கொடை. (S. I. I. vii, 55.)

சமையணன் camaiyaṇaṉ, *n.* A village deity; ஒரு கிராமதேவதை. தள்ளற ஊர்காக்குஞ் சமை யணனே (பஞ்ச. திருமுக. 656).

சமையமண்டபம் camaya-maṇṭapam, *n.* <*samaya*+. Audience chamber of a king; அரசன் காட்சியளிக்கு மண்டபம். சமையமண்டப நிறைந்திருந்த திரிசங்குமைந்தனை (அரிச். பு. வேட் டஞ்செய். 16).

சயமங்கலம் caya-maṅkalam, *n.* <*jaya*+. A horse of variegated colour with eyes like cats' eye; வைடூரியம்போன்ற கண்ணும் பல நிறத் தினையுமுடைய குதிரை. (சுக்கிரநீதி, 317.)

சயலட்சுமி caya-laṭcumi, *n.* <id.+. The Goddess of Victory; சயமகள்.

சயனாதனம் cayaṉātaṉam, *n.* <*śayana*+. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 109, உரை.)

சயிலுப்பு cayiluppu, *n.* perh. *śaila*+. Glass-gall; வளையலுப்பு. (மூ. அ.)

சர்க்கராஹஸ்மரி carkkarā-hasmari, *n.* <*śarkarā*+. Gravel; அஸ்மரிரோகம். (இங். வை.)

சர்க்கரைக்கேளி carkkarai-k-kēḷi, *n.* <சர்க் கரை+. A kind of plantain; வாழைவகை. *Loc.*

சர்க்கரைப்பருப்பு carkkarai-p-paruppu, *n.* <id.+. A confectionary; பணிகார வகை. *Pond.*

சர்க்கரைபேரி carkkarai-pēri, *n.* <id.+. A kind of pear; பேரிவகை. *Loc.*

சர்க்கரைவட்டு carkkarai-vaṭṭu, *n.* <id.+. Ball of sugar; வெல்லக்கட்டி. (S. I. I. vii, 311.)

சர்க்காரூழியம் carkkār-ūḻiyam, *n.* <சர்க்கார்+. Work done for Government without remuneration; ஊதியமின்றி அரசாங்கத்துக்குச்செய்யும் வேலை. (R. T.)

சர்ப்பாரூடம் carppārūṭam, *n.* <*sarpa*+. (Astrol.) A mode of prediction; ஆருடவகை. (தஞ். சர. iii, 34.)

சர்ப்பிராகி carppirāki, *n.* < Persn. *sarbarāhi.* Providing supplies; சர்ப்பிராசி.

சர்ப்பிராயி carppirāyi, *n.* See சர்ப்பிராகி.

சர்மாசனம் carmācaṉam, *n.* <சர்மம்+. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. *Loc.*

சர்வஉத்திரவு carva-uttiravu, *n.* <*sarva* +. Carte blanche, signed paper given to a person to write his own terms on it; இஷ்டப்படி உத்தரவு முதலியன எழுதிக்கொள்ளும்படியாக ஒருவனுக்குக் கையெழுத்திட்டுக்கொடுத்த காகிதம். *Pond.*

சர்வகலாசாலை carva-kalā-cālai, *n.* <id.+ *kalā*+. University; பல்கலைக் கழகம். *Mod.*

சர்வகலையகராதி carva-kalai-y-akarāti, *n.* <id.+கலை+. Encyclopaedia; எல்லாக் கலைகளையும் விவரிக்கும் அகராதி. *Pond.*

சர்வசத்திமத்துவம் carva-cattimat-tuvam, *n.* <id.+*śakti-mat*+. Omnipotence; சர்வவல்லமையுடைமை. (விவேகசிந். பக். 4.)

சர்வரசம் carva-racam, *n.* <id.+. Common salt; கறியுப்பு. (R.)

சர்வவித்தியாகரநூல் carva-vittiyākara-nūl, *n.* <id.+*vidyākara*+. See சர்வகலையகராதி. *Pond.*

சர்வன் carvaṉ, *n.* <*śarva.* One of *ēkātaca-ruttirar*, q.v.; ஏகாதசருத்திரருளொருவர். (தக்கயாகப். 443, உரை.)

சர்வாங்கசவரம் carvāṅka-cavaram, *n.* <*sarva*+*aṅga*+. Shaving the whole body; உடல்முழுதும் மயிர்கழிக்கை. *Loc.*

சர்வாங்கவாயு carvāṅka-vāyu, *n.* <id.+ id.+. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 132.)

சர்வாத்துமகத்துவம் carvāttumakat-tuvam, *n.* <id.+*ātman*+*tva.* All-pervasiveness; immanence; எல்லாவற்றிலும் ஊடுருவியிருக்கை. (விவேகசிந். 4.)

சர்வாதிகாரி carvātikāri, *n.* <*sarvādhikārin.* Dictator; அரசியல் முதலிய காரியங்களைத் தனித்து நிர்வகிப்போன். *Mod.*

சர்வாதித்தியம் carvātittiyam, *n.* <*sarva* +. Public feast; பெருவிருந்து.

சரகுண்ணி carakuṇṇi, *n.* <சரகு+. A species of small cattle-tick; சிறுவுண்ணி வகை. (சங், 1, 5, 5, ஜீ.)

சரசாங்கி caracāṅki, *n.* <*sarasāṅgī.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

சரணகோசம் caraṇa-kōcam, *n.* <*caraṇa* +. Stockings; மேற்சோடு. *Pond.*

சரத்து carattu, *n.* prob. சிரத்தை. 1. Diligence; சிரத்தை. சரத்துளதீரன் (பிரதாப. விலா. 2). 2. cf. ஷரத்து. Wager; பந்தயம். சரத்துப் போட்டுக்கொண் டிருக்கிறான். *Loc.*

சரப்பலகை cara-p-palakai, *n.* <சரம்+. Tie-beam; தூண்களுக்கு மத்தியிற் செல்லும் பலகை. *Tj.*

சரமண்டலம் cara-maṇṭalam, *n.* cf. சுரமண்டலம். *Curamaṇṭalam,* a musical instrument; சுரமண்டலம். தம்புரு வீணை சரமண்டலம் (மான்விடு. 240).

சரமதேகதாரி carama-tēka-tāri, *n.* <சரமம்+தேகம்+. (Jaina.) One who has taken a mortal body for the last time before final deliverance; முத்திக்கு முன்னுள்ள கடைசி சரீரத்தையுடையவன்.

சரமாலை cara-mālai, *n.* <சரம்+. Festoon; தோரணமாலை. (யாழ். அக.)

சரமுல்லை cara-mullai, *n.* <id.+. Tooth; பல். (யாழ். அக.)

சரவை caravai, *n.* Coarseness; roughness; பரும்படி. *Pond.*

சரவைக்கணிப்பு caravai-k-kaṇippu, *n.* <சரவை+. Rough estimate; உத்தேச மதிப்பு. *Pond.*

சரஸ்வதி carasvati, *n.* <*sarasvatī.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 104.)

சரஸ்வதிபண்டாரம் carasvati-paṇṭāram, *n.* <*sarasvatī*+. Library; புத்தகசாலை. சரஸ்வதிபண்டாரத்தார் (M. E. R. 277 of 1913).

சரஸ்வதிமனோஹரி carasvati-manōhari, *n.* <id.+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

சராதீதை carātītai, *n.* <*cārātītā*. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

சரி-த்தல் cari-, *11 v. intr.* <*car*. To move; அசைதல்.

சரிகைமலை carikai-malai, *n.* <சரிகை+. Brassmountain; பித்தளைமலை. (யாழ். அக.)

சரிகோணம் cari-kōṇam, *n.* <சரி+. Right angle; நேர்கோணம். (யாழ். அக.)

சரித்தான்பாண்டி carittāṉ-pāṇṭi, *n.* prob. சரி-+. A kind of hop-scotch; பாண்டி விளையாட்டுவகை. *Loc.*

சரிபொழுது cari-poḻutu, *n.* <id.+. Evening; சாயங்காலம். (W.)

சரியை cariyai, *n.* <சரிகை. Lace; சரிகை. (யாழ். அக.)

சரிவளை cari-vaḷai, *n.* prob. சரி-+. A variety of bangles; வளைவகை. (திவ். பெரியாழ். 3, 4, 8, வ்யா. பக். 618.)

சரீரசாஸ்திரம் carīra-cāstiram, *n.* <சரீரம்+. Physiology; உடற்கூறுகளைப் பற்றிய சாத்திரம். *Mod.*

சரீரப்பழுது carīra-p-paḻutu, *n.* <id.+. Deformity; அங்கவீனம். (R.)

சருக்கராபம் carukkarāpam, *n.* <*śarkarābha*. A kind of gem; இரத்தினவகை. (சுக்கிர நீதி, 186.)

சருக்கால்வேலை carukkāl-vēlai, *n.* perh. சருக்கு-+. Building with verandah; தாழ்வாரத் தோடு கூடிய கட்டிடம். *Loc.*

சருக்குக்கட்டை carukku-k-kaṭṭai, *n.* <id.+. Wooden brake; தேரோட்டத்தை ஒழுங்கு படுத்த தேர்க்காலிலிடும் மரக்கட்டை. *Tinn.*

சருப்பணம் caruppaṇam, *n.* <*sarpaṇa*. A pace of horse; குதிரை கதிவகை. (சுக்கிரநீதி, 72.)

சருவசங்காராதனம் caruva-caṅkārā-taṉam, *n.* <*sarva*+*saṁhāra*+. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 108, உரை.)

சருவசத்தி caruva-catti, *n.* <*sarva-śakti*. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

சருவசித்து caruva-cittu, *n.* <*sarva-jit*. All-conqueror; எல்லாவற்றையும் வென்றவன். சருவசித்தாகியே லக்ஷயனுருவாய் (சரபேந்திர. குற. 17, 8).

சருவே caruvē, *n.* <E. *survey*. Measurement of land, etc.; நில முதலியவற்றை அளக்கை. *Mod.*

சல்லடைக்கழிவு callaṭai-k-kaḻivu, *n.* <சல்லடை+. Coarse grit; கப்பி. *Pond.*

சல்லாபவுப்பு callāpa-v-uppu, *n.* perh. சல்லாபம்+. *Pūraṇāti-y-uppu*, a kind of salt; பூரணாதியுப்பு. (மூ. அ.)

சல்லி calli, *n.* (Arch.) Moulding work; கொய்சக வேலை. *Pond.*

சல்லிக்கொடி calli-k-koṭi, *n.* perh சல்லி +. A creeper; வையகழலி. (மூ. அ.)

சலக்கமனை calakka-maṉai, *n.* <சலக்கம்+. cf. சலக்கரணை. Latrine; மலசலங் கழிக்கு மிடம். (யாழ். அக.)

சலகண்டகம் cala-kaṇṭakam, *n.* <*jala*+. (யாழ். அக). 1. An aquatic plant; நீர்ப்பூடுவகை. 2. Crocodile; முதலை.

சலகம் calakam, *n.* <*śalaka*. Spider; பொட்டுப்பூச்சி. (யாழ். அக.)

சலகாரம் calakāram, *n.* <*jala*+*kāra*. Hydrogen; சலவாயு. *Pond.*

சலசரிமெழுகு cala-cari-meḻuku, *n.* prob. *jala*+. A kind of medicine; மருந்துவகை. (தஞ். சர. iii, 76.)

சலத்திரம் calattiram, *n.* <*jala-trā*. Umbrella of palmyra leaves; ஓலைக்குடை. (யாழ். அக.)

சலந்தராரி calantarāri, *n.* <*Jalandhara*+. A manifestation of Śiva; சிவமூர்த்தங் களுளொன்று. (காஞ்சிப். சிவபுண். 22.)

சலநாட்டை cala-nāṭṭai, *n.* prob. சலம்+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. 102.)

சலநாட calanāṭa, *n.* cf. சலநாட்டை. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

சலப்பிரமேகம் cala-p-piramēkam, *n.* <சலம்+. A kind of disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 132.)

சலவாதம் cala-vātam, *n.* <id.+. A malady; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 136.)

சலவு calavu, *n.* Membrum virile; ஆண்குறி. (யாழ். அக.)

சலவை[1] calavai, *n.* prob. Persn. *shāl.* cf. சல்லா. Shawl; சால்வை. (தெய்வச். விறலிவிடு. 607.)

சலவை[2] calavai, *n.* prob. சலவு. Castration; விதையடிக்கை. *Pond.*

சலாகை calākai, *n.* cf. சலாகு. A goldsmith's tool; தட்டார் கருவிவகை. *Loc.*

சலாகையச்சு calākai-y-accu, *n.* < சலாகை +. A coin; நாணயவகை. (M. E. R. 585 of 1922.)

சலாங்கம் calāṅkam, *n.* A kind of heron; நாரைவகை. (யாழ். அக.)

சலாபச்சக்கரம் calāpa-c-cakkaram, *n.* perh. சலாபம் +. (Pros.) A kind of poetic composition; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

சலாம்பு-தல் calāmpu-, 5 *v. intr.* To turn the sod, as with a plough; மண்ணை வெட்டிப் புரட்டுதல். *Loc.*

சலிப்புப்பண்ணு-தல் calippu-p-paṇṇu-, *v. intr.* < சலிப்பு +. To give trouble; தொந்தரை பண்ணுதல். *Pond.*

சலுப்பு-தல் caluppu-, 5 *v. tr.* & *intr.* < *jalp.* To prattle; உளறுதல். *Loc.*

சவட்டுமண் cavaṭṭu-maṇ, *n.* < சவடு +. Fuller's earth; உவர்மண். *Loc.*

சவட்டை cavaṭṭai, *n.* Cat's tail; whip; சாட்டை. முப்பது சவட்டைத் திண்டோளெடுத்திடா வடித்து (மேருமந். 317).

சவடி cavaṭi, *n.* White-flowered fragrant trumpet tree; கடலாத்தி. (L.)

சவணி cavaṇi, *n.* [M. *cavaṇi.*] The fibrous covering enclosing the pulp of the jackfruit; பலாச்சுளையை மூடியிருக்குஞ் சவ்வு. *Loc.*

சவர்[1] cavar, *n.* Fault; குற்றம். சவருடைய மனைவாழ்க்கை (நீலகேசி, 279).

சவர்[2] cavar, *n.* < Arab. *safar.* The second Arabic month; அரபியர் வருஷத்தின் இரண்டாம் மாதம். (பெரியவரு. 28.)

சவர்பாய் cavar-pāy, *n.* < U. *sabar* +. Top-gallant sail; சவர்மரத்திற் கட்டப்படும் பாய். (M. Navi. 83.)

சவர்மரம் cavar-maram, *n.* < id. +. Top-gallant mast; காவிமரத்துக்கு மேலுள்ள பாகம். (M. Navi. 81.)

சவரிக்கொட்டை cavari-k-koṭṭai, *n.* < சவரி +. Pericarp of the lotus; தாமரைக் கொட்டை. *Loc.*

சவள் caval, *n.* cf. சவள்தடி. Oar; ஓடக்கோல். *Pond.*

சவளிச்சரக்கு cavaḷi-c-carakku, *n.* Inferior goods; நயமில்லாத சரக்கு. *Pond.*

சவனம் cavaṉam, *n.* < *śakuna.* Omen; சகுனம். *Pond.*

சவாபுஷ்பம் cavā-puṣpam, *n.* < *japā* +. Rose; முட்செவ்வந்தி. (யாழ். அக.)

சவால் cavāl, *n.* < Persn. *suwāl* < Arab. *su'al.* Challenge; அறை கூவுகை. *Mod.*

சவுக்கண்டி cavukkaṇṭi, *n.* < U. *cauk-kandi.* Summer-house; quadrangular shed within a garden; தோப்பில் கட்டப்படுஞ் சவுக்கை. *Colloq.*

சவுக்காக்கினை cavukkākkiṉai, *n.* < சவுக்கு +. Sentence of whipping; சாட்டையடித் தண்டனை. *Pond.*

சவுக்கியமுறைவிளக்கம் cavukkiya-muṟai-viḷakkam, *n.* < சௌக்கியம் + முறை +. Hygiene; சுகாதாரவிளக்கம். *Pond.*

சவுதாரிப்பாய் cavutāri-p-pāy, *n.* A kind of coarse mat; முரட்டுக்கோரையால் நெய்யப்பட்ட பாய். *Loc.*

சளம்பம் caḷampam, *n.* < சளம்பு. A kind of coat; சட்டைவகை. தோன்முழுச் சளம்ப மீதலம் பவே (தக்கயாகப். 369).

சற்கை caṟkai, *n.* Skin; தோல். (நீலகேசி, 273, உரை.)

சறடு caṟaṭu, *n.* Dirt; அழுக்கு. (மூ. அ.)

சன்மபாஷை caṉma-pāṣai, *n.* < சன்மம் +. Mother-tongue; சுய பாஷை. (R.)

சன்னக்கச்சோலம் caṉṉa-k-kaccōlam, *n.* < சன்னம் +. A kind of aromatic; கந்தத்திரவிய வகை. (நாநார்த்த.)

சன்னக்கீற்றுருபாய் caṉṉa-k-kīṟṟu-rūpāy, *n.* < id. + கீறு- +. An ancient coin; பழையநாணயவகை. (சரவண. பணவிடு. 63.)

சன்னசிலம்புரி caṉṉa-cilampuri, *n.* < id. +. A kind of saree; புடைவை வகை. (யாழ். அக.)

சன்னிபம் cannipam, n. <sam+nibha. Comparison; உவமை. (W.)

சன்னியம் canniyam, n. prob. sainya. Fight, battle; போர். (W.)

சன்னை cannai, n. <Pali. saññā <saṁjñā. See சதுஸ்ஸன்னை. (மேருமந். 144.)

சன்னைகொன்னை cannaikonnai, n. Unrefined speech; திருத்தமற்ற பேச்சு. Loc.

சனக்குறைவு cana-k-kuraivu, n. <சனம் +. Depopulation; மக்கள் குடிபோடிப்போகை. Pond.

சனகமாதா canaka-mātā, n. <Janaka+. Natural mother, dist. fr., cuvīkāra-mātā; பெற்ற தாய்.

சனகராகம் canaka-rākam, n. <id.+. Primary rāga; மேளகர்த்தா.

சனசித்திரம் canacittiram, n. cf. சனகம். Yellow wood-sorrel; புளியாரை. (யாழ். அக.)

சனிபுருடச்சக்கரம் canipuruṭa-c-cakkaram, n. <சனி+புருடன்+. (Pros.) A kind of versification; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

சனமடிவு cana-maṭivu, n. <சனம்+. See சனக்குறைவு. Pond.

சனுசப்தமி canu-captami, n. <Jahnu+. A religious fast observed on captami titi in the bright fortnight of the Vaiśāka month, in honour of the sage Jahnu; வைசாக சுக்ல சப்தமியில் சன்னுமுனிவரை உத்தேசித்துக் கொண்டாடப் படும் நோன்பு. (பஞ்.)

சஞ்ஜீர்ஜாமீன் cajjīr-jāmīn, n. <Persn. zanjīr+. Mutual covenant or security in which each man becomes security for the rest; கூட்டு ஜாமீனில் ஒவ்வொருவனும் மற்றையோருக்குப் பிணைப்படுகை. Tj.

சஷ்டியாங்கிசம் caṣṭi-y-āṅkicam, n. <ṣaṣṭi+. (Astrol.) A mode of division of the horoscopic chart, one of taca-varukkam; தச வருக்கத்து ளொன்று.

சா

சாக்கடை cākkaṭai, n. Mire; சேறு. (யாழ். அக.)

சாக்கிரிகம் cākkirikam, n. <cakra. That which is round; வட்டமானது. (யாழ். அக.)

சாக்கிரிகன் cākkirikan, n. <cakrin. Oil-monger; எண்ணெய் வாணியன். (யாழ். அக.)

சாக்கின் cākkin, n. <Arab. sākin. Inhabitant; வசிப்பவன். (P. T. L.)

சாகபுக் cāka-puk, n. <śāka-bhuj. Vegetarian; மரக்கறி யுணவினன். (சுகசரி. 53.)

சாகாசிவை cākācivai, n. Aerial root; விழுது. (யாழ். அக.)

சாகுலிகர் cākulikar, n. prob. sakuli. Fisherman; கரையார். (யாழ். அக.)

சாகுவளி cākuvaḷi, n. [K. Tu. sāguvaḷi.] Cultivation, agriculture; சாகுபடி. தரிசு பூமிசாகுவளி செய்திருக்க (தாசில்தார்நா. பக். 89).

சாகுளி cākuḷi, n. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

சாங்கிருதம் cāṅkirutam, n. Tinkler in an anklet; சலங்கை. (யாழ். அக.)

சாங்குலம் cāṅkulam, n. Poison; நஞ்சு. (யாழ். அக.)

சாச்சரியம் cāccariyam, n. cf. ஆச்சரியம். Wonder; ஆச்சரியம். (யாழ். அக.)

சாசனபத்திரம் cācana-pattiram, n. <śāsana+. Royal ordinance; அரசன் பிறப்பிக்கும் கட்டளைப்பத்திரம். (சுக்கிரநீதி, 93.)

சாசனம் cācanam, n. <śāsana. (யாழ். அக.) 1. Tax-free village; இறையிறந்த ஊர். 2. Fishermen's quarters; வலையர்சேரி.

சாசுவதியம் cācuvatiyam, n. <śāśvata. Permanence; சாசுவதம். சந்திராதித்தவற் சாசுவதியமாகச் செய்து (S. I. I. vii, 490).

சாட்சிபோசனம் cāṭci-pōcanam, n. <சாட்சி+. Tasting of food before it is served to persons of rank; தலைவர் முதலியோர் உண்ணுமுன் அவ்வுணவை உண்டு பரிசோதிக்கை. Loc.

சாட்டு cāṭṭu, n. cf. சாட்டுவெலம். Meadow, pasture land; புற்றரை. (யாழ். அக.)

சாட்டுவரி cāṭṭu-vari, n. perh. சாட்டு-+. A tax; வரிவகை (S. I. I. v, 139.)

சாடன் cāṭan, n. Traitor; நம்பிக்கைத் துரோகி. (யாழ். அக.)

சாடி cāṭi, n. <ஜாடி. 1. Road-sweep; வீதிக் குப்பையைக்கூட்ட உதவும் மாறுவகை. Mod. 2. Socket for setting gems; இரத்தினங்களைப் பதிக்கும் உம்மிசம். ரத்நங்களை யெல்லாம் சாடியிலே பதித்துக் காட்டுமாபோலே (திவ். அமலனாதி, 7, வ்யா. பக். 86).

சாண்வயிறு cāṇ-vayiṟu, n. <சாண்+. Lower part of the abdomen; அடிவயிறு. (யாழ். அக.)

சாணம் cāṇam, *n.* cf. *சாணல்*. Flaxen cord; சணற்கயிறு. *இறுக்கின சாணமும் கட்டின கச்சும்* (*திவ். திருநெடுந்.* 21, *வ்யா. பக்.* 170).

சாணமுத்திரை cāṇa-muttirai, *n.* perh. *விசாணம்* +, (Śaiva.) A hand-pose; முத்திரை வகை. (*சைவாநுட். வி.* 17.)

சாணாக்கிப்பூச்சி cāṇākki-p-pūcci, *n.* <*சாணாங்கி* +. A kind of worm; புழுவகை. *Loc.*

சாணாகமூக்கன் cāṇāka-mūkkaṉ, *n.* prob. id.+. A kind of bee; வண்டுவகை. (*யாழ். அக.*)

சாணிபோடு-தல் cāṇi-pōṭu-, *v. intr.* <*சாணி* +. To drop stealthily some betel-leaves into the basket while counting them; வெற்றிலையை யெண்ணுகையில் கள்ளத்தனமாகச் சிலவற்றை அடிச்கையால் நழுவவிடுதல். *Loc.*

சாத்தகணத்தார் cātta-kaṇattār, *n.* <*சாத்தன்* +. Managing committee of an Aiyaṉār temple; ஐயனார் கோயில் தருமகர்த்தர்கள். (S. I. I. iii, 10.)

சாத்தண்டம் cā-t-taṇṭam, *n.* <*சா-* +. Punishment for killing; கொலைசெய்ததற்கு விதிக்குந் தண்டனை. *சாத்தண்டம் செய்கில் இருபத்துநாலு காணம் கொடுப்பது* (T. A. S. iii, 195).

சாத்திரபஞ்சகம் cāttira-pañcakam, *n.* <*śāstra* +. The five sciences, *ilaukika-cāttiram, vaitika cāttiram, attiyāttuma-cāttiram, atimār-kkika-cāttiram* and *mantira-cāttiram*; இலௌகிக சாத்திரம் வைதிகசாத்திரம் அத்தியாத்துமசாத்திரம் அதிமார்க்கிகசாத்திரம் மந்திரசாத்திரம் என்று ஐவகைப்பட்ட சாத்திரம்.

சாத்திரமாணி cāttira-māṇi, *n.* <*chātra* +. Student; மாணவன். (S. I. I. v, 500.)

சாத்திரை cāttirai, *n.* <Hind. *jātrā*. A festival; விழாவகை. (*யாழ். அக.*)

சாத்து cāttu, *n.* prob. *சாந்து*. Big grinding stone; சாத்தம்மி. *ஓர்சாமஞ் சாத்தி லரைக்க தனித்து* (*தஞ். சா.* iii, 69).

சாத்துக்கால் cāttu-k-kāl, *n.* <*சார்த்து-* +. 1. Metal leg used in decorating an idol; உற்சவவிக்கிரகத்தை அலங்கரிப்பதில் உபயோகிக்குந் திருப்பாதம். *Loc.* 2. A blemish in cattle; மாட்டுக் குற்றவகை. (*பெரியமாட்.* 18.)

சாத்துக்கூறை cāttu-k-kūṟai, *n.* <id.+. Vestment of a deity; திருப்பரிவட்டம். (S. I. I. iv, 280.)

சாத்துக்கை cāttu-k-kai, *n.* <id.+. Metal arm used in decorating an idol; உற்சவவிக்கிரகத்தை அலங்கரிப்பதில் உபயோகிக்குந் திருக்கை. *Loc.*

சாத்துவிகவேளை cāttuvika-vēḷai, *n.* <*sāttvika* +. One of *mu-k-kuṇa-vēḷai*; முக்குணவேளைகளு ளொன்று. (*பஞ்.*)

சாத்துவிதஅகங்காரம் cāttuvita-akaṅ-kāram, *n.* <id.+. (Śaiva.) The principle from which the mind and the *ñāṉēntiriyam* emanate; மனமும் ஞானேந்திரியங்களும் பிறப்பதற்கான துணதத்துவம். (*அஷ்டப்பிர. தத்துவசங்.* 83.)

சாதகக்கிள்ளையோன் cātaka-k-kiḷḷaiyōṉ, *n.* *Kāyccaṟpāṣāṇam*, a mineral poison; காய்ச்சற்பாஷாணம். (*யாழ். அக.*)

சாதகசூதகம் cātaka-cūtakam, *n.* <*jātaka* +. Pollution on account of child-birth; வாலாமை. (*யாழ். அக.*)

சாதகலம்பம் cātakalampam, *n.* *Tālampa-pāṣāṇam*, a mineral poison; தாலம்ப பாஷாணம். (*யாழ். அக.*)

சாதகவாதி cātakavāti, *n.* Sand containing lead-ore; நாகமணல். (*யாழ். அக.*)

சாதம் cātam, *n.* <*śāta*. See சாதவேதநீயம்.

சாதவேதநீயம் cāta-vētanīyam, *n.* <id. +. (Jaina.) The karma that leads to happiness; இன்பத்தை விளைவிக்குங் கருமம். (*மேருமந்.* 96, *உரை.*)

சாதாக்கு-தல் cātākku-, *v. tr.* <*சாது* + *ஆ-*. To tame; பழக்கிச் சாந்தப்படுத்துதல். *Pond.*

சாதாரணடப்பு cātāraṇa-ṭappu, *n.* <*சாதாரணம்* +. An apparatus for gauging the speed of a ship, log; கப்பலின் கதியை நிதானிக்க உதவும் ஒருவகைக் கருவி. (M. Navi. 607.)

சாதாரணத்திருச்சபை cātāraṇa-t-tiru-c-capai, *n.* <id.+. Christianity; கிறிஸ்துமதம். *Chr.*

சாதாரணை[1] cātāraṇai, *n.* <id. Commonness; சாதாரணம். *Nāñ.*

சாதாரணை[2] cātāraṇai, *n.* <*sādhāraṇā*. Prostitute; பொதுமகள்.

சாதி-த்தல் cāti-, *11 v. tr.* To assert positively and obstinately; to persist in; பிடிவாதமாய்ச் சொல்லுதல். *Loc.*

சாதிகை cātikai, *n.* perh. *சாதி-*. Skill; சாமர்த்தியம். (*யாழ். அக.*)

சாதிபத்திரம் cātipattiram, *n.* <*sādi-patra*. Mortgage bond; ஈட்டுப்பத்திரம். (*சுக்கிரநீதி*, 94.)

சாதியடி cāti-y-aṭi, *n.* <*சாதி* +. Foot of twelve inches; பன்னிரண்டு அங்குலங்கொண்ட ஆங்கில அடி. (*யாழ். அக.*)

சாதுதி cātuti, n. Aunt; மாமி. (யாழ். அக.)

சாதுரியவணி cāturiya-v-aṇi, n. <சாதுரியம்+. (Rhet.) A figure of speech; அணிவகை. Pond.

சாந்தாத்மா cāntātmā, n. <śāntātman. (Phil.) Pure Brahman; சுத்தப்பிரம்மம். (விசார சங். 305.)

சாந்துக்காரை cāntu-k-kārai, n. <சாந்து +. Lime for plastering walls, etc.; சுவர் முதலியன பூசுதற்குரிய சுண்ணும்பு. Loc.

சாந்தை cāntai, n. <Śāntā. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

சாப்பாட்டுவிடுதி cāppāṭṭu-viṭuti, n. <சாப்பாடு+. Hotel; விலைக்கு உணவளிக்கும் இடம். Loc.

சாப்பு-தல் cāppu-, 5 v. tr. <சோப்பு-. To strike; அடித்தல். கேவரகைத் தண்டெடுத்துக் கேப்பை யென்று சாப்பினேன் (நெல்விடு. 416).

சாபச்சுரம் cāpa-c-curam, n. <சாபம்+. A kind of fever, supposed to be caused by the curse of great persons; பெரியோர்கள் சபித்தலால் உண்டாவதாகக் கருதப்படுஞ் சுரம். (ஜீவரட். சுரரோக. பக். 32.)

சாபம் cāpam, n. <śāpa. That which is prohibited or banned; விலக்கப்பட்டது. லோகத்தார் சாபமென்று ஆசௌசங் கொள்கின்றது மாம்ஸத்தையன்றே (நீலகேசி, 341, உரை).

சாபாவணி cāpāvaṇi, n. prob. Hind. cupānā. Concealment of cultivation for the purpose of evading payment of Government revenue; அரசிறையைத் தவிர்ப்பதற்காக ஒளித்துச் செய்யும் பயிர்த்தொழில். (M. Sm. D. I. 278.)

சாம்பவம் cāmpavam, n. <jāmbava. Rose-apple; சம்புநாவல். (யாழ். அக.)

சாம்பிராணிமாடன் cāmpirāṇi-māṭaṉ, n. <சாம்பிராணி+. (W.) 1. A devil; ஒரு பிசாசு. 2. Utter fool; முழுமுடன்.

சாம்பேறு cām-pēṟu, n. prob. சொம்+. Proprietor's share of produce; சுவாமிபேறு. Nāñ.

சாமக்கீரை cāma-k-kīrai, n. prob. சாமம் +. A kind of greens; கீரைவகை. (விவசா. 4.)

சாமகண்டம் cāma-kaṇṭam, n. prob. sāman+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

சாமகலியாணி cāma-kaliyāṇi, n. prob. id.+. (Mus.) A specific melody-type; இராக வகை. (பரத. ராக. 103.)

சாமந்தன்காசு cāmantaṉ-kācu, n. <சாமந்தன்+. An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 56.)

சாமயிகபத்திரம் cāmayika-pattiram, n. <sāmayika+. Agreement relating to the shares of the members of a trade guild; வாணிகக்கூழுவினர் கூடிப் பங்குப்பொருள்களைப் பற்றிச் செய்துகொள்ளும் வியவஸ்தை. (சுக்கிரநீதி, 94.)

சாமரி cāmari, n. prob. சாமரம். Horse; குதிரை. (யாழ். அக.)

சாமாநதி cāmā-nati, n. <śyāmā+. The river Paccaiyāṟu; பச்சையாறு. (நாமதீப. 528.)

சாமால்பண்ணு-தல் cāmāl-paṇṇu-, v. tr. prob. Hind. sambhālnā+. To deposit with a mediator; பொதுக்கட்டுதல்.

சாமானட்டவணை camaṉ-aṭṭavaṇai, n. <சாமான்+. Invoice; சரக்கு அனுப்புவோன் அவற்றை ஏற்றுக்கொள்வோனுக்கு அனுப்புஞ் சரக்கு விவரச் சீட்டு. (M. Navi. 123.)

சாமானம் cāmāṉam, n. <id. Article; சாமான். Loc.

சாமானிடாப்பு cāmāṉi-ṭāppu, n. <சாமான்+. Inventory of goods; சாமான்களின் விவரப்பட்டிகை. Pond.

சாமானியை cāmāṉiyai, n. <sāmānyā. One of the three kinds of women classed according to their character and conduct; குணம் செயல்களாற் பிரிக்கப்பட்ட மூவகைப் பெண்டிருள் ஒருவகையினர். (சுக்கிரநீதி, 212.)

சாமிகும்பிடு-தல் cāmi-kumpiṭu-, v. intr. <சாமி+. 1. To worship a deity; கடவுளை வழிபடுதல். 2. To conduct the worship of a deity; தெய்வபூசை நடத்துதல். (எங்களூர், 95.)

சாமியம் cāmiyam, n. <cāmya. Food; போசனம். (யாழ். அக.)

சாமியன் cāmiyaṉ, n. <ஜாமீன். One who stands surety for another's debt; பிறர் கடனுக்கு ஈடு நிற்போன். (யாழ். அக.)

சாமியோடு cāmi-y-ōṭu, n. prob. சாமி+. A kind of tile; ஒருவகையோடு. Nāñ.

சாய்மானம் cāy-māṉam, n. <சாய்-. Conformity, decorum; ஒப்பாசாரம். (யாழ். அக.)

சாயக்கொண்டை cāya-k-koṇṭai, n. perh. சாய்-+. 1. Women's tresses done in a particular way; மகளிரது கொண்டை வகைகளுளொன்று. 2. A turban of red or blue silk re-

sembling a crown, put on the head of *uṟcava-mūrti;* உற்சவமூர்த்திக்குச் சிவப்பு அல்லது நீலநிறப் பட்டாடையால் சிரசில் முடிபோல் அமைக்கப்படுங் கொண்டை. 3. A kind of coronet; முடியணி வகை.

சாயசாந்தி cāya-cānti, *n.* prob. *chāyā*+. Crematory rite; அந்திமேட்டி. (யாழ். அக.)

சாயம்வெளு-த்தல் cāyam-veḷu-, *v. intr.* <சாயம்+. To appear in true colours by the removal of false show or appearance; பகட்டு வேஷம் நீங்கப்பெற்று உண்மை தோன்றுதல். *Colloq.*

சாயமரம் cāya-maram, *n.* <சாயம்+. American logwood, m. tr., *Haematoxylon campechianum;* மரவகை. (இங். வை.)

சாயாதரங்கிணி cāyā-taraṅkiṇi, *n.* prob. *chāyā*+. (Mus.) A specific melody-type; இராக வகை. (பரத. ராக. 103.)

சாயை[1] cāyai, *n.* <*jāyā.* Wife; மனைவி. (யாழ். அக.)

சாயை[2] cāyai, *n.* <*chāyā.* Trace; சுவடு. தன்னய விருப்பின் சாயைகூடத் தன்னிடம் இல்லாமலும் (நித்தியானுசந். பக். 366).

சார் cār, *n.* <சார்-. 1. Wall; சுவர். தச்சஞ்சூசிச் சாரகழ்கள்வனென்கின்ற தன்மையிஞய் (நீலகேசி, 510). 2. Benami; மலாமை. *Nāñ.*

சார்படமானம் cārpaṭamāṉam, *n.* <சார்பு+. Subsequent mortgage; பின்னொற்றி. *Loc.*

சார்வாய் cārvāy, *n.* perh. சாறு+. Palmyra fruit sliced and cooked; அறுத்தவித்த பனங்காய். (யாழ். அக.)

சாரங்கநாட்டை cāraṅka-nāṭṭai, *n.* prob. *sāraṅga*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 102.)

சாரங்கபாஷாணம் cāraṅkapāṣāṇam, *n.* cf. சாலம்பபாஷாணம். A kind of arsenic; பாஷாணவகை. (சங். அக.)

சாரங்கம் cāraṅkam, *n.* <*sāraṅga.* A kind of *viṇai;* வீணைவகையு ளொன்று. (பரத. ஒழி. 15.)

சாரசணம் cāracaṇam, *n.* A waist-band for women; மாதரின் இடையணிவகை. (யாழ். அக.)

சாரடை cāraṭai, *n.* <சார்+. A tax; வரி வகை. (S. I. I. iv, 106.)

சாரப்பெண் cāra-p-peṇ, *n.* <*jārā*+. Harlot; வேசி. (சிவரக. அபுத்தி. 9.)

சாரம்[1] cāram, *n.* perh. சார்-. A figure of speech; அணிவகை. (பாப்பா. 72.)

சாரம்[2] cāram, *n.* <*kṣāra.* A kind of ash; க்ஷாரம்.

சாரமாணி cāramāṇi, *n.* Professional buffoon; பரிகாசக்காரன். (சிலப். 5, 53, உரை.)

சாராசாரி cārācāri, *n.* cf. சாரைசாரையாய். Going in a crowd; கூட்டமாய்ப்போகை. (யாழ். அக.)

சாரிபூமி cāri-pūmi, *n.* <சாரி+. Esplanade; முற்றவெளி. (E. T. Dic.)

சாரிரத்தை cārirattai, *n.* cf. சாரியம். Strychnine; எட்டி. (யாழ். அக.)

சாரீரசம்பத்து carīra-campattu, *n.* <சாரீரம்+. See சாரீரநயம். இவனுடைய சாரீரசம்பத்தை என்னென்று சொல்வேன்.

சாரீரநயம் cārīra-nayam, *n.* <id.+. Excellence in the quality of voice; குரலின் மேம்பாடு. இவனுக்குச் சாரீரநயம் உண்டு.

சாருகருணாடசாரங்கம் cāru-karuṇāṭa-cāraṅkam, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 104.)

சாருகேசி cārukēci, *n.* perh. *cāru*+*kēśī.* A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

சால்ஜமாகர்ஜ் cāl-jamā-karj, *n.* <சால்+. Annual receipts and expenditure; வருஷாந்தர வரவுசெலவு. (P. T. L.)

சாலக cālaka, *n.* A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

சாலபஞ்சிகை calapañcikai, *n.* <*sāla-bhañjikā.* Prostitute; வேசி. (யாழ். அக.)

சாலம்பபாஷாணம் cālampa-pāṣāṇam, *n.* prob. *sālamba*+. A kind of arsenic; ஒரு வகைப் பாஷாணம். (யாழ். அக.)

சாலம்பம் cālampam, *n.* A tree; மரவகை. (யாழ். அக.)

சாலமாலம் cālamālam, *n.* Redupl. of சாலம். Furtiveness; கண்டு சாய்ப்பு. (யாழ். அக.)

சாலவம் calavam, *n.* cf. சாலகம். Drain, gutter; சலதாரை. *Loc.*

சாலன் cālaṉ, *n.* <*Śālivāhana.* Cālivāhaṉa, from whom the current epoch started; சாலிவாகனன். (யாழ். அக.)

சாலாரம் cālāram, *n.* <*sālāra.* (யாழ். அக.) 1. Ladder; ஏணி. 2. Step; படி. 3. Bird's cage; பறவைக்கூடு.

சாலிகைத்தறி cālikai-t-taṟi, *n.* <*śālika*+. An ancient tax; பழைய நாணயவகை. (S. I. I. i, 91.)

சாலிகோத்திரம் cālikōttiram, *n.* <*śāli-hōtra*. Horse; குதிரை. (யாழ். அக.)

சாலியன் cāliyaṉ, *n.* <*śālika*. Cloth; ஆடை. (நேமிநா. 21, உரை.)

சாலியன்கூறை cāliyaṉ-kūṟai, *n.* <சாலியன்+. A kind of saree; சேலைவகை. *Loc.*

சாலுரிங்கின் cāluriṅkiṉ, *n.* Running rigging; பறுவான்கள் பாய்கள் முதலியவற்றைச் சேர்ந்த கயிறு அல்லது சங்கிலி. (M. Navi. 85.)

சாலேகம் cālēkam, *n.* cf. சாலகம். Drain in a house; சலதாரை. சாலேக மென்பது குலாவு நடைமனை (தாயு. சச்சிதா. 2).

சாலேயம் cālēyam, *n.* perh. *śālika*. Woollen cloth; கம்பளித்துணி. (யாழ். அக.)

சாவகன்குறிஞ்சி cāvakaṉ-kuṟiñci, *n.* <சாவகன்+. (Mus.) A mode in *kuṟiñci-t-tiṟam*; குறிஞ்சித்திறத்து ளொன்று. (யாழ். அக.)

சாவனம் cāvaṉam, *n.* <*sāvana*. Time from sunrise to sunset; சூரியோதய முதல் அஸ்தமனம் வரையுள்ள காலம். (சுக்கிரநீதி, 107.)

சாவி-த்தல் cāvi-, 11 *v. tr.* Caus. of சா-. To cause to die; சாவப் பண்ணுதல். (தொல். எழுத். 76, இளம்பூ.)

சாவுகொட்டு cāvu-koṭṭu, *n.* <சாவு+. A mode of beating the drum to indicate the death of a person; சாவு குறிக்கும் பறைமுழக்கு. *Colloq.*

சாவுமணி cāvu-maṇi, *n.* <சா-. Death-knell; கிறிஸ்தவர்க்குள் ஒருவர் இறந்தபொழுது கோயிலில் அடிக்கும் மணி. *Chr.*

சாளகபைரவி cāḷaka-pairavi, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 102.)

சாளம் cāḷam, *n.* perh. *jāla*. cf. சாளரம். Window; பலகணி. மலயத் தனிக்கால் வரசாளரந் தைவந் துலவ (சொக்கநா. உலா, 42).

சாளையப்பட்டு cāḷaiya-p-paṭṭu, *n.* <சாளை+. Soldiers' lines; படைவீரர்கள் தங்குந் குடிசைகளுள்ள இடம். சாளையப்பட்டு சனப்பட்டு (மான்விடு. 112).

சாணம் cāṇam, *n.* cf. சாணை. (யாழ். அக.) 1. Millstone; அம்மி. 2. Touchstone; உரைகல்.

சாணுக்கிரகம் cāṉukkirakam, *n.* perh. *saṃskṛta*. cf. சனுக்கிரகம். Sanskrit; வடமொழி. (யாழ். அக.)

சாணுவாதனம் cāṉu-v-ātaṉam, *n.* <*jānu*+*āsana*. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 107.)

சாஸ்திரபேதி cāstirapēti, *n.* cf. சாத்திரவேதி. A kind of ore; உலோகங் கலந்த மணல் வகை. (வை. மூ.)

சி

பூட்டகக்கள்ளி pūṭṭaka-k-kaḷḷi, *n.* <பூட்டகம்+. Deceitful woman; வஞ்சகி. (குருகூர்ப். 51.)

பூட்டைக்கிணறு pūṭṭai-k-kiṇaṟu, *n.* <பூட்டை+. Well fitted with picottah, for irrigating fields; நீர்பாய்ச்சுதற்கு ஏற்றம் அமைந்த கிணறு. (S. I. I. iv, 194.)

பூட்டைக்குண்டிகை pūṭṭai-k-kuṇṭikai, *n.* <id.+. Basket for baling water; ஏற்றச்சால். பூட்டைக்குண்டிகைபோலே யேறுவ திழிவதாக (ரஹஸ்ய. 1366).

பூண்கட்டு-தல் pūṇ-kaṭṭu-, *v. tr.* <பூண் +. To make much of; போற்றுதல். இந்த ருசியைப் பூண்கட்டிக்கொள்ளத் தேடுகிறவர்கள் சுழிக்கச் சொன்னால் சுழியார்களிறே (ஈடு, 1, 6, 8).

பூண்சம்பா pūṇ-campā, *n.* perh. id.+. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (G. Tp. D. i, 132.)

பூதம் pūtam, *n.* <*bhūta.* 1. Vowel; உயிரெழுத்து. சுரம்பூதமா முயிரின்பெயர் (போகத். 10). 2. Huge hollow figure of a man or woman, carried in processions; வீதிவலம் வரும்போது தூக்கிச்செல்லும் மனித வடிவம். *Loc.*

பூதவுடல் pūta-v-uṭal, *n.* <பூதம்+. Body, as composed of the five elements; ஐம்பூதங்களாலாகிய உடம்பு. பூதவுடனிலையாது (வீரநாரா. பாயி. 21).

பூதன் pūtaṉ, *n.* <*pūta.* Purified soul; பரிசுத்தன். புனமயி லுமையொடும் புணர்ந்த பூதனே (வேதாரணி. விநாயக. 43).

பூதான்மா pūtāṉmā, *n.* <*bhūta*+. The state of soul, when it is associated with the five elements; பஞ்சபூதங்களோடு கூடியிருக்கும் ஆன்மநிலை. (சி. போ. பா. 6, 2, பக். 317.)

பூதி pūti, *n.* prob. *bhūti.* Gold; பொன். பூதி வெற்பென (வேதாரணி. சாலிகோ. 14).

பூதிவாதம் pūtivātam, *n.* <*pūtivāta.* Bael; வில்வம்.

பூநெட்டி pū-neṭṭi, *n.* <பூ+. Pith; வெண்கிடை. *Loc.*

பூநோன்பு pū-nōṉpu, *n.* <id.+. A festival observed by maidens on the third day of Poṅgal, in Koṅkunāṭu; கொங்குநாட்டில் பொங்கலின் மூன்றாம்நாள் கன்னிகைகள் கொண்டாடும் பண்டிகை. பூநோன்புக்குப் பூப்பறிக்கச் சென்று (எங்களூர், 159).

பூப்பொங்கல் pū-p-poṅkal, *n.* <id.+. See பூநோன்பு. (எங்களூர், 90.)

பூப்ஸானி pūpsāṉi, *n.* Zenana lady; கோஷாஸ்திரீ. (C. G.)

பூபதனப்பூப்புடம் pū-patana-p-pū-p-puṭam, *n.* <பூ+பதனம்+பூ+. A method of calcining medicine, one of *muppū-p-puṭam,* q.v.; முப்பூப்புடத்து ளொன்று. *Loc.*

பூம்மரம் pūm-maram, *n.* <E. *boom*+. Boom; கப்பற்பாய்களின் அடிப்பக்கத்தை விரிக்க வுதவும் பறுவான்வகை. (M. Navi.)

பூம்மாடு pūm-māṭu, *n.* <பூம் (onom.)+. Performing bull; பெருமாள்மாடு. *Tp.*

பூமம் pūmam, *n.* <*bhūman.* Abundance, plenty; மிகுதி. பூமச் சோதியருளால் (பாடு. 100, சாற்றுமறை).

பூமாலைகொண்டுசொரிதல் pūmālai-koṇṭu-corital, *n.* <பூமாலை+. A kind of votive offering to a temple; நேர்த்திக்கடன்வகை. *Nāñ.*

பூமிசக்கரம் pūmi-cakkaram, *n.* <பூமி+. (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

பூமிசம்பகம் pūmi-campakam, *n.* <id.+. False zedoary; நேர்ப்பிசின். (M. M.)

பூமிப்பிராட்டி pūmi-p-pirāṭṭi, *n.* <id.+. The Goddess of the Earth; பூமிதேவி. *பூமிப் பிராட்டியை எழுந்தருளுவித்து* (S. I. I. viii, 160).

பூமியாகாயச்சக்கரம் pūmi-y-ākāya-c-cakkaram, *n.* <id.+ஆகாயம்+. (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (*யாப். வி.* 497.)

பூமேனடந்தான் pū-mēṉaṭantāṉ, *n.* <பூ+மேல்+. Arhat; அருகக்கடவுள். (*குறள்*, 3, *உரை*.)

பூமொக்குள் pū-mokkuḷ, *n.* <id.+. Chalice; பூசைப்பாத்திரம். *Pond.*

பூயஞ்சம்பா pūyañ-campā, *n.* A kind of *campā* paddy; சம்பா நெல்வகை. (*விவசா.* 2.)

பூர்ணாயனம் pūrṇāyaṉam, *n.* <*pūrṇa* +. The four months, Paṅkuṉi, Cittirai, Puraṭṭāci and Aippaci; பங்குனி சித்திரை புரட்டாசி ஐப்பசி யாகிய நான்கு மாதங்கள். (*பெரியவரு.* 27.)

பூர்வகௌளம் pūrva-kauḷam, *n.* <*pūrva* +. (Mus.) A specific melody-type; இராக வகை. (*பரத. ராக. பக்.* 103.)

பூர்வசென்மவாசனை pūrvaceṉma-vācaṉai, *n.* <பூர்வசன்மம்+. The effect of past karma; பழவினைத்தொடர்பு. *Colloq.*

பூர்வபக்ஷி-த்தல் pūrva-pakṣi-, *11 v. tr.* <*purva*+*pakṣa*. To state the opponent's views and arguments for the purpose of answering them; எதிர்வாதத்தைக் கூறுதல். *ஓரர்த்தத்தைத் தாயார் வார்த்தையாலே பூர்வபக்ஷித்து மகள் வார்த்தை யாலே ஸித்தாந்திக்கிறது* (*திவ். திருநெடுந்.* 18, *வ்யா.*).

பூர்வவாசனை pūrva-vācaṉai, *n.* <id.+. See பூர்வசென்மவாசனை. *Colloq.*

பூர்வாங்கம் pūrvāṅkam, *n.* <*pūrvāṅga.* (Mus.) Lower tetrachord of the octave; ஸ்தாயி யிலுள்ள முதல் நான்கு ஸ்வரங்கள். (Mus. of Ind. 63.)

பூர்வாசாரம் pūrvācāram, *n.* <*pūrva*+ +*ācāra*. Ancient custom; பழைய வழக்கம். *பூர்வாசாரங்கொண்டு இறையிலியாக* (S. I. I. vi, 145).

பூர்வார்ஜிதம் pūrvārjitam, *n.* <id.+ *arjita*. Ancestral property; முன்னோர் ஈட்டிய பொருள். *நான் விடேன் விடேன் பூர்வார்ஜித பாகம்* (*சர்வசமய. பக்.* 68).

பூர்விகசொத்து pūrvika-cottu, *n.* <பூர் விகம்+. See பூர்வார்ஜிதம். *Colloq.*

பூரணசூத்திரி pūraṇa-cūttiri, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (*பரத. ராக. பக்.* 103.)

பூரணம் pūraṇam, *n.* cf. பூஞ்சணம். Mould, mildew; பூஞ்சாளம். *இந்தப் பண்டம் பூர ணம் பிடித்துவிட்டது. Loc.*

பூரந்தொழுதல் pūran-toḻutal, *n.* <பூரம் +. cf. பூரங்கழித்தல். Ceremony of warding off evil eye from a pubescent girl, by waving coloured rice about her; பெண் இருதுவானபோது திருஷ்டிகழிக்குஞ் சடங்கு. *Loc.*

பூராயம் pūrāyam, *n.* (*யாழ். அக.*) 1. Priority in time; antiquity; பூர்வம். 2. Desire; விருப்பம்.

பூரி pūri, *n.* See பூரியரிசி. *Nāñ.*

பூரிக்குத்தலரிசி pūri-k-kuttal-arici, *n.* <பூரி+குத்து-+. Polished rice; நன்றாய்த் தீட்டிய அரிசி. (S. I. I. vi, 11.)

பூரிச்சேரல் pūri-c-cēral, *n.* <id.+perh. சொல். A kind of rice; அரிசிவகை. *திருப்புதிய தமுதுக்குப் பூரிச்சேரல்* (S. I. I. vii, 300).

பூரிநெல் pūri-nel, *n.* <id.+. Mixed paddy; கலப்பு நெல். (S. I. I. ii, 127.)

பூரியது pūriyatu, *n.* prob. id. That which is low; தாழ்வானது. *சீரியன வுள்ளிப் பூரியன மறத் தல் வேண்டும்* (*குறள்*, 1206, *மணக்.*).

பூரியரிசி pūri-y-arici, *n.* <id.+. White, polished rice; வெள்ளையரிசி. *Nāñ.*

பூரு-தல் pūru-, *5 v. tr.* Corr. of பீறு-. To pierce; துளைத்தல். *Colloq.*

பூருவணம் pūruvaṇam, *n.* <பூர்வான்னம். Forenoon; முற்பகல். (*விதான. குணகுண.* 112, *உரை*.)

பூவாடைப்பானை pūvāṭai-p-pāṉai, *n.* <பூவாடை+. A pot in which the cloth offered to *pūvāṭai-k-kāri* at a *cumaṅkali-p-pirārttaṉai* is kept till the next *cumaṅkali-p-pirārttaṉai*; சுமங்கலிப்பிரார்த்தனையன்று பூவாடைக்காரிக்குச் சமர்ப்பிக்குஞ் சேலையை அடுத்த சுமங்கலிப்பிரார்த் தனைவரை சேமித்துவைக்கும் பானை. *Loc.*

பூவை pūvai, *n.* A variety of *kāyā*; காயாச்செடிவகை. *பூவையாவது காயாவின் அவாந்தர பேதமானுப்போலே* (*திவ். பெரியாழ்.* 3, 4, 9, *வ்யா. பக்.* 620).

பூனைக்காஞ்சி pūṉaikkāñci, *n.* <பூனைக் காஞ்சொறி. Small climbing nettle; பூனைக்காஞ் சொறி. (*பச். மூ.*)

பூஜாவாசி pūjā-vāci, *n.* <*pūjā*+. Term of respect; மரியாதைச் சொல். உத்தரீயத்தை தோற்ற பூஜாவாசி சப்தங்களாலே சொல்லக்கடவதென்று பூர்வாசார்யர்கள் (திவ். திருநெடுந். 11, வ்யா. பக். 95).

பெ

பெட்டிபோடு-தல் peṭṭi-pōṭu-, *v. intr.* <பெட்டி+. To play on the harmonium; ஆர்மோனியத்தை வாசித்தல். *Mad.*

பெட்டிமோதிரம் peṭṭi-mōtiram, *n.* perh. id.+. A kind of ring; மோதிரவகை. *Pond.*

பெட்டியடி peṭṭi-y-aṭi, *n.* <id.+. Cashier; cash-keeper; ரொக்க வரவு செலவு செய்யுங் கணக்கப்பிள்ளை. *Nāṭ. Chetti.*

பெட்டு peṭṭu, *n.* [T. *beṭṭu.*] Esteem, regard; respect; கௌரவம். பெட்டுப் போகாமல் கேட்போ ரனைவருக்கும் (மதி. க. ii, 9).

பெட்பு peṭpu, *n.* <பெள்-. Protection; பாதுகாப்பு. (தொல். சொல். 338.)

பெண்டுவை-த்தல் peṇṭu-vai-, *v. tr.* <பெண்டு+. To keep as concubine; வைப்பாட்டியாகக் கொள்ளுதல். நீரிவளைப் பெண்டுவைத்துக் கொள்ளும் (தெய்வச். விறலிவிடு. 292).

பெண்ணாசி peṇ-ṉāci, *n.* prob. பெண்+. cf. பொன்னசி. Bleeding nose; இல்லிமூக்கு. *Nāñ.*

பெண்பள்ளி peṇ-paḷḷi, *n.* <id.+. Nunnery; பெண்துறவிகள் தங்குமிடம். இம்மனையும் இக்கிணறும் பெண்பள்ளி யாவதாகவும் (S. I. I. vii, 24).

பெத்தபஞ்சாக்கரம் petta-pañcākkaram, *n.* <*baddha*+. A form of the mantra *namaccivāya;* பஞ்சாட்சரமந்திரவகை. (பஞ்சாக்கர மாலை, 21, உரை.)

பெத்திரிவீடு pettiri-vīṭu, *n.* <E. *factory* +. Factory; தொழிற்சாலை. (Ekoji's copper plate to the Dutch, 1676.)

பெயர்த்துக்கொடுக்கும்வலி peyarttu-k-koṭukkum-vali, *n.* <பெயர்-+கொடு-+. Preliminary labour pains, due to movements of the foetus; பிரசவவலிக்குமுன் சிறிதுசிறிதாக வலிக்கும் நோவு. *Loc.*

பெயர்த்துறை peyar-t-t-urai, *n.* <id.+. Repetition; அனுவாதம். (குறள், 944, உரை.)

பெயர்ப்போலி peyar-p-pōli, *n.* <பெயர் +. Word partaking of the nature of a noun; உரிச்சொல்வகை. (தொல். சொல். 297, சேனா.)

பெயரட்டவணை peyar-aṭṭavaṇai, *n.* <id.+. Index of names; பேரட்டவணை. *Loc.*

பெரட்டு peraṭṭu, *n.* Corr. of புரட்டு. Deception; புரட்டு. பெரட்டும் உருட்டும் வேதனை செய்வதும் (கனம் கிருஷ்ணையர், கீர்த். 21).

பெரியகரடி periya-karaṭi, *n.* <பெரு-மை +. The Great Bear; சப்தரிஷிமண்டலம். *Pond.*

பெரியசம்பா periya-campā, *n.* <id.+. A kind of *campā* paddy, maturing in six months; ஆறு மாதத்திற் பயிராகும் சம்பாநெல் வகை. (விவசாய. 1.)

பெரியதேவர் periya-tēvar, *n.* <id.+. 1. The predecessor of a ruling king; ஆளும் அரசனுக்கு முன்ஆண்ட அரசன். (Insc.) 2. The sacred bull *Nandi;* நந்திதேவர். (பெரியபு. வெள். 44.)

பெரியமுதலியார் periya-mutaliyār, *n.* <id.+. The Vaiṣṇava saint Āḷavantār; ஆளவந்தார் என்னும் வைணவப்பெரியார். பெரியமுதலியார் . . . ஆதரிக்கும்படியான ஸ்ரீபராசர மஹர்ஷி (ரஹஸ்ய. 308).

பெரியவியாழக்கிழமை periya-viyāḻa-k-kiḻamai, *n.* <id.+. Maundy Thursday; ஈஸ்டர் பண்டிகையில் வரும் வியாழக்கிழமை. *Chr.*

பெரியிலாமிச்சை periyilāmiccai, *n.* cf. பேரொலுமிச்சை. Citron lemon, m. tr., *Citrus medica-limonum;* துரிஞ்சி. (L.)

பெருக்காலட்டை perukkāl-aṭṭai, *n.* prob. பெரு-மை+கால்+. A kind of leech; அட்டைவகை. *Loc.*

பெருக்குமாறு perukku-māṟu, *n.* <பெருக்கு-+. Broom; விளக்குமாறு *Loc.*

பெருகிலை perukilai, *n.* Pink-tinted heart-leaved glory tree; வெள்ளைக்கண்ணி. (L.)

பெருங்கடுகு peruṅ-kaṭuku, *n.* <பெரு-மை +. A kind of mustard; கடுகுவகை. *Loc.*

பெருங்கத்தரிசால் peruṅ-kattari-cāl, *n.* <id.+சத்திரி+. Candelabra; கிளைவிளக்குத் தண்டு. *Pond.*

பெருங்கரப்பான் peruṅ-karappāṉ, *n.* <id.+. A kind of eruption; கரப்பான்வகை. (தஞ். சா. iii, 92.)

பெருங்கிளையார் peruṅ-kiḷaiyār, *n.* <id.+. A sub-division of the Pallar caste; பள்ளர்வகையினர். *Tp.*

பெருங்கிற்றுரூபாய் peruṅ-kiṟṟu-rūpāy, *n.* <id.+. An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 63.)

பெருங்குடி peruṅ-kuṭi, *n.* <id.+. Landlord; நிலக்கிழவன். (Colas, ii, 389.)

பெருங்குரும்பை peruṅ-kurumpai, *n.* <id.+. (*சங். அக.*) 1. Costum; கோட்டம். 2. Long zedoary; பூலாங்கிழங்கு.

பெருந்தொடர் perun-toṭar, *n.* <id.+. (Gram.) Compound or complex sentence; எழுவாய் பயனிலை முடிந்த வாக்கியஞ் சிலவற்றைப் பிணைத்துநடக்குந் தொடர்ந்தவாக்கியம். (*தொல். சொல்.* 42, *சேனா.*)

பெரும்பாடிகாவல் perum-pāṭi-kāval, *n.* <id.+. Chief watchman; தலைமைக்காவலாளர். (M. E. R. 407 of 1921.)

பெரும்பேரன் perum-pēraṉ, *n.* <id.+. Great-grandson; கொட்பேரன். *Loc.*

பெருமத்தளி peru-mattaḷi, *n.* <id.+. A kind of drum; முழவம். (*திவ். திருப்பள்ளி.* 9, *வ்யா.*)

பெருமாப்பு perum-āppu, *n.* <id.+. Shooting stick. See ஆப்புத்தள்ளி. *Pond.*

பெருமுதியன் peru-mutiyaṉ, *n.* <id.+. A temple official; கோயில் அதிகாரிகளு ளொருவன். (T. A. S. iii, 166.)

பெருவரகு peru-varaku, *n.* <id.+. A kind of common millet; வரகுவகை. (*விவசா.* 4.)

பெருவரி peru-vari, *n.* <id.+. A tax in cash; காசாயவகை. (S. I. I. i, 87.)

பெருவரைமீன் peruvarai-mīṉ, *n.* perh. பெருவரை+. A fish. See அறிசா. (*சங். அக.*)

பெருவளவாய் peru-vaḷa-vāy, *n.* <பெருமை+வளம்+. Big channel; பேராற்றுக்கால். நாட்டுக்குப் பாயும் பெருவளவாயும் (S. I. I. ii, 54).

பெருவாயன் peru-vāyaṉ, *n.* <id.+. 1. Basket; கடகப்பெட்டி. *Loc.* 2. See பெருமத்தளி. (*திவ். திருப்பள்ளி.* 9, *வ்யா.*)

பெருவீடு peru-vīṭu, *n.* perh. id.+விடு-. Letting out cattle in the afternoon, for grazing; பிற்பகலில் மாடுகளை மேய்க்கவிடுகை. *சிறுவீடன்றியே பெருவீடும் விடும்படியாய்* (*திவ். திருப்பள்ளி,* 4, *வ்யா.*).

பெருவெள்ளம் peru-veḷḷam, *n.* <id.+. The Deluge; பிரளய வெள்ளம். *உண்ணுத பெரு வெள்ளம் உண்ணமல் தான்விழுங்கி உய்யக்கொண்ட கண்ணனை* (*திவ். பெரியதி.* 2, 6, 7).

பெலி peli, *n.* perh. *bahis.* Banishment, excommunication; ஊருக்கு அல்லது சாதிக்குப் புறம்பாக்குகை. (W.)

பெள்-தல்[பெட்டல்] peḷ-, 9 *v. tr.* To protect; பாதுகாத்தல். *பெட்டல் என்பது புறந் தருதல்* (*தொல். சொல்.* 332, *இளம்பூ.*).

பெற்பரோடி perparōṭi, *n.* Back-stays. See பிராந்தல். (M. Navi.)

பெறுமாதம் peṟu-mātam, *n.* <பெறு-+. The month of parturition; பேறுகாலம். *Rd.*

பெறுமுரி peṟu-muri, *n.* prob. id.+. Wages; சம்பளம். *பரிகரத்தார் பெறுமுரியாகப் பெற்று* (S. I. I. vii, 30).

பே

பேசாதிரு-த்தல் pēcātiru-, *v. intr.* <பேசு-+ஆ neg.+. To keep quiet; செயலற்றிருத்தல். *வாத்யங்கள் வாய்த்தால் கூத்தாடுவொருடம்பு பேசாதிரா நிற்றெ* (*திவ். பெரியதி.* 1, 2, 1, *வ்யா. பக்.* 59).

பேசுலம் pēculam, *n.* A plant, *Arum colocasia;* செடிவகை. *Loc.*

பேசுலி pēculi, *n.* See பேசுலம். *Loc.*

பேதவாதி pēta-vāti, *n.* <பேதம்+. Pluralist; கடவுள் சீவன் உலகு இவை வேறுபட்டன என்னுங் கொள்கையுடையோன். *சார்வாகாதிகள் அனைவரும் பேதவாதிகள்; வேதாந்தி ஒருவரே அபேத வாதி* (*விவேகசிந். பக்.* 20).

பேதனம் pētaṉam, *n.* <*bhēdana.* Dividing; பகுப்பு. *Pond.*

பேதாபேதி pētāpēti, *n.* <*bhēdābhēdin.* Follower of the Bhāskara school of philosophy; பேதாபேத சித்தாந்த முடையோன். (*திவ். திருச்சந்.* 1, *வ்யா. பக்.* 9.)

பேதுரு pēturu, *n.* St. Peter; இராயப்பர் என்ற கிறிஸ்தவப் பெரியார்.

பேதைபாதம் pētai-pātam, *n.* perh. பேதம்+. An ornament for the leg of an idol; தெய்வத்தின் காலில் அணியும் அணிவகை. *திருக்கழற்சிறிடும் பேதைபாதமும்* (S. I. I. viii, 39).

பேதைமை pētaimai, *n.* Lack of discernment; உய்த்துணராமை. (*தொல். பொ.* 248, *இளம்பூ.*)

பேய்க்கதி pēy-k-kati, *n.* <பேய்+. (Buddh.) One of *ṣaṭ-kati,* q. v.; ஷட்கதியு ளொன்று.

பேய்த்தி pēytti, *n.* Fem. of பேய். Demoness; பேய்ச்சி. *சிறுபேய் பெரும்பேய்த்தியைச் சென்றுபற்றும்* (*நீலகேசி,* 8).

பேய்நரி pēy-nari, *n.* <பேய்+. Rabid fox; வெறிபிடித்த நரி. *பேய்நாய் பேய்நரி முதலியவற்றின் கடிகளுக்கு* (*தஞ். சர.* iii, 102).

பேய்ப்புகையிலை pēy-p-pukaiyilai, *n.* <id.+. A kind of tobacco; காட்டுப்புகையிலை. (சித். அக.)

பேய்முள்ளி pēy-muḷḷi, *n.* <id.+. Wild thorny plant; காட்டுமுள்ளி. (சித். அக.)

பேய்வரகு pēy-varaku, *n.* <id.+. Wild ragi; காட்டுவரகு. (சித். அக.)

பேய்வாதுமை pēy-vātumai, *n.* <id.+. Wild almond; வாதுமைவகை. *Loc.*

பேயின்சாப் pē-y-iṉcāp, *n.* <U. *bē-insāph.* Injustice, அநீதி. (P. T. L.)

பேயீடு pēy-īṭu, *n.* <பேய்+. A disease of children, attributed to the influence of evil spirits; பேயின் உபத்திரவத்தால் உண்டாவதாகக் கருதப்படும் பிள்ளைநோய். *புள்ளீட்டுக்கும் பேயீட்டுக்கும் பிழைக்கப்பெற்றதென்கிறார்* (திவ். பெரியாழ். 2, 5, 9, வ்யா. பக். 343).

பேயுடுப்பை pēy-uṭuppai, *n.* <id.+. A plant; செடிவகை. (சங்கரா. 6.)

பேர்க்கடமை pēr-k-kaṭamai, *n.* <பேர்+. A tax on individuals; ஆள்வரிவகை. (I. M. P. Cg. 529.)

பேர்கெட்டவள் pēr-keṭṭavaḷ, *n.* <id.+. Prostitute; விபசாரி. *Colloq.*

பேர்கெட்டவன் pēr-keṭṭavaṉ, *n.* <id. +. Rogue, scoundrel; அயோக்கியன். *Loc.*

பேர்வரி pēr-vari, *n.* <id.+. Poll tax; தலைவரி. (Colas, ii, 334.)

பேர்வாசி[1] pēr-vāci, *n.* <id.+. 1. Being only nominal; பேர்மட்டிலுள்ளது. *பேர்வாசியே யாம்படி நாம் பண்ணிவைத்த இருவகைப்பட்ட கர்மங்களையும் போக்குவார்* (ஈடு, 1, 6, 9). 2. Characteristics believed to be acquired by a child being named after a person; ஒருவன் பெயரை குழந்தைக்கிடுவதால் அதற்குண்டாவதாகக் கருதும் குணம். *Colloq.*

பேர்வாசி[2] pērvāci, *n.* Corr. of பேர்பாதி. Exactly half; சரிபாதி. *Colloq.*

பேரணி pēr-aṇi, *n.* <பெரு-மை+. 1. The prime cause; மூலகாரணம். *பேரணியாகப் பரத்வத்தைக்கண்டு போந்தார்கள்* (ரஹஸ்ய. 260). 2. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

பேரழை-த்தல் pēr-aḻai-, *v. intr.* <பேர்+. To take the roll-call or attendance; ஆஜர்க்கணக்கெடுத்தல். *Pond.*

பேரிசை pēr-icai, *n.* <பெரு-மை+. (Poet.) A kind of poetic composition; ஐவகைப்பட்ட வெண்டுறைச்செந்துறையு ளொன்று. (யாப். வி. 538.)

பேரிராசி pēr-irāci, *n.* <பேர்+. See பேர்வாசி[1], 2. *Colloq.*

பேரிளமையார் pēr-iḷamaiyār, *n.* <பெரு-மை+. Middle-aged persons; நடுத்தர வயதினர். (M. E. R. 253 of 1925.)

பேருடைச்சிறப்பு pēr-uṭai-c-ciṟappu, *n.* <பேர்+உடை-+. Grant made to a child at its naming ceremony; நாமகரண காலத்தில் அளிக்கும் இறும். (S. I. I. iv, 121.)

பேருண்டம் pēruṇṭam, *n.* <*bhēruṇḍa.* Fear; பயம். (நாநார்த்த.)

பேளை pēḷai, *n.* Playing marbles; கோலிக்காய். *Colloq.*

பேறாளன் pēṟ-āḷaṉ, *n.* <பேறு+. One who collects tax by force; நிர்ப்பந்தித்து வரி தண்டுவோன். *எங்களைப் பேறாளர் கையிலே காட்டிக் கொடுக்கையில்* (Pudu. Insc. 323).

பேறு pēṟu, *n.* <பெறு-. 1. Creation; சிருஷ்டி. (ஈடு, 8, 10, 6.) 2. Result; முடிவு. *பெருக்கிக் கழித்துப் பேறுகூறலும்* (T. C. M ii, 2, 473).

பேனகத்தி pēṉa-katti, *n.* <E. *pen*+. Penknife; சிறுகத்திவகை. *Pond.*

பேனம் pēṉam, *n.* Opium; அபின். (நாமதீப. 393.)

பேஷ்கீ pēṣkī, *n.* Advance money; முன்பணம். (P. T. L)

பை

பைக்கே paikkē, *n.* [T. *paikam.*] Money; பணம். (P. T. L.)

பைங்கால்நிலம் pai-ṅ-kāl-nilam, *n.* prob. பை+கால்+. Wet field; நஞ்சைநிலம். *பைங்கால் நிலத்தைப் பருமரக் காடென்று* (சரவண. பணவிடு. 142).

பைங்கிணறு pai-ṅ-kiṇaṟu, *n.* <id.+. Small pond; குட்டை. (S. I. I. vii, 41.)

பைசாசபூமி paicāca-pūmi, *n.* <பைசாசம் +. One of the mythological divisions of the world; புராணங்கள் கூறும் பூமிகளு ளொன்று. (அபி. சிந்.)

பைசுன்யம் paicunyam, *n.* <*paiśuna.* Miserliness; உலோபம். பைசுன்ய பண்பினர் (பாடு. 28, அடியவர்.).

பைத்தியன் paittiyan, *n.* <பைத்தியம். Madman; பைத்தியக்காரன். *Pond.*

பையை paiyai, *n.* perh. *paryāya.* Transformation; பரியாயம். பட்டனைப்பொருள் பையைகளே யென்னும் பான்மையினுல் (நீலகேசி, 389).

பைரி pairi, *n.* Inspector of cattle; கால்நடைகளைப் பரிசோதிப்பவன். (மதி. க. ii, 13.)

பைவா-தல் [**பைவருதல்**] pai-vā-, *13 v. intr.* cf. பையெனல். To be distressed; துன்புறுத்தல். பைவருங்கேளிரும் பதியும் கதறமெய் விடும்போது (கந்தரலங். 84).

பொ

பொக்கணவன் pokkaṇavan, *n.* <பொக்கணம். Śiva; சிவபிரான். (தஞ். சர. i, 79.)

பொக்கிசம் pokkicam, *n.* [K. *bokkasa.*] 1. Treasury; பொக்கிஷசாலை. 2. Office of a treasurer; பொக்கிஷவேலை பார்க்கும் உத்தியோகம். பொக்கிசம் முத்திருளப்ப பிள்ளை (I. M.P. Rd.).

பொக்கிப்பரு pokki-p-paru, *n.* perh. பொக்கு+. A kind of boil in the ear; செவிப் புண்வகை. (பராரச. i, 134.)

பொக்கிப்பிளவை pokki-p-piḷavai, *n.* perh. id.+. A kind of carbuncle; பிளவைவகை. (பராரச. i, 49.)

பொக்குமல்லி pokkumalli, *n.* perh. E. *bougainville.* A flowering plant, *Bougainvillaea;* பூச்செடிவகை. *Madr.*

பொக்குமுத்து pokku-muttu, *n.* <பொக்கு +. False pearl; தூதுமுத்து. *Loc.*

பொக்கை pokkai, *n.* cf. புற்கை. Porridge; மோர்க்கூழ். *Loc.*

பொகுட்டு pokuṭṭu, *n.* Cone; கூர்முனைக் கோபுரம் போன்ற வடிவு. (J. N.)

பொங்காரம் poṅkāram, *n.* perh. பொங்கு- +காரம். Ire; மிகுகோபம். பூசலைப்பார்த்துப் பழைய பொங்காரந் தீராமல் (தெய்வச். விறலிவிடு. 479).

பொடிக்காசு poṭi-k-kācu, *n.* <பொடி+. Bribe; கைக்கூலி. நானுவித இமிசை செய்து பொடிக்காசு வாங்குகிறவிதங் காண்க (தாசில்தார்நா. பக். 90).

பொடிமாஸ் poṭimās, *n.* 1. A kind of relish; வியஞ்சனவகை. *Loc.* 2. A confection; பக்ஷணவகை. (மதி. க. ii, 15.)

பொடியுழவு poṭi-y-uḻavu, *n.* <பொடி+. Dry ploughing, dist. fr. *toḷi-y-uḻavu;* புழுதிக் காலுழவு.

பொத்தல் pottal, *n.* <Fr. *bouteille.* Bottle; போத்தல். *Pond.*

பொதிக்கூலி poti-k-kūli, *n.* <பொதி+. Wages for carrying headloads; தலைச்சுமை யெடுத்தற்குரிய கூலி. (S. I. I. vi, 29.)

பொதிகாரம் poti-kāram, *n.* perh. பொதி- +. Caustic; காரமருந்து. பொதிகாரமிட்ட புண் போல் (சரவண. பணவிடு. 109).

பொதிகெளிறு poti-keḷiṟu, *n.* perh. பொதி +. A sea-fish; கடல்மீன்வகை. (J. N.)

பொதுக்கூட்டம் potu-k-kūṭṭam, *n.* <பொது+. Public meeting; பொதுஜனக்கூட்டம்.

பொதுக்கெனல் potukkeṉal, *n.* Onom. expr. of suddenness; திடீரெனல். (அகநா. 39, உரை.)

பொதுநாயகம் potu-nāyakam, *n.* <பொது +. Universal sovereignty; எல்லாவற்றிற்குந் தலைமை. பொதுநாயகம் பாவித்து இறுமாந்து (திவ். பெரியாழ். 4, 9, 4).

பொதும்பல் potumpal, *n.* <id. General income; பொதுவருமானம். (J. N.)

பொதுமீக்கூற்றம் potu-mī-k-kūṟṟam, *n.* <id.+மீ+. Mt. Potiyil; பொதியில். (புறநா. 135, உரை.)

பொந்தன் pontaṉ, *n.* A sea-fish, attaining one foot in length, with black and white spots; கடல்மீன்வகை. (J. N.)

பொம்மாசு pommācu, *n.* cf. பொம்மன் மாசு. Pomelo; பம்பிளிமாசு. *Loc.*

பொம்மைச்சீட்டு pommai-c-cīṭṭu, *n.* <பொம்மை+. Playing cards; விளையாட்டுச் சீட்டு. *Loc.*

பொம்மைவாசாப்பு pommai-vācāppu, *n.* <id.+. Puppet show; பொம்மலாட்டம். *Pond.*

பொய்க்காய்வு poy-k-kāyvu, *n.* <பொய்+. Temporary estrangement; நிலையில் வெறுப்பு. (குறள், 1246.)

பொய்செய்-தல் poy-cey-, *v. intr.* <id. To prove false; உண்மையற்று ஒழுகுதல். காரியத்தில் வந்தால் மெய்செய்வாரைப் போலே பொய்செய்து நிலைக்கட்டும் (ஈடு, 10, 4, 5).

பொய்வெட்டு poy-veṭṭu, *n.* <id.+. A defect in coins; நாணயக்குற்றவகை. (சரவண. பணவிடு. 67.)

பொர்மா pormā, *n.* <Fr. *Forme.* Forme; எழுத்துக்கோத்த அச்சுச்சட்டம். *Pond.*

பொரிவாயன் pori-vāyaṉ, *n.* perh. பொரி +. A sea-fish, white, attaining seven inches in length; கடல்மீன்வகை. (J. N.)

பொருட்பெற்றி poruṭ-peṟṟi, *n.* < பொருள் +. Essential or underlying truth, reality; தத்துவம். (குறள், 34, அதி. அவதா.)

பொருத்தச்சுவடி porutta-c-cuvaṭi, *n.* <பொருத்தம்+. Treatise on carpentry; தச்சநூல். *Nāñ.*

பொருமல் porumal, *n.* <பொருமு-. Impatience; மிக்க ஆதுரம். பொருமலை நாளெங்கே யடக்குவேன் (தெய்வச். விறலிவிடு. 239).

பொருள்புரிநூல் poruḷ-puri-nūl, *n.* <பொருள்+புரி-+. Treatise on polity; அர்த்த சாத்திரம். (பெருங். உஞ்சைக். 32, 1.)

பொருள்வழு poruḷ-vaḻu, *n.* <id.+. (Pros.) A defect in versification; செய்யுட்குற்றங் களு ளொன்று. (யாப். வி. 525.)

பொருளியல்புரைத்தல் poruḷ-iyalp-uraittal, *n.* <id.+இயல்பு+. Indication of the subject-matter of a treatise; வத்துநிர்த்தேசம். (சி. போ. பா. மங். பக். 1.)

பொல்லாங்கன் pollāṅkaṉ, *n.* <பொல்லாங்கு. Mischievous person; குறும்புக்காரன். (யாழ். அக.)

பொல்லாது pollātu, *n.* <பொல்லா-மை. Emaciation; thinness, as of body; spoilt condition; உடல் முதலியன கேடுற்ற நிலை. நீ இபபடிப் பொல்லாதாயிருப்பானே னென்ன, நாம் நோயாய்க் கிடந்தோம் கண்டீரேயென்று (சங்கற்பநி. 205, உரை.)

பொல்லாநிலம் pollā-nilam, *n.* <id.+. Cremation ground; மயானம். உங்களைப் பொல்லா நிலத்திலே யிடுவதற்கு முன்னம் (திவ். திருப்பல். 4, வ்யா. பக். 50).

பொல்லாப்பு pollāppu, *n.* <id. Objection; ஆட்சேபனை. இக்காணிக்குப் பொல்லாப்புச் சொல்லில் (Pudu. Insc. 327).

பொலபொலவெனல் pola-pola-v-eṉal, *n.* Onom. expr. signifying (a) crumbling, as of earth; பொலுபொலெனல். (சுகசந். 2.): (b) looseness; நெகிழ்ந்திருத்தற் குறிப்பு. *Tj.*

பொலிமுறைநாகு poli-muṟai-nāku, *n.* <பொலி+முறை+. Heifer fit for covering; பொலியக்கூடிய பக்குவமுள்ள கிடாரி. (S. I. I. iv, 102.)

பொற்கெனல் poṟkeṉal, *n.* cf. பொருக்கெனல். Onom. expr. of suddenness; விரைவுக் குறிப்பு. பொற்கென் றெழுந்து முத்தந்தந்து (கனம் கிருஷ்ணையர், கீர்த். 17).

பொற்பலகை poṟ-palakai, *n.* <பொன்+. Ornamental plank for carrying idols; விக்கிரகங் களையெடுத்துச் செல்லுதற்குரிய அலங்காரப் பலகை. பொற்பலகை யேறிவந்து பூங்கோயி லெய்தினன் (சிவக். பிரபந். தஞ்சைப்பெருவுடையாருலா, 312).

பொற்பாளை poṟ-pāḷai, *n.* <id.+. A kind of paddy; நெல்வகை. (குருகூர்ப். 58.)

பொற்பின்னல் poṟ-piṉṉal, *n.* <id.+. Waist-band woven of gold threads; பொற்கம்பி யாற் பின்னிய அரைஞாண். திருவரையில் சாத்தின பொற்பின்னலும் (திவ். பெரியாழ். 1, 7, 3, வ்யா. பக். 142).

பொற்பூ poṟ-pū, *n.* prob. id.+. An ancient tax; பழைய வரிவகை. (M. E. R. 217 of 1927-8.)

பொன்காண்(ணு)-தல் poṉ-kāṇ-, *v. intr.* <பொன்+. To test the quality of gold; மாற்றுக்காணுதல். பொன்காண்பார்க ளாகவும் (S. I. I. vi, 149).

பொன்தாழை poṉ-tāḻai, *n.* <id.+. Yellow aloe; மஞ்சட்டாழை. (சித். அக.)

பொன்பண்டாரவாசல் poṉ-paṇṭāra-vācal, *n.* <id.+பண்டாரம்+. Treasury; பொக் கிஷம். (M. E. R 681 of 1919.)

பொன்வர்க்கம் poṉ-varkkam, *n.* <id.+. Money taxes; பணமாக வாங்கும் வரிகள். பல பொன்வர்க்கமும் (S. I. I. iv, 79).

பொன்வன்னமீன் poṉ-vaṉṉa-mīṉ, *n.* <id.+வன்னம்+. A kind of fish; மீன்வகை. *Pond.*

பொன்னரளி poṉ-ṉ-araḷi, *n.* <id.+. Common yellow trumpet-flowered tree; நாக செண்பகம். (B.)

பொன்னாகம் poṉ-ṉ-ākam, *n.* <id.+. cf. பொன்னுடம்பு. Pudendum muliebre; பெண்குறி. (சங். அக.)

பொன்னிப்பிளவை poṉṉi-p-piḷavai, *n.* perh. id.+. A kind of carbuncle; பிளவைவகை. (பராரா. i, 49.)

பொன்னுருவிமாலை poṉ-ṉ-uruvi-mālai, *n.* <id.+உருவு-+. A kind of necklace; கழுத் தணிவகை. பொன்னுருவிமாலைதனைக் கழற்றியெறி வேன் (கோவ. க. 18).

பொன்னொத்தமலர்ப்பூண்டு poṉ-ṉ-otta-malar-p-pūṇṭu, *n.* <பொன் + ஒ- + மலர் +. Chrysanthemum; சாமந்தி. *Pond.*

போ

போக்கறு-த்தல் pōkkaṟu-, *v. tr.* <போக்கு +. To make no default; முட்டின்றிச் செய்தல். *கோயில் தேவைகளும் சந்திராதித்தவரை போக்கறப்பாரைச் சிலாலேகை பண்ணிக்கொடுத் தோம்* (S. I. I. iv, 102). *கடமைத் தட்டுப் போக்கறுக்க வேணுமென்று மகாசபையோம் சம்மதித்து* (S. I. I. viii, 165).

போக்கறுதி pōkkaṟuti, *n.* <id. +. Want of an alternative; புகலின்மை. *முன்பு பலபடி யுஞ் சொன்னதனையே போக்கறுதியாற் பின்புஞ் சொல்லுகின்றேன்* (*நீலகேசி*, 392, *உரை*).

போக்கிச்சொல்(லு)-தல் pōkki-c-col-, *v. intr.* <போக்கு- +. To deal with, in a latter place; பின்னர்க் கூறுதல். *அவை இரண்டு திணைக்கும் விரவுவினை ஆதலாற் போக்கிச் சொல்லுதும்* (*சேனா.* 41, *உரை*).

போக்கியம் pōkkiyam, *n.* (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவி வகை. (*யாப். வி.* 497.)

போக்கு[1] pōkku, *n.* <போ-. Conduct; நடத்தை. *அழகிதாயிருந்தது உம்முடைய போக்கு* (*ஈடு*, 1, 4, 7).

போக்கு[2]-தல் pōkku-, 5 *v. tr.* Caus. of போ-. To teach; கற்பித்தல். *ஆசார்யன் போக்கின வையேயாகிலும் தத்ஸந்நிதியிலே சொல்லக்கடவதல்ல* (*திவ். திருநெடுந்.* 13, *வ்யா.*).

போக்குச்செய்-தல் pōkku-c-cey-, *v. tr.* <போக்கு +. To sell; விற்றல். *போக்குச்செய்து பொன் வரக்காட்டுக* (Insc.).

போக்குநீக்கு pōkku-nīkku, *n.* <id. +. 1. Amiability; சௌமிய குணம். *Loc.* 2. Kind-heartedness; ஈவிரக்கம். *Colloq.*

போககாமி pōka-kāmi, *n.* <*bhōga* + *kāma*. Worldly person; உலகவின்பத்தை விரும்பு பவ-ன்-ள். (*ஞானபூசா.* 10, *உரை.*)

போகபூமி pōka-pūmi, *n.* <id. +. Place for enjoyment of the fruits of karma, dist. fr. *karuma-pūmi;* கருமபலத்தை அனுபவித்தற்குரிய பிரதேசம். *இதுதான் நவகண்டமாய் அதில் எட்டுக் கண்டமும் போகபூமியாய் ஒன்பதாம் கண்டமான பரத கண்டம் கருமபூமியா யிருக்குமென்றபடி* (*திவ். திருச்சந்.* 8, *வ்யா. பக்.* 27).

போகி pōki, *n.* <*bhōgin*. (*நாநார்த்த.*) 1. Trader; வியாபாரி. 2. Barber; நாவிதன்.

போங்கு pōṅku, *n.* <T. *pōṅgu*. Ear-ring; கடுக்கன். (*விறலிவிடு.* 369.)

போட்கன் pōṭkaṉ, *n.* Deceit; கபடம். *அவன் பக்கலுள்ளது போட்கனாகவுமாம்* (*ஈடு*, 1, 5, *ப்ர*).

போட்டாபோட்டி pōṭṭāpōṭṭi, *n.* Redupl. of போட்டி. Rivalry; competition; contest; போட்டி. *பந்தயமென்பதும் போட்டாபோட்டி என்பதும் . . . பெருத்துப்போயிற்று* (*மதி. க.* ii, 146).

போட்டு-தல் pōṭṭu-, 5 *v. tr.* Corr. of புகட்டு-. To cause to drink, as liquid food; புகட்டுதல். *குழந்தைக்குப் பால் போட்டினாள்.* *Colloq.*—*intr.* To suffer from small pox; வார்த்தல். *அம்மை போட்டியிருக்கிறது.*

போட்டுடை-த்தல் pōṭṭuṭai-, *v. tr.* <போடு- +. To expose; to make public; வெளிப் படுத்துதல். *Colloq.*

போடியார் pōṭiyār, *n.* Farmer; குடியான வன். (J. N.)

போடு pōṭu, *n.* <போடு-. Stroke; அடி. *அன்றேயோர் போடா யறைய வெழுங்கால்* (*பஞ்ச. திருமுக.* 745).

போத்தி pōtti, *n.* <Arab. *fautī*. Deceased person; இறந்துபோனவ-ன்-ள். *ஆஜரிருக்கும் குடி போத்தி யென்னவும்* (*தாசில்தார்நா.* 69).

போதககுரு pōtaka-kuru, *n.* <*bōdhaka* +. Preceptor who explains the purport of the śāstras; சாத்திரார்த்தத்தைப் போதிக்குங் குரு. (*விவேகசிந். பக்.* 28.)

போதனாமுறை pōtaṉā-muṟai, *n.* <*bōdhanā* +. Method in teaching; கல்வி கற்பிக்கும் நெறி. *Mod.*

போதா-தல் [போதருதல்] pō-tā-, *v. tr.* <போ- +. To leave aside; விலக்குதல். *மேற்கூறப்பட்டவற்றோடு வையாது இத்துணையும் போதந்துவைத்த தென்னை யெனின்* (*தொல். சொல்.* 3, *உரை*).

போதி-த்தல் pōti-, 11 *v. intr.* <*bōdha*. To have inclination; விருப்பமுண்டாதல். *போதித்த போது வருவேன்.* *Nāñ.*

போதிகைப்பலகை pōtikai-p-palakai, *n.* <போதிகை +. (Arch.) Entablature; தூணின் தலையில் வைக்கும் பலகை. *Pond.*

போதியல் pōtiyal, *n.* <id. See போதிகைப் பலகை. *Loc.*

போதுபோக்கு pōtu-pōkku, *n.* <போது +. Play; pastime; விளையாட்டு. தோளைக்கழித்துத் தலையைச்சரித்துப் போதுபோக்காக நின்றுகொண்டபடி (ஈடு, 1, 6, 7).

போய்வா-தல்[போய்வருதல்] pōy-vā-, *v. intr.* <போ- +. To go; போதல். *Colloq.*

போயண்டன் pōyaṇṭaṉ, *n.* cf. போயி. Palanquin bearer; சிவிகை சுமப்போன். *Pond.*

போயிண்டன் pōyiṇṭaṉ, *n.* See போயண்டன். *Pond.*

போர்க்கத்தி pōr-k-katti, *n.* <போர் +. Sword; வாள். *Pond.*

போர்ச்சயப்பாவை pōr-c-caya-p-pāvai, *n.* <id. + சயம் +. The Goddess of Victory; வீரலட்சுமி. (S. I. I. i, 100.)

போர்த்தனிப்பூவை pōr-t-taṉi-p-pūvai, *n.* <id. + தனி +. See போர்ச்சயப்பாவை. (S. I. I. iii, 115.)

போரா pōrā, *n.* Bale of cotton; பஞ்சுப் பொதி. *Loc.*

போரிகட்டு-தல் pōri-kaṭṭu-, *v. intr.* <போரி +. To compete; to rival; போட்டிபோடுதல். (M. Navi.)

போலும் pōlum, *part.* <போல்-. Particle expressing doubt; ஐயப்பாட்டைக் குறிக்குஞ் சொல்.

போஷியபுத்திரன் pōṣiya-puttiraṉ, *n.* <*pōṣya* +. Adopted son; சுவீகாரபுத்திரன். *Pond.*

பௌ

பௌகண்டம் paukaṇṭam, *n.* <*paugaṇḍa*. Period in the life of a child, between the ages of six and ten; ஆறு முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைப்பருவம். (விசாரசந். பக். 343.)

பௌஷியம் pauṣiyam, *n.* <*bhaviṣyat*. The future; வருங்காலம். பௌஷியப் பிரதிபந்தம் (பஞ்சதசப். பக். 84).

ம

மக்கட்கதி makkaṭ-kati, *n.* <மக்கள் +. (Buddh.) Birth, as a human being, one of *ṣaṭ-kati*, q.v.; ஷட்கதியு ளொன்று.

மக்கணாயனார் makkaṇāyaṉār, *n.* <id. +. King's son; இராசகுமாரன். (M. E. R. 104 of 1916-C.)

மக்கல் makkal, *n.* <மக்கு-. Rotten straw; muck; கூளம். *Loc.*

மக்கள்வழி makkaḷ-vaḻi, *n.* <மக்கள் +. Patriarchal system of inheritance; மக்கட்டாயம். *Loc.*

மக்காரெட்டி makkāreṭṭi, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 58-59.)

மக்கிரி makkiri, *n.* Big basket; பெரிய கூடை. (எங்களூர், 91.)

மக்கினம் makkiṉam, *n.* <*magna*. 1. Immersion; அழுந்துகை. மக்கினம் பட்டுள்ளே மாருவி யிருந்தாண்டி (பட்டினத்துப். பக். 235). 2. Disgrace; அவமானம். அந்தச்சபையில் அவன் மக்கினப்பட்டான்.

மக்ரிபு makripu, *n.* <Arab. *maghrib*. Prayer at sunset; மாலைத் தொழுகை. *Muham.*

மகப்படி maka-p-paṭi, *n.* perh. *mahat* +. An item of expenditure in a temple; கோயிற் படித்தரச்செலவுவகை. (S. I. I. iv, 289.)

மகப்பு makappu, *n.* prob. id. Greatness; பெருமை. மகப்புருவந்தானே மதிக்கில் (திவ். இயற். 4, 29).

மகர்நோன்பு makarnōṉpu, *n.* Corr. of மகாநோன்பு. Festival of *navarāttiri*; நவராத்திரிப் பண்டிகை. *Loc.*

மகர்நோன்புச்சாவடிக்கறுப்பு makar-nōṉpu-c-cāvaṭi-k-kaṟuppu, *n.* A kind of dark-coloured saree, with yellow silk border; மஞ்சட்பட்டுக் கரையும் கறுப்புநூல் உடலுமுடைய புடைவைவகை. *Loc.*

மகரச்சாயம் makara-c-cāyam, *n.* Dark-red dye; கருஞ்செந்நிறச்சாயம். (W.)

மகரமுத்திரை makara-muttirai, *n.* <மகரம் +. A kind of hand-pose; முத்திரைவகை. (சைவாநு. வி. 20.)

மகரவாய் makara-vāy, *n.* <id. +. Spout, shaped like the mouth of the *makaram* fish; மகரமீனின் வாய்போலச் செய்யப்பட்ட நீர்த்தூம்பு. (சிலப். 5, 150, உரை.)

மகரூர் makarūr, *n.* <Arab. *muqarrar*. That which is fixed or established; உறுதியாக்கப்பட்டது. (P. T. L.)

மகாகாளை makā-kāḷai, *n.* <*mahā-kālā*. One of *nava-niti*; நவநிதியு ளொன்று. (அபி. சிந். 940.)

மகாசப்தமி makā-captami, n. <மகா+. The seventh day in the bright fortnight of the lunar month of *mākam*; இரதசப்தமி. (பஞ்.)

மகாசூசிகை makā-cūcikai, n. <id.+. Small-pox; பெரியம்மை. (தஞ். சர. iii, 68.)

மகாதேவர்திருமஞ்சனம் makātēvar-tirumañcaṉam, n. <மகாதேவர்+. The submarine fire; வடவாமுகாக்கினி. (தக்கயாகப். 379, உரை.)

மகாதோரணம் makā-tōraṇam, n. <மகா+. A kind of temple lamp; கோயில்விளக்கு வகை. (M. E. R. 608 of 1916.)

மகாநியோகம் makā-niyōkam, n. <id.+. Royal command; அரசனது ஆணை. மகா நியோகமும் புறப்பட்டு (S. I. I. iv, 152).

மகாப்பட்ட makā-p-paṭṭa, adv. <id.+படு-. Very big; மிகப்பெரிய. *Pond.*

மகாப்பிரதானன் makā-p-piratāṉaṉ, n. <id.+. Commander-in-chief; தலைமைச் சேனாபதி. (M. E. R. 497 of 1926.)

மகாபலம் makā-palam, n. <*mahā-phala*. Bael; வில்வம்.

மகாபூதகடிதானம் makāpūtakaṭitāṉam, n. A kind of gift; தானவகை. (S. I. I. vii, 21.)

மகாபூரணசந்திரோதயம் makāpūraṇa-cantirōtayam, n. <மகா+பூரணம்+. A kind of medicine; மருந்துவகை. (தஞ். சர. iii, 68.)

மகாமிருத்துயஞ்சயம் makā-miruttu-yañcayam, n. <id.+. A mantra; ஒரு மந்திரம்.

மகாயானம் makā-yāṉam, n. <*mahā-yāna*. A school of Buddhism; பௌத்தசமய வகை. (நீலகேசி, 342, உரை.)

மகாவித்வான் makā-vitvāṉ, n. <*mahā-vidvān*. A title meaning 'great scholar'; பெரும்புலவன் என்னும் பட்டம்.

மகாவேணு makā-vēṇu, n. <மகா+. A great number; ஒரு பேரெண். (கணக்கதி. 80.)

மகிமைச்சங்கம் makimai-c-caṅkam, n. <மகிமை+. Legion of honour; பிரான்சு தேசத்துள்ள ஒருசார் பட்டதாரிகளின் சங்கம். *Pond.*

மகிமைச்சவை makimai-c-cavai, n. <id.+. See மகிமைச்சங்கம். *Pond.*

மகிமைநாடா makimai-nāṭā, n. <id.+. Ribbon indicating a title or dignity; பட்டம் பதவிகளுக்கு அறிகுறியாக அணியும் நாடா. *Pond.*

மகிமைப்பட்டாளம் makimai-p-paṭṭā-ḷam, n. <id.+. Grand chancellery; அரசாங்க சபைவகை. *Pond.*

மகிழம்பூத்தேன்குழல் makiḻam-pū-t-tēṉkuḻal, n. <மகிழ்+பூ+. A kind of cake; மகிழம்பூப்பணிகாரம்.

மகிழிசை makiḻ-icai, n. <மகிழ்-+. (Pros.) A kind of *centuṟai-p-pāṭṭu*; செந்துறைப்பாட்டின் ஒரு வகை. (யாப். வி. 538.)

மகுடரேகை makuṭa-rēkai, n. <மகுடம்+. A line in the palm of hand, indicating prosperity; செல்வவளத்தைக் குறிக்குங் கையிரேகை வகை. (சிவக். பிரபந். பக். 342.)

மகுமூது makumūtu, n. <Arab. *Muhammad*. The Prophet Mahomed; முகம்மது நபிகள். (மஸ்தான். 122.)

மகுளிபாய்-தல் makuḷi-pāy-, v. intr. <மகுளி+. To become hard, as an arable land after heavy rains; பெருமழையால் நிலம் இறுகிவிடுதல். *Loc.*

மகேந்திரக்கணை makēntira-k-kaṇai, n. prob. *mahendra*+. A kind of disease; கணைநோய்வகை. (பரராச. ii, 179.)

மங்கஞ்சம்பா maṅkañ-campā, n. A kind of *campā* paddy, maturing in seven months; ஏழுமாதத்திற் பயிராகக்கூடிய சம்பாநெல்வகை. (விவசா. 2.)

மங்களபௌளம் maṅkaḷapauḷam, n. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மங்குநார் maṅku-nār, n. <மங்கு-+. Fibre of plants, dry and decayed; மக்கி உலர்ந்த நார். (திவ். அமலனாதி. 8, வ்யா. பக். 91.)

மச்சவிளக்கம் macca-viḷakkam, n. <மச்சம்+. Treatise on marine zoology; மீன்களைப் பற்றிய நூல். *Pond.*

மச்சாவி maccāvi, n. cf. மச்சாள்வி. Elder sister's husband; தமக்கையின் புருஷன். சங்கு முத்துசெட்டி யிவளுக்கு மச்சாவி (தெய்வச். விறலிவிடு. 434).

மச்சாழ்வி maccāḻvi, n. See மச்சாவி. (M. E. R. 479 of 1917-B.)

மச்சிகம் maccikam, n. <மஞ்சிகன். Barber's work; நாவிதத் தொழில். (நீலகேசி, 280.)

மச்சிகன் maccikaṉ, n. cf. வைசிகன். Trader; வர்த்தகன். மச்சிகனெழுந்து கம்பவாணனை மகிழ்ந்துபோற்றி (திருவிரிஞ்சைப். வழித்துணை. 42).

மச்சு maccu, *part.* Corr. of மற்று. An expletive; ஓர் அசைநிலை. மச்சிது செய்தார் யாரோ (பெரியபு. கண்ணப். 108).

மசகு macaku, *n.* <மசகு-. Mental delusion; திகைப்பு. நெடு மசகு புகுந்தின்றே (உபதேசகா. சிவபுண். 156).

மசறி macari, *n.* A kind of fish; மீன் வகை. நெற்றலி யசலை மசறி (குருகூர்ப். 20.)

மசிமை macimai, *n.* <*mahimā.* Greatness; பெருமை. மசிமையிலீ கூறைதாராய் (திவ். நாய்ச். 3, 9).

மசிலி macili, *n.* <U. *manzil.* Stage in a journey; பாதையில் தங்கிச்செல்லுங் கெடி. (P. T. L.)

மசினை macinai, *n.* Hemp; சீமைச்சணல். *Pond.*

மஞ்சக்குளிப்பான்பணம் mañca-k-kuḷi-p-pāṉ-paṇam, *n.* <மஞ்சள்+குளி-+. A kind of coin; நாணயவகை. (Tr. Rev. M. ii, 217.)

மஞ்சகீடம் mañca-kīṭam, *n.* <மஞ்சம்+. Bug; மூட்டை. (நாநார்த்த. 1048.)

மஞ்சட்கடுதாசிகொடுத்தல் mañcaṭ-kaṭutāci-koṭuttal, *n.* <மஞ்சள்+கடுதாசி+. Becoming insolvent; கடன் இறுக்க முடியாது பாப்பராதகை. *Colloq.*

மஞ்சட்கிலுகிலுப்பை mañcaṭ-kilu-kiluppai, *n.*<id.+. A kind of rattlewort; பெருங் கிலுகிலுப்பை. (சித். அக.)

மஞ்சட்குளி-த்தல் mañcaṭ-kuḷi-, *v. intr.* <id.+. To lead a fashionable life; இடம்பமாய் வாழ்தல். கொஞ்சி நீ மஞ்சட்குளிக்கிறாய் (பஞ்ச. திருமுக. 1217).

மஞ்சட்கோங்கு mañcaṭ-kōṅku, *n.* <id. +. Common caung; கோங்கமரம். (சித். அக.)

மஞ்சட்சோளம் mañcaṭ-cōḷam, *n.* <id. +. A kind of maize; சோளவகை. (விவசா. 3.)

மஞ்சட்டாழை mañcaṭṭāḻai, *n.* <id.+. A kind of aloe; தாழைவகை. (சித். அக.)

மஞ்சட்டிச்சேலை mañcaṭṭi-c-cēlai, *n.* <மஞ்சிட்டி+. A kind of saree; சேலைவகை. (S. I. I. vii, 22.)

மஞ்சணீர்த்தகப்பன் mañca-ṇīr-t-takappaṉ, *n.* <மஞ்சள்+நீர்+. Adoptive father; சுவீகாரபிதா. *Pond.*

மஞ்சணீர்த்திருவிழா mañcaṇīr-t-tiru-viḻā, *n.* <id.+id.+. The spring festival; வசந்தோற்சவம். (யாழ். அக.)

மஞ்சரி mañcari, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 102.)

மஞ்சள்முளை mañcaḷ-muḷai, *n.* <மஞ்சள் +. Paddy seedling, one or two days old; இரண்டோருநாளான நென்முளை. *Nāñ.*

மஞ்சள்முளைக்கிடை mañcaḷ-muḷai-k-kiṭai, *n.* <id.+முளை+. Penning sheep in a field where paddy has been sown recently; விதைத்து இரண்டொருநாள் சென்றபின் வயலிலிடும் ஆட்டுக்கிடை. *Nāñ.*

மஞ்சள்லவணம் mañcaḷ-lavaṇam, *n.* <id.+. A kind of salt; உப்புவகை. (தஞ். சர. iii, 132.)

மஞ்சளி-த்தல் mañcaḷi-, 11 *v. intr.* <id. To turn yellow; மஞ்சணிறமாதல். கண்கள் மஞ்சளித்து (அசுவசா. 88).

மஞ்சனை mañcaṉai, *n.* Kamela dye; கபிலப்பொடி. (L.)

மஞ்சாம்பரம் mañcāmparam, *n.* prob. மஞ்சள்+அம்பரம். A flowering plant; பூச்செடி வகை. *Madr.*

மஞ்சிட்டம் mañciṭṭam, *n.* <*mañjiṣṭha.* Redness; சிவப்பு. (உரி. நி.)

மஞ்சூரம் mañcūram, *n.* Barbadoes tree; மஞ்சாடிமரம். மஞ்சூர மிலக்கங்கொண்டு (வீரவன. உமையாண். 20).

மஞ்சொட்டி mañcoṭṭi, *n.* A kind of herb; பூடுவகை. (குருகூர்ப். 45.)

மட்டக்கார் maṭṭa-k-kār, *n.*<மட்டம்+. A coarse kind of paddy; மட்டநெல்வகை. (M. M. 146.)

மட்டக்கோணம் maṭṭa-k-kōṇam, *n.* <id.+. cf. மட்டுக்கோணம். Right angle; நேர் கோணம். (M. Navi.)

மட்டக்கோலூசி maṭṭa-k-kōl-ūci, *n.* <id.+கோல்+. A surgical instrument; சத்திர வைத்தியத்தில் உபயோகிக்கும் ஆயுதவகை. (தஞ். சர. iii, 40.)

மட்டசனம் maṭṭacaṉam, *n.*<மட்டு+அசனம். See மட்டுணவு. *Pond.*

மட்டடக்கு-தல் maṭṭaṭakku-, *v. tr.* <id. +. To bring down one's pride; கருவமொடுக்குதல். மண்டை தள்ளிப்போகாதே மட்டடக்க வருவாள் நானே (கோவ. க. 88).

மட்டப்பரப்பு maṭṭa-p-parappu, *n.* <மட்டம்+. Plane surface; மேடு பள்ள மில்லாத சமமான இடம். *Loc.*

மட்டப்பூ maṭṭa-p-pū, n. <id.+. A pendant in a jewel; அணியுறுப்புக்களுள் ஒன்று. (S. I. I. ii, 184.)

மட்டமுக்கோணம் maṭṭa-mukkōṇam, n. <id.+. Right-angled triangle; நேர்கோண முடைய முக்கோணம். Mod.

மட்டாசனம் maṭṭācaṉam, n. <id.+. See மட்டுணவு. Pond.

மட்டிச்சகலாத்து maṭṭi-c-cakalāttu, n. <மட்டி+. A kind of coarse cloth, used in packing; மூட்டைகட்ட வுதவும் முரட்டுத்துணிவகை. Pond.

மட்டிவைத்தல் maṭṭi-vaittal, n. <id.+. Mark made with cow-dung on sheaves of paddy left unthreshed on the threshing floor; களத்தில் அடிபடாமலிருக்குங் கதிர்க்கற்றைகட்குச் சாணியால் இடுங் குறி. Loc.

மட்டுணவு maṭṭuṇavu, n. <மட்டு+. Moderation in eating and drinking; மிதமாக வுண்கை. Pond.

மட்டை maṭṭai, n. Corpse; பிணம். Pond.

மட்டைவிழுதல் maṭṭai-viḻutal, n. <மட்டை+. Death; சாவு. Loc.

மடக்கம் maṭakkam, n. <மடக்கு-. 1. Set-back; frustration; பலியாமை. நம்முடைய நோக்கங்களுக்குத் தடையும் மடக்கமும் விக்கினமும் உண்டு (நித்தியானு. பக். 25). 2. Subsidence, as of fever; நோய் மட்டுப்படுகை. Nāñ.

மடக்குத்தசபின்னம் maṭakku-t-taca-piṉṉam, n. <மடக்கு+. (Arith.) Recurring decimal; ஒருவகைத் தசபின்னம். Mod.

மடக்குவட்டி maṭakku-vaṭṭi, n. <மடக்கு-+. Compound interest; வட்டிக்கு வட்டி. Loc.

மடக்கோலை maṭakkōlai, n. <id.+. Ola, written and folded; எழுதி மடக்கிய ஓலை. பாண்டவர்கள் தூதுவிடுகிறபோது கட்டிவிட்ட மடக்கோலை (திவ். அமலனாதி. 6, வ்யா. பக். 71).

மடங்குவட்டி maṭaṅku-vaṭṭi, n. <மடங்கு-+. See மடக்குவட்டி. (செல்வவிருத்திவிளக்கம், பக். 111.)

மடபதி maṭa-pati, n. <மடம்+. Head of a mutt; மடாதிபதி. (சேக்கிழார்பு. 59.)

மடம் maṭam, n. cf. mūḍha. Incorrect knowledge; பொருண்மையறியாது திரியக்கோடல். (தொல். பொ. 248, இளம்.)

மடமட்டி maṭa-maṭṭi, n. <மடம்+. Utter fool; முழுமுட்டாள். Colloq.

மடிநாய் maṭi-nāy, n. <மடி+. Lap-dog; சிறுநாய்வகை. Pond.

மடிப்பு maṭippu, n. <மடி-. Assessment for second crop; இரண்டாம்போகத்திற்கு விதிக்கப்பட்ட தீர்வை. (R. T.)

மடிவலை maṭi-valai, n. prob. id.+. A double net to catch small fish; சிறுமீன்களைப் பிடிக்க உதவும் வலைவகை. Loc.

மடு maṭu, n. prob. மடு-. Udder, especially of a cow; பசு முதலியவற்றின் முலையிடம்.

மடுவிடு-தல் maṭu-viṭu-, v. <மடு+. intr. 1. To form a pool, as in a river bed; மடுவுண்டாதல். Loc. 2. To be specially attached to; விசேஷப் பற்றுண்டாதல். ஸ்ரீ குலசேகரப்பெருமாளிடத்திலே . . . எம்பெருமானார் மடுவிட்டிருப்பது (திவ். பெருமாள். தனியன், வ்யா. பக். 2).—tr. To let a calf suck its mother; தாய்ப்பசுவின் மடுவிற் பால் குடிக்கும்படி கன்றை விடுதல். Loc.

மடைகழி-த்தல் maṭai-kaḻi-, v. intr. <மடை+. To open a sluice; மதகுதிறத்தல். Pond.

மடைகிடாய்முக்கந்தன் maṭai-kiṭāy-mukkantaṉ, n. <id.+. Purveyor of provisions to officers on circuit, in Ramnad; இராமநாதபுரஞ்சீமையிற் கிராமங்களைச் சுற்றிப் பார்க்கவரும் மேலதிகாரிகளுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் கொடுக்கும் அதிகாரி. (Rd. M. 313.)

மடைநில்-தல் [மடைநிற்றல்] maṭai-nil-, v. intr. <id.+. To be able, as a cow, to be milked whenever and wherever required; பால் கறக்கும் இடங்கடோறும் பசு மடுச்சுரந்து கறக்கத் தேற்றதாதல். இந்த மாடு மடைநிற்காது. Madr.

மண்காட்டு-தல் maṇ-kāṭṭu-, v. tr. <மண்+. To defeat; தோற்பித்தல். Loc.

மண்டபக்கொத்து maṇṭapa-k-kottu, n. <மண்டபம்+. Temple servants; கோயிற் பணியாளர். (M. E. R. 644 of 1922.)

மண்டபவீடு maṇṭapa-vīṭu, n. <id.+. House with vaulted roof; கமான்வடிவில் அமைந்த மேற்றளமுடைய வீடு. Loc.

மண்டலமுதலியார் maṇṭala-mutaliyār, n. <மண்டலம்+. Chief officer ruling over a maṇṭalam; மண்டலத்தையாளும் அரசாங்கத் தலைவர். (Colas. ii, 254, 584.)

மண்டலமுதன்மை maṇṭala-mutaṉmai, n. <id.+. Leadership of a maṇṭalam; மண்டலத்தையாளும் உத்தியோகம். (S. I. I. v, 156.)

மண்டற்சிங்காய் maṇṭaṟ-ciṅkāy, n. Shining leaved soap-pod; வெள்ளிண்டு. (L.)

மண்டிதம் maṇṭitam, n. <maṇḍita. Decoration; அலங்காரம். திருமணி மாாபா குண்டல மண்டித (நூற்றெட்டுத். திருப்பு. 65).

மண்டிலவரங்கம் maṇṭila-v-araṅkam, n. <id.+. Circus tent; வேடிக்கை காட்டும் அரங்கம். Pond.

மண்டு maṇṭu, n. Corr. of மன்று. Raised platform under a tree; பொதுவிடம். வாடுமுக முடன் வந்ததென்ன மண்டிலே கூடியே நொந்ததென்ன (கட்டபொம்ம. பக். 6).

மண்டைதுள்ளு-தல் maṇṭai-tuḷḷu-, v. intr. <மண்டை+. To be haughty; செருக்கு மிகுதல். மண்டைதுள்ளிப்போகாதே (கோவ. க. 88).

மண்டையவியன் maṇṭaiyaviyaṉ, n. <māṇḍavya. Person belonging to māṇḍavya gōtra; மாண்டவிய கோத்திரத்தான். (M. E. R. 87 of 1925.)

மண்ணகுண்டம் maṇṇa-kuṇṭam, n. <மண்+. Raised, earthen platform, as in a fortification; மண்ணுற் செய்த அட்டாலை. (யாழ். அக.)

மண்ணச்சூலை maṇṇaccūlai, n. A disease of horses; குதிரைநோய் வகை. (தஞ். சா. iii, 183.)

மண்ணறுவான் maṇṇaṟuvāṉ, n. <மண் +அறு-. A term of abuse; ஒரு வசைச்சொல். (தெய்வச். விறலிவிடு. 492).

மண்ணறை-தல் maṉ-ṉ-aṟai-, v. tr. <id.+. To plaster with mud; மண்பூசுதல். சாத்திக் கதவடைத்துத் தாள்பூட்டி மண்ணறைந்தார் (கோவ. க. 5).

மண்ணுந்தை maṇṇāntai, n. Python; வெண்ணுந்தை. Tinn.

மண்பாடு maṇ-pāṭu, n. <மண்+. Earthen mound or bank; ridge of earth; மண்போட்டுச் செய்த வரம்பு. ஏரிகரை மண்பாட்டுக்குக் கிழக்கும் (S. I. I. iv, 97).

மண்மதில் maṇ-matil, n. prob. id.+. A tax; வரிவகை. (M. E. R. 1929-30, p. 87.)

மண்வைப்புப்புடம் maṇ-vaippu-p-puṭam, n. <id.+வை-+. A mode of calcination, one of muppū-p-puṭam; முப்பூப்புடத்தொன்று. (தைலவ. தைல. பக். 9.)

மணப்பொங்கல் maṇa-p-poṅkal, n. prob. மணம்+. First day of the Poṅgal festival; தைப்பொங்கல் விழாவில் முதல்நாட்பொங்கல். (எங்களூர், 90.)

மணல்முள்ளங்கி maṇal-muḷḷaṅki, n. <id.+. A kind of radish; முள்ளங்கிவகை. (சங். அக.)

மணவாட்டுப்பிள்ளை maṇa-v-āṭṭu-p-piḷḷai, n. <மணம்+ஆள்-+. See மணவாட்டுப் பெண்பிள்ளை. (திவ். பெரியாழ். 3, 8, 4, வ்யா. பக். 749.)

மணவாட்டுப்பெண்பிள்ளை maṇa-v-āṭṭu-p-peṉ-piḷḷai, n. <id.+id.+. Bride; மணமகள். மாமியாரான யசோதைப்பிராட்டி இவளைக் கண்டுகந்து மணவாட்டுப்பெண்பிள்ளை யென்று ஸத்கரிக்குமோ (திவ். பெரியாழ். 3, 8, 1, வ்யா. பக். 735).

மணவாளப்பிள்ளை maṇavāḷa-p-piḷḷai, n. <மணவாளன்+. Bridegroom; மணமகன். (பெரியபு. தடுத்தாட். 27.)

மணவாளன் maṇa-v-āḷaṉ, n. <மணம்+ ஆள்-. Master, lord; தலைவன். செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள (குமர. பிரபந். முத்துக். 11).

மணற்கொட்டகம் maṇaṟ-koṭṭakam, n. <மணல்+. Toy-house of sand, in children's play; சிறுவர் விளையாட்டாக மணலால் அமைக்குஞ் சிறுவீடு. ஓரரணை மணற்கொட்டகத்தைச் சிதறினாற் போலே அநாயாஸேந அழித்து (திவ். திருநெடுந். 28, வ்யா.).

மணற்சீனி maṇaṟ-cīṉi, n. <id.+. A kind of sugar; சர்க்கரைவகை. (சித். அக.)

மணற்பாகு maṇaṟ-pāku, n. <id.+. Fine sugar; நுழைவுச் சீனி. (நாமதீப.)

மணிக்கல் maṇi-k-kal, n. <மணி+. Gem; இரத்தினக்கல். மிகுமொளி மணிக்கல் (ஞானபூசா. 26).

மணிக்கலன் maṇi-k-kalaṉ, n. <id.+. Ornament set with jewels; இரத்தினாபரணம். பரிசட்டமு மிலங்கு மணிக்கலனு நல்கி (S. I. I. iii, 217).

மணிக்கிராமம் maṇi-k-kirāmam, n. perh. vaṇij+. Mercantile guild; வணிகர் குழு வகை. (M. E. R. 598 of 1926.)

மணிச்சூத்திரம் maṇi-c-cūttiram, n. <மணி+. Clock; கடிகாரம். Pond.

மணித்தியாலம் maṇi-t-tiyālam, n. <id. +. Hour; ஒருமணி நேரம். Pond.

மணிப்பயறு maṇi-p-payaṟu, n. <id.+. A kind of gram; பயறுவகை. Loc.

மணிப்பவளம் maṇi-p-pavaḷam, n. <id. +. Coral; நற்பவளம். மண்பவளத்தை மணிப் பவளமென்றும் (சரவண. பணவிடு. 204).

மணிப்பாம்பு maṇi-p-pāmpu, n. <id. +. A kind of snake; பாம்புவகை. *Pond.*

மணிமலை maṇi-malai, n. <id. +. Rocky hill; மண்சேறியப்பெறாத பாறைகளாலான மலை. தூறுகள் விருக்ஷங்களுண்டாம்படி மண்செறிந்த மலை யன்றிக்கே யிருக்கும் மலைகளை மணிமலை யென்னக் கடவதாய் (திவ். பெரியாழ். 3, 2, 3. வ்யா. பக். 539).

மணிமாறு-தல் maṇi-māṟu-, v. intr. <id. +. To trade in gems; இரத்தினவியாபாரஞ் செய்தல். மணிமாற வந்திடத்தே மாதரசே வரலாமோ (கோவ. க. 96).

மணையில்வைத்துப்பாடு-தல் maṇaiyil-vaittu-p-pāṭu-, v. tr. <மணை + வை- +. To decorate and set on a platform, as a girl on auspicious occasions, and sing songs; பெண்ணை அலங்கரித்து மணையிலிருத்திச் சுபம்பாடுதல்.

மத்தளிப்பு mattaḷippu, n. <Arab. *matlab.* cf. மத்தலபு. Intention, object; எண்ணம். *Loc.*

மத்தான்காயி mattāṉkāyi, n. <E. Martingale; ஜீப்பும் மரத்திற்குக் கீழ்ப்புறத்தில் ஆதாரமாக உள்ள கயிறு அல்லது சங்கிலி. (M. Navi.)

மத்திமத்தான் mattimattāṉ, n. <மத்திமம். Person belonging to the Buddhist sect of *mādhyamika;* மாத்யமிகன். வாணுளைறுக்கின்ற மத்திமத்தார் வழிமாற்றுவமே (தேசிகப். 5, 14).

மத்திமம் mattimam, n. <*madhyama.* (Poet.) *Śānta Rasa,* the sentiment of tranquility; நடுவுநிலைமை யென்னுஞ் சுவை. (தொல். பொ. 245, இளம்பூ.)

மத்திமவிம்சதி mattima-vimcati, n. <id. +. The second period of 20 years from *carvacittu* to *parāpava* in the Jupiter cycle; அறுபது வருஷக் கணக்கில் சர்வசித்து முதல் பராபவ வருஷம் வரையுள்ள இடையிருபது வருஷங்கள். (பஞ்.)

மத்தியம் mattiyam, n. <*madhya.* Earth; பூமி.

மத்தியானரேகை mattiyāṉa-rēkai, n. <மத்தியானம் +. The great circle passing through the zenith and the northern and southern points of the horizon; வானுச்சியை அடிவானத்தின் வடக்குத்தெற்கு முனைகளோடு சேர்க்கும் வட்டக்கோடு.

மத்ஸ்யதுவாதசி matsya-tuvātaci, n. <*matsya* +. The *tuvātaci titi* of the bright fortnight of the lunar month of *mārkkaciram;* மார்க்கசிர மாதத்துச் சுக்கிலத் துவாதசி. (பஞ்.)

மதகு mataku, n. The mythical mountain *cakkaravāḷam;* சக்கரவாளகிரி. மதகோடி யுலகேழு மணகாற (தக்கயாகப். 3).

மதயாணி matayāṇi, n. A kind of flower plant; செடிவகை. (புட்ப. 29.)

மதனகாந்தச்சேலை matana-kānta-c-cēlai, n. prob. மதனன் + காந்தம் +. A kind of saree; புடைவைவகை. (பஞ்ச. திருமுக. 1161.)

மதாந்தன் matāntaṉ, n. <*mada* + *andha.* One who is blind with arrogance; செருக்குடையவன். செல்வத்தின் மதாந்தராகி (சானந்தகணே. நரக. 17).

மதிதெரிகலை mati-teri-kalai, n. <மதி + தெரி- +. The day after the new moon, when the crescent is scarcely visible; சினீவாலி. (அரு. நி.)

மதில்தேவை matil-tēvai, n. <மதில் +. A tax; வரிவகை. (S. I. I. vii, 63.)

மதிள் matiḷ, n. Wall, as round a fort; மதில். மதிளிலங்கை யழித்தவனே (திவ். பெருமாள். 8, 9).

மதிளிடு-தல் matiḷ-iṭu-, v. tr. <மதிள் +. 1. To surround by fortifications; சுற்றும் அரணாக மதிற்சுவ ரெழுப்புதல். 2. To protect; பாதுகாத்தல். சில தார்மிகர் மதிளிட்டு நோக்கப் பெற்றேறுமிறே (திவ். திருநெடுந். 9, வ்யா.).

மதிநாயன் matiṉāyaṉ, n. <மதில் + நாயன். Officer in charge of a fort; கோட்டைத்தலைவன். (T. A. S. ii, 68.)

மதுர்பேணி matur-pēṇi, n. prob. *madhura*+. A kind of sweet cake; பதர்பேணி. மாமதுரமிக்க மதுர்பேணி (பஞ்ச. திருமுக. 1836).

மதுராந்தகன்மாடை maturāntakaṉ-māṭai, n. <மதுராந்தகன் +. An ancient coin; பழைய நாணயவகை. நாகங்கள் கைக்கொண்ட மதுராந்தகமாடையோ டொக்கும் பொன் (S. I. I. iii, 164).

மதோதகம் matōtakam, n. <*madhu* +. Hydromel, mixture of honey and water; தேனும் நீருங் கலந்தது. *Pond.*

மந்தரச்சக்கரம் mantara-c-cakkaram, n. <மந்தரம் +. (Pros.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

மந்தாதிகாரி mantātikāri, n. <*manda* +. One who belongs to the last class of persons qualified to receive instructions; கல்விக்குரிய மாணவருள் கீழ்த்தரத்தான்.

